# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 2023

www.tnpscthervupettagam.com




















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்


TNPSC துளிகள் .......... 11

தமிழ்நாடு செய்திகள் .......... 18

புவிசார் குறியீடு பெற உள்ள தமிழகத் தயாரிப்புகள் .......... 18

தமிழக மாநிலத்தின் வரி வருவாய் .......... 18

தமிழ்நாடு நலத்திட்டத்தில் புதிய விதி .......... 19

கோதாவரி-காவிரி நதி இணைப்புத் திட்டம் .......... 19

'தோழி' தங்கும் விடுதி .......... 20

இராதாபுரம் தொகுதியில் 'நுண்திறன் வகுப்பறைகள்' .......... 21

அந்நிய நேரடி முதலீடு 2022-23 .......... 21

1,556 புதிய பண்ணைக் குளங்கள் .......... 22

உறுப்பு மற்றும் திசு மாற்றுச் சிகிச்சைக்கான சிறந்த மாநில விருது .......... 22

சொந்த வருவாயில் செலவினங்களின் விகிதாச்சாரம் .......... 23

ஹூக்கா பார்களுக்குத் தடை .......... 23

குடிமைப் பணித் தேர்விற்குத் தயாராகும் தேர்வர்களுக்கான திட்டம் .......... 24

ஆதிச்சநல்லூர் அருங்காட்சியகத்திற்கான அடிக்கல் .......... 24

இத்தாலியில் தமிழ் மொழி கையெழுத்துப் பிரதிகள் கண்டுபிடிப்பு .......... 25

பாரதியார் மண்டபம் .......... 25

4வது கலைஞர் நினைவு சர்வதேச மாரத்தான் போட்டி .......... 25

உடல் உறுப்பு துண்டித்தல் அல்லது நீக்கம் இல்லாத தமிழ்நாடு .......... 25

குவார்ட்ஸ் படிகக் கல்லினால் செய்யப்பட்ட எடைக்கல் - கீழடி .......... 26

M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் ஆராய்ச்சி மையம் .......... 27

வேலூரில் விமான நிலைய வளாக கட்டமைப்பு பணிகள் .......... 27

யானைகளின் எண்ணிக்கை குறித்த ஒத்திசைவு மதிப்பீடு 2023 அறிக்கை .......... 28

தமிழ்நாடு - நிலுவையில் உள்ள வேளாண் கடன்கள் .......... 29

இந்தியாவில் 482 மருத்துவக் கல்லூரிகள் .......... 30

கல்வெட்டு ஆய்வாளர் S.இராசு (85) .......... 30

சென்னைப் பெருநகரக் கூட்டாண்மை .......... 30

2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கான முத்திரைச் சின்னம் .......... 30

திருச்சி பொன்மலையில் உள்ள பொன்மலை இரயில் பணிமனை .......... 31

சுதந்திர எரிபொருள் நிரப்பு நிலையம் .......... 31

பொற்பனைக் கோட்டை - வட்ட வடிவச் செங்கல் கட்டமைப்பு .......... 31

நீதிபதி K. சந்துரு குழு .......... 32

தமிழ்நாடு யானைகள் வளங்காப்பு குறித்த மாநாடு 2023 .......... 32

தினசரி நிலக்கரி இருப்பு அளவு .......... 33

சிறந்த செயல்திறன் கொண்ட மாநகராட்சிக் கழகம் .......... 33

தமிழக முதல்வரின் சுதந்திர தின விருதுகள் ........ 33
மூலதனச் செலவினம் 2023-24 ........ 34
கண்கவர் விலங்குகளைக் காட்சிப்படுத்துதல் ........ 35
ஆளில்லா வான்வழி விமானங்களின் பொதுச் சோதனை மையம் ........ 36
முதலாவது இரவு நேரச் சாலைப் பந்தயச் சுற்றமைப்பு ........ 36
தென்னிந்தியாவின் அலிகார் ........ 36
தமிழ்நாடு புத்தொழில் நிறுவனத் திருவிழா 2023 ........ 37
தமிழகத்தில் உள்ள புத்தொழில் நிறுவனங்கள் ........ 38
தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை ........ 39
முதல் தரநிலை பல்கலைக்கழகம் ........ 39
பசுமைப் புத்தாய்வு அங்கத்தினர் திட்டம் ........ 39
உள்ளாட்சித் தேர்தல்களில் இட ஒதுக்கீடு ........ 39
இந்திய மேம்பட்ட தொழில்நுட்பத்திலான உற்பத்தி மையம் ........ 40
காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் ........ 41
தமிழ்நாடு நில ஒருங்கிணைப்புச் சட்டம், 2023 ........ 41
தமிழகத்தின் பொருளாதார மேம்பாடு ........ 41
தமிழ்நாடு மாநிலத்தின் மொத்த சந்தை கடன்கள் ........ 42
மின்னணு சாதனங்களுக்கான குளிரூட்டல் அமைப்பு ........ 43
முதல் தேனீ பூங்கா ........ 44
புதிரை வண்ணார் நல வாரியம் ........ 44
தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் தனியார் துறை திட்டங்கள் 2022 - 23 ........ 44
NEEDS திட்டத்தின் கீழ் மூலதன மானியம் ........ 45
சென்னையில் UPS தொழில்நுட்ப மையம் ........ 45
**தேசியச் செய்திகள் ........ 46**
பல் மாநில கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம்) மசோதா 2023 ........ 46
100 மருத்துவச் சிறு தளங்கள் திட்டம் ........ 46
புலிகள் வளங்காப்பு மற்றும் யானைகள் வளங்காப்பு திட்ட நிதிப் பிரிவு ........ 47
ULLAS கைபேசிச் செயலி ........ 48
TechEquity ........ 48
கைரேகை நுண் விவரங்கள் பதிவு – கைரேகைப் புகைப்படப் பதிவு இணைப்பு முறை ........ 48
“போக்குவரத்துத் துறையில் கரிமநீக்கத்தினை நோக்கிய நடைமுறைகள்- 2023” அறிக்கை ........ 49
MASI செயலி ........ 49
சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா- 2023 ........ 50
டெல்லி அரசுப் பணிகள் மசோதா ........ 50
பத்திரிக்கை அச்சகம் மற்றும் பருவ இதழ்கள் பதிவு (PRP) மசோதா, 2023 ........ 50
கடலோரப் பகுதிகள் கனிம (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2023 ........ 51
ராஜ்மார்க் யாத்ரா செயலி ........ 51
இந்தியாவில் கல்வி பயிலுதல் (SII) இணையதளம் ........ 52
ஆயுஷ் நுழைவு இசைவுச் சீட்டு ........ 52

வாக்களிப்பதற்கான வயது ........ 52
அம்ரித் பாரத் இரயில் நிலையம் திட்டம் ........ 54
ராஜீவ் கௌபா ........ 54
இந்தியாவில் உபரி சர்க்கரை உற்பத்தி ........ 55
செம்மரக் கட்டைகளின் ஏற்றுமதிக்கான ஒதுக்கீடு ........ 56
உன்மேஷா திருவிழா ........ 57
உத்கர்ஷ் திருவிழா ........ 57
தேவிகா நதி ........ 57
நீதிபதி ரோகிணி குழுவின் ஆய்வறிக்கை ........ 58
கிராமப்புற இந்தியாவில் தொடக்கக் கல்வி நிலை 2023 ........ 59
மணிப்பூரில் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அனைத்து மகளிர் குழு நியமனம் ........ 60
இந்தியத் தொழிற்சாலைகளில் நீர் நடுநிலைமை ........ 61
NITIE - IIM மும்பை ........ 61
தேர்தல் ஆணையர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான குழு ........ 62
நீதித்துறைச் செயல்முறை மற்றும் அவற்றின் சீர்திருத்தங்கள் பற்றிய 133வது அறிக்கை ........ 63
சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு (HMIS) 2022-23 ........ 64
இந்தியாவின் சுதந்திர தினம் 2023 ........ 64
மழைக்காலக் கூட்டத்தொடர் 2023 ........ 64
பாரதிய நியாய சன்ஹிதா மசோதா 2023 ........ 66
பாரதீய நாகரிக் சுரக்சா சன்ஹிதா மசோதா 2023 ........ 67
2023 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தின் நிலை ........ 68
பிரதான் மந்திரி உச்சதார் சிக்சா அபியான் ........ 68
போற்றப்படாத சுதந்திரப் போராட்ட வீராங்கனைகள் ........ 69
பழங்குடியினப் பெண்களுக்கான சுகாதார வசதிகள் குறித்த அறிக்கை ........ 69
மூன்றாவது 'அனைத்து மகளிர் இரயில் நிலையம்' ........ 70
பாரதீய சாக்சய மசோதா 2023 ........ 71
நிவேஷக் சாரதி ........ 71
மருந்தாக்கவியல் (திருத்தம்) மசோதா, 2023 ........ 72
பகத் பாலம் ........ 73
கடலோர மீன்வளர்ப்பு ஆணையம் (திருத்தம்) மசோதா – 2023 ........ 73
தேசிய பல் மருத்துவ ஆணைய மசோதா – 2023 ........ 74
தேசிய செவிலியர் மற்றும் பேறுகால மருத்துவப் பணியியல் ஆணையம் (NNMC) மசோதா, 2023 ........ 75
வேதிப் பொருட்கள் மற்றும் உரங்கள் மீதான நிலைக்குழு ........ 76
நேரடி ஊக்கத் தொகை வழங்கீட்டுத் திட்டம் ........ 76
பன்னாட்டுக் காவல்துறையின் உலகப் பயிற்சிக் கழக வலையமைப்பு ........ 77
சட்டத்திலுள்ள பாலினம் சார்ந்தப் பழமையான கருத்துக்களை நீக்குதல் ........ 77
விஸ்வகர்மா யோஜனா ........ 78
SAMUDRA கைபேசிச் செயலி ........ 79
பிரதான் மாதிரி மின்சாரப் பேருந்துச் சேவை ........ 79

தரங் சக்தி ........ 80
ஜஎன்எஸ் விந்திய கிரி ........ 80
UDGAM இணையதளம் ........ 81
முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்ப முறையில் கட்டமைக்கப்பட்ட தபால் அலுவலகம் ........ 81
வெள்ளக் கண்காணிப்புச் செயலி ........ 82
‘லக்பதி திதி’ திட்டம் ........ 82
19வது கடல்சார் மாநில மேம்பாட்டுச் சபை ........ 83
பாரத் புதிய மகிழுந்து மதிப்பீட்டுத் திட்டம் ........ 83
ஜன்தன் வங்கி கணக்குகள் ........ 83
எண்ணிம சுகாதாரச் சேவைக்கான உலகளாவிய முன்னெடுப்பு ........ 84
ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பலின் நீண்டதூரப் பயணம் ........ 84
9வது காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கம் ........ 85
புதிய நுண் இயந்திரச் சோதனை தொழில்நுட்பம் ........ 85
‘சிவசக்தி’ மற்றும் ‘திரங்கா’ பகுதி ........ 86
DRDO மறுசீரமைப்புக் குழு ........ 86
இந்தியாவில் பறவைகளின் நிலை குறித்த அறிக்கை ........ 86
மது பான விதிமுறைகள் ........ 87
மின் ஆளுகைக்கான தேசிய விருது 2023 ........ 88
சிறு நீர்ப் பாசனத் திட்டம் குறித்த 6வது கணக்கெடுப்பு ........ 88
அதிக வெப்பநிலை மற்றும் டெங்கு வைரஸ் ........ 89
இந்தியாவில் காணப்படும் காரீய நஞ்சேற்றம் ........ 89
சர்வதேசச் செய்திகள் ........ 90
இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தம் ........ 90
கொழும்புப் பாதுகாப்பு மாநாட்டு (CSC) கட்டமைப்பு ........ 91
அராஷ்-டோரா எரிவாயு தளம் மீதான சர்ச்சை ........ 92
G-20 அமைப்பின் பேச்சுவார்த்தை நாடுகள் - பருவநிலை மாற்றம் குறித்த தடை ........ 92
உலக அரிசி விலைக் குறியீடு ........ 93
எதிர்கால நகரங்களுக்கு நிதியளிப்பதற்கான G20 அமைப்பின் கோட்பாடுகள் ........ 93
G20 அமைப்பின் EMPOWER தொழில்நுட்பச் சமவாய்ப்பு - எண்ணிம உள்ளடக்கத்திற்கான இணைய தளம் ........ 94
பெலம் பிரகடனம் ........ 94
ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று சுதந்திர தினம் கொண்டாடும் இதர நாடுகள் ........ 95
மலபார் பயிற்சி 2023 ........ 95
ஹவாயின் மௌய் தீவில் காட்டுத்தீ ........ 96
இந்தியப் பௌத்தக் கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய மையம் ........ 97
நெதர்லாந்து நாட்டின் பொருளாதாரத் தேக்கநிலை ........ 97
9வது சர்வதேச இராணுவ-தொழில்நுட்ப மன்றம் ........ 98
ஆசியான்-இந்தியா இடையேயான சரக்கு வர்த்தக ஒப்பந்தம் ........ 98
புயல் மற்றும் நிலநடுக்கம் ........ 99

ஆப்பிரிக்க ஒன்றியத்திலிருந்து நைஜர் நீக்கம் ..... 99
RSV தடுப்பு மருந்து ..... 99
பிரிக்ஸ் உச்சி மாநாடு 2023 ..... 100
இந்தியப் பிரதமரின் கிரீஸ் பயணம் ..... 100
உலகப் பல்லுயிர்க் கட்டமைப்பு நிதியம் (GBFF) ..... 101
ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல் ..... 102
பிரைட் ஸ்டார்-23 பயிற்சி ..... 102
அமேசான் பகுதியில் எண்ணெய்க் கிணறுகள் ..... 103
பொருளாதாரச் செய்திகள் ..... 104
நட்சத்திரக் குறியீடு இடப்பட்ட ரூபாய் தாள்கள் ..... 104
மத்திய அரசின் கடன் ..... 104
வருமான வரி கணக்குத் தாக்கலில் புதிய சாதனை ..... 105
ஆயில் இந்தியா நிறுவனம் - மகாரத்னா நிறுவன அந்தஸ்து ..... 106
ஒளியிழை கம்பிவட இறக்குமதிகள் மீதான இறக்குமதி குவிப்பு தடுப்பு வரி ..... 107
பார்ச்சூன் இதழின் உலகின் 500 முன்னணி நிறுவனங்கள் பட்டியல் 2023 ..... 108
ஜன்தன் திட்டத்தின் பயனாளிகள் ..... 109
இந்திய ரிசர்வ் வங்கியின் கொள்கை வகுப்புக் கூட்டத்தின் சிறப்பம்சங்கள் -ஆகஸ்ட் 2023 ..... 109
உள்நாட்டுப் பணமதிப்பு பயன்பாட்டு (LCS) அமைப்பு ..... 110
இந்தியாவின் முதல் சுற்றுச்சூழலுக்கு உகந்தப் பற்று அட்டைகள் ..... 110
கச்சா எண்ணெய் மீதான திடீர் இலாப வரி ..... 111
கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கான அபராதக் கட்டணங்களுக்கான வழி காட்டுதல்கள் ..... 111
மர்மன்ஸ்க் துறைமுகம் - இந்தியாவின் ஏற்றுமதி ..... 112
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 112
மார்க்கரியன் 421 ..... 112
நிலவின் சுற்று வட்டப் பாதையில் உள்நுழைவு ..... 113
யூரைலைட் விண்கல் ..... 113
வோஸ்டாக் ஆய்வு மையத்தில் தர்பூசணிகள் பயிரிடல் ..... 114
அறை வெப்பநிலையில் இயங்கும் மீக்கடத்தி ..... 115
புதிய இரத்தப் பரிசோதனைத் தொழில்நுட்பம் ..... 115
ஒற்றை மாத்திரை உத்தி ..... 116
ஹீலியோலின்க்3D ..... 116
சூரிய வெப்ப உமிழ்வு (CME) ..... 117
பு-விஷன் (கிரிஷி-RASTAA) ..... 118
செயற்கை நுண்ணறிவின் உதவியுடனான மார்பக ஊடுகதிர் ஆய்வு (MASAI) சோதனை ..... 118
LK-99 ..... 119
நீரக்ஷி ..... 120
கருவிழித் தொற்றுப் பாதிப்பினை ஒழித்தல் ..... 120
சந்திரயான் 3 – நிலவின் சுற்றுவட்டப் பாதை ..... 121
பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணைகள் ..... 122

நாக் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணை ........ 123
ஹெலினா (துருவஸ்திரம்) ........ 123
ஐன்ஸ்டீன் குறுக்கு வெட்டுக்கள் ........ 124
மாயா இயங்குதளம் ........ 125
ஹியூக்ஸ் ஜூபிடர் 3 ஆய்வுத் திட்டம் ........ 126
நீண்டதூரம் சுடும் வகையிலான சுழல் துப்பாக்கி “பிரபல்” ........ 126
கண்கவர் நெபுலா வளையம் ........ 127
லூனா-25 விண்கலம் ........ 127
சந்திரயான் 3 விண்கலம் ........ 128
சுர்ச்சுவே மருந்திற்கு உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு ஒப்புதல் ........ 129
வேலா விண்மீன் திரள் ........ 130
மைசீஸ் அண்டம் ........ 130
உலகின் முதல் மனித உருவ எந்திர விமானி ........ 131
மனித தோல் செல்களை மாற்றும் முறை ........ 131
HD 45166 ........ 132
வேறுபட்ட எலக்ட்ரான் இயக்கம் கொண்ட துகள்கள் ........ 133
HE 1005-1439 ........ 133
விசைப் பலகை அழுத்தங்களின் ஒலிசார் அலைவரிசை அடிப்படையிலான தாக்குதல் ........ 134
மனித உடலில் பன்றியின் சிறுநீரகம் ........ 134
ESO 300-16 ........ 135
நிலவின் மேற்பரப்பில் காணப்படும் மண் ........ 136
LUPEX ஆய்வுத் திட்டம் ........ 136
முப்பரிமாண கண் ஊடறிதல் சோதனை மற்றும் பார்கின்சன் ........ 137
SeamlessM4T ........ 137
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 138
சர்வதேசப் பெரும்பூனை இனங்கள் கூட்டணி ........ 138
அண்டார்டிகாவின் கடல் பனிக்கட்டி பரவல் ........ 138
பார்காச்சிக் பனிப்பாறை - லடாக் ........ 139
மேற்கத்திய ட்ராகோபன் ........ 140
பூடானில் உள்ள புலிகள் எண்ணிக்கை ........ 141
நெகிழிக் கழிவு உற்பத்தியானது உலகக் கழிவு மேலாண்மைத் திறனை விஞ்சும் தினம் - 2023 அறிக்கை ........ 142
அருகி வரும் இமயமலைக் கழுகு ........ 143
கெட்டோப்ரோஃபென் மற்றும் அசெக்ளோஃபெனாக் ........ 143
உட்குழு இனப்பெருக்கம் - தீங்கு விளைவிக்கும் மரபணு மாறுபாடுகள் ........ 144
இந்தியாவில் உள்ள 5 சதவீதப் பறவைகள் - வட்டார இனங்கள் ........ 145
மத்தியப் பிரதேச அரசின் புலிகள் வளங்காப்பிற்கான உத்தி ........ 145
இந்தியாவின் 75 வட்டாரப் பறவை இனங்கள் ........ 146
தெற்காசியாவில் உயிரினங்களின் ஏற்பமைவிற்கான முதல் மையம் ........ 148

இந்தியாவின் கரிம உமிழ்வுக் குறைப்பு ...... 148
கார்பன்லைட் மெட்ரோ இரயில் பயணம் ...... 149
எரிமலை வெடிப்பிற்குக் காரணமாகும் கார்பன் டை ஆக்சைடு ...... 150
இந்திய□□ கொம்பன் ஆந்தை ...... 150
சாளக் கிராமம் மீது பருவநிலை மாற்றத்தின் தாக்கம் ...... 151
மூன்றாவது நீண்டப் பருவமழை இடைவேளை ...... 152
புதிய சாலமண்டர் இனங்கள் ...... 152
சர்வதேசத் திமிங்கல ஆணையத்தின் முதல் இன அழிவு எச்சரிக்கை ...... 153
பசுமை ஹைட்ரஜன் தரநிலைகள் ...... 153
அண்டார்டிக் ஸ்ட்ராபெரி ஃபெதர் ஸ்டார் என்ற உயிரினம் ...... 154
தேசிய கார்பன் பதிவகம் ...... 155
பருவநிலை மீறல் மீதான அரசின் பொறுப்பு ...... 155
இயற்கை வளங்காப்பிற்கான கடன் பரிமாற்ற ஒப்பந்தம் ...... 156
இந்தியாவின் 54வது புலிகள் வளங்காப்பகம் ...... 158
இருதுருவ இந்தியப் பெருங்கடல் அமைப்பு நேர்மறையாக மாற்றம் ...... 158
அதிகளவிலான இலைகளின் அழிவு ...... 159
எம்பெரர் பெங்குவின் ...... 159
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ...... 160
உலக வானிலை அமைப்பின் ஆசிய நாடுகளில் பருவ கால நிலை 2022 அறிக்கை ...... 160
உலகப் புகையிலைப் பெருந்தொற்று 2023 ...... 161
இணைய நெகிழ்திறன் குறியீடு ...... 162
"Still Unprepared" அறிக்கை ...... 162
உலக வர்த்தகச் சேவை மறுமதிப்பாய்வு 2023 ...... 163
உலக செல்வ வள அறிக்கை 2023 ...... 164
நீர்வள இடர் விளக்கப் படம் ...... 165
புதைபடிவ எரிபொருள் சார்ந்த கடன் தொடர்பான அறிக்கை ...... 166
மாநிலச் செய்திகள் ...... 167
முதலாவது மிதவை வகை கடை ...... 167
தடையற்ற நடமாட்டத்திற்கானப் பகுதி ...... 167
பத்தாரி பழங்குடியினர் ...... 168
ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேச மாநிலத் தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு ...... 168
சடல உறுப்புத் தானம் ...... 169
குட்டிக்கானம் அரண்மனை ...... 169
கேரளம் பெயர் மாற்றம் மீதான மாநில சட்டசபையின் தீர்மானம் ...... 170
நிதியியல் நலன் குறித்த அறிக்கை ...... 170
போதைப் பொருள் பறிமுதல் பட்டியலில் உள்ள முன்னணியில் உள்ள மாநிலங்கள் ...... 171
புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகள் ...... 171
அதிக எண்ணிக்கையிலான புற்றுநோய்ப் பாதிப்புகள் ...... 172
'கோசினா மனே' குழந்தைகள் காப்பகம் ...... 172

கல்கா-சிம்லா பாரம்பரிய இரயில் பாதை ........ 173
தனியார் துறை பெருநிறுவன முதலீடு ........ 173
இந்தியாவின் முதல் கிராம விளக்க வரைபடம் ........ 174
உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்த மோட்டார் வாகனச் சாலை ........ 174
நெகிழிப் பயன்பாடு இல்லாத மைசூர் அரண்மனை ........ 175
மகாராஷ்டிராவின் முதல் யானைகள் வளங்காப்பகம் ........ 175
கிராஃபீன்-அரோரா திட்டம் ........ 176
ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் பேருந்து ........ 177
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ........ 178
முதலாவது ‘உத்யோக் ரத்னா’ விருது ........ 178
லோகமான்ய திலகர் தேசிய விருது 2023 ........ 178
தெலுங்கானாவின் பல்லடீர் கத்தார் (74) ........ 178
ஸ்வீடிஷ் உரிமை பரிசு ........ 179
76 வீரதீர விருதுகள் ........ 179
2023 ஆம் ஆண்டு சர்வதேச இளம் சுற்றுச்சூழல் நாயகர் விருது ........ 180
புள்ளியியல் அறிவியலாளர்கள் C.R.ராவ் ........ 180
69வது தேசியத் திரைப்பட விருதுகள் 2023 ........ 181
ஸ்வச் வாயு சர்வேக்சன் - 2023 ........ 182
இந்தியப் பொலிவுரு நகரங்கள் விருது போட்டி – 2022 ........ 182
சந்திரயான்-3 திட்ட இயக்குனர் ........ 183
விளையாட்டுச் செய்திகள் ........ 184
ISSF ஜூனியர் உலக சாம்பியன்ஷிப் போட்டி 2023 ........ 184
ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டி 2023 ........ 184
கிராண்ட்மாஸ்டர் குகேஷ் சாதனை ........ 185
உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி 2023 ........ 186
ஆசிய சாம்பியன்ஸ் ஹாக்கி கோப்பை 2023 ........ 186
உலகப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் ........ 186
FIFA மகளிர் உலகக் கோப்பைப் போட்டி 2023 ........ 187
உலகக் கோப்பை சதுரங்க இறுதிப் போட்டி ........ 187
உலக குத்துச்சண்டை அமைப்பில் இணையும் புதிய உறுப்பினர்கள் ........ 188
முக்கிய தினங்கள் ........ 188
உலகளாவிய வலைதள தினம் – ஆகஸ்ட் 01 ........ 188
முஸ்லிம் பெண்கள் உரிமை தினம் – ஆகஸ்ட் 01 ........ 189
உலக தாய்ப்பால் வாரம் – ஆகஸ்ட் 01 முதல் 07 வரை ........ 190
புவியின் இயற்கை வளங்கள் அனைத்தும் தீரும் நாள் 2023 - ஆகஸ்ட் 02 ........ 190
இந்திய உறுப்பு தான தினம் - ஆகஸ்ட் 03 ........ 191
ஹிரோஷிமா தினம் 2023 - ஆகஸ்ட் 06 ........ 192
நண்பர்கள் தினம் 2023 - ஆகஸ்ட் 06 ........ 192
சர்வதேச மன்னிப்புத் தினம் 2023 - ஆகஸ்ட் 06 ........ 192

தேசியக் கைத்தறித் தினம் 2023 - ஆகஸ்ட் 07 ..... 192
தேசிய எலும்பு மற்றும் மூட்டு தினம் 2023 – ஆகஸ்ட் 04 ..... 193
3வது 'ஈட்டி எறிதல் தினம்' – ஆகஸ்ட் 07 ..... 193
உலகப் பூனை தினம் 2023 – ஆகஸ்ட் 08 ..... 194
நாகசாகி தினம் 2023 – ஆகஸ்ட் 09 ..... 194
உலகப் பழங்குடி மக்களின் சர்வதேசத் தினம் அல்லது உலகப் பழங்குடியினர் தினம் 2023 – ஆகஸ்ட் 09 ..... 194
உலக சிங்க தினம் 2023 - ஆகஸ்ட் 10 ..... 195
உலக உயிரி எரிபொருள் தினம் 2023 - ஆகஸ்ட் 10 ..... 196
உலக எஃகு பறை தினம் 2023 - ஆகஸ்ட் 11 ..... 196
சர்வதேச இளையோர் தினம் 2023 - ஆகஸ்ட் 12 ..... 197
உலக யானைகள் தினம் 2023 - ஆகஸ்ட் 12 ..... 197
உலக சமஸ்கிருத மொழி தினம் 2023 - ஆகஸ்ட் 12 ..... 198
சர்வதேச இடது கை பழக்கமுடையோர் தினம் - ஆகஸ்ட் 13 ..... 198
உலக உறுப்பு தான தினம் - ஆகஸ்ட் 13 ..... 199
இந்தியாவில் பிரிவினை சார்ந்த பயங்கரங்கள் நினைவு தினம் - ஆகஸ்ட் 14 ..... 200
உலகப் புகைப்படத் தினம் - ஆகஸ்ட் 19 ..... 200
உலக மனிதாபிமானத் தினம் - ஆகஸ்ட் 19 ..... 200
உலக கொசு தினம் - ஆகஸ்ட் 20 ..... 200
சத்பவ்னா திவாஸ் - ஆகஸ்ட் 20 ..... 201
இந்திய அக்சய் உர்ஜா தினம் - ஆகஸ்ட் 20 ..... 201
சர்வதேச அடிமை வர்த்தக நினைவு மற்றும் ஒழிப்பு தினம் - ஆகஸ்ட் 20 ..... 202
மதராஸ் தினம் - ஆகஸ்ட் 22 ..... 202
உலக தண்ணீர் வாரம் 2023 - ஆகஸ்ட் 20 முதல் 24 வரை ..... 203
ஸ்டாலினிசம் மற்றும் நாசிசத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஐரோப்பிய நினைவு தினம் - ஆகஸ்ட் 23 ..... 204
தேசிய விளையாட்டுத் தினம் - ஆகஸ்ட் 29 ..... 204
தெலுங்கு மொழி தினம் - ஆகஸ்ட் 29 ..... 205
அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 29 ..... 205
வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 30 ..... 205
சர்வதேச திமிங்கல சுறா தினம் – ஆகஸ்ட் 30 ..... 206
ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 31 ..... 206
இதரச் செய்திகள் ..... 206
யுனெஸ்கோவின் ஆபத்து நிலையில் உள்ள பாரம்பரியத் தளங்களின் பட்டியல் ..... 206
46,000 ஆண்டுகள் பழமையான புழுக்கள் ..... 207
இந்தியாவின் பணக்காரச் சட்டமன்ற உறுப்பினர்கள் ..... 207
பெருசெட்டஸ் கொலோசஸ் ..... 209
மனித இதயத்தில் நுண்நெகிழிப் பொருள்கள் ..... 209
கோவிட் -19 வைரசின் ERIS மாற்றுரு ..... 210

**HLD 6 புதைபடிவம் ...... 210**
**பெருங்கற்கால தொப்பிக் கற்கள் ...... 211**
**பண்டைய கால மைலாரா வழிபாட்டு முறை ...... 212**
**தாவரங்களை உண்ணும் டைனோசர் இனங்கள் ...... 212**
**டுட்செடஸ் ராயனென்சிஸ் ...... 213**
**பிரிப்குரா பழங்குடி ...... 213**
**ஊட்ஷி என்ற பதப்படுத்தப்பட்ட உடலில் இருந்து பெறப்படும் புதிய மரபணு சார் தகவல்கள் ...... 214**

# TNPSC துளிகள்

- மத்தியப் பிரதேச விளையாட்டுத் துறையானது ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவின் முதல் ‘இயங்கலை விளையாட்டுகள் அகாடமியை’ தொடங்க உள்ளது.
- சீனாவில் நடைபெற்ற ஜூனியர் ஆசிய ஜூடோ சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான 48 கிலோ எடைப் பிரிவில் திரிபுராவின் அஸ்மிதா டே தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- ஐக்கியப் பேரரசினைச் சேர்ந்த பேராசிரியர் ஜிம் ஸ்கே, பருவநிலை மாற்றம் தொடர்பான அரசுகளுக்கிடையேயான குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- இந்தியா AI மற்றும் மெட்டா இந்தியா ஆகியவை செயற்கை நுண்ணறிவு மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- சமீபத்தில் நிறைவடைந்த 2023 ஆம் ஆண்டு செமிகான் இந்தியா என்ற நிகழ்ச்சியில், முக்கியத்துவம் வாய்ந்த உலக வளங்களின் எதிர்காலப் பயன்பாட்டினை நன்கு வடிவு அமைக்கும் இந்தியாவின் மிகவும் பேரார்வம் மிக்க பெரும் புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்றன.
- தென் கொரியா நாட்டின் நோங்க்ஹூயுப் என்ற வங்கியானது தனது முதல் இந்தியக் கிளையை நொய்டாவில் திறந்துள்ளது.
  - இதன் மூலம் நோங்க்ஹூயுப் வங்கி, இந்தியாவில் வங்கி நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு அனுமதி பெற்ற ஆறாவது கொரிய வங்கி ஆக மாறியுள்ளது.
- சிறந்தத் தமிழ் அறிஞர்களைக் கௌரவிப்பதற்காக தமிழக அரசினால் உருவாக்கப் பட்டு, ஆண்டுதோறும் வழங்கப்படும் ‘தகைச்சால் தமிழர்’ என்ற விருதானது திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களுக்கு வழங்கப்பட உள்ளது.
- இந்திய மகளிர் ஹாக்கி அணியானது, பார்சிலோனாவின் டெராசா நகரில் நடைபெற்ற மூன்று நாடுகளின் டோர்னியோ டெல் சென்டெனாரியோ 2023 போட்டியில் அப்போட்டியினை நடத்திய ஸ்பெயின் நாட்டு அணியைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளது.
- இங்கிலாந்து அணியின் நட்சத்திர டெஸ்ட் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் பிராட் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- ஆஸ்திரேலியாவின் கடற்கரை ஒன்றில் கரை ஒதுங்கிய மர்மப் பொருள் இஸ்ரோவின் பிஎஸ்எல்வி ஏவூர்தியின் எஞ்சிய பாகங்கள் தான் என ஆஸ்திரேலியாவின் விண்வெளி நிறுவனம் உறுதி செய்துள்ளது.
- உலக நுரையீரல் புற்றுநோய் தினம் ஆனது, அந்நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அந்த நோயைப் பற்றி பரவும் தவறானத் தகவல்களை அகற்றவும் அது பற்றிய கூடுதல் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கவும் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 01 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ் திரைப்படத்தின் மூலம் புகழ் பெற்ற பெள்ளி என்பவரை நீலகிரியில் தெப்பக்காடு யானைகள் முகாமில் முதலாவது நிரந்தரப் பெண் காவடியாக (யானைப் பராமரிப்பாளராக) தமிழக அரசு நியமித்துள்ளது.

- நீதிபதி G. ரோகிணி தலைமையிலான இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடையே சாதிக் குழுக்களின் துணை அல்லது உட்கூறுப் பிரிவாக்கத்திற்கான ஆணையமானது, 6 ஆண்டுகளுக்குப் பிறகு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.
- எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்திக் கழகத்தின் மங்களூர் சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோலிய வேதியியல் லிமிடெட் நிறுவனமானது, 2022-23 ஆம் ஆண்டில் நாட்டிலேயே மிகப்பெரிய பொதுத்துறைச் சுத்திகரிப்பு நிலையமாக (ஒரே இடத்தில் அமைந்த) மாறியுள்ளது.
- இந்திய அறிவியலாளர்கள் கனிமச் செறிவு சார்ந்தப் பிரிப்பு முறையின் மூலம் "ஆய்வகத்தில்" லித்தியம் கனிமத்தினை வெற்றிகரமாகப் பிரித்தெடுத்துள்ளனர்.
- இலண்டனைச் சேர்ந்த இந்திய வம்சாவளி எழுத்தாளர் சேத்னா மாரூவின் ''Western Lane' எனப்படும் முதலாவது புதினமானது 2023 ஆம் ஆண்டு புக்கர் விருதிற்கான நீண்டப் பட்டியலில் இடம் பெற்ற 13 புத்தகங்களில் ஒன்றாகும்.
- நிதி சார் தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய நிதித் துறையில் அதன் மாற்றமிக்க தாக்கத்தினை கொண்டாடுவதற்கும் அங்கீகரிப்பதற்கும் ஆகஸ்ட் 01 ஆம் தேதியன்று உலக நிதி சார் தொழில்நுட்பத் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- G-20 அமைப்பின் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை நிலைத்தன்மை செயற்குழு (ECSWG) மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை அமைச்சர்களின் நான்காவது மற்றும் அதன் இறுதிக் கூட்டமானது சென்னையில் நடைபெற்றது.
- 2023-24 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பாரத ஸ்டேட் வங்கி அதன் அதிகபட்ச காலாண்டு இலாபத்தைப் பெற்றது.
  - இது மேம்படுத்தப் பட்டச் சொத்துக்கள் தரம் மற்றும் அதிகரித்த வட்டி வருமானம் ஆகியவற்றினால் எட்டப்பட்டது.
- எத்தியோப்பியா அரசானது அம்ஹாரா பிராந்தியத்தில் அவசர நிலையைப் பிரகடனப் படுத்தியுள்ளது.
  - இது ஃபானோ எனப்படும் உள்ளூர் இனப் போராளிக் குழுக்கள் மற்றும் அந்த நாட்டின் இராணுவத்திற்கு இடையில் எழுந்த வன்முறையின் காரணமாக பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது.
- HDFC வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி சஷிதர் ஜகதீஷன், 10.55 கோடி ஊதியத்துடன் 2023 ஆம் நிதியாண்டில் அதிக ஊதியம் பெற்ற வங்கித் தலைமை நிர்வாக அதிகாரிப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.
- 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அடல் ஓய்வூதிய யோஜனா (APY) திட்டமானது, 5.25 கோடி சந்தாதாரர்களின் சேர்க்கையுடன் தனது எட்டு ஆண்டு காலப் பணியை மிகவும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- AU சிறு நிதி வங்கியானது இந்தியாவின் மிகப்பெரிய சிறு நிதி வங்கியாகும்.
  - 24×7 மணி நேரச் சேவையாக நேரலை ஒளிப்படப் பதிவு மூலமாக வங்கிச் சேவைகளை வழங்கும் இந்தியாவின் முதல் நிதிச் சேவை வழங்கீட்டு நிறுவனம் இதுவாகும்.
- மதுரை செங்கரும்பு, பேராவூரணி தென்னை, மூலனூர் குட்டை முருங்கை ஆகியவற்றுக்கு புவிசார் குறியீடு கோரி தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் விண்ணப்பித்துள்ளது.

- தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அமைப்பானது, 3 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்களைத் திருத்தியமைப்பதற்காக தேசியக் கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாக நிறுவனத்தின் தலைவர் MC பந்த் தலைமையில் 19 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் கற்றல் வளங்கள் குழுவினை (NSTC) அமைத்துள்ளது.
- வழக்கறிஞர்கள், பார்வையாளர்கள், பயிற்சிக் கால அடிப்படையிலான பணியாளர்கள் மற்ற பிறரும் இயங்கலை மூலமாக பதிவு செய்து, உச்ச நீதிமன்றத்திற்குள் நுழைவதற்கான இணைய வழி அனுமதிச் சீட்டினைப் பெற உதவும் 'சுஸ்வாகதம்' என்ற இணைய தளத்தினைத் தொடங்க உள்ளதாக உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.
- இந்திய நாடானது, 2030 ஆம் ஆண்டிற்குள் அதன் ஆற்றல் வளங்களின் கலவையில் தற்போதுள்ள 6% இயற்கை எரிவாயுக் கலப்புப் பங்கினை 15% ஆக உயர்த்துவதற்கு இலட்சியமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.
- உலகில் மனித முடிக்கான (மூலப் பொருள்) மிகப்பெரிய மூல ஆதாரமாக இந்தியா உள்ளது.
    - கடந்த நிதியாண்டில், இந்தியா 169.23 மில்லியன் டாலர் மதிப்பிலான மனித முடியை ஏற்றுமதி செய்துள்ளது.
- திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் 'தகைசால் தமிழர் விருதினைப்' பெற்று உள்ளார்.
- டாடா நிறுவனத்தின் துணை நிறுவனமான ஏர் இந்தியா நிறுவனமானது - தி விஸ்டா எனப் படும் தனது புதிய முத்திரைச் சின்னம், விளம்பரப் பெயர் மற்றும் விமானத்தின் அடையாளக் குறியீடுகள் ஆகியவற்றினை வெளியிட்டுள்ளது.
- உலக நாடுகளின் இலக்கு ஆண்டினை விட மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக, 2027ஆம் ஆண்டிற்குள் யானைக்கால் நோயை ஒழிப்பதற்கு இந்திய அரசு உறுதி பூண்டுள்ளது.
- பாரம்பரிய மருத்துவம் குறித்த உலக சுகாதார அமைப்பின் முதல் உலக உச்சி மாநாடு குஜராத் மாநிலம் காந்திநகரில் இன்று தொடங்கப் பட்டது.
- பாகிஸ்தான் நாட்டின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் பங்கேற்பு இல்லாமல், நாட்டின் அரசினைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்குத் தயாராகும் வகையில் பாகிஸ்தான் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.
    - பாகிஸ்தானின் சுதந்திரத் தினத்தன்று, அந்த நாட்டின் இடைக்காலப் பிரதமராக அன்வார்-உல்-ஹக் கக்கர் பதவியேற்றார்.
- உணவு மற்றும் வாடகை வாகனச் சேவைகளில் பணி புரிய என்று இணையதளம் மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களின் நலனுக்காக என்று ஒரு தனி வாரியத்தை அமைக்க உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- பெண்களுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டத்தின் பெயரை 'விடியல் பயணம்' எனப் பெயர் மாற்றம் செய்வதாக தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- சென்னையில் 6.09 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப் படவுள்ள கலைஞர் நினைவு நூற்றாண்டுப் பூங்காவானது, சிங்கப்பூரின் விரிகுடா பகுதியில் உள்ள தாவரவியல் பூங்கா மற்றும் தோட்டங்களின் மாதிரியில் அமைக்கப் பட உள்ளது.
- மதுரை செங்கரும்பு, பேராவூரணி தென்னை மற்றும் மூலனூர் குட்டைமுருங்கை ஆகியவற்றிற்குப் புவிசார் குறியீடு கோரி தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் விண்ணப்பித்துள்ளது.

- அமெரிக்காவின் மஹுாஸ் இங்க் நிறுவனத்தின் பங்குதார நிறுவனமானது லியார்னர்ஸ் கார்டெக்ஸ், சென்னையில் ஒரு நாள் அளவிலான 2023 ஆம் ஆண்டு உலக கல்வி மாநாட்டினை ஏற்பாடு செய்தது.
- சுலப் இன்டர்நேஷனல் அமைப்பின் நிறுவனரும் பத்ம பூஷன் விருது பெற்றவரும், சமூக சேவகருமான பிந்தேஷ்வர் பதக் சமீபத்தில் காலமானார்.
- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமானது, பொதுப் பங்கு வெளியீடுகள் நிறுத்தப் பட்ட பிறகு பங்குச் சந்தைகளில் அதன் பங்குகளைப் பட்டியலிடுவதற்காக நிர்ணயிக்கப் பட்ட ஆறு நாட்கள் அளவிலான ஒரு காலக்கெடுவினைத் தற்போது மூன்று நாட்களாகக் குறைத்துள்ளது.
- பாம்போலிமில் உள்ள கோவா மருத்துவக் கல்லூரியில், நுட்பத் துணை இனப்பெருக்கத் தொழில்நுட்பம் (ART) மற்றும் கருப்பையக கருவூட்டல் (IUI) ஆகியவற்றுடன் சேர்த்து செயற்கை முறை கருத்தரித்தல் சிகிச்சையை இலவசமாக வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக கோவா மாறியுள்ளது.
- சதாராவைச் சேர்ந்த 17 வயதான அதிதி ஸ்வாமி, உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் தனிநபர் இணை தங்கப் பதக்கத்தை வென்ற இளம் வயது உலக சாம்பியன் மற்றும் முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- இந்தியக் கடற்படையானது, ஐக்கிய அரபு அமீரக நாட்டின் கடற்படையுடன் இணைந்து, 'சயீத் தல்வார்' என்ற இருதரப்புப் பயிற்சியின் கீழ் இருதரப்புக் கடற்படைக் கடல்சார் கூட்டாண்மைப் பயிற்சியினை மேற்கொண்டது.
- ஜெனரல் மோட்டார்ஸ் இந்தியா நிறுவனத்திற்குச் சொந்தமான மகாராஷ்டிராவின் தலேகான் ஆலையில் அடையாளம் காணப்பட்ட சொத்துக்களை கையகப் படுத்தச் செய்வதற்கான ஒரு சொத்துக் கொள்முதல் ஒப்பந்தத்தில் (APA) ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது.
- நீலகிரி மாவட்டத்தில் உள்ள சீகூர் பீடபூமியில் அறிவிக்கப்பட்ட யானை வழித்தடத்தில் உள்ள அனைத்துத் தனியார் காடுகளையும் கையகப் படுத்துமாறு மாநில அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- பழங்குடியினர் அதிகம் வாழும் பகுதிகளில் இரயில் சேவை உள்கட்டமைப்பை நன்கு மேம்படுத்துவதற்காகவும், அங்கு ரயில் சேவை இணைப்பை மேம்படுத்துவதற்காகவும் "ஜன்ஜாதியா கௌரவ் வழித்தடம்" என்ற திட்டம் ஆனது தொடங்கப் பட்டுள்ளது.
- கர்நாடக அரசானது, மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் 200 அலகு வரை இலவச மின்சாரம் வழங்கும் வகையிலான கிருஹ ஜோதி இலவச மின் வழங்கீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியா மற்றும் சீனா இடையிலான படைப் பிரிவுத் தளபதிகள் அளவிலான 19வது சுற்றுப் பேச்சுவார்த்தையானது சுஷுல்-மோல்டோ எல்லைகள் சந்திக்கும் இடத்தில் நடைபெற்றது.
- இந்திய-அமெரிக்கப் பொருளாதார நிபுணரான ராஜ் செட்டிக்கு, அவரது பொருளாதாரப் பங்களிப்பிற்காக ஹார்வர்டுப் பல்கலைக்கழகத்தின் மதிப்பு மிக்க ஜார்ஜ் லெட்லி பரிசு வழங்கப் பட்டுள்ளது.
- மதுரையில் உள்ள மத்தியச் சிறையில் 'சுதந்திர எரிபொருள் நிரப்பு நிலையம்' (தமிழ்நாடு சிறைத்துறையின் ஒரு பிரிவு) என்ற புதியதொரு எரிபொருள் விற்பனை மையமானது அமைக்கப் பட்டுள்ளது.
- ஆலப்புழாவைச் சேர்ந்த மிலாஷா ஜோசப், கடந்த 21 மாதங்களில் கிளிமஞ்சாரோ, டமாவந்த் மற்றும் எல்ப்ருஸ் ஆகிய மூன்று மலைகளை ஏறி சாதனை படைத்துள்ளார்.

- இந்திய ரிசர்வ் வங்கியானது, தனிநபர் கடன் பெறும் நபர்களுக்கு வட்டி விகித மறு சீரமைப்பின் போது, மாறுநிலை வட்டி முறையிலிருந்து நிலையான வட்டி முறைகளுக்கு மாறுவதற்கான நெகிழ்வுத் தன்மையை வழங்குமாறு ஒழுங்குபடுத்தப் பட்ட பல்வேறு நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.
- மத்தியச் சரக்கு மற்றும் சேவை வரி (திருத்தம்) மசோதா, 2023, மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி (திருத்தம்) மசோதா, 2023 ஆகிய மசோதாக்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- தற்போது ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் 20 வயதிற்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை பிரியா மாலிக் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் தனிநபர் சாம்பியன்ஷிப் போட்டியின் 17 வயதிற்குட்பட்டோருக்கான போட்டிப் பிரிவில் இந்தியாவின் அனாஹத் சிங் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- முதியோர்கள் மேற்கொண்ட பல முயற்சிகள் மற்றும் பங்களிப்புகளைக் கௌரவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 21 ஆம் தேதியன்று உலக முதியோர் தினமாகக் கடைபிடிக்கப் படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 22 ஆம் தேதியன்று, சமயம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலான வன்முறைச் செயல்களால் பாதிக்கப் பட்டவர்களை நினைவு கூரும் சர்வதேச தினம் ஆனது அனுசரிக்கப் படுகிறது.
- தேசிய மதிப்பாய்வு மற்றும் அங்கீகாரச் சபையானது (NAAC) அதன் சமீபத்திய மதிப்பீட்டில், அண்ணாப் பல்கலைக் கழகத்திற்கு 4 மதிப்பில் 3.54 (A++) மதிப்பீட்டினை வழங்கியுள்ளது.
- மத்திய இயந்திரப் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (CMERI) ஆனது, CSIR Prima ET11 எனப்படுகின்ற உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது மின்சார இழுவை வாகனத்தினை (டிராக்டர்) அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஸ்ரீநகர் துலிப் தோட்டமானது ஆசியாவின் மிகப்பெரிய துலிப் தோட்டமாக உலகச் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.
    - இது 68 வகைகளைச் சேர்ந்த 1.6 மில்லியன் துலிப் மலர்களைக் காட்சிப்படுத்தியது.
- வேகோவி எனப்படும் எடை இழப்பிற்கு உதவும் மருந்தானது மாரடைப்பு, பக்கவாதம் அல்லது இதயம் தொடர்பான ஏற்படும் உயிரிழப்பு அபாயத்தினை 20% குறைக்கிறது.
- 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று ஒளிபரப்பப் பட்ட சந்திரயான்-3 விண்கலத்தின் மிதமான வேகத்திலான தரையிறங்குச் செயல்முறையின் நேரடி ஒளிபரப்பானது, ஒரே நேரத்தில் 80 லட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்ததோடு, உலகளவில் அதிகம் பார்க்கப்பட்ட நேரடி ஒளிபரப்பு ஆக இது மாறியது.
- சச்சின் டெண்டுல்கர் தேர்தல் செயல்பாடுகளில் அதிக வாக்காளர் பங்கேற்பை ஊக்குவிப்பதற்காக தேர்தல் ஆணையத்தின் (EC) 'தேசியச் சின்னமாக' அங்கீகரிக்கப் பட்டுள்ளார்.
- இந்தியாவின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிறுவனம் மற்றும் மத்திய மின்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பொதுத்துறை நிறுவனமான NTPC லிமிடெட், லே நகரில் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் பேருந்தின் சோதனை ஓட்டத்தினைத் தொடங்கி உள்ளது.

- ❖ கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி பிரகாஷ் ஸ்ரீவஸ்தவா, தேசியப் பசுமை தீர்ப்பாயத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- ❖ கேலோ இந்தியா மகளிர் லீக் போட்டியானது அஸ்மிதா மகளிர் லீக் என மறுபெயரிடப் பட்டுள்ளது.
- ❖ சமீபத்தில் சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேசக் கணிதத் துறை சார்ந்தத் திறனை வெளிப்படுத்துவதற்கான ஒலிம்பியாட் போட்டியில் திருப்பதியைச் சேர்ந்த ராஜா அனிருத் என்பவர் வெள்ளிப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- ❖ அசாமில் அமைந்துள்ள கௌஹாத்தியின் லோக்ப்ரியா கோபிநாத் பர்தோலாய் என்ற சர்வதேச விமான நிலையமானது, வடகிழக்கு மாநிலங்களில் டிஜி யாத்ரா என்ற ஒரு வசதியினைப் பெற்ற முதல் விமான நிலையமாக மாறியுள்ளது.
- ❖ தென் ஆப்பிரிக்காவில் நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் மாநாட்டில், பிரத்தியேக சுயச் சார்பு பல்கலைக் கழகத் தர நிர்ணய முறையினை உருவாக்குவதற்கு அதன் உறுப்பினர் நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன.
  - ○ தற்போதைய இந்த தர நிர்ணய முறையானது நியாயமான தகவல்களை அளிக்கத் தவறியதாக விமர்சனங்களை எதிர்கொண்டதையடுத்து, அதிலுள்ளக் குறைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இம்முடிவானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- ❖ சர்வதேச நாய்கள் தினமானது, ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 26 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
- ❖ சுதந்திரப் போராட்ட வீரரும், தமிழ்நாட்டின் முன்னாள் உள்துறை அமைச்சருமான P. கக்கன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து எடுக்கப்பட்ட 'கக்கன்' திரைப்படத்திற்குத் தமிழக அரசு வரிவிலக்கு அளித்துள்ளது.
- ❖ பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே சாதி, மத வேறுபாடுகளால் ஏற்படும் வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்காக அமைக்கப் பட்ட நீதிபதி K. சந்துரு குழு செயலபடுவதற்கான விதிமுறைகளை தமிழக அரசு வகுத்து உள்ளது.
- ❖ சத்தீஸ்கரில் உள்ள தேசியக் கனிம மேம்பாட்டு கழகத்தின் நாகர்னார் எஃகு ஆலை என்பது அதன் தயாரிப்புப் பொருளான, உயர்ந்தபட்ச வெப்பநிலையில் அழுத்தப்பட்ட எஃகு தகடுகளை ஒன்பது நாட்களில் தயாரித்துச் சாதனை படைத்துள்ளது.
- ❖ இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவுப் பள்ளி கேரளாவின் திருவனந்தபுரத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- ❖ உலக மல்யுத்த நிர்வாகக் குழுவானது இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் (WFI) தலைவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து, அடுத்தத் தலைவருக்கான அமைப்பின் தேர்தலை நடத்தாமல் இருந்தததற்காக அந்த அமைப்பின் அங்கீகாரத்தினை ரத்து செய்துள்ளது.
- ❖ பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பானது, ASTRA எனப்படும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கண்ணுக்குப் புலப்படாத நீண்ட தொலைவு செயல்பாட்டு வரம்பு கொண்ட (BVR) ஏவுகணையின் பரிசோதனையினை வெற்றி கரமாக மேற்கொண்டது.
- ❖ ஆயுஷ்மான் பாரத் எண்ணிமத் திட்டத்தின் (ABDM) சிறு மருத்துவத் தளங்கள் என்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்திய இந்தியாவின் முதல் மாநிலமாக மிசோரம் மாறியுள்ளது.

- ஐரோப்பாவின் நரி உரோம உற்பத்தியில் முன்னணியில் விளங்கும் நாடான பின்லாந்து, உரோமப் பண்ணைகளில் பறவைக் காய்ச்சல் பரவுவதைத் தடுப்பதற்காக என்று 120,000 நரிகளையும் மிங்க் எனப்படும் ஒருவகை கீரி இனங்களையும் கொல்லத் தொடங்கி உள்ளது.
- PDF எனும் ஆவண வாசிப்பு மென்பொருளைக் கண்டுபிடித்தவரும் அடோப் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் இணை நிறுவனருமான ஜான் வார்னாக் சமீபத்தில் காலமானார்.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகளை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பதற்காக மாநில அலுவல் மொழி (சட்டமன்ற) ஆணையத்திற்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
- செயற்கை நுண்ணறிவுக்கான நெறிமுறைகள் (AI) குறித்த யுனெஸ்கோ அமைப்பின் பரிந்துரையைச் செயல்படுத்துவதற்காக வேண்டி தெலுங்கானா மாநில அரசு மற்றும் யுனெஸ்கோ அமைப்பு ஆகியவை இணைந்து செயல்பட உள்ளன.
- பாரத மிகு மின் நிறுவனமானது (BHEL) அனல் மின் நிலையங்களில் இருந்து வெளிவரும் $NO_x$ உமிழ்வைக் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட SCR வினையூக்கிகளின் முதல் தொகுதியினை வெற்றிகரமாகத் தயாரித்துள்ளது.
- HDFC வங்கி மற்றும் மெரியோட் பான்வாய் நிறுவனம் ஆகியவை இணைந்து இந்தியாவில் முதல் முறையாக இணை நிறுவனத் தங்கும் விடுதி கடன் அட்டை - 'மெரியோட் பான்வாய் HDFC வங்கி கடன் அட்டையினை' அறிமுகப் படுத்தியுள்ளன.
- மத்திய ஆலோசனைக் குழுவானது உணவு வணிக நிறுவனங்களுக்கு (FBOs) தற்போது வழங்கப் பட்டு வரும் ஓராண்டு உரிமத்திற்குப் பதிலாக ஐந்து ஆண்டுகள் வரை உரிமம் வழங்கப்படலாம் என்று பரிந்துரைத்துள்ளது.
- இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 30 ஆம் தேதியன்று தேசிய சிறுதொழில் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- டென்மார்க்கில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு BWF உலகப் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியப் பேட்மிண்டன் வீரர் H.S. பிரணாய் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
    - இதன் மூலம் BWF உலகப் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியின் ஆடவர் பிரிவில் பதக்கம் வென்ற ஐந்தாவது இந்திய வீரர் என்ற பெருமையினைப் பிரணாய் பெற்றுள்ளார்.
- கொல்கத்தா நகரமானது டெல்லி மற்றும் புனே ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக, காற்றுத் தர முன்னெச்சரிக்கை அமைப்பை (AQEWS) பெற உள்ள 3வது இந்திய நகரமாக மாறியுள்ளது.
    - இது இந்திய வெப்ப மண்டல வானிலை ஆய்வு நிறுவனத்தினால் (IITM) உருவாக்கப் பட்டது.
- ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் நடைபெற்ற உலகத் தடகளச் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான ஈட்டி எறிதல் போட்டியில் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்று வரலாறு படைத்துள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## புவிசார் குறியீடு பெற உள்ள தமிழகத் தயாரிப்புகள்

- திருவண்ணாமலை மாவட்டத்தின் ஜடேரி திருமண் (நாமக்கட்டி), கன்னியாகுமரி மாவட்டத்தின் மட்டி வாழைப்பழம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் செடிபுட்டா சேலைகளுக்கு புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கப்பட உள்ளது.
- புவிசார் குறியீட்டுப் பட்டியல் கிட்டத்தட்ட 420 பொருட்களைக் கொண்டுள்ளது.
- இதனுடன் இப்பட்டியலில் இடம் பெற்ற தமிழகத் பொருட்களின் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்து தமிழகம் இப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் உத்தரப் பிரதேசம் 50க்கும் மேற்பட்ட பொருட்களுடன் இரண்டாவது இடத்திலும் கர்நாடகா 48 தயாரிப்புகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளது.



## தமிழக மாநிலத்தின் வரி வருவாய்

- 2023 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூன் மாதத்தில் தமிழகத்தின் சொந்த வரி வருவாய் ஆனது 34,311.23 கோடி ரூபாயாக குறைந்த அளவில் அதிகரித்துள்ளது.
- இது கடந்த ஆண்டின் இதே காலக் கட்டத்தில் 33,923.04 கோடி ரூபாயாக இருந்தது.

**A substantial rise**

The tax collection in Tamil Nadu has increased by over 50% in the first quarter of fiscal 2023

| | Q1 2023 | Q1 2022 | % change |
|---|---|---|---|
| State Goods and Services Tax | 13692.84 | 9224.11 | 48.4 |
| Stamps and Registration Fees | 4457.95 | 2314.46 | 92.6 |
| Land Revenue | 58.46 | 38.07 | 53.5 |
| Taxes on Sales, Trade etc | 13119.24 | 9484.81 | 38.3 |
| State Excise Duties | 2594.55 | 1199.23 | 116.3 |
| **Total** | **33923.04** | **22260.68** | **52.3** |


- மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) ஆனது மொத்த வருவாயில் 70% ஆகும்.
- கடந்த ஆண்டின் இதே காலக் கட்டத்தில் இருந்த 58.46 கோடி ரூபாயாக இருந்த தமிழக மாநிலத்தின் நில வருவாய் ஆனது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூன் மாதத்தில் 60.43 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மாநிலத்தின் கலால் வரிகள் (மதுபான வருவாயை உள்ளடக்கிய) 2,620.66 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் இது 2,594.55 கோடி ரூபாயாக இருந்தது.

## தமிழ்நாடு நலத்திட்டத்தில் புதிய விதி

- 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூலித் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தில் ஒரு புதிய விதியானது அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- இது உயிரிழப்பை விளைவிக்கும் விபத்துகளின் போது கூலித் தொழிலாளர்கள் (உடல் உழைப்பு) மற்றும் வெவ்வேறு மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்தத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்குப் பயனளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த விதியின் படி, ஒரு கூலித் தொழிலாளி தனது பணியிடத்தில் விபத்து காரணமாக உயிரிழந்தால், இறந்தவர்களின் உடலை அவர்களின் சொந்த இடத்திற்கு கொண்டு செல்வதற்காக அவர்களின் சார்பாக குறிப்பிடப்பட்ட அல்லது அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு நிதி உதவி வழங்கப்படும்.
- இந்த விதிமுறைகள் ஆனது, வெவ்வேறு மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்தத் தொழிலாளர்களுக்கும் பொருந்தும்.
- ஒரு விபத்தானது தொழிலாளியின் வேலைசார்ந்தச் சூழலுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தால் மட்டுமே இந்தப் பயனைப் பெற முடியும்.
- இதில் வேண்டுமென்றே தானாக முற்பட்டு உள்ளாகும் காயம், தற்கொலை, போதை, பித்து, அல்லது சட்டத்தை மீறுதல் ஆகியவை அடங்காது.

## கோதாவரி-காவிரி நதி இணைப்புத் திட்டம்

- கோதாவரி-காவிரி நதிநீர் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒரு நடவடிக்கை என்பது, சம்பந்தப்பட்ட மாநிலங்கள் ஒருமித்தக் கருத்தை எட்டுவதைப் பொறுத்தே அமையும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இதில் உள்ள "சம்பந்தப்பட்ட மாநிலங்கள்" என்ற சொல்லானது புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தோடு, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இது கோதாவரி ஆற்றின் உபரி நீரைத் தெலுங்கானா மாநிலத்தின் கரீம்நகர் என்ற மாவட்டத்தில் உள்ள ஈஞ்சம்பள்ளி என்ற அணையிலிருந்து காவிரி நதியில் கலக்கச் செய்வதற்காக தஞ்சாவூருக்கு அருகில் உள்ள கல்லணைக்கு அனுப்பும் திட்டமாகும்.
- இது கோதாவரி (ஈஞ்சம்பள்ளி)-கிருஷ்ணா (நாகார்ஜுன சாகர்); கிருஷ்ணா (நாகார்ஜுன சாகர்)-பெண்ணாறு (சோமசிலா) மற்றும் பெண்ணாறு (சோமசிலா) – காவிரி (கல்லணை) ஆகிய மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது.




## ‘தோழி’ தங்கும் விடுதி





- ❖ தமிழ்நாடு சமூக நலத்துறை மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறையானது, பணி புரியும் பெண்களுக்காக ஒன்பது மாவட்டங்களில் பதினொரு தங்கும் விடுதிகளைத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்த விடுதிகளுக்கு ‘தோழி’ (பெண் தோழர்) என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ இது தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதி கழகம் லிமிடெட் (TNWWHCL) நிறுவனத்தின் கீழ் செயல்பட உள்ளது.

- ❖ பெண்களுக்குப் பாதுகாப்பான மற்றும் விலை மலிவானத் தங்குமிடங்களை வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இவை தொடங்கப்பட்டுள்ளன.
- ❖ இந்த தங்கும் விடுதிகள் சென்னை, செங்கல்பட்டு, சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன.

## இராதாபுரம் தொகுதியில் 'நுண்திறன் வகுப்பறைகள்'

- ❖ தமிழ்நாட்டில் இராதாபுரத்தில் 6.86 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட 303 நுண் திறன் வகுப்பறைகளை முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- ❖ அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் நுண்திறன் வகுப்பு அறைகளைப் பெற்ற இந்தியாவின் முதல் சட்டமன்றத் தொகுதி என்ற பெருமையை இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி பெற்றுள்ளது.
- ❖ 297 அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் பிற கல்வி நிறுவனங்களில் நுண்திறன் வகுப்பறைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

## அந்நிய நேரடி முதலீடு 2022-23




- ❖ 2022-23 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் அந்நிய நேரடி முதலீடு (FDI) வரத்து ஆனது 27.7% குறைந்து சுமார் 2.17 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது.
- ❖ இது 2021-22 ஆம் ஆண்டில் சுமார் 3 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- ❖ 2021-22 ஆம் ஆண்டில் 84.84 பில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடு ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 16.34% ஆக குறைந்து 70.97 பில்லியன் டாலராக இருந்தது.
- ❖ மகாராஷ்டிராவின் அந்நிய நேரடி முதலீட்டு வரவில் 4.08% குறைந்தும், கர்நாடகாவின் அந்நிய நேரடி முதலீட்டு வரவில் 52.74% குறைந்து 10.43 பில்லியன் டாலராகவும் உள்ளது.
- ❖ 2021-22 ஆம் ஆண்டில் 2.70 பில்லியன் டாலராக இருந்த 2022-23 ஆம் ஆண்டில் குஜராத்தின் அந்நிய நேரடி முதலீட்டு வரவு 74.4% உயர்ந்து 4.71 பில்லியன் டாலராக உள்ளது.

- 2022 ஆம் ஆண்டில் நிதியாண்டில் 1,72,974.93 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டில் மேற் கொள்ளப் பட்ட புதிய முதலீடுகள் ஆனது 2023 ஆம் நிதியாண்டில் 1,73,494.34 கோடி ரூபாயாக அதிகரித்துள்ள நிலையில் இதில் தனியார் முதலீட்டின் பங்கு 75.20% ஆகும்.

## 1,556 புதிய பண்ணைக் குளங்கள்

- திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகம் ஆனது, பண்ணைக் குளம் திட்டம் குறித்து வீடு வீடாக சென்று விழிப்புணர்வு பரப்பும் பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் 30 நாட்களுக்குள் 1,556 பண்ணைக் குளங்கள் கட்டமைக்கப் பட்டு உள்ளன.
- இது முழுக்க முழுக்க மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டில் இதே பிரிவில் 1,121 குளங்களை நிறுவி உலகச் சாதனைப் படைத்த திருவண்ணாமலையினை விஞ்சி திருப்பத்தூர் சாதனையினைப் படைத்துள்ளது.



## உறுப்பு மற்றும் திசு மாற்றுச் சிகிச்சைக்கான சிறந்த மாநில விருது

- உடல் உறுப்பு தானச் சிகிச்சையில் தேசிய அளவில் சிறப்பாகச் செயல்படும் மாநில விருதினைத் தமிழ்நாடு மாநில அரசு பெற்றுள்ளது.
- இந்த நிகழ்வினைத் தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பானது (NOTTO) ஏற்பாடு செய்து உள்ளது.
- மாநிலத்தில் தற்போது 13 உறுப்பு மாற்றுச் சிகிச்சை மருத்துவமனைகள் மற்றும் 26 உறுப்பு மீட்பு மையங்கள் உள்ளன.
- தமிழ்நாட்டில் அமைந்துள்ள MOHAN அறக்கட்டளை எனப்படுகின்ற ஒரு தன்னார்வத் நிறுவனமானது, உறுப்பு தானத் துறையில் பணியாற்றும் சிறந்த தன்னார்வ நிறுவனம் என்ற விருதையும் பெற்றுள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இறந்தவர்களிடமிருந்துப் பெறப்படும் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைத் திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து, இன்றுவரை 1,706 பேர் உறுப்பு தானத்திற்குப் பதிவு செய்துள்ளனர்.

## சொந்த வருவாயில் செலவினங்களின் விகிதாச்சாரம்

### Revenue reckoner

**Tamil Nadu's performance in own revenue collection**



| Year | State's own revenue (₹ in crore) | Revenue expenditure (₹ in crore) | Own revenue as % of revenue expenditure |
|---|---|---|---|
| 2017-18 | 1,07,236.17 | 1,67,873.60 | 63.88 |
| 2018-19 | 1,20,337.68 | 1,97,200.60 | 61.02 |
| 2019-20 | 1,20,350.13 | 2,10,434.70 | 57.19 |
| 2020-21 | 1,16,574.80 | 2,36,402.20 | 49.31 |
| 2021-22 | 1,33,688.48 | 2,59,150.97 | 51.59 |
| **2022-23** | **1,58,337.17** | **2,84,188.45** | **55.72** |

Note: State's own revenue is the sum of State's own tax revenue and non-tax revenue

**Proportion of own revenue in revenue expenditure: How other States fare (in %)**

| Year | Andhra Pradesh | Telangana | Karnataka | Maharashtra | Gujarat | Uttar Pradesh |
|---|---|---|---|---|---|---|
| 2017-18 | 46.39 | 77.32 | 67.95 | 77.98 | 75.15 | 48.61 |
| 2018-19 | 49.06 | 77.3 | 63.49 | 76.47 | 70.78 | 50.68 |
| 2019-20 | 44.31 | 68.9 | 63.15 | 67.68 | 68.92 | 68.44 |
| 2020-21 | 39.83 | 59.05 | 59.61 | 58.02 | 53.59 | 44.13 |
| 2021-22 | 45.5 | 74.78 | 61.54 | 62.25 | 72.92 | 49.32 |
| **2022-23** | **49.03** | **70.6** | **67.37** | **66.31** | **76.03** | **53.51** |

Source: Union Minister of State for Finance Pankaj Chaudhary's reply in Rajya Sabha on August 1, 2023

- கடந்த ஆறு ஆண்டுகளில், தமிழ்நாடு அரசானது தனது சொந்த வருவாய் மற்றும் வருவாய் செலவினங்களின் விகிதத்தில் சரிவைக் கண்டுள்ளது.
- ஒரு மாநிலம் இதில் அதிக விகிதாச்சாரத்தை அடைய முடிந்தால், கடன் வாங்குதல் உட்பட பிற நிதி ஆதாரங்களைச் சார்ந்திருக்கும் நிலை குறைகிறது.
- இதனால் வருவாய்ப் பற்றாக்குறையும் குறையும்.
- தெலுங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களை விட தமிழகத்தின் விகிதாச்சாரம் குறைவாக உள்ளது.
- ஆந்திரப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களை விட தமிழகத்தின் செயல்திறன் சிறப்பாக உள்ளது.

## ஹூக்கா பார்களுக்குத் தடை

- மாநிலத்தில் ஹூக்கா பார்களுக்குத் தடை விதித்து மாநில அரசு அரசு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2003 ஆம் ஆண்டு சிகரெட் மற்றும் இதரப் புகையிலைப் பொருட்கள் (விளம்பரத் தடை மற்றும் வணிகம் மற்றும் வர்த்தகம், உற்பத்தி, வழங்கீடு மற்றும் விநியோகம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல்) என்றச் சட்டத்தின் கீழ் தமிழக மாநிலத்திற்கான விதி முறைகளை தமிழகச் சட்டமன்றம் திருத்தம் செய்துள்ளது.

## குடிமைப் பணித் தேர்விற்குத் தயாராகும் தேர்வர்களுக்கான திட்டம்




- குடிமைப் பணியாளர் தேர்விற்குத் தயாராகும் தேர்வர்கள் சிறந்தப் பயிற்சி வசதிகள் மற்றும் புத்தகங்களைப் பெற உதவச் செய்கின்ற ஒரு திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது 2023-24 ஆம் ஆண்டு மாநில நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டது.
- இத்திட்டத்தின் கீழ், ஒவ்வோர் ஆண்டும் குடிமைப் பணியாளர் தேர்விற்குத் தயாராகும் 1,000 மாணவர்கள் ஒரு தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப் படுவர்.
- முதல்நிலைத் தேர்விற்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் 10 மாதங்களுக்கு தலா 7,500 ரூபாய் வழங்கப்படும்.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) ஆனது, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து 'நான் முதல்வன்' திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது.

## ஆதிச்சநல்லூர் அருங்காட்சியகத்திற்கான அடிக்கல்

- ஆதிச்சநல்லூர் அருங்காட்சியகத்துக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அடிக்கல் நாட்டினார்.
- இது தொல்லியல் தளத்திலேயே நிறுவப்பட உள்ள இந்தியாவின் முதல் தொல்பொருள் அருங்காட்சியகம் ஆகும்.
- இங்கு 3,000 ஆண்டுகள் பழமையான கலைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படும்.
- தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூர் என்னுமிடத்தில் இந்தியத் தொல்லியல் துறை நடத்திய அகழ்வாராய்ச்சியில் ஏராளமான முதுமக்கள் தாழிகள், உலோகம் மற்றும் வெண்கலத்திலானப் பொருட்கள் மற்றும் ஒரு தங்க வைரம் கூட கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- 1876 ஆம் ஆண்டிலேயே ஆதிச்சநல்லூரில் அகழாய்வுகள் தொடங்கப்பட்டாலும், 145 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று இது அடையாளம் கண்டறியப் பட்டுள்ளது.

## இத்தாலியில் தமிழ் மொழி கையெழுத்துப் பிரதிகள் கண்டுபிடிப்பு

- 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஞானமுயற்சி என்ற தலைப்பிலான சில கையெழுத்துப் பிரதிகள் வடக்கு இத்தாலியில் உள்ள ஆர்மீனிய மடாலயத்தில் கண்டுபிடிக்கப் பட்டு உள்ளன.
- முனைவர் பட்டமுனைவு அறிஞரான தமிழ் பரதன் என்பவருக்கு இந்தக் கையெழுத்துப் பிரதிகளைப் படிப்பதற்கான அணுகலைப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.
- இது இக்னேஷியஸ் என்பவர் எழுதிய Spiritual Exercise என்ற நூலின் முதல் தமிழ் மொழி பெயர்ப்பின் நகலாக இருக்கலாம்.
- இந்த மொழிபெயர்ப்பு ஆனது தமிழில் ஞானப் பிரகாச சாமி என்று அழைக்கப்படும் மைக்கேல் பெர்டோல்டியினால் மொழிபெயர்க்கப் பட்ட நூலாக இருக்கலாம்.
- இது 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த (1720 ஆம் ஆண்டுகளைச் சேர்ந்ததாக இருக்கலாம்) ஒரு உரைநடை நூலாகும்.
- இது 19 ஆம் நூற்றாண்டில் புதுச்சேரியில் உள்ள மிஷன் பிரஸ் எனும் அச்சகத்தினால் பலமுறை அச்சிடப் பட்டுள்ளது.
- இந்த நூலகமானது கையெழுத்துப் பிரதிகளை ‘இந்திய பாப்பிரஸ் லாமுலிக் மொழி – XIII நூற்றாண்டு’ என வகைப்படுத்தியுள்ளது.

## பாரதியார் மண்டபம்

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் சென்னையில் அமைந்துள்ள ராஜ்பவனில் தேசியவாதத் தமிழ் கவிஞர்-பத்திரிக்கையாளர் சுப்பிரமணிய பாரதி அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.
- அந்த வளாகத்தில் உள்ள தர்பார் மண்டபத்துக்கு ‘பாரதியார் மண்டபம்’ என்றும் அவர் பெயர் சூட்டினார்.

## 4வது கலைஞர் நினைவு சர்வதேச மாரத்தான் போட்டி

- இது மிகப்பெரிய அளவிலான ஓட்டப் பந்தயத் தொடருக்கான கின்னஸ் உலகச் சாதனையைப் படைத்துள்ளது.
- சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் மொத்தம் 73,206 பேர் கலந்து கொண்டனர்.
- இதில் 50,629 ஆண்கள், 21,514 பெண்கள் மற்றும் 1,063 திருநர் ஆவர்.
- கடந்த ஆண்டு நடைபெற்ற இந்த மாரத்தான் ஆசியாவின் மிகப்பெரிய மாரத்தான் போட்டியாகச் சாதனை படைத்தது.
- முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 100வது பிறந்தநாள் விழாவினை ஒட்டி இந்தப் போட்டியானது நடைபெற்றது.

## உடல் உறுப்பு துண்டித்தல் அல்லது நீக்கம் இல்லாத தமிழ்நாடு

- டாக்டர் சேகர் அறக்கட்டளை மற்றும் சென்னை காவேரி மருத்துவமனை ஆகியவை இணைந்து ‘உடல் உறுப்பு துண்டித்தல் அல்லது நீக்கம் இல்லாத தமிழ்நாடு’ என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளன.

- இது ஆகஸ்ட் 06 ஆம் தேதியன்று உலக நாளஞ்சார்ந்த அறுவை சிகிச்சை தினத்தை அனுசரிக்கும் வகையில் தொடங்கப்பட்டது.
- இந்தியாவில் 140 கோடி மக்கள் தொகைக்குச் சுமார் 350 நாளஞ்சார்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்கள் உள்ளனர்.
- இந்தியாவில் உள்ள சுமார் 20 மருத்துவக் கல்லூரிகளில் மட்டுமே தனித்தனி நாளஞ் சார்ந்த அறுவை சிகிச்சைப் பிரிவுகள் உள்ள நிலையில், அவற்றில் பெரும்பாலானவை தமிழ்நாட்டில் உள்ளன.
- உறுப்பு நீக்கச் சிகிச்சைகளுக்கான பொதுவான காரணங்கள் காயம் மற்றும் நீரிழிவு நோய் ஆகியனவாகும்.
- 85 சதவிகிதம் கால் துண்டிப்பு சிகிச்சைகளுக்குக் காரணம் கால் புண்களின் பாதிப்பு நிலையே ஆகும்.

## குவார்ட்ஸ் படிகக் கல்லினால் செய்யப்பட்ட எடைக்கல் - கீழடி



- கீழடியில் மேற்கொள்ளப்பட்ட 9 ஆம் கட்ட அகழாய்வில் குவார்ட்ஸ் படிகக் கல்லினால் செய்யப்பட்ட எடைக்கல் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு, கீழடியில் ஒரு குவார்ட்ஸ் படிகக் கல் கண்டுபிடிக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- இது இயற்கையில் ஒளி புகும் (பளிங்குக் கல்) வகையிலானதாகும்.
- இது கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள் மற்றும் செம்பூச்சு மட்பாண்டங்கள் ஆகியவையும் இந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டது.
- சுடுமண் பாண்டத்தினால் ஆன பாம்பு உருவத்தின் ஒரு எஞ்சியப் பகுதியும் இந்த அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளது.
- மதுரைக்கு அருகில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள இது சங்கக் காலத்தைச் சேர்ந்த தலத்தின் காலத்தை ஒத்துள்ளது.
- தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டத் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் பின்வரும் மிக ஆச்சரியமிக்கத் தகவல்களை வழங்கியுள்ளன.
- மதுரைக்கு அருகிலுள்ள கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் சங்க காலத்தின் காலகட்டத்தினை கி.மு. 300 முதல் கி.மு. 600 ஆம் காலகட்டத்தினைச் சேர்ந்ததாக எடுத்துரைக்கின்றன.
- சிவகாலையில் உள்ள முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட நெற்கதிர்கள் 3,200 ஆண்டுகள் பழமையானது என கண்டறியப் பட்டுள்ளது.

- 4,200 ஆண்டுகளுக்கு முன்னதாக கி.மு. 2172 ஆம் ஆண்டில் தமிழர்கள் இரும்புத் தொழில்நுட்பத்தைப் பற்றி அறிந்திருந்தனர்.

## M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் ஆராய்ச்சி மையம்





- பூம்புகாரில் உள்ள M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் அனைவருக்குமான மீன் விநியோகத்திற்கான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையமானது விருது பெற்ற ஏழு திட்டங்களில் ஒன்றாகும்.
- ரிலையன்ஸ் அறக்கட்டளை மற்றும் சர்வதேச மேம்பாட்டிற்கான அமெரிக்க முகமை ஆகியவற்றினால் வழங்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான "பெண்கள் தொடர்புச் சவால்" விருதைப் பெறுவதற்கான 260 விண்ணப்பங்களில் இதுவும் ஒன்றாகும்.
- பூம்புகார் மையம் ஆனது பெண்களிடையே பாலின எண்ணிமப் பிளவைக் குறைக்கும் வகையில் தகவல், தகவல் தொடர்பு, தொழில்நுட்பச் சேவைகளை (ICT) உருவாக்கி வருகிறது.
- பெண்கள் தொடர்புச் சவால் என்பது அன்றாட வாழ்வில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை உருவாக்குவதற்காக உலக நாடுகளுக்கு விடுக்கப் படும் ஒரு அழைப்பாகும்.
- உலக சுகாதார அமைப்பின் முன்னாள் தலைமை அறிவியலாளர் சௌமியா சுவாமி நாதன் M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவராக உள்ளார்.
- இது அவரது தந்தையும், ஒரு புகழ்பெற்ற வேளாண் அறிவியலாளர் M.S. சுவாமிநாதன் அவர்களால் நிறுவப்பட்டது.

## வேலூரில் விமான நிலைய வளாக கட்டமைப்பு பணிகள்

- வேலூரில் சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலையில் (NH 44) பல கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் விமான நிலைய வளாகத்தின் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.
- பொது விமானப் போக்குவரத்தின் தலைமை இயக்குநரகத்தின் பாதுகாப்புத் தணிக்கை முடிந்த பிறகு நவம்பர் மாதத்திற்குள் இது தனது செயல்பாடுகளைத் தொடங்கும்.

- வேலூரில் உள்ள புதிய ஓடுபாதையில் நவம்பர் மாதம் முதல் சிறிய விமானங்களை இயக்குவதற்கு இந்திய விமான நிலைய ஆணையம் முடிவு செய்துள்ளது.
- வேலூரில் புதிய விமான நிலையம் அமைப்பதற்கு, UDAN – பிராந்திய இணைப்புத் திட்டத்தின் (UDAN-RCS) இரண்டாம் கட்டத்தின் கீழ் சில ஆண்டுகளுக்கு முன்னதாக அனுமதி வழங்கப்பட்டது.
- UDAN திட்டமானது, சிறிய நகரங்களில் விமானச் சேவை இணைப்பை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் புதிய விமான நிலையமானது ஆம்பூர், ஆற்காடு, வாணியம்பாடி, வேலூர் போன்ற பகுதிகளில் உள்ள உள்ளூர் பயணிகளுக்கு உதவிகரமாக இருக்கும்.

## யானைகளின் எண்ணிக்கை குறித்த ஒத்திசைவு மதிப்பீடு 2023 அறிக்கை




- சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட யானைகளின் எண்ணிக்கை குறித்த ஒரு ஒத்திசைவு மதிப்பீட்டு அறிக்கையின் படி தமிழ்நாட்டின் வனப்பகுதியில் உள்ள யானைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகப் பதிவாகியுள்ளது.
- தமிழ்நாடு மாநிலத்தில் 2,961 யானைகள் உள்ளன.
- இந்த எண்ணிக்கையானது, 2017 ஆம் ஆண்டில் 2,761 ஆக பதிவான யானைகளின் எண்ணிக்கையை விட 200 அதிகமாக உள்ளது.
- 26 வனப் பிரிவுகளில், முதுமலை புலிகள் வளங்காப்பகத்தில் யானைகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து முதுமலை புலிகள் வளங்காப்பகத்தின் மசினகுடி கோட்டம் மற்றும் சத்தியமங்கலம் புலிகள் வளங்காப்பகத்தின் ஹாசனூர் கோட்டம் ஆகியவை உள்ளன.

- ஐந்து யானைகள் வளங்காப்பகங்களில், நீலகிரி கிழக்குத் தொடர்ச்சி மலை யானைகள் வளங்காப்பகத்தில் தான் அதிக எண்ணிக்கையிலான யானைகள் காணப்படுகின்றன.
- அதனைத் தொடர்ந்து அகத்தியமலை யானைகள் வளங்காப்பகம், நிலாம்பூர் அமைதிப் பள்ளத்தாக்கு - கோவை யானைகள் வளங்காப்பகம் மற்றும் பெரியார் யானைகள் வளங்காப்பகம் ஆகியவை உள்ளன.
- 2023 ஆம் ஆண்டு யானைகள் கணக்கெடுப்பின் படி, மொத்த யானைகளின் எண்ணிக்கையில் நாட்டிலேயே கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- கர்நாடக மாநிலத்தில் உள்ள மொத்த யானைகள் எண்ணிக்கையானது 5,914 முதல் 6,877 வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் 6,049 ஆக இருந்த கர்நாடக மாநிலத்தின் மொத்த யானைகளின் எண்ணிக்கையானது தற்போது 6,395 ஆக உயர்ந்துள்ளது.
- இது இந்தியாவில் பதிவான மிக அதிக எண்ணிக்கையாகும்.

## தமிழ்நாடு - நிலுவையில் உள்ள வேளாண் கடன்கள்

- அதிக எண்ணிக்கையிலான வேளாண் கடன்கள் நிலுவையில் உள்ள மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- இந்த ஆண்டு ஜூன் 30 ஆம் தேதியன்றைய நிலவரப் படி, நிலுவையில் உள்ள வேளாண் கடன்களின் எண்ணிக்கை 3.47 லட்சம் கோடி ரூபாயாகும்.
- இது மொத்தக் கடன்களில் சுமார் 16.5% ஆகும்.
- தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள கடன் மதிப்பு 2.79 கோடி ரூபாயாகும்.
- இது இந்தியாவிலேயே மிக அதிக அளவிலானதாகும்.
- வேளாண் கடன்களின் மதிப்பினைத் தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (நபார்டு) மதிப்பிட்டுள்ளது.
- இதில் வேளாண்மைக்கான குறுகிய காலக் கடன்கள் (18 மாதங்கள் வரையிலான பயிர் உற்பத்தி), பால் அல்லது இழுவை வாகன கொள்முதலுக்கான கடன்கள் போன்ற நடுத்தர காலக் கடன்கள் (18 மாதங்கள் முதல் 5 ஆண்டுகள் வரை) மற்றும் தோட்டக் கலை போன்றவற்றிற்கான நீண்ட காலக் கடன்கள் (5 ஆண்டுகளுக்கு அப்பால்) ஆகியவை அடங்கும்.
- மாநிலத்தின் மொத்தக் கடன் மதிப்பில், வணிக வங்கிகளின் கடன் மதிப்பு கிட்டத்தட்ட 3.15 லட்சம் கோடி ரூபாயுடன் அதிகபட்சப் பங்கைக் கொண்டிருந்த நிலையில், அதனை அடுத்து பிராந்தியக் கிராமப்புற வங்கிகள் (RRB) - 19,129 கோடி ரூபாய் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் 13,348 கோடி ரூபாய் மதிப்பிலான கடன்களைக் கொண்டு உள்ளன.
- நிலுவையில் உள்ள வேளாண் கடன்களில் சுமார் 2.43 லட்சம் கோடி ரூபாய் மதிப்புடன் ஆந்திரப் பிரதேசம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.
- இதில் கர்நாடகா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் ஆகியவை முறையே நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவது இடங்களில் உள்ளன.

## இந்தியாவில் 482 மருத்துவக் கல்லூரிகள்

- இந்தியாவில் மொத்தம் 482 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் உள்ளன.
- தேசிய மருத்துவ ஆணையம் மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் வெளியிட்ட ஒரு தகவலின் படி இத்தகவலானது கூறப்பட்டுள்ளது.
- கர்நாடகா (56), மகாராஷ்டிரா (49), தமிழ்நாடு (48), மற்றும் உத்தரப் பிரதேசம் (46) ஆகிய மாநிலங்கள் அதிக எண்ணிக்கையிலான மருத்துவக் கல்லூரிகளைக் கொண்டுள்ளன.

## கல்வெட்டு ஆய்வாளர் S.இராசு (85)

- கல்வெட்டு ஆய்வறிஞரும், தொல்லியல் ஆய்வாளரும், தமிழறிஞருமான 'புலவர்' S.இராசு அவர்கள் கோவையில் காலமானார்.
- இவர் 1938 ஆம் ஆண்டில் ஈரோடு அருகே சென்னிமலை ஒன்றியத்தில் வெள்ளோடு என்னுமிடத்தில் பிறந்தார்.
- சங்க இலக்கியத்தின் பதிற்றுப் பத்து நூலில் கொடுமணல் கிராமமானது 'கொடுமணம்' என்று பொறிக்கப் பட்டுள்ளதாக புலவர் S.இராசு அடையாளம் காட்டினார்.
- அவர் இத்தகவலைக் கண்டறிந்ததைத் தொடர்ந்து, 1985 ஆம் ஆண்டில் முதல் முறையாக அகழ்வாராய்ச்சி தொடங்கியது.
- இது பெருங்கற்காலம் மற்றும் ஆரம்பக் கால வரலாற்றுக் காலம் உள்ளிட்ட இரண்டு கலாச்சாரக் காலங்களை வெளிக் கொணர்ந்தது.
- தமிழக அரசானது ஒரு தமிழறிஞராக இவர் ஆற்றியப் பங்களிப்பதற்காக இவருக்கு 2012 ஆம் ஆண்டில் உ.வே. சுவாமிநாத ஐயர் விருதினை வழங்கியது.

## சென்னைப் பெருநகரக் கூட்டாண்மை

- சென்னைப் பெருநகரக் கூட்டாண்மையின் இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாக சென்னையில் ஒரு பாதுகாப்பான மற்றும் ஏற்பமைவு மிக்க வகையிலான தெருக்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களுக்கு உலக வங்கி நிதியுதவி வழங்க உள்ளது.
- இது 2022-2027 என்ற காலக் கட்டத்திற்குள் நகர்ப்புறப் போக்குவரத்து மற்றும் இடஞ் சார்ந்த மேம்பாட்டிற்கான திட்டமாகும்.
- இது இணையவழிப் போக்குவரத்துச் சேவை மற்றும் நுண்திறன் வாகன நிறுத்துமிடம் வசதிகள் போன்ற நகரத்தின் எண்ணிமம் சார்ந்த உள்கட்டமைப்பை மேம்படுத்தும்.

## 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கான முத்திரைச் சின்னம்

- தமிழக மாநில அரசின் உயர்இலட்சிய மிக்க உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கான 'முத்திரைச் சின்னத்தினை' தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட்டார்.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 07 மற்றும் 08 ஆகிய தேதிகளில் இந்த மாநாடு நடைபெற உள்ளது.
- 'த' என்ற தமிழ்ச் சொல்லினைக் குறிக்கும் வகையிலான இந்தச் சின்னமானது தாய்

மொழியான தமிழ்ச் செம்மொழியை நன்குச் சித்தரிக்கும் வகையிலும், அனைத்துப் பரிமாணங்களிலும் தழைத்தோங்கும் தமிழக மாநிலத்தினை நன்குச் சித்தரிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

- இந்த சின்னத்தின் நிறங்கள் மற்றும் அழகியல் மதிப்பீடானது எண்ணிம மாற்றம் மற்றும் தொழில்மயமாக்கல், ஒரு நகரமயமாக்கப்பட்டச் சமூகம் மற்றும் விரைவான தொழில்துறை வளர்ச்சி ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் டாலர் மதிப்பிலான பொருளாதாரம் என்ற உன்னத நிலையை அடையும் ஒரு இலக்கை நோக்கி மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழக மாநில அரசின் முயற்சிக்கு இந்தச் சந்திப்பு உதவும்.

## திருச்சி பொன்மலையில் உள்ள பொன்மலை இரயில் பணிமனை

- ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழில்சாலையின் 100 பழைய பயணிகள் இரயில் பெட்டிகளை வாகனங்களைச் சுமந்து செல்லும் பெட்டிகளாக மாற்றும் ஒரு பணியானது பொன்மலை இரயில் பணிமனையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.
- புதிதாக தயாரிக்கப்பட்ட இரு சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை கொண்டுச் செல்வதற்காக சுமார் 176 பழைய பயணிகள் இரயில் பெட்டிகளைப் புதிய தலைமுறைத் தொழில்நுட்பம் கொண்ட வகையில் வாகனங்களைச் சுமந்து செல்லும் பெட்டிகளாக இது மாற்றியது.
- இந்தியாவில் இரயில் பெட்டிகளை மாற்றியமைப்பதற்கான மற்றப் பட்டறைகளில் இது முன்னணியில் உள்ளது.
- இது 1928 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## சுதந்திர எரிபொருள் நிரப்பு நிலையம்

- இது சென்னையில் உள்ள புழல் மத்திய சிறையில் அமைந்துள்ளது.
- இங்கு பெண்களுக்கான சிறப்பு சிறை (SPW- Puzhal) உள்ளது.
- இது பெண் குற்றவாளிகளால் நடத்தப் படும் இந்தியாவின் முதல் எரிபொருள் சில்லறை விற்பனை நிலையம் ஆகும்.
- இப்பணிக்காக அக்கைதிகள் தலா 6,000 ரூபாய் மாத ஊதியமாகப் பெறுவர்.
- முன்னதாக, இதே வகையிலான ஒரு எரிபொருள் விற்பனை நிலையமானது இந்தியன் ஆயில் நிறுவனத்தினால் 2019 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் நிறுவப் பட்டது.
- ஆனால் அந்த நிலையமானது ஆண் கைதிகளால் நடத்தப்படுகிற நிலையில், இந்த நிலையம் பெண் கைதிகளால் நடத்தப் படுகிறது.

## பொற்பனைக் கோட்டை - வட்ட வடிவச் செங்கல் கட்டமைப்பு

- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், வட்ட வடிவச் செங்கல் கட்டமைப்பின் ஒரு பகுதியினைப் பொற்பனைக் கோட்டையில் கண்டறியப்பட்டுள்ளது.
- இது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சங்க காலத் தளம் ஆகும்.

- மெருகூட்டப் பட்டப் பாத்திரங்கள், கறுப்பு மட்பாண்டங்கள், கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள், கூரை ஓடுகள், துளையிடப்பட்டப் பாத்திரங்கள் மற்றும் தனித்துவமான வேலைப்பாடுகள் கொண்ட ரோமானிய மட்பாண்டங்களின் மூன்று துண்டுகள் போன்ற பானை ஓடுகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- ரோமானிய மட்பாண்டங்களால் செய்யப்பட்ட ஒரு சில்லு விளையாட்டு அமைப்பானது இங்கு கண்டறியப் பட்ட ஓர் அரிய மற்றும் முக்கியமான கண்டுபிடிப்பாகும்.
- இங்கு ஒரு சங்க காலக் கோட்டை இருந்ததாக நம்பப் படுகிறது.
- 1.26 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்த ஒரு மேட்டுக் குடியிருப்பு பகுதியானது, இந்தக் கோட்டைக்குள் இருந்ததாக நம்பப் படுகிறது.



## நீதிபதி K. சந்துரு குழு

- கல்வி நிறுவனங்களில் மாணவர்களிடையே நிலவும் சாதி, இன வேறுபாடுகளைக் களைவதற்கான நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஒய்வு பெற்ற நீதிபதி K. சந்துரு தலைமையிலான ஒற்றை நபர் குழு நியமிக்கப் பட்டு உள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் சமீபத்தில் நடந்த சம்பவத்தை அடுத்து இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இது அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய முக்கியப் பிரச்சினை என்பதால் இந்தக் குழு உருவாக்கப் பட்டது.

## தமிழ்நாடு யானைகள் வளங்காப்பு குறித்த மாநாடு 2023

- இரண்டு நாட்கள் அளவிலான தமிழ்நாடு யானைகள் வளங்காப்பு குறித்த மாநாடானது கோவையில் நிறைவு பெற்றது.
- கைவிடப்பட்ட யானைகளைப் பராமரிப்பதற்காக என்று விலங்கு முகாம்களில் உள்ள யானைகள் பராமரிப்பு மற்றும் சீர்தரச் செயல்பாட்டு நடைமுறை (SOP) பற்றிய ஒரு கையேட்டினை வனத் துறையானது வெளியிட்டுள்ளது.
- தமிழக வனத்துறையில், கால்நடை மருத்துவச் சேவைக்காக என்று பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப் பட்ட தனிப் பிரிவினை உருவாக்குவதாகவும் அரசு அறிவித்துள்ளது.

- 42 யானைகள் வழித்தடங்கள் (பாலக்காட்டின் தெற்கே 24 தடங்கள் மற்றும் பாலக் காட்டின் வடக்கே 18 வழித்தடங்கள்) இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இந்திய வனவிலங்கு அறக்கட்டளை (WTI) அமைப்பானது, தமிழ்நாட்டில் 'யானைத் திருவிழாவினை' தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.

## தினசரி நிலக்கரி இருப்பு அளவு

- மார்ச் 31 ஆம் தேதியன்று 2 மில்லியன் டன்னாக இருந்த தமிழ்நாட்டின் தினசரி நிலக்கரி இருப்பு அளவானது ஜூலை 26 ஆம் தேதியன்று 1.5 மில்லியன் டன்னாகக் குறைந்து உள்ளது.
- இது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழகத்தின் மின் உற்பத்தி நிலையங்களை 10 நாட்கள் வரை இயக்க மட்டுமே போதுமானதாகும்.
- மேட்டூர் அனல் மின் நிலையத்தில் வழக்கமான பயன்பாட்டிற்கான தேவைக்கு மாறாக வெறும் 3% நிலக்கரி மட்டுமே கையிருப்பில் இருந்தது.
- வடசென்னை மற்றும் தூத்துக்குடி அனல்மின் நிலையங்களில் அந்தந்த நிலையங்களின் வழக்கமான பயன்பாட்டிற்கான தேவைக்கு மாறாக தலா 19% அளவு கையிருப்பு உள்ளது.
- தென் மாநிலங்களிலேயே தமிழகம் தான் அதிக ஆற்றல் நுகர்வைக் கொண்டுள்ளது.
- ஏப்ரல் 20 ஆம் தேதியன்று தமிழக மாநிலத்தில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு 19,387 மெகாவாட் மின் தேவை பதிவாகியுள்ளது.
- அன்று, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு 423.785 மில்லியன் அலகுகள் தினசரி நுகர்வு பதிவு செய்யப்பட்டது.
- ஆகஸ்ட் 12 ஆம் தேதியன்று, மாநிலத்தின் உச்ச கட்ட மின் தேவை 15,928 மெகா வாட்டாகவும், மாநிலத்தின் தினசரி நுகர்வு 345.834 மில்லியன் அலகாகவும் இருந்தது.

## சிறந்த செயல்திறன் கொண்ட மாநகராட்சிக் கழகம்

- திருச்சி மாநகராட்சியானது, இந்த ஆண்டிற்கான சிறந்த செயல்திறன் கொண்ட மாநகராட்சிக்கான முதலமைச்சரின் விருதைப் பெற்றுள்ளது.
- இதில் தாம்பரம் மாநகராட்சியானது இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளது.
- சிறந்தச் செயல்திறன் கொண்ட நகராட்சியாக இராமேஸ்வரம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது.
- திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருத்துறைப்பூண்டி மற்றும் மன்னார்குடி ஆகியவை சிறந்த செயல்திறன் கொண்ட நகராட்சிகளாக முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுள்ளன.
- விழுப்புரம் மாவட்டத்தின் விக்கிரவாண்டி, புதுக்கோட்டை மாவட்டத்தின் ஆலங்குடி, சேலம் மாவட்டத்தின் வீரக்கல்புதூர் ஆகிய நகரப் பஞ்சாயத்துகள் (ஊராட்சிகள்) முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன.

## தமிழக முதல்வரின் சுதந்திர தின விருதுகள்

- இந்திய நாட்டின் 77வது சுதந்திரத் தினத்தையொட்டி, பல்வேறு துறைகளைச் சேர்ந்த நபர்களுக்கு தமிழக முதல்வர் அவர்களால் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.

- இது பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கியது.

| விருதின் பெயர் | விருது பெற்றவர்கள் |
|---|---|
| தகைசால் தமிழர் விருது | டாக்டர் கி.வீரமணி |
| A.P.J. அப்துல் கலாம் விருது | டாக்டர் W.B. வசந்த கந்தசுவாமி |
| துணிவு மற்றும் சாகசத்திற்கான கல்பனா சாவ்லா விருது | நா. முத்தமிழ்செல்வி |
| முதல்வரின் நல்லாட்சி விருது | தமிழ்நாடு மின் ஆளுமை முகமை |
| | டாக்டர் E. தேரனிராஜன் |
| | W. பத்ரிநாராயணன் |
| மாற்றுத்திறனாளிகளுக்கான சிறந்த சேவைக்கான தமிழ்நாடு அரசு விருதுகள் | T. ஜெயக்குமார் - சிறந்த மருத்துவர் |
| | சாந்தி நிலையம் - சிறந்த நிறுவனம் |
| | ரத்தன் வித்யாகர் - சிறந்த சமூக சேவகர் |
| | M/S டெடி (பொம்மை) ஏற்றுமதி - சிறந்த தனியார் துறை முதலாளி |
| | ராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கி - சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி |
| சமூக நலன் மற்றும் மகத்தான சேவைக்கான சிறந்த பங்களிப்பு | கிராம ஒளி - பெண்கள் நலனுக்கான சிறந்த தொண்டு |
| | D.ஸ்டான்லி பீட்டர் - சிறந்த சமூக சேவகர் |
| சிறந்த மாநகராட்சிகள் | திருச்சிராப்பள்ளி |
| | தாம்பரம் |
| சிறந்த மாநகராட்சிக் கழகங்கள் | இராமேஸ்வரம் |
| | திருத்துறைப்பூண்டி |
| | மன்னார்குடி |
| சிறந்த நகராட்சிகள் | விக்கிரவாண்டி, விழுப்புரம் |
| | ஆலங்குடி, புதுக்கோட்டை |
| | வீரகல்புதூர், சேலம் |

## மூலதனச் செலவினம் 2023-24

- தமிழ்நாட்டின் மூலதனச் செலவினமானது, 2023-24 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சுமார் 31% அதிகரித்து 5,196.21 கோடி ரூபாய் ஆக உள்ளது.
- இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 3,976.45 கோடி ரூபாயாக இருந்தது.
- இருப்பினும், 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 6.7% ஆக இருந்த, 20 மாநிலங்களின் மொத்த மூலதனச் செலவினத்தில் தமிழ்நாட்டின் பங்கானது 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 5% ஆகக் குறைந்துள்ளது.
- சாலைகள் மற்றும் பாலங்கள், நீர்ப்பாசனக் கட்டமைப்புகள், பள்ளிகள், மருத்துவ மனைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் செய்யப்படும் முதலீடுகள் போன்ற நிலையானச் சொத்துக்களை உருவாக்குவதற்காக என்று மாநில அரசுகளால் மூலதனச் செலவு செய்யப்படுகிறது.
- இது பொருளாதார நடவடிக்கைகளை மிகவும் மேம்படுத்தவும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உதவுகிறது.

**Weak capex spending**

| Particulars | in ₹ cr | | % of Actuals to BE | |
|---|---|---|---|---|
| | Budget Estimates 2022-23 | Actuals (Apr-Dec) | Current year | Corresponding period of the previous year |
| Revenue receipts | 2,31,407 | 1,65,323 | 71 | 66 |
| SOTR* | 1,42,800 | 1,09,714 | 77 | 67 |
| Revenue expenditure | 2,89,609 | 1,81,018 | 63 | 57 |
| Capital expenditure | 44,863 | 21,476 | 48 | 57 |

*State own tax revenue *Provisional figures Source: CAG

## கண்கவர் விலங்குகளைக் காட்சிப்படுத்துதல்



- மாநிலம் முழுவதும் உள்ள தனியார் பறவைப் பண்ணைகள் மற்றும் செல்லப்பிராணிப் பூங்காக்களில் கண்கவர் (அயல்நாட்டு) விலங்குகளை காட்சிப் படுத்தச் செய்வதற்கு தமிழ்நாடு வனத்துறை தடை விதித்துள்ளது.
- தமிழ்நாட்டில் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடும் தனியார் துறை நடத்தும் பறவைப் பண்ணைகள் மற்றும் செல்லப் பிராணிப் பூங்காக்கள் அனைத்தும் தமிழ்நாடு வனத் துறையால் மூடப்படும்.
- அயல்நாட்டு விலங்குகளைச் சேகரித்துக் காக்கும் தனியார் நிறுவனங்கள், சமீப காலம் வரையில் இந்திய விலங்குகள் நல வாரியத்திடமிருந்துப் பெறப்பட்ட ஒரு உரிமம் மூலம் அந்த விலங்குகளைக் காட்சிப் படுத்தி வந்தனர்.
- அயல்நாட்டு விலங்குகள் என்பது CITES உடன்படிக்கையின் பிற்சேர்க்கைகள் I, II மற்றும் III ஆகியவற்றின் கீழ் பட்டியலிடப் பட்டவையாகும் என்பதோடு அவை 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் IVவது அட்டவணையிலும் சேர்க்கப்பட்டுள்ளன.

## ஆளில்லா வான்வழி விமானங்களின் பொதுச் சோதனை மையம்

- பாதுகாப்புச் சோதனை உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதல் ஆளில்லா வான்வழி வாகன அமைப்புகளின் (ட்ரோன்) பொதுச் சோதனை மையமானது தமிழ்நாட்டில் நிறுவப்பட உள்ளது.
- இந்த மையமானது ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள வல்லம் வடகலில் உள்ள சிப்காட் தொழில்துறைப் பூங்காவில் நிறுவப்பட உள்ளது.
- இது தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டுக் கழகத்தினால் (TIDCO) நிறுவப்படும்.
- TIDCO என்பது தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில்துறை வழித்தடத்தை (TNDIC) செயல் படுத்துவதற்கான தலைமை நிறுவனம் ஆகும்.
- விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் இந்திய அரசு தன்னிறைவு அடைவதில் தமிழக மாநில அரசு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்க இந்தச் சோதனை மையம் உதவும்.




## முதலாவது இரவு நேரச் சாலைப் பந்தயச் சுற்றமைப்பு

- தமிழ்நாடு அரசு மற்றும் பந்தய மேம்பாட்டு பிரைவேட் லிமிடெட் (RRPL) ஆகியவை இணைந்து இரவு நேரப் பந்தயங்களை நடத்துவதற்கான ஒரு புதிய சாலைப் பந்தயச் சுற்றமைப்பினைத் தொடங்கியுள்ளது.
- இந்தியா மற்றும் தெற்காசியாவில் இரவு நேரப் பந்தயத்தை நடத்தச் செய்வதற்கான முதலாவது சாலைப் பந்தயச் சுற்றமைப்பு இதுவாகும்.
- F4 இந்தியச் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியப் பந்தயப் போட்டி ஆகிய இரண்டு போட்டிகளை நடத்தும் வகையில் புதிதாகத் தொடங்கப்பட்ட இந்தப் பாதை அமைக்கப் பட்டுள்ளது.
- RRPL என்ற நிறுவனமானது இந்தியப் பந்தயப் போட்டி மற்றும் F4 இந்திய சாம்பியன்ஷிப் போட்டி ஆகியவற்றின் விளம்பர தாரராகவும் உள்ளது.

## தென்னிந்தியாவின் அலிகார்

- திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள வாணியம்பாடி 'தென்னிந்தியாவின் அலிகார்' என்று அழைக்கப்படுகிறது.

- உருது மொழிக்கும், 19 ஆம் நூற்றாண்டிலிருந்து இங்கு செழித்துப் பல்கிப் பெருகி வரும் பல்வேறு கல்வி நிறுவனங்களுக்கும் உள்ள ஈடுபாடே இதற்குக் காரணம் ஆகும்.
- தேசிய உருது மொழி மேம்பாட்டுச் சபையானது (NCPUL) 25வது அகில இந்திய உருது புத்தகக் கண்காட்சியை வாணியம்பாடியில் உள்ள இஸ்லாமியக் கல்லூரியில் நடத்தி உள்ளது.
- இங்கு வாழும் உருது மொழி பேசும் முஸ்லீம்கள் இரண்டு வரலாற்றுக் கால கட்டங்களைச் சேர்ந்தவர்களாக கண்டறியப் பட்டுள்ளது.
- முதலாவதாக, குறிப்பாக 15 மற்றும் 16 ஆம் நூற்றாண்டுகளில் பீஜப்பூர் மற்றும் கோல்கொண்டாவில் இருந்து தக்காண சுல்தானியர்கள், அரேபிய மொழியின் எழுத்து வடிவில் எழுதப் பட்ட 'தக்னி' எனப்படும் அந்தப் பிராந்தியத்தில் பேசப்பட்ட உருதுவின் ஆரம்பக் கால வடிவத்தினைப் பிரபலப் படுத்திய ஒரு காலக் கட்டமாகும்.
- இரண்டாவதாக, 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தஞ்சாவூர், மதுரை மற்றும் இன்றையத் தமிழ்நாட்டின் பிற இடங்களில் இருந்து வாணியம்பாடியை வந்தடைந்தத் தமிழ் மொழி பேசும் புலம்பெயர்ந்தோர் பிரிவின் (தமிழ் தக்னி) துணைப் பிரிவினர் வாழ்ந்த ஒரு காலக் கட்டமாகும்.
- ஆற்காடுப் பிரதேசத்தைச் சேர்ந்த பின்வரும் தமிழ் முஸ்லிம்கள் உருது இலக்கியத்தில் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர்.
  - காக்கா அப்துல் அஜீஸ் ஃபஹீம் (1898-1943),
  - லப்பை கதீப் முகமது அசம் 'மக்பூல்' (1898-1958) மற்றும்
  - பாங்கி அப்துல் காதர் டானிஷ் ஃபராசி (1922-1981).




## தமிழ்நாடு புத்தொழில் நிறுவனத் திருவிழா 2023


- StartupTN முகமையானது, கோவையில் உள்ள CODISSIA வர்த்தக கண்காட்சி வளாகத்தில் '2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு புத்தொழில் நிறுவனத் திருவிழா' நிகழ்ச்சியை நடத்தியது.
- StartupTN என்பது புத்தொழில் மற்றும் புத்தாக்கத்திற்கான மாநிலத்தின் ஒரு தலைமை முகமையாகும்.
- இது தொழில்முனைவோருக்கு உதவுவதற்காக வேண்டி அரசாங்கம் மேற்கொண்டுள்ள முன்னெடுப்புகளை எடுத்துரைக்கிறது.

- இது வலையமைப்பு, கற்றல் மற்றும் அதிநவீனத் தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை வழங்குவதற்கான இடமாகச் செயல்படுகிறது.




## தமிழகத்தில் உள்ள புத்தொழில் நிறுவனங்கள்

- கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், 2,300 ஆக இருந்த தமிழக மாநிலத்தில் பதிவு செய்யப் பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையானது தற்போது 6,800க்கும் அதிக அளவில் உள்ளது.
- மாநில அரசானது சில புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆரம்பக் கட்ட நிதியை (TANSEED) வழங்குகிறது.
- சென்னையில் உள்ள புத்தொழில் நிறுவனங்கள் சுமார் 150 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை ஈர்த்துள்ளன.
- இது முந்தைய ஆண்டை விட 71% அதிகமாகும்.
- புத்தொழில் நிறுவனங்களுக்காக என்று ஒரு அழைப்பு மையம் (அழைப்பு எண் - 155343) சமீபத்தில் தொடங்கப்பட்டது.



## தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை

- ❖ சென்னையில் பேரூர் எனுமிடத்தில் புதிய கடல்நீர் சுத்திகரிப்பு ஆலையை அமைக்கச் செய்வதற்காக முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
- ❖ இந்த ஆலையானது, ஒரு நாளைக்கு 400 மில்லியன் லிட்டர் கடல்நீரைச் சுத்திகரிக்கும் திறன் கொண்டது.
- ❖ இந்த ஆலை நிறுவப் பட்டால், தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய கடல்நீர் சுத்திகரிப்பு ஆலையாக விளங்கும்.
- ❖ இத்திட்டத்திற்கு ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவி வழங்க உள்ளது.

## முதல் தரநிலை பல்கலைக்கழகம்

- ❖ தேசிய மதிப்பாய்வு மற்றும் அங்கீகார வழங்கீட்டுச் சபையின் (NAAC) சமீபத்திய ஒரு மதிப்பீட்டில் மதராஸ் பல்கலைக்கழகம் A++ வகை பல்கலைக்கழகமாக தரநிலைப் படுத்தப் பட்டுள்ளது.
- ❖ அதாவது, இந்தப் பல்கலைக்கழகமானது தற்போது இந்தியாவின் உயர் தரநிலை கொண்ட ஒரு நிறுவனமாக விளங்குவதால், பல்கலைக் கழக மானியக் குழு அதற்கு முழு சுயாட்சியை வழங்கியுள்ளது.
- ❖ 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முந்தைய மதிப்பாய்வுச் சுழற்சியில், பல்கலைக் கழகம் A தரத்தினைப் பெற்றிருந்தது.
- ❖ இது இரண்டு கீழ்நிலை வளாக மையங்கள் மற்றும் சில வெளிநாட்டு வளாகங்களைக் கொண்டிருக்கலாம் என்பதோடு அது எந்தவொருப் பொதுப் பிரிவிற்குமான எந்த பாடத் திட்டத்தையும் உருவாக்கலாம்.

## பசுமைப் புத்தாய்வு அங்கத்தினர் திட்டம்

- ❖ முதலமைச்சரின் பசுமைப் புத்தாய்வு அங்கத்தினர் திட்டத்தினை (CMGFP) முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- ❖ 2021-22 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் விடுக்கப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத் துறைக்கான கோரிக்கையின் ஒரு பகுதியாகச் சட்டசபையில் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- ❖ இந்த திட்டம் ஆனது, "சுற்றுச்சூழல் வளங்காப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் நிலையான வாழ்வியலின் பிற அம்சங்களில் ஈடுபாடு மிக்க இளையோர்களுக்கான ஒரு தளத்தினை வழங்குவதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது".
- ❖ இந்தப் புத்தாய்வு அங்கத்தினர் பசுமைத் தமிழ்நாடு திட்டம், தமிழ்நாடு ஈரநில வளங் காப்புத் திட்டம், மற்றும் தமிழ்நாடு பருவநிலை மாற்றத் திட்டம் மாநில அரசின் மூன்று திட்டங்களில் ஈடுபடுத்தப் படுவார்கள்.

## உள்ளாட்சித் தேர்தல்களில் இட ஒதுக்கீடு

- ❖ உள்ளாட்சித் தேர்தலில் திருநர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கச் செய்வதற்காக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- அவர்கள் மெல்ல மெல்ல சராசரிச் சமூகத்தின் ஒரு பகுதியாக மாற உதவச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த உத்தரவானது பிறப்பிக்கப் பட்டுள்ளது.
- 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து அமைப்புகள் சட்டத்தினைப் பயன்படுத்தி, நயினார்குப்பம் கிராமப் பஞ்சாயத்து தலைவர் மற்றும் உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்யுமாறு கடலூர் மாவட்ட ஆட்சியருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.
- இந்திய நாட்டின் அரசானது, இந்தியாவில் உள்ள திருநர்களுக்கான உரிமைகள் மற்றும் பாதுகாப்பை வழங்குகின்ற 2019 ஆம் ஆண்டு திருநர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தினை இயற்றியது.




## இந்திய மேம்பட்ட தொழில்நுட்பத்திலான உற்பத்தி மையம்




- தமிழ்நாடு அரசானது, உலகப் பொருளாதார மன்றத்துடன் இணைந்து இந்திய மேம்பட்ட தொழில்நுட்பத்திலான உற்பத்தி மையத்தினை நிறுவச் செய்வது தொடர்பான பொது-தனியார் கலந்துரையாடலை சென்னையில் நடத்தியது.
- இந்த விவாதத்தில் கலந்துரையாடல் மையத்திற்கான தொழில்நுட்ப ஏற்பு மற்றும் புத்தாக்கம், தொழில்-கல்வித்துறை ஈடுபாடு மற்றும் நிலையான உற்பத்தி ஆகிய மூன்று முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

- கடந்தக் காலத்தில், தமிழ்நாடு மாநில அரசானது ஏற்கனவே சீமென்ஸ், G.E. மற்றும் டசால்ட் சிஸ்டம்ஸ் ஆகியவற்றுடன் இணைந்து மூன்று சிறப்பு மையங்களை நிறுவி உள்ளது.

## காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஆனது 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- ஆகஸ்ட் 25 ஆம் தேதியன்று, இத்திட்டம் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது.
- மாநிலம் முழுவதும் உள்ள 31,008 அரசுப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 15.75 லட்சம் மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் இந்தத் திட்டம் விரிவு படுத்தப் பட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பின் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பயன்பெறுவார்கள்.


## தமிழ்நாடு நில ஒருங்கிணைப்புச் சட்டம், 2023

- தமிழ்நாடு ஆளுநர் R.N. ரவி அவர்கள், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்புத் திட்டங்களுக்கான) சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
- இந்தச் சட்டத்தின்படி, ஒரு திட்டத்தினை முன்மொழியும் நிறுவனமானது திட்டத்தினைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிலங்களை ஒருங்கிணைக்கச் செய்வதற்கான ஒரு முன்மொழிதல் விண்ணப்பத்தை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்தத் திட்டத்திற்கான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில், அரசு அதனை ஒரு சிறப்புத் திட்டமாக அறிவித்து, சம்பந்தப் பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பும்.
- இதற்காக அரசானது ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும்.
- இது அந்த நில ஒருங்கிணைப்பு முன்மொழிதலை வெளியிட்டு, பொது விசாரணையை மேற்கொள்ளும்.
- இக்குழுவானது வரைவு நில ஒருங்கிணைப்புத் திட்டத்தைத் தயாரித்து, இத்திட்டத்தில் ஆர்வமுள்ள நபர்களின் கருத்துகளைப் பெற்று ஆட்சியரிடம் சமர்ப்பிக்கும்.
- "அது பொருத்தமானது என்று கருதும் வகையில், நிபந்தனைகளுடன் கூடிய ஒப்புதல் அல்லது ஒரு முழு ஒப்புதல் அளிக்க கூடிய" ஒரு தகுதி வாய்ந்த அதிகாரியிடம் அதனை ஒப்படைக்குமாறு ஆட்சியர் இறுதியில் பரிந்துரைப்பார்.

## தமிழகத்தின் பொருளாதார மேம்பாடு

- கோவிட்-19 பெருந்தொற்றிற்குப் பிந்தைய காலக் கட்டமான 2021-22 மற்றும் 2022-23 ஆகிய ஆண்டுகளில் தமிழகத்தின் பொருளாதார மேம்பாடானது நிலையான (அடிப்படை ஆண்டின் விலையில்) விலையில் சுமார் 8% ஆக அதிகரித்துள்ளது.
- தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GSDP) நிலையான விலையில் 14,53,321 கோடி ரூபாயாகவும், 2022-23 ஆம் ஆண்டில் நடப்பாண்டு விலையில் 23,64,514 கோடி ரூபாயாகவும் உள்ளது.


- இது 2022-23 ஆம் ஆண்டில் மாநிலத்தின் GSDP வளர்ச்சியானது நிலையான விலையில் 8.19% ஆகவும் நடப்பாண்டு விலையில் 14.16% ஆகவும் உள்ளது.
- அதே காலக் கட்டத்தில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது நிலையான விலையில் 7.24% ஆகவும், நடப்பாண்டு விலையில் 16.06% ஆகவும் இருந்தது.
- 2021-22 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் GSDP ஆனது நிலையான விலையில் 13,43,287 கோடி ரூபாயாகவும், நடப்பாண்டு விலையில் 20,71,286 கோடி ரூபாயாகவும் இருந்தது.
- இது நிலையான விலையில் 7.92% ஆகவும் நடப்பாண்டு விலையில் 15.84% ஆகவும் உயர்ந்தது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 2021-22 ஆம் ஆண்டில் நிலையான விலையில் 9.05% ஆகவும், நடப்பாண்டு விலையில் 18.36% ஆகவும் இருந்தது.
- மாநிலத்தில் 2021-22 ஆம் ஆண்டில் 50.94% ஆக இருந்த சேவைத் துறையின் பங்களிப்பு ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 50.92% ஆக உள்ளது.





## தமிழ்நாடு மாநிலத்தின் மொத்த சந்தை கடன்கள்

- 2023-24 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் தமிழகத்தின் மொத்த சந்தைக் கடன்கள் 25,000 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் இதன் மதிப்பு 8,000 கோடி ரூபாயாக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூன் மாத காலகட்டத்தில் பதிவான கடன்களில் திருப்பிச் செலுத்தப் பட்டக் கடன்களை நீக்கியப் பிறகு நிகரக் கடன்கள் 17,000 கோடி ரூபாயாக உள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூன் மாத காலக் கட்டத்தில் சுமார் 5,528 கோடி ரூபாயாக இருந்தது.
- மாநில மேம்பாட்டுக் கடன்கள் (SDL) எனப்படும் பத்திரங்களின் ஏலத்தின் மூலம் சந்தையில் இருந்து மாநில அரசுகள் கடன் பெறுகின்றன.
- மாநில அரசுகள் கடன் பெறுவதற்கான உச்ச வரம்பை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.
- மாநில அரசுகள் 2023-24 ஆம் ஆண்டிற்கான மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 3% வரை கடன் பெறலாம்.

- ❖ மின் துறைச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதற்காக மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 0.5% கூடுதல் கடன் பெறுவதற்கு மாநில அரசுகளுக்கு அனுமதி வழங்கப் படுகிறது.




## மின்னணு சாதனங்களுக்கான குளிரூட்டல் அமைப்பு




- ❖ சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் கலீஃபா பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து மின்னணு சாதனங்களுக்கான புதுமை மிக்க குளிரூட்டல் அமைப்பினை உருவாக்கியுள்ளன.
- ❖ மின்னணுச் சாதனங்களைத் திறம்பட குளிர்விப்பதற்கான மின்னிய-நீரியக்கவியல் அடிப்படையிலான ஒரு முறையை அவர்கள் உருவாக்கியுள்ளனர்.
- ❖ குறுகிய குழாய்களில் நீர் சுழல்களை உருவாக்குவாதற்காக வேண்டி ஆன்சேஜர்-வீன் விளைவினைப் பயன்படுத்துகின்ற இந்தச் செயல்முறையானது மிக சிறந்த முறையில் வெப்பத்தினைப் பரிமாற்றத்திற்கு வழிவகுக்கிறது.
- ❖ இந்தச் செயல்முறையானது குறைந்தபட்ச வெளிப்புற ஆற்றலைப் பயன்படுத்துகிறது மற்றும் பாதுகாப்பானச் செயல்முறையைக் கொண்டுள்ளது.

## முதல் தேனீ பூங்கா

- தமிழகத்தின் முதல் தேனீ பூங்காவினை அமைப்பதற்காக திருவண்ணாமலையில் உள்ள ஜவ்வாது மலைப் பகுதியில் அமைந்த அத்திப்பட்டு என்னுமிடத்தில் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
- இந்த மலையின் முகடு பகுதிகளில் காணப்படும் இலையுதிர் காடுகளுக்கு மத்தியில் இந்த பழங்குடியின குக்கிராமம் அமைந்துள்ளது.
- இந்தப் பூங்காவானது மலைகளில் வாழும் பழங்குடியினரை அவர்களின் வழக்கமான தொழிலான தேன் சேகரிப்புத் தொழிலில் மீண்டும் ஈடுபடச் செய்வதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.
- பழங்குடியினர் சாராத மக்களுக்கு, இயற்கையைப் பாதுகாப்பதில் தேனீக்களின் முக்கியப் பங்கு குறித்த அம்சங்கள் இந்த பூங்காவில் காட்சிப்படுத்தப் படும்.
- 38 வருவாய் கிராமங்களில் உள்ள 272 குக்கிராமங்கள் மற்றும் 30,000க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் மலைப்பகுதிகளில் தற்போது சுமார் 300 பழங்குடியினர் மட்டுமே தேன் சேகரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

## புதிரை வண்ணார் நல வாரியம்

- தமிழக அரசானது புதிரை வண்ணார் நல வாரியத்தினைச் சமீபத்தில் மறுசீரமைத்து உள்ளது.
- இது 13 முன்னாள் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 13 அலுவல் சாராத உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- இதில் S. ஸ்டாலின்குமார் (துறையூர்), K. சிவகாம சுந்தரி (கிருஷ்ணராயபுரம்), M. பன்னீர்செல்வம் (சீர்காழி) உள்ளிட்ட மூன்று சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெற்று உள்ளனர்.

## தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் தனியார் துறை திட்டங்கள் 2022 - 23

- தமிழகத்தில் 2021-22 ஆம் ஆண்டில் 40 என்ற அளவாக இருந்த, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் நிதியளிக்கப்படும் தனியார் துறைத் திட்டங்களின் எண்ணிக்கை என்பது 2022-23 ஆம் ஆண்டில் 44 ஆக அதிகரித்துள்ளது.
- இருப்பினும், 2022-23 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த திட்ட மதிப்பான 2,66,547 கோடி ரூபாயில் தமிழக மாநிலத்தின் பங்கு 4.8% ஆகக் குறைந்துள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்தத் திட்ட மதிப்பான 1,41,976 கோடி ரூபாயில் தமிழகத்தின் பங்கு 8.8% ஆகும்.
- ஒட்டு மொத்தமாக, 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 547 தனியார் துறை திட்டங்கள் அதிக பட்ச திட்டச் செலவின மதிப்பீட்டுடன், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்றுள்ளன.
- 2022-23 ஆம் ஆண்டில், முதல் ஐந்து மாநிலங்கள் உத்தரப் பிரதேசம், குஜராத், ஒடிஸா, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகியனவாகும்.
- 2022-23 ஆம் ஆண்டில், திட்டங்களுக்கான மொத்தச் செலவில் உத்தரப் பிரதேசம் 16.2 சதவிகிதப் பங்களிப்புடன் மிக உயர்ந்தப் பங்களிப்பினைக் கொண்டுள்ளது.

## NEEDS திட்டத்தின் கீழ் மூலதன மானியம்




- தமிழக மாநில அரசானது அதன் முதன்மையான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் 2022-23 ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத அளவிற்கான அதிகளவிலான மூலதன மானியத்தை வழங்கியுள்ளது.
- இது முதல் தலைமுறை தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக மாநில அரசினால் நிதியளிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும்.
- மாநில அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSME) துறையால் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.
- 2021-22 ஆம் ஆண்டில் சுமார் 97.25 கோடி ரூபாயாக வழங்கப்பட்ட மானியமானது, 2022-23 ஆம் ஆண்டில் 163.88 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- 2012-13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் இத்திட்டம், 2022-23 ஆம் ஆண்டில் முதன்முறையாக 1,000க்கும் மேற்பட்ட மானியம் வழங்கல்களைப் பதிவு செய்தது.
- இத்திட்டத்தின் கீழ், மானியம் பெறுவதற்கான குறைந்தபட்சத் திட்டச் செலவினம் ரூ.10 லட்சம் முதல் அதிகபட்சத் திட்டச் செலவினம் 5 கோடி ரூபாய் வரை ஆகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் தனிநபர் அடிப்படையிலான மூலதன மானியம் ஆனது திட்ட மதிப்பீட்டில் 25% (75 லட்சம் ரூபாய்க்கு மிகாமல்) வழங்கப்படுகிறது.

## சென்னையில் UPS தொழில்நுட்ப மையம்

- சென்னையில் அமைக்கப்பட்டுள்ள அமெரிக்க பன்னாட்டு கப்பல் மற்றும் விநியோகச் சங்கிலி மேலாண்மை நிறுவனமான ஒருங்கிணைந்தச் சரக்குச் சிப்பங்கள் சேவை (UPS) தொழில் நுட்ப மையத்தினை முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்த UPS மையம்தான் இந்தியாவில் அந்த நிறுவனம் அமைத்துள்ள இத்தகைய முதல் மையமாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்குள் 1,000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் 15 முதல் 20 மில்லியன் டாலர் வரை அந்த நிறுவனம் இந்தியாவில் முதலீடு செய்ய உள்ளது.

# தேசியச் செய்திகள்

## பல் மாநில கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம்) மசோதா 2023

- 2023 ஆம் ஆண்டு பல்மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம்) மசோதாவானது மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- கூட்டுறவு அமைப்புகளை வெளிப்படைத் தன்மை கொண்டதாக மாற்றுவதன் மூலம் அவற்றை வலுப்படுத்த முயல்வதோடு, கூட்டுறவு அமைப்புகளுக்கான வழக்கமான தேர்தல் முறையையும் இந்த மசோதா அறிமுகப்படுத்துகிறது.
- இந்த மசோதா பல்மாநிலக் கூட்டுறவுச் சங்க வாரியத்தின் கட்டமைப்பினைத் திருத்தி அமைக்கவும், ஒரு 'கூட்டுறவுத் தேர்தல் ஆணையத்தை' நிறுவவும் முற்படுகிறது.
- இந்த மசோதாவில் வழங்கப்பட்டுள்ள தேர்தல் சட்டங்கள் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் சட்டங்களுக்கு இணையானவையாகும்.




## 100 மருத்துவச் சிறு தளங்கள் திட்டம்

- தேசிய சுகாதார ஆணையம் (NHA) ஆனது ஆயுஷ்மான் பாரத் எண்ணிம திட்டத்தின் (ABDM) கீழ் 100 சிறு மருத்துவத் தளங்கள் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்த சிறு மருத்துவத் தளங்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சுகாதார மையங்கள், தனியார் மருத்துவமனைகள், 10 படுக்கைகளுக்கு குறைவான எண்ணிக்கை கொண்ட மருத்துவமனைகள், ஆய்வகங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற சுகாதார வசதிகளைக் கொண்ட தொகுப்பாக செயல்பட உள்ளது.

- இவை ஆயுஷ்மான் பாரத் எண்ணிமத் திட்டத்தின் மூலம் நோயாளிகளுக்கு எண்ணிம சுகாதாரச் சேவைகளை வழங்குகின்றன.




## புலிகள் வளங்காப்பு மற்றும் யானைகள் வளங்காப்பு திட்ட நிதிப் பிரிவு




- புலிகள் வளங்காப்புத் திட்டமானது, யானைகள் வளங்காப்புத் திட்டத்துடன் இணைக்கப் பட்டு, ‘புலிகள் வளங்காப்பு மற்றும் யானைகள் வளங்காப்பு திட்ட நிதிப் பிரிவு’ என்ற பெயரில் புதிய பிரிவு ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் புலிகள் வளங்காப்புத் திட்டமானது 50 ஆண்டுகளை நிறைவு செய்தது.
- 2022 ஆம் ஆண்டில் யானைகள் வளங்காப்புத் திட்டமானது 30 ஆண்டுகளை நிறைவு செய்தது.
- 2011 ஆம் ஆண்டில் இதே போன்று புலிகள் வளங்காப்புத் திட்டம், யானைத் திட்டம் மற்றும் வனவிலங்குகளின் வாழ்விடங்களின் ஒருங்கிணைந்த மேம்பாடு ஆகிய மூன்று மத்திய நிதியுதவித் திட்டங்களை ஒன்றிணைப்பதற்கு, முன்பு இருந்த திட்ட ஆணையம் முன்மொழிந்தது.
- 2023-24 ஆம் ஆண்டில் புலிகள் வளங்காப்புத் திட்டம் மற்றும் யானைகள் வளங்காப்புத் திட்டங்களுக்கான ஒருங்கிணைந்த நிதி ஒதுக்கீடு 331 கோடி ரூபாயாக உள்ளது.

## ULLAS கைபேசிச் செயலி

- மத்தியக் கல்வித் துறை அமைச்சர் 'ULLAS: நவ் பாரத் சக்சார்த்தா காரியக்ரம்' என்ற ஒரு கைபேசிச் செயலியினை அறிமுகப் படுத்தினார்.
- 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையின் மூன்றாம் ஆண்டு நிறைவினை ஒட்டி இது அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.
- இது தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் DIKSHA இணையதளம் மூலம் பலதரப்பட்டக் கல்வி மூலங்களை வழங்கி அதில் கற்பவர்களை ஈடுபடுத்தச் செய்வதற்கான ஒரு எண்ணிம ஊடகமாகச் செயல்படுகிறது.
- இது முறையான பள்ளிப் படிப்பில் சேரும் வாய்ப்பை இழந்த 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குடிமக்களை இலக்காக கொண்டு அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.
- அவர் இந்தச் செயலியின் முத்திரைச் சின்னம் மற்றும் "ஜன் ஜன் சக்சார்" எனப்படும் அதற்கான முழக்கத்தையும் அறிமுகப் படுத்தினார்.

## TechEquity

- காந்திநகரில் நடைபெற்ற G20 EMPOWER உச்சி மாநாட்டில் பாலின எண்ணிம இடைவெளியைக் குறைக்க முற்படும் TechEquity எனப்படும் உள்ளார்ந்த எண்ணிம தளத்தினை இந்தியா அறிமுகம் செய்தது.
- அடுத்த ஆண்டில் உலகெங்கிலும் உள்ள இரண்டு முதல் மூன்று மில்லியன் பெண்களுக்கு இந்தத் தளம் பயனளிக்கும்.
- இது எண்ணிம மற்றும் நிதியியல் கல்வியறிவு, தொழில்நுட்ப திறன் மேம்பாடு மற்றும் முக்கியத் திறன் மேம்பாடு ஆகியவற்றில் சிறந்த தரத்திலான கல்வியைத் தொகுத்து வழங்கும்.
- அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இந்தியாவால் நிதியளிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட உள்ள இந்தத் தளமானது இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பினால் நிர்வகிக்கப்படும்.


## கைரேகை நுண் விவரங்கள் பதிவு – கைரேகைப் புகைப்படப் பதிவு இணைப்பு முறை

- இந்தியத் தனிப்பட்ட அடையாள ஆணையமானது, ஆதார் அடிப்படையிலான பண வழங்கீட்டு முறையில் உள்ள மோசடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தொழில்நுட்பத்தை இணைத்துள்ளது.
- இது கைரேகை நுண் விவரங்கள் பதிவு – கைரேகைப் புகைப்படப் பதிவு இணைப்பு முறை (FMR-FIR) எனப்படும் தொழில்நுட்பம் ஆகும்.
- கைரேகை நுண் விவரங்கள் பதிவு – கைரேகைப் புகைப்படப் பதிவு இணைப்பு முறை என்பது ஒரு செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் சார்ந்த தொழில்நுட்பம் ஆகும்.
- அங்கீகார வழங்கீட்டுச் செயல்முறையின் போது மரபணுப் படியெடுத்தல் மூலம் உருவாக்கப் பட்ட கைரேகையின் பயன்பாட்டைக் கண்டறிவதற்காக வேண்டி ஒரு கைரேகையின் உயிரோட்டத்தை இது சரி பார்க்கும்.

- உண்மையான கைரேகைகள் மட்டுமே சரிபார்ப்பு செயல்முறைகளில் பயன்படுத்தப் படுவதை இது உறுதி செய்கிறது.

## “போக்குவரத்துத் துறையில் கரிமநீக்கத்தினை நோக்கிய நடைமுறைகள்- 2023” அறிக்கை

- நிதி ஆயோக் அமைப்பின் "போக்குவரத்துத் துறையில் கரிம நீக்கத்தினை நோக்கிய நடைமுறைகள் - 2023" என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் போது முன்வைக்கப்பட்ட நிலையானப் போக்குவரத்து குறித்த உலகளாவிய விவாதங்களை ஆதரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- போக்குவரத்துத் துறையில் கரிம நீக்கம் என்பது போக்குவரத்துத் துறையிலிருந்து கார்பன் டை ஆக்சைடு மற்றும் பிற பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைக்கும் அல்லது நீக்கும் செயல்முறையைக் குறிக்கிறது.
- 2021 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்தப் பசுமை இல்ல வாயு உமிழ்வில் இந்தியாவின் போக்குவரத்துத் துறையானது 14-15% பங்கினைக் கொண்டுள்ளது.
- போக்குவரத்துத் துறைகளில், சாலைப் போக்குவரத்து ஆனது மொத்தக் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வில் 90 சதவீதத்திற்கும் அதிகமானப் பங்கினைக் கொண்டுள்ளது.




## MASI செயலி

- தேசியக் குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR) ஆனது ‘MASI’ என்ற செயலியை உருவாக்கியுள்ளது.
- MASI என்பது தடையற்ற ஆய்வுக்கான கண்காணிப்புச் செயலி என்பதைக் குறிக்கிறது.
- நாடு முழுவதும் உள்ள குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் ஆய்வு நெறிமுறையை நிகழ்நேரக் கண்காணிப்பினை மேற்கொள்வதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அறிக்கைகளை தானாகவே உருவாக்கும் இந்தக் கண்காணிப்பு இணைய தளத்துடன் இந்தச் செயலி இணைக்கப்பட்டுள்ளது.

## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா- 2023

- மாநிலங்களவையில் 2023 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதாவிற்குக் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் அளித்தது.
- நாட்டின் சில முக்கியமான கனிமங்களுக்கான சுரங்கக் குத்தகைகள் மற்றும் கூட்டு உரிமங்களை ஏலம் விடுவதற்கு வேண்டி இந்த மசோதா மத்திய அரசிற்கு பிரத்தியேக அதிகாரம் அளிப்பதோடு இந்த ஏலங்களின் மூலம் மாநில அரசுகளும் வருவாயைப் பெறும்.
- இந்த மசோதாவானது தனியார் துறைப் பங்கேற்பினை அதிகரிக்கவும் முயல்கிறது.
- 12 அணுக்கரு கனிமங்களில் லித்தியம் மற்றும் தங்கம் & வெள்ளி போன்ற ஆழ் நிலையில் உள்ள பல கனிமங்கள் உள்ளிட்ட ஆறு தாதுக்களுக்கான சுரங்கங்களை அமைப்பதற்குத் தற்போது தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.
- முன்னதாக, இந்த அனைத்து 12 அணுக்கரு கனிமங்களுக்கான சுரங்கம் மற்றும் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப் பட்டிருந்தது.

## டெல்லி அரசுப் பணிகள் மசோதா


- அதிகாரப்பூர்வமாக 2023 ஆம் ஆண்டு டெல்லியின் தேசியத் தலைநகர் பிராந்திய அரசு (திருத்தம்) மசோதா என அழைக்கப்படும் டெல்லி அரசுப் பணிகள் மசோதாவானது மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதாவானது, பெரும்பாலான அரசுப் பணிகள் மீது டெல்லி அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கிய உச்ச நீதிமன்ற உத்தரவை மீறும் வகையிலான, ஏற்கனவே அறிவிக்கப் பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமையும்.
- டெல்லியின் மக்கள் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு, அதிகாரிகளின் இடமாற்றம் மற்றும் நியமனங்களைக் கையாளும் அதிகாரத்தினை இந்த அவசரச் சட்டம் வழங்கியது.

## பத்திரிக்கை அச்சகம் மற்றும் பருவ இதழ்கள் பதிவு (PRP) மசோதா, 2023

- மாநிலங்களவையானது 2023 ஆம் ஆண்டு பத்திரிகை அச்சகம் மற்றும் பருவ இதழ்கள் பதிவு மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதா தற்போதுள்ள 1867 ஆம் ஆண்டு பத்திரிகை அச்சகம் மற்றும் புத்தகப் பதிவு (PRB) சட்டத்தினைத் திருத்தியமைக்க முயல்கிறது.
- இந்தப் புதிய மசோதாவின் நோக்கமானது, வெளிப்படைத் தன்மை மற்றும் வணிகம் செய்வதை எளிதாக்குதல் ஆகும்.
- சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிக்கை வெளியீடு நிறுவனங்களுக்கு உதவும் ஒரு எளிய செயல்முறையை இது வழங்கும்

## கடலோரப் பகுதிகள் கனிம (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2023

- நாடாளுமன்றமானது, 2023 ஆம் ஆண்டு கடல் பகுதிகள் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- இது வெளிப்படைத் தன்மை, போட்டித் திறன் மற்றும் தனியார் துறை ஈடுபாட்டிற்கான நீடித்த காலம் ஆகியவற்றில் மேம்பாட்டினை அறிமுகப் படுத்தச் செய்வதன் மூலம் ஏல ஒதுக்கீடு செயல்பாட்டில் ஒரு மகத்தான மாற்றத்தினை அறிமுகப் படுத்துகிறது.
- தனியார் துறை நிறுவனங்களுக்கு, போட்டி முறை ஏலம் அடிப்படையிலான ஏலத்தின் மூலம் இரண்டு வகையான செயல்பாட்டு உரிமைகள் வழங்கப்படும்.
- பல்வேறு அணுக்கரு கனிமங்களுக்கான செயல்பாட்டு உரிமைகளைப் பொதுத் துறை நிறுவனங்களுக்கு (PSUs) பிரத்தியேகமாக என்று ஒதுக்குவதற்கும் இந்த மசோதா வழி வகுக்கிறது.
- இந்தியப் புவியியல் ஆய்வு மையமானது கடலோரப் பகுதிகளில் உள்ள பின்வரும் கனிமங்களின் வளங்களுக்கான வரையறையினை வகுத்துள்ளது:
    - குஜராத் மற்றும் மகாராஷ்டிரா கடற்கரையில் உள்ள பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தில் 1,53,996 மில்லியன் டன் சுண்ணாம்பு மண்.
    - கேரளக் கடற்கரையில் 745 மில்லியன் டன் கட்டுமான தர மணல்.
    - ஒடிசா, ஆந்திரப் பிரதேசம், கேரளா, தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா மாநிலக் கடற்கரையில் உள் கண்டத் திட்டு மற்றும் மத்தியக் கண்டத் திட்டுப் பகுதிகளில் 79 மில்லியன் டன் கனரக கனிம இருப்புகள்.
    - கிழக்கு மற்றும் மேற்கு கண்ட விளிம்புகளில் பாஸ்போரைட் கனிமம்.




## ராஜ்மார்க் யாத்ரா செயலி

- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது 'ராஜ்மார்க் யாத்ரா' என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- நெடுஞ்சாலைகளில் பயனர் அனுபவத்தை மேம்படுத்துவதையும், ‘குடிமக்களின் பயனை மையமாகக் கொண்ட ஒருங்கிணைந்த ஒரு கைபேசிச் செயலியினை’ உருவாக்குவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது இந்தியாவின் நெடுஞ்சாலைகள் பற்றிய விரிவான தகவல்களைப் பயணிகளுக்கு வழங்க உதவுவதோடு, அவர்களுக்கு ஒரு மகத்தான குறைதீர்ப்பு நெறிமுறையையும் வழங்கும்.
- ராஜ்மார்க் யாத்ரா செயலியின் 4 அத்தியாவசிய அம்சங்கள்:
    - அத்தியாவசிய நெடுஞ்சாலை தகவல்
    - புகார் தீர்வு செயல்முறை
    - FASTag சேவைகள்
    - பாதுகாப்பான வாகன ஓட்டுதல் அம்சங்கள்

## இந்தியாவில் கல்வி பயிலுதல் (SII) இணையதளம்

- இந்த இணையதளம் ஆனது, மாணவர் பதிவு மற்றும் நுழைவு இசைவுச் சீட்டு (விசா) விண்ணப்பச் செயல்முறைக்கு ஒருங்கிணைந்த ஒற்றைத் தீர்வு முறையினை வழங்கும்.
- பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்களை வரவேற்பதன் மூலம் இந்திய நாட்டினை கல்விக்கான உலகளாவிய மையமாக நிறுவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது உள்நாட்டு மாணவர்களை உலகமயமாக்கப்பட்ட உலகத்துடன் மிகவும் நன்கு நெருக்கமாக இணைப்பதன் மூலம் அவர்களுக்குப் பயனளிக்கும் மற்றும் உலகத் தரத்திலானப் பணியிடத்திற்கு அவர்களைச் சிறப்பாக தயார்படுத்தும்.


## ஆயுஷ் நுழைவு இசைவுச் சீட்டு

- உள்துறை அமைச்சகம் ஆனது ஆயுஷ் (AY) வகை நுழைவு இசைவுச் சீட்டினை அறிமுகம் செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.
- இது ஆயுஷ் மருத்துவ அமைப்புகள்/ பாரம்பரிய மருத்துவ முறைகள், சிகிச்சைப் பராமரிப்பு, ஆரோக்கியம் மற்றும் யோகா ஆகியவற்றிற்காக பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பிரஜைகளின் பயணத்தினை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டது ஆகும்.
- இது இந்தியாவில் மருத்துவம் சார்ந்தச் சுற்றுப் பயணத்தினை அதிகரிக்கும்.
- அரசாங்கத்தின் இந்தியாவில் சிகிச்சை பெறுதல் முன்னெடுப்பிற்கான இந்தியாவின் செயல்திட்டத்தின் ஒரு பகுதியாக இதனை அறிமுகம் செய்துள்ளது.

## வாக்களிப்பதற்கான வயது

- மக்களவை மற்றும் சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான வயதினை 18 ஆக குறைப்பதற்குப் பணியாளர்கள், பொதுமக்கள் குறைதீர்ப்பு, சட்டம் மற்றும் நீதிக்கான நாடாளுமன்ற நிலைக்குழு பரிந்துரை செய்துள்ளது.
- இது இந்தியாவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வாக்களிப்பதற்கான குறைந்தபட்ச வயது ஆகும்.
- இந்தக் கருத்தாக்கமானது உலகளாவிய நடைமுறைகள், இளையோர்களிடையே அதிகரித்து வரும் அரசியல் சார்ந்த கருத்துணர்வு மற்றும் இளையோர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தின் நன்மைகள் போன்ற பல ஏராளமான சான்றுகளால் வலுப்படுத்தப் பட்ட ஒரு காரணம் என்று அக்குழு கூறியது.

- எனினும், இந்தக் கருத்தாக்கத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் எதிர்க்கிறது.
- இந்தப் பொறுப்புகளுக்குத் தேவையான ஒரு அனுபவமும் பக்குவமும் 18 வயதுக்கு உட்பட்டவர்களிடம் எதிர்பார்ப்பது இயல்பிற்குப் புறம்பானது என்று கண்டறியப் பட்டு உள்ளது.
- 2013 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டம் (திருத்தம்) என்ற சட்டத்தின் கீழ் இந்தியாவில் பாலியல் உறவு மேற்கொள்ளச் செய்வதற்கான ஒப்புதல் வயது என்பது பாலினத்தைப் பொருட்படுத்தாமல் 18 ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- 1892 ஆம் ஆண்டில், புல்மோனி தாசி என்ற 10 வயது சிறுமியின் திருமணம் வழியிலான பலாத்காரம் மற்றும் அதன் மூலமான மரணமானது பாலியல் உறவு மேற்கொள்ளச் செய்வதற்கான ஒப்புதல் வயதை 10 வயதிலிருந்து 12 ஆக உயர்த்தியது.
- 1949 ஆம் ஆண்டில், சிறு வயதிலேயே கர்ப்பம் தரித்தல் போன்ற பாதகமான விளைவுகள் குறித்து மகளிர் குழுக்கள் ஆய்வுகளை மேற்கொண்டதையடுத்து பிறகு இது 16 வயதாக உயர்த்தப்பட்டது.
- 2013 ஆம் ஆண்டின் குற்றவியல் (திருத்தம்) சட்டம், பாலியல் உறவு மேற்கொள்வதற்கான ஒப்புதல் வயதினை 16 வயதிலிருந்து 18 ஆக உயர்த்தியது.



## அம்ரித் பாரத் இரயில் நிலையம் திட்டம்

- நாடு முழுவதும் உள்ள 508 இரயில் நிலையங்களின் மறுசீரமைப்புப் பணிகளுக்குப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
- இது இரயில் நிலையங்களின் மறுசீரமைப்பினைச் செயலாக்கும் ஒரு திட்டமாகும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட சில ரயில் நிலையங்களின் உள்கட்டமைப்பைத் தொடர்ச்சியான அடிப்படையில் மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அடையாளம் காணப்பட்ட இந்த 508 நிலையங்களில் குஜராத்தில் உள்ள 87 நிலையங்கள், ராஜஸ்தானில் உள்ள 83 நிலையங்கள், மத்தியப் பிரதேசத்தில் உள்ள 80 நிலையங்கள் மற்றும் ஹரியானாவில் உள்ள 34 நிலையங்கள் ஆகியவை அடங்கும்.
- மொத்தமுள்ள 1,309 இரயில் நிலையங்களில், 508 இரயில் நிலையங்கள் அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் மறுசீரமைப்பின் ஆரம்பக் கட்டப் பணிக்காகத் தேர்வு செய்யப் பட்டு உள்ளன.
- இந்த இரயில் நிலையங்கள் ஆந்திரப் பிரதேசம், குஜராத், ஜார்க்கண்ட், கர்நாடகா, கேரளா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகிய 10 மாநிலங்களில் அமைந்துள்ளன.
- தமிழகத்தின் சென்னை எழும்பூர் இரயில் நிலையமும் இதில் அடங்கும்.




## ராஜீவ் கௌபா

- அமைச்சரவையின் நியமனக் குழு (ACC) ஆனது, அமைச்சரவைச் செயலாளர் ராஜீவ் கௌபாவிற்கு மேலும் ஓராண்டுப் பணி நீட்டிப்பு வழங்கியுள்ளது.
- இதனால் இவர் இந்திய வரலாற்றில் அதிக காலம் பணியாற்றிய அமைச்சரவைச் செயலாளர் என்ற பெருமையினைப் பெற உள்ளார்.
- பொது நலன் கருதி அமைச்சரவைச் செயலாளருக்குப் பணி நீட்டிப்பு வழங்க மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது.

- எனினும், இந்தப் பதவி நீட்டிப்பினை ஒரே நேரத்தில் மொத்தம் நான்கு ஆண்டுகளுக்கு மேல் வழங்கப் படக் கூடாது.
- 1958 ஆம் ஆண்டு அனைத்திந்தியக் குடிமைப் பணிகள் (இறப்பு மற்றும் பணி ஓய்வுப் பலன்கள்) விதிகளைத் தளர்த்துவதன் மூலம் இந்தப் பதவி நீட்டிப்பு செய்யப் பட்டது.
- அமைச்சரவையின் நியமனக் குழுவில் இந்தியப் பிரதமர் (அதிகாரப்பூர்வ தலைவர்) மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.





## இந்தியாவில் உபரி சர்க்கரை உற்பத்தி




- 2021-2022 ஆம் ஆண்டில் பிரேசில் நாட்டினை விஞ்சி இந்தியா உலகின் முன்னணிச் சர்க்கரை உற்பத்தியாளராக மாறியுள்ளது.
- எனினும் சர்க்கரை உற்பத்தியில் ஆற்றல் வளங்கள் அதிகளவில் பயன்படுத்தப் படச் செய்வதால் ஆற்றல் வளங்கள் வேகமாக குறைந்து வருவது என்பது எதிர்காலத்தில் ஆற்றல் வளங்களின் பயன்பாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட வழி வகுக்கும்.

- ❖ உபரி சர்க்கரை உற்பத்தி மற்றும் அதிகளவில் மேற்கொள்ளப்படும் சர்க்கரை ஏற்றுமதி என்பது, நியாயமான மற்றும் இலாபகரமான விலை (FRP) திட்டம் மற்றும் மாநில அரசின் மானியங்கள் போன்ற கரும்புச் சாகுபடிக்குச் சாதகமான அரசுக் கொள்கைகளின் விளைவாக பதிவாகியுள்ளது.
- ❖ இந்தியாவிலுள்ள கரும்பு விளைச்சலில் முன்னணியில் உள்ள பல மாநிலங்கள் நீர்ப் பாசனத்திற்காக நிலத்தடி நீரையே பெரிதும் சார்ந்துள்ளதால் நிலத்தடி நீர் மட்டம் குறைதல் போன்றப் பிரச்சினைக்கு இது வழி வகுக்கிறது.

## செம்மரக் கட்டைகளின் ஏற்றுமதிக்கான ஒதுக்கீடு




- ❖ தமிழ்நாடு மாநிலத்தில் செயற்கையாக வளர்க்கப்பட்ட செம்மரக் கட்டைகளின் வருடாந்திர ஏற்றுமதி ஒதுக்கீட்டு அளவினை சுமார் 900 டன்களாக வர்த்தகத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- ❖ சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வனத்தில் வளர்க்கப்படும் செம்மரங்களை ஏற்றுமதி செய்வதற்கு சுழிய அளவிலான ஒரு ஏற்றுமதி ஒதுக்கீட்டையும் அமைச்சகம் அறிவித்துள்ளது.
- ❖ செம்மரம் என்பது கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே பரவிக் காணப்படும் ஓர் இந்திய வட்டார மர இனமாகும்.

- இந்த மர இனமானது, ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள சில தனித்துவமான வளங்களைக் கொண்ட காடுகளைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு வட்டார இனமாகும்.
- செம்மரங்கள் என்பது பொதுவாக செம்மண் மற்றும் வெப்பமான மற்றும் வறண்டப் பருவநிலை கொண்ட பாறை பாங்கான, வளமிழந்த மற்றும் தரிசு நிலங்களில் வளரும்.
- மிகவும் மெதுவாக வளரும் மர இனமான இது இயற்கையாக வளரும் காடுகளில் 25-40 ஆண்டுகளுக்குப் பிறகு முதிர்நிலையை அடையும்.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் (IUCN) ஆனது, சமீபத்தில் அதன் செந்நிறப் பட்டியலில் செம்மரங்களை (அல்லது செஞ்சந்தனம்) மீண்டும் 'அருகி வரும்' இனங்களாக வகைப்படுத்தியுள்ளது.
- இது 1972 ஆம் ஆண்டின் வன உயிரினங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் IVவது அட்டவணையின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.
- செம்மரங்களின் மிகப்பெரிய இறக்குமதியாளராக சீனா திகழ்கிற நிலையில், அதைத் தொடர்ந்து ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் உள்ளன.

## உன்மேஷா திருவிழா

- மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரில் நடைபெற உள்ள 'உன்மேஷா' சர்வதேச இலக்கியத் திருவிழாவை குடியரசுத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திருவிழாவானது சாகித்ய அகாடமியினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- 'உன்மேஷா' திருவிழாவானது உலகெங்கிலும் உள்ள இலக்கிய ஆர்வலர்களை நன்கு ஒன்றிணைக்கிறது.
- இது ஆசியாவின் மிகப்பெரிய இலக்கியக் கூட்டமாகும்.
- 75க்கும் மேற்பட்ட நிகழ்வுகளில் 102 மொழிகளில் 575க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் பங்கேற்பதையடுத்து, 'உன்மேஷா' உலகின் மிகப்பெரிய இலக்கிய விழாவாக மாற உள்ளது.

## உத்கர்ஷ் திருவிழா

- மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரில் நடைபெற உள்ள உத்கர்ஷ்' விழா எனப்படும் நாட்டுப்புற மற்றும் பழங்குடியினரின் கலை நிகழ்ச்சிகளைக் குடியரசுத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்த விழாவினை சங்கீத நாடக அகாடமி ஏற்பாடு செய்துள்ளது.
- 'உத்கர்ஷ்' திருவிழா மூலம், இந்தியாவானது தனது கலாச்சாரப் பன்முகத்தன்மையின் மிகவும் தெளிவான அம்சத்தினைப் பெருமையுடன் வெளிப்படுத்துவதோடு உள் நாட்டுக் கலைகளுக்கானப் புகழை நன்கு வளர்த்து, நவீன மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகில் அவற்றின் மதிப்பை வெளிப்படுத்துகிறது.

## தேவிகா நதி

- இது வட இந்தியாவின் முதல் நதி மீளுருவாக்கத் திட்டமாகும்.
- இது புனிதமான கங்கை நதியின் சகோதரி நதியாகக் கருதப்படுகிறது.

- இது ஜம்மு காஷ்மீர் மாநிலம் உதம்பூர் மாவட்டத்தில் உள்ள மலைப்பாங்கான சுத்தா மகாதேவ் கோயில் பகுதியில் இருந்து உருவாகிறது.
- இது மேற்கு பஞ்சாப் (தற்போது பாகிஸ்தானில் உள்ளது) நோக்கி கீழே பாய்ந்து அங்கு ராவி நதியுடன் கலக்கிறது.
- இந்த திட்டமானது இந்திய அரசின் தேசிய நதிப் பாதுகாப்புத் திட்டத்தில் (NRCP) சேர்க்கப் பட்டுள்ளது.




## நீதிபதி ரோகிணி குழுவின் ஆய்வறிக்கை

CENTRAL GOVT EMPLOYEES BY SOCIAL CATEGORY

| | TOTAL | SC | ST | OBC | EWS | OTHERS |
|---|---|---|---|---|---|---|
| Group-A | 50,068 | 6,440 (12.86%) | 2,826 (5.64%) | 8,455 (16.88%) | 11 (0.02%) | 32,226 (64.58%) |
| Group-B | 1,25,732 | 20,954 (16.66%) | 8,244 (6.55%) | 19,829 (15.77%) | 5 (0.04%) | 76,700 (61.0%) |
| Group-C (excluding safai karmacharis) | 3,22,503 | 58,744 (18.22%) | 22,296 (6.91%) | 72,710 (22.54%) | 84 (0.03%) | 1,68,639 (52.29%) |
| Group-D (safai karmacharis) | 13,722 | 4,507 (32.72%) | 1,056 (7.66%) | 2,774 (20.14%) | 0 | 5,435 (39.46%) |
| TOTAL | 5,12,075 | 90,675 (17.70%) | 34,422 (6.72%) | 1,03,768 (20.26%) | 100 (0.02%) | 2,83,110 (55.28%) |

- நீதிபதி G. ரோகினி தலைமையிலான ஆணையம் ஆனது 2017 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இது இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) குழுக்களின் துணை வகையாக்கம் குறித்த ஆய்வினை மேற்கொள்வதற்காக நிறுவப்பட்டது.

- இது அரசியலமைப்பின் 340வது சட்டப்பிரிவு வழங்கிய அதிகாரங்களின் கீழ் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டது.
- இந்த ஆணையம் கண்டறிந்த சில முக்கியத் தகவல்கள்:
  - சில சாதிக் குழுக்களின் ஆதிக்கம்: ஒட்டு மொத்த இதரப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்புக் குழுக்களிலும் சில குறிப்பிட்ட சாதிக் குழுக்கள் இதரப் பிற்படுத்தப் பட்டோர் வகுப்புகளுக்கான இட ஒதுக்கீட்டில் அதிக ஒதுக்கீட்டினைப் பெறுவது கண்டறியப் பட்டது.
  - சமநிலைப் பங்கீடு: சில குழுக்கள் அதிக ஒதுக்கீட்டினைப் பெறுவதால் ஏற்படும் ஒரு ஏற்றத் தாழ்வை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு, இதரப் பிற்படுத்தப் பட்டோர் வகுப்பு சமூகத்தினரிடையே சமமான முறையில் இந்தப் பலன்கள் சென்று அடைவதை உறுதி செய்வதற்கான தேவை கண்டறியப் பட்டது.
  - இடஒதுக்கீடு வழங்கீட்டிற்கான சூத்திரம்: வரலாற்று ரீதியாக விளிம்பு நிலையில் உள்ள குழுக்களுக்கு அதிகப் பங்கை வழங்குதல் மற்றும் இட ஒதுக்கீட்டில் அதிக ஒதுக்கீட்டினைப் பெறும் குழுக்களின் பங்கைக் குறைத்தல் போன்ற நோக்கத்துடன், இத்தனை ஆண்டுகளாக அவர்கள் குறைவான பிரதிநிதித்துவத்தினைப் பெற்று வருவதை கருத்தில் கொண்டு இட ஒதுக்கீட்டுப் பலன்களை ஒதுக்கீடு செய்திட வேண்டி அதற்கான சூத்திரத்தை ஆணையம் வகுத்துள்ளது.
  - மத்திய அரசின் இதரப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்புப் பட்டியலை மறுசீரமைத்தல்: உள்ளீடுகளில் உள்ள பிழைகள் மற்றும் தவறுகளைச் சரி செய்வதை நோக்கமாகக் கொண்டு, மத்திய அரசின் இதரப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்புப் பட்டியலில் உள்ள எழுத்துப் பிழைகளில் திருத்தங்கள் மற்றும் மாற்றீடுகளை மேற்கொள்வதற்கு இந்த ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

## கிராமப்புற இந்தியாவில் தொடக்கக் கல்வி நிலை 2023

### Aspiring for higher education

The table shows parental expectations of a child's educational attainment. About 78% of parents aspire for their girls to attain graduation or higher degrees



**Dropping out:** Parents of a section of girls said their daughters dropped out of school to help out in the family's earnings R. RAGU

| Expected level of education of child | Boy (%) | Girl (%) | Total (%) |
|---|---|---|---|
| Up to elementary | 4.4 | 3.9 | 4 |
| Up to secondary | 2.4 | 2.8 | 3 |
| Higher secondary | 11.1 | 15.2 | 13 |
| Graduation | 49.6 | 50.3 | 50 |
| Postgraduation/Ph.D. | 32.5 | 27.8 | 30 |

- About 80% of parents aspire for their children to become graduates or attain higher degrees
- The survey included responses of 6,229 parents across 21 States of India.

- சமீபத்தில், மத்தியக் கல்வித் துறை அமைச்சகமானது இந்தியாவில் முதல் முறையாக இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- கிராமப்புறச் சமூகங்களில் உள்ள 6 வயது முதல் 16 வயது வரையிலான குழந்தைகளை மையமாக வைத்து இந்த மதிப்பாய்வு நடத்தப்பட்டது.
- இது மாணவர்களிடையே திறன்பேசிகளின் பயன்பாடு அதிகமாக இருப்பதை எடுத்து உரைக்கிறது.
- இது கிராமப்புற இந்தியாவினை மாற்றியமைத்தல் என்ற தன்னார்வ நிறுவனம் மற்றும் சம்போதி ரிசர்ச் அண்ட் கம்யூனிகேஷன்ஸ் ஆகியவற்றுக்கு இடையேயான சிறந்த ஒத்துழைப்பினைக் கொண்டு, மேம்பாட்டுத் தகவல் வழங்கீட்டு மையம் (DIU) நடத்திய ஆய்வின் அடிப்படையில் கூறப்படுகிறது.
- இந்த மதிப்பாய்வின் படி, ஆண் குழந்தைகளில் நான்கில் ஒரு பகுதியினர் ஆரம்பப் பள்ளிக் கல்வியின் போது பள்ளிப் படிப்பில் இருந்து விலகியுள்ளனர்.
- இந்த வயது கட்டத்தில் பதிவான பள்ளிக்கல்வி இடைநிற்றல் விகிதம் ஆனது கிட்டத்தட்ட 35 சதவீதத்துடன் பெண் குழந்தைகள் மத்தியில் அதிகமாக இருந்தது.
- இதன்படி முக்கியத் தகவல்கள்:
    - 49.3% பேர் திறன்பேசிகளை அணுகுவதற்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.
    - அதே சமயம், சுமார் 34% மாணவர்கள் மட்டுமே கல்விப் படிப்பு தொடர்பான தரவுப் பதிவிறக்கங்களுக்காக திறன்பேசிகளைப் பயன்படுத்துகின்றனர்.
    - உயர் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் (8 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்பில் பயில்பவர்கள்) திறன்பேசிகளை (58.32%) அதிக அளவில் அணுகும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.
    - 78% பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் பட்டப்படிப்பு அல்லது அதற்கு மேற்பட்ட நிலையிலான கல்வியைப் பெற வேண்டும் என்ற ஆசை கொண்டுள்ளனர்.

## மணிப்பூரில் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அனைத்து மகளிர் குழு நியமனம்



- இந்திய தலைமை நீதிபதி, D.Y. சந்திரசூட் அவர்கள், மணிப்பூரில் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடுவதற்காக உயர் நீதிமன்றத்தின் மூன்று முன்னாள் நீதிபதிகளைக் கொண்ட அனைத்து மகளிர் குழுவை அமைக்க உள்ளதாக அறிவித்துள்ளார்.
- நீதிபதி கீதா மிட்டல் தலைமையிலான இந்தக் குழுவில் உயர் நீதிமன்றத்தின் மூன்று முன்னாள் நீதிபதிகள் இடம் பெறுவர்.

- பரந்தக் கொள்கை அடிப்படையிலான இந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்கள் மும்பை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியான நீதிபதி ஷாலினி பன்சால்கர் ஜோஷி மற்றும் டெல்லி உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான நீதிபதி ஆஷா மேனன் ஆகியோர் ஆவர்.
- ஆறு வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த காவல்துறை தலைமை இயக்குநர்கள் இந்த வழக்குகளுக்காக என்று உருவாக்கப்பட்ட இந்தச் சிறப்புப் புலனாய்வுக் குழுக்களை மேற்பார்வையிடுவதற்காக தலா ஆறு துணைத் தலைமைக் காவல் ஆய்வாளர் நிலை அதிகாரிகளை நியமிப்பர்.

## இந்தியத் தொழிற்சாலைகளில் நீர் நடுநிலைமை

- நிதி ஆயோக் அமைப்பானது, உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கான நீர் நடுநிலைமைத் தன்மையின் நிலையான வரையறை மற்றும் அணுகுமுறையைக் குறிப்பிட்டுக் காட்டி உள்ளது.
- இந்த வரையறையானது பசுமை கண்துடைப்பு நிகழ்வைச் செய்வதைத் தடுப்பதோடு, நீர் வளங்காப்பிற்கான சிறந்த நடைமுறைகளை ஊக்குவிக்கும்.
- இது நேரடி மற்றும் மறைமுகப் பயன்பாடு உள்ளிட்ட மொத்த நன்னீர் நுகர்வு மற்றும் செயல்திறன் மிக்க உத்திகளின் விளைவாக மேற்கொள்ளப்படும் அளவான நீர் சேமிப்பு இடையே சமநிலையை அடைவதற்கான இலக்காக வரையறுக்கப் பட்டுள்ளது.
- தேசிய நீர் வளங்காப்புத் திட்டத்தின் 4வது இலக்கு ஆனது (நீர்ப் பயன்பாட்டுத் திறனை 20% அதிகரிப்பது) நீர்ப் பயன்பாட்டு நடுநிலை மற்றும் நீர்வளங்களுக்கு நேர்மறையான விளைவுகளை தரும் தொழில்நுட்பங்களை உருவாக்குவதை உள்ளடக்கியது.


## NITIE - IIM மும்பை

- மும்பையின் தேசியத் தொழில்துறை பொறியியல் கல்வி நிறுவனமானது (NITIE) ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு மற்றும் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் ஆதரவுடன் 1963 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (IIM) மும்பை என்ற நிறுவனமாக தயாராகி வருகிறது.
- இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதன் மூலம் NITIE மும்பை ஆனது இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (IIM), மும்பை என மறு பெயரிடப் பட உள்ளது.
- இதன் மூலம், மும்பையின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (IIM) ஆனது நாட்டின் 21வது இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் ஆக திகழும்.
- முதல் இரண்டு இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனங்களான, கல்கத்தா இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், மற்றும் அகமதாபாத் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் ஆகியவை முறையே 1961 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும் 1961 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும் நிறுவப்பட்டன.
- பல ஆண்டுகளாக 1973 ஆம் ஆண்டில் பெங்களூர் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், 1984 ஆம் ஆண்டில் லக்னோ இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், 1996 ஆம் ஆண்டில் கோழிக்கோடு இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் மற்றும் இந்தூர் இந்திய

மேலாண்மைக் கல்வி நிறுவனம், 2007 ஆம் ஆண்டில் ஷில்லாங் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், மற்றும் 2010 ஆம் ஆண்டில் ராய்ப்பூர் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், ராஞ்சி இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், மற்றும் ரோத்தக் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், உள்ளிட்ட பல இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள் நிறுவப் பட்டுள்ளன.

- சமீபத்தில் உருவாக்கப்பட்ட இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள் 2011 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட திருச்சிராப்பள்ளி இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், மற்றும் உதய்ப்பூர் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் என்ற நிலையில் மேலும் தற்போது 2023 ஆம் ஆண்டில் மும்பை இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனமும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

## தேர்தல் ஆணையர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான குழு




- 2023 ஆம் ஆண்டு தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், பணி நிபந்தனைகள் மற்றும் பதவிக் காலம்) என்ற மசோதாவினைச் சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தினார்.

- பிரதமர் தலைமையிலான இந்த மூன்று பேர் கொண்ட குழுவில் இந்தியத் தலைமை நீதிபதிக்குப் பதிலாக, மக்களவையில் உள்ள எதிர்க் கட்சித் தலைவர் (LoP) உட்பட, ஒரு அமைச்சரவைக் குழு அமைச்சர் ஆகியோர் இடம் பெறுவர்.
- தலைமைத் தேர்தல் ஆணையர் (CEC) மற்றும் தேர்தல் ஆணையர்களைத் தேர்ந்து எடுக்கும் மூன்று பேர் கொண்ட இந்தக் குழுவிலிருந்து இந்தியத் தலைமை நீதிபதியை (CJI) நீக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதலில், தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்களாக நியமனம் செய்வதற்காக வேண்டி, தேர்வுக் குழுவின் பரிசீலனைக்காக என்று ஐந்து நபர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் தயாரிக்கப் படும்.
- கடந்த மார்ச் மாதத்தில், இந்தத் தேர்வுக் குழுவில் பிரதமர், மக்களவையின் எதிர்க் கட்சித் தலைவர் (LoP) மற்றும் இந்தியத் தலைமை நீதிபதி ஆகியோர் இடம் பெற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- நாடாளுமன்றத்தால் ஒரு சட்டம் இயற்றப் படும் வரை இந்த உத்தரவு நடைமுறையில் இருக்கும் என்று நீதிமன்றம் கூறியிருந்தது.
- உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு வழங்கப் படும் வரையில் தேர்தல் ஆணையர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் ஆணையர்கள் அரசாங்கத்தின் பரிந்துரைகளுக்குப் பிறகு குடியரசுத் தலைவரால் நியமிக்கப் பட்டனர்.

## நீதித்துறைச் செயல்முறை மற்றும் அவற்றின் சீர்திருத்தங்கள் பற்றிய 133வது அறிக்கை


भारतीय संसद
PARLIAMENT OF INDIA
प्रेस विज्ञप्ति
PRESS RELEASE
राज्य सभा सचिवालय
RAJYA SABHA SECRETARIAT

DEPARTMENT RELATED PARLIAMENTARY STANDING COMMITTEE ON PERSONNEL, PUBLIC GRIEVANCES, LAW AND JUSTICE

One Hundred Thirteenth Report

- Ensure accountability of the government officials dealing with citizen's grievances
- Department should explore the need for setting up of 3rd ARC
- Concept paper in 3 months for integration of all central pensioners of other organization viz. Defence, Railway, Telecom and Postal under DoPPW

- இந்திய உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீட்டிப்பதற்குப் பணியாளர்கள், பொதுமக்கள் குறை தீர்ப்பு, சட்டம் மற்றும் நீதிக்கான நாடாளுமன்ற நிலைக் குழு பரிந்துரைத்துள்ளது.
- மேலும் ஒரு வருடத்தில் ஓரிரு மாதங்களுக்கு நீதிமன்றங்களை முழுமையாக மூடுவது குறித்து நீதித் துறைக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்தது.
- இந்தக் குழு ஆறு சீர்திருத்தங்களைப் பரிந்துரைத்துள்ளது. அவையாவன:
  - உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் நியமனத்தில் சமூகப் பன்முகத் தன்மை;
  - உச்ச நீதிமன்றத்தின் பிராந்திய அமர்வுகளுக்கான சாத்தியக் கூறுகள்;

- உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயதை அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்தல்;
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களில் விடுமுறைகள்;
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் தங்களது சொத்துக்கள் குறித்தத் தகவல்களைக் கட்டாயமாக அறிவிக்க வேண்டும்;
- உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்கள் ஆண்டு அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் அதனை வெளியிடுதல்.

## சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு (HMIS) 2022-23

- ❖ 6 மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்கள் (UTs) 100% முழுமையான நோய்த் தடுப்பு நிலையை (FIC) அடைந்துள்ளன என்பதை இது வெளிப்படுத்துகிறது.
- ❖ 17 மாநிலங்கள் 90 சதவீதத்திற்கும் மேல் முழுமையான நோய்த் தடுப்பு நிலையை எட்டி உள்ளன.
- ❖ இந்திரதனுஷ் என்ற திட்ட முன்னெடுப்பானது பொது நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுகிறது.
- ❖ குறைந்த அளவு நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கப் பட்டப் பகுதிகளில், வழக்கமான நோய்த் தடுப்பு மருந்தைத் தவற விட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தடுப்பு மருந்து வழங்குவதில் இத்திட்டம் கவனம் செலுத்துகிறது.

## இந்தியாவின் சுதந்திர தினம் 2023

- ❖ இந்திய நாடானது 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று தனது 77வது சுதந்திர தினத்தினைக் கொண்டாடியது.
- ❖ இந்த ஆண்டிற்கான சுதந்திர தினத்தின் கருத்துரு, "தேசமே முன்னிலை, எப்போதும் முன்னிலை" என்பதாகும்.
- ❖ இந்த ஆண்டிற்கான கொண்டாட்டத்திற்கான சிறப்புப் பங்கேற்பாளர்கள் எண்ணிக்கை மிகப்பெரியப் பட்டியலைக் கொண்டது.
- ❖ மத்திய விஸ்டா (மத்திய எழில்முற்றம்) திட்டத்தின் கட்டுமானத்தில் பங்களித்தோர், ‘எழுச்சி மிக்க கிராமங்கள்’, ஆசிரியர்கள், செவிலியர்கள், விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் இதில் அடங்குவர்.
- ❖ சுதந்திர தினத்தன்று பிரதமரின் உரையாற்றலில் கலந்து கொள்வதற்காக சுமார் 1,800 நபர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

## மழைக்காலக் கூட்டத்தொடர் 2023

- ❖ சமீபத்தில் நடந்து முடிந்த மழைக் கால கூட்டத்தொடரில் மக்களவையானது அதன் திட்டமிடப்பட்ட நேரத்தில் 43 சதவீதமும் மற்றும் மாநிலங்களவை 55 சதவீதமும் மட்டுமே இயங்கியுள்ளன.
- ❖ ஆனால் 23 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதையடுத்து சட்டமியற்றும் செயல்பாடுகள் அதிகமாகவே பதிவாகியுள்ளது.

- கீழவையில் சுமார் 44 மணி 15 நிமிடங்கள் நீடித்த 17 அமர்வுகள் நடைபெற்றது.
- நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம் ஆனது 19 மணி நேரம் 59 நிமிடங்கள் நீடித்தது.
- இந்தக் கூட்டத் தொடரில் இருபத்து மூன்று மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.
- பெரும்பாலான மசோதாக்கள் ஒரு சிறிய அளவு ஆய்வுக்கு மட்டுமே உட்படுத்தப்பட்டு நிறைவேற்றப் பட்டன.
- இந்தக் கூட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்பட்ட மசோதாக்களில் சுமார் 56% இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டன.
- சராசரியாக, இந்தக் கூட்டத் தொடரில் அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு மசோதா எட்டு நாட்களுக்குள் நிறைவேற்றப்பட்டது.
- அறிமுகப் படுத்தப் பட்ட மொத்த மசோதாக்களில், மூன்று மசோதாக்கள் பாராளுமன்ற குழுக்களுக்கு மதிப்பீட்டிற்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.
- மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட 17% மசோதாக்கள் பாராளுமன்ற குழுக்களுக்கு மதிப்பீட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளன.
- கடந்த மூன்று மக்களவை கூட்டத்தொடருடன் ஒப்பிடுகையில் இது குறைவு ஆகும்.
- இந்தக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட 23 மசோதாக்களில், ஏழு மசோதாக்கள் பாராளுமன்ற நிலைக் குழுவால் ஆய்வு செய்யப் பட்டுள்ளன.
- தேசிய செவிலியர் மற்றும் மருத்துவத் தாதியர் ஆணையம் மற்றும் தேசிய பல் மருத்துவ ஆணையம் ஆகியவற்றை உருவாக்குவதற்கான மசோதாக்கள் மூன்று நிமிடங்களுக்குள் மக்களவையில் விவாதிக்கப்பட்டு ஒரு சேர நிறைவேற்றப் பட்டன.
- மத்திய சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் ஒருங்கிணைந்தச் சரக்கு மற்றும் சேவை வரி திருத்த மசோதாக்கள் மக்களவையில் இரண்டு நிமிடங்களுக்குள் ஒரு சேர நிறைவேற்றப் பட்டன.
- மாநிலங்களவை தொடர்ச்சியாக அடுத்தடுத்த மூன்று நாட்களில் 10 மசோதாக்களை நிறைவேற்றியது.



## பாரதிய நியாய சன்ஹிதா மசோதா 2023

- மத்திய உள்துறை அமைச்சகமானது இந்தியத் தண்டனைச் சட்டம், இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சியச் சட்டம் ஆகியவற்றுக்கு மாற்றாக மூன்று புதிய மசோதாக்களை மக்களவையில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- அவையாவன:
  - 1860 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கு மாற்றாக பாரதீய நியாய சன்ஹிதா, 2023,
  - 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கு மாற்றாக பாரதீய நாகரிக் சுரக்சா சன்ஹிதா, 2023,
  - 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்திற்கு மாற்றாக பாரதீய சாக்சய மசோதா, 2023.
- இந்தியத் தண்டனைச் சட்டத்தில் இருந்து பெறப்பட்டு மாற்றியமைக்கப்பட்ட 175 பிரிவுகளோடு சேர்த்து, பாரதீய நியாய சன்ஹிதா மசோதாவில் (BNS) 356 பிரிவுகள் உள்ளன.
- இதில் 22 பிரிவுகள் ரத்து செய்யப் பட்டு, 8 புதிய பிரிவுகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.
- இதில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைக் கையாளுவது தொடர்பான புதிய அத்தியாயம் சேர்க்கப் பட்டுள்ளது.
- சமூக சேவை செய்வதை, சிறு சிறு குற்றங்களுக்கான தண்டனையாக விதிக்கும் ஒரு விதிமுறையை இந்த மசோதா அறிமுகப்படுத்தியுள்ளது.
- திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் குற்றங்கள் ஆனது முதன்முறையாக தண்டனைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட உள்ளது.




- அடுத்தப் படியாக, இந்தச் சட்டத்தின் கீழ் 'தீவிரவாத நடவடிக்கை' என்பதும் முதன் முறையாக வரையறுக்கப் பட்டுள்ளது.

- இது "இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்குப் பாதகத்தினை விளைவிக்கும் நடவடிக்கைகளுக்கு" தண்டனை விதிக்கும் 150வது சட்டப் பிரிவினைக் கொண்டுள்ளது.
- முன்மொழியப்பட்டுள்ள இந்தச் சட்டமானது, இயற்கைக்கு மாறான பாலியல் ரீதியான குற்றங்கள் குறித்த விதிமுறைகளைக் கொண்டிருக்கவில்லை.
- எனினும் முன்மொழியப் பட்டுள்ள இந்தச் சட்டத்தின் கீழ், மாற்றார் மனை கூடல் தொடர்பு (கள்ளத் தொடர்பு) ஆனது இனி குற்றமாக கருதப் படாது.
- மிரட்டிப் பணம் பறித்தல் குற்றத்திற்கான தண்டனை அதிகரிக்கப் பட்டுள்ளது.

## பாரதீய நாகரிக் சுரக்சா சன்ஹிதா மசோதா 2023

- பாரதீய நாகரிக் சுரக்சா சன்ஹிதா மசோதாவில் பழைய சட்டத்தில் இருந்து பெறப்பட்டு மாற்றியமைக்கப்பட்ட 160 பிரிவுகளோடுச் சேர்த்து 533 சட்டப் பிரிவுகள் உள்ளன.
- இந்தச் சட்டத்தில் 9 புதிய சட்டப் பிரிவுகள் சேர்க்கப்பட்டு, 9 பிரிவுகள் ரத்து செய்யப் பட்டுள்ளன.
- குற்றம் சாட்டப்பட்டவர் அதற்கான விசாரணையில் முழுமையாகப் பங்கேற்றுத் தற்காப்பு பெறுவதற்கான ஒரு உரிமையானது சட்டமுறை செயல்முறையின் ஒரு பகுதி ஆகும்.
- விசாரணைகள், மேல்முறையீட்டு நடவடிக்கைகள், அரசு ஊழியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தல் ஆகிய மின்னணு முறையில் நடத்தப்பட அனுமதிக்கப் படும் விதிமுறைகள் இதில் இடம் பெற்றுள்ளன.
- மரணத் தண்டனை வழக்குகளில், ஒரு குற்றவாளி கருணை மனுக்களைத் தாக்கல் செய்ய அனுமதிக்கும் நடைமுறைகள் தொடர்பான ஒரு விதியும் இதில் இடம் பெற்று உள்ளது.
- தடுப்புக் காவலின் ஒரு பகுதியாக கொடுக்கப்பட்ட சில வழிகாட்டுதல்களை எதிர்க்கும் அல்லது மறுக்கும் எந்தவொரு நபரையும் தடுப்புக் காவலில் வைக்கவும் அல்லது அதில் வெளியேற்றவும் காவல்துறைக்கு அனுமதி வழங்கும் விதிகளும் இதில் இடம் பெற்று உள்ளன.
- மனநோயால் பாதிக்கப்பட்ட ஒருவரை தடுப்புக் காவலில் வைத்தல், காவலில் வைத்தல் போன்றவற்றிற்கான விதிமுறைகளையும் இந்த மசோதா வகுத்துள்ளது.




## 2023 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தின் நிலை

- ❖ இந்தியாவின் தலைமை நீதிபதி D.Y. சந்திரசூட் உச்ச நீதிமன்ற உள் கட்டமைப்பினை இரண்டு கட்டமாக விரிவுபடுத்த உள்ளதாக அறிவித்துள்ளார்.
- ❖ ஒரு புதியக் கட்டிடத்தில் 27 கூடுதல் நீதிமன்றங்கள், 51 நீதிபதிகள் அறைகள், நான்கு நீதிமன்றப் பதிவாளர் அறைகள், 16 பதிவாளர் அறைகள் மற்றும் வழக்கறிஞர்கள் & வழக்குரைஞர்களுக்கான இதர வசதிகள் இடம் பெற உள்ளன.
- ❖ இதற்கான முன்மொழிதலானது மத்திய நீதித்துறையின் ஒப்புதலுக்காக வேண்டி காத்திருக்கிறது.
- ❖ உச்ச நீதிமன்றத்தின் 35,000 தீர்ப்புகளையும் அனைத்து இந்திய மொழிகளிலும் மொழி பெயர்ப்பதை உச்ச நீதிமன்றத்தின் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இதுவரை 9,423 தீர்ப்புகள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.
- ❖ இதில் 8,977 தீர்ப்புகள் இந்தி மொழியிலும், மற்றவை பல்வேறு பிராந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## பிரதான் மந்திரி உச்சதார் சிக்சா அபியான்

- ❖ மாநிலப் பல்கலைக் கழகங்களில் உயர்கல்வியின் தரத்தை மிக மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சகம் தொடங்கிய திட்டத்திற்கான புதிய பெயர் PM-USHA என்பதாகும்.
- ❖ இதற்காக, 2023-24 மற்றும் 2025-26 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 12,926.10 கோடி ரூபாய்ச் செலவின மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ PM-USHA திட்டத்தில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேச அரசுகள் பங்கேற்க விருப்பம் தெரிவிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- ❖ PM USHA திட்டத்தின் கீழான 40% செலவினங்களை மாநில அரசுகள் ஏற்கின்றன.
- ❖ கேரளா, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காளம் உள்ளிட்ட 14 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் மத்திய கல்வித் துறை அமைச்சகத்துடனான இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) இன்னும் கையெழுத்திடாமல் உள்ளன.
- ❖ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட 13,000 கோடி ரூபாய் மதிப்பிலான நிதியைப் பெறுவதற்காக தேசியக் கல்விக் கொள்கையை அமல்படுத்துவதைக் கட்டாயமாக்குகிறது.



## போற்றப்படாத சுதந்திரப் போராட்ட வீராங்கனைகள்



- குடியரசுத் தலைவர் முர்மு அவர்கள் மாதாங்கினி ஹஸ்ரா, கனகலதா பருவா ஆகியோர் நம் சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் அழிக்க முடியாதப் பங்களிப்பினை ஆற்றிய சில குறிப்பிடத் தக்க வீராங்கனைகளை நினைவு கூர்ந்தார்.
- 1930 ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்ட மறுப்பு இயக்கம் மற்றும் காந்தியின் தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரக யாத்திரையில் பங்கேற்றதற்காக ஹஸ்ரா கைது செய்யப்பட்டார்.
- ஹஸ்ரா, 1942 ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் உள்ள தம்லுக் எனுமிடத்தில் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் சமயம் ஓர் அணிவகுப்பை வழி நடத்திய போது, ஆங்கிலேய வீரர்களின் தோட்டாக்களுக்குப் பலியான போது அவருக்கு வயது 73 ஆகும்.
- 1977 ஆம் ஆண்டில், கொல்கத்தா நகர மைதானத்தில் ஒரு பெண் புரட்சியாளருக்காக ஏற்படுத்தப் பட்ட முதல் சிலை மாதாங்கினி ஹஸ்ராவின் சிலையாகும்.
- கனகலதா பருவா, வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்ற இளம் தியாகிகளில் ஒருவர் ஆவார்.
- 1942 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதியன்று, கோஹ்பூர் காவல் நிலையத்தில் மூவர்ணக் கொடியை ஏற்றுவதற்காக வேண்டி மேற்கொள்ளப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களின் மிருத்யு பாஹினி அணி வகுப்பை 17 வயதான பருவா தலைமையேற்று வழி நடத்திச் சென்றார்.
- 2020 ஆம் ஆண்டில், விரைவு ரோந்துக் கப்பல் (FPV) எனப் படும் கடலோரக் காவல் படைக்கு இவரின் நினைவாக ICGS கனகலதா பருவா என்று பெயரிட்டது.

## பழங்குடியினப் பெண்களுக்கான சுகாதார வசதிகள் குறித்த அறிக்கை

- பெண்களுக்கு அதிகாரமளித்தல் தொடர்பான நாடாளுமன்றக் குழுவானது அது தொடர்பான அறிக்கையினைப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தது.
- நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சுகாதார நிலைகள் குறித்தத் தரவுகளை மத்திய அரசு வெவ்வேறு நிலைகளில் பிரிக்கவில்லை என்பதை இது எடுத்துரைக்கிறது.
- இது M.P. ஹீனா காவிட் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழுவாகும்.
- அரிவாள் வடிவ இரத்தசோகை நோய் மற்றும் G-6 PD குறைபாடு போன்ற மரபணுக் குறைபாடுகள் பழங்குடியினர் பகுதிகளில் அதிகரித்து வருகின்றன.

- மற்ற சமூகக் குழுவினருடன் ஒப்பிடும் போது தொழுநோய், காசநோய், காலரா போன்ற தொற்று நோய்களின் பாதிப்பு இந்த இனத்தவரில் அதிகமாக உள்ளது.
- இந்தியாவின் சராசரிப் பாலின விகிதமான 930 என்ற மதிப்புடன் ஒப்பிடும் போது அந்தக் குழுவினரில் 990 என்றப் பாலின விகிதம் பதிவாகியுள்ளது.
- குழந்தை திருமணம், இளம் வயதில் கருவுறுதல், குறைவான மதிப்பிலான உடல் பருமன் அளவு மற்றும் அதிகளவிலான இரத்த சோகை ஆகியவை பழங்குடிப் பெண்களிடையே அதிக விகிதத்திலான உயிரிழப்பினை ஏற்படுத்துகின்றன.




## மூன்றாவது 'அனைத்து மகளிர் இரயில் நிலையம்'

- மத்திய இரயில்வே நிர்வாகத்தின் புதிய அமராவதி இரயில் நிலையமானது, மத்திய இரயில்வே நிர்வாகத்தின் மூன்றாவது 'அனைத்து மகளிர் இரயில் நிலையம்' (இளஞ் சிவப்பு நிறக் குறியீடு) ஆக மாற உள்ளது.
- ஒரு இளஞ்சிவப்பு நிறக் குறியீடு பெற்ற இரயில் நிலையம் என்பது முழுமையாக பெண் ஊழியர்களால் நிர்வகிக்கப்படும் இரயில் நிலையம் என்பதைக் குறிக்கிறது.
- முழுமையாக பெண் ஊழியர்களால் நிர்வகிக்கப்படும் முதல் இரயில் நிலையத்தினை அமைத்த இந்திய இரயில்வே நிர்வாகத்தின் முதல் மண்டலம் என்பது, மும்பை மாநகரக் கோட்டத்தில் உள்ள மாதுங்கா நிலையம் என்ற நிலையில், அதற்கு அடுத்த படியாக நாக்பூர் கோட்டத்தில் உள்ள அஜ்னி நிலையம் உள்ளது.



## பாரதீய சாக்சய மசோதா 2023




- இந்த மசோதாவானது, வழக்கற்றுப் போன 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தினை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அந்தச் சட்டத்தின் 23 விதிகளை மாற்றியமைத்ததோடு, மேலும் ஒரு புதிய விதியை அதில் அறிமுகப் படுத்தியுள்ள நிலையில், அவற்றோடுச் சேர்த்து இந்த மசோதாவில் மொத்தம் 170 சட்டப் பிரிவுகள் உள்ளன.
- இந்தப் புதிய மசோதாவானது, மின்னணு அல்லது எண்ணிமப் பதிவுகளை ஆதாரமாக ஏற்றுக் கொள்ள அனுமதிக்கிறது.
- இந்த மசோதாவானது இரண்டாம் நிலை ஆதாரங்களின் (அசலான சில ஆதாரங்களில் இருந்து தருவிக்கப்பட்டவை) வரம்பினை விரிவுபடுத்துகிறது.
- இது குற்றவியல் வழக்குகளின் விசாரணையின் போது சாட்சியங்களைக் கையாளச் செய்வதற்கான துல்லியமான மற்றும் சீரான விதிகளை நிறுவுகிறது.

## நிவேஷக் சாரதி

- முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (IEPFA) ஆனது 'நிவேஷக் சாரதி' என்ற முதலீட்டாளர் விழிப்புணர்வு வாகனங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது, 'அறிவின்மையிலிருந்து விடுபட்டு நிதிசார் சுதந்திரத்தினைப் பெறுதல்' என்ற கருத்துருவுடன் ஒன்றிணைக்கப் பட்டுள்ளது.
- இந்தச் சிறப்பு வாகனங்களில் 'ஹிசாப் கி கிதாப்' நிகழ்ச்சியை ஒளிபரப்பும் வகையில் தொலைக்காட்சித் திரை பொருத்தப் பட்டுள்ளது.
- இது முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தினால் உருவாக்கப்பட்ட முதலீட்டாளர் விழிப்புணர்வுத் திரைப்படங்களின் தொடர் ஆகும்.
- முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையமானது, முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியை மேலாண்மை செய்வதற்காக பெரு நிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தினால் நிறுவப்பட்டது.

## மருந்தாக்கவியல் (திருத்தம்) மசோதா, 2023

- இந்த மசோதாவானது மருந்தாக்கவியல் நடைமுறை மற்றும் தொழில்முறையை ஒழுங்குபடுத்துகின்ற 1948 ஆம் ஆண்டு மருந்தாக்கவியல் சட்டத்தினைத் திருத்தி அமைக்கிறது.
- இந்தியாவில் மருந்தாக்கவியல் தொழில்முறையை மேற்கொள்வதற்கு 1948 ஆம் ஆண்டு மருந்தாக்கவியல் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் கட்டாயமாகும்.
- 2011 ஆம் ஆண்டு ஜம்மு மற்றும் காஷ்மீர் மருந்தாக்கவியல் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப் பட்ட அல்லது தகுதி பெற்ற நபர்கள் தொடர்பான சிறப்பு விதிகளை வழங்கச் செய்வதற்காக 32C என்ற புதிய சட்டப் பிரிவினை இந்த மசோதா சேர்க்க உள்ளது.
- 2011 ஆம் ஆண்டு ஜம்மு மற்றும் காஷ்மீர் மருந்தாக்கவியல் சட்டத்தின் கீழ், மருந்தாளராகப் பதிவு செய்யப்பட்ட அல்லது 2011 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப் பட்ட தகுதிகளைப் பெற்றுள்ள எவரும் 1948 ஆம் ஆண்டு இயற்றப் பட்ட மருந்தாக்கவியல் சட்டத்தின் கீழ் மருந்தாளுநராகப் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப் படுவர்.
- வழக்கற்றுப் போன அல்லது பிற சட்டங்களால் தேவையற்றதாக அறிவிக்கப்பட்ட 65 சட்டங்களை ரத்து செய்ய இந்த மசோதா முயல்கிறது.
- இது 2011 ஆம் ஆண்டு கணக்கு விவர வர்த்தக ஒழுங்குமுறை சட்டத்தில் உள்ள ஒரு சிறிய வரைவுப் பிழையையும் சரிசெய்ய முயல்கிறது.
- இந்த மசோதாவின் முதல் அட்டவணையானது ரத்து செய்யப்பட உள்ள 24 சட்டங்களைப் பட்டியலிடுகிறது.
- இவற்றில் 16 சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டச் சட்டங்கள், மற்றும் இரண்டு சட்டங்கள் 1947 ஆம் ஆண்டிற்கு முந்தையவை ஆகும்.
- இந்த மசோதாவின் இரண்டாவது அட்டவணையானது ரத்து செய்யப்பட உள்ள 41 ஒதுக்கீட்டுச் சட்டங்களைப் பட்டியலிடுகிறது.
- இரயில்வே நிர்வாகத்திற்கான 18 ஒதுக்கீட்டுச் சட்டங்களும் இதில் அடங்கும்.




## பகத் பாலம்

- இந்த 115 அடி நீள பாலத்தின் மூலம் ஜம்மு மற்றும் காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் உள்ள மச்சல் பிரிவில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்த கடைநிலை கிராமத்திற்கான ஒரு போக்குவரத்து இணைப்பினை இந்திய இராணுவம் உருவாக்கி உள்ளது.
- மறைந்த மேஜர் பகத் சிங்கின் நினைவாக இந்தப் பாலத்திற்கு பகத் பாலம் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- வீர் சக்ரா விருது பெற்ற மேஜர் சிங், 1965 ஆம் ஆண்டு போரில் இந்தப் பகுதியைப் பாதுகாக்கும் முயற்சியில் தனது உயிரைத் தியாகம் செய்தார்.



## கடலோர மீன்வளர்ப்பு ஆணையம் (திருத்தம்) மசோதா – 2023


- 2023 ஆம் ஆண்டு கடலோர மீன்வளர்ப்பு ஆணையம் (திருத்தம்) மசோதாவானது சமீபத்தில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதாவானது, தெளிவற்ற நிலைகளை நிவர்த்தி செய்யவும், நிர்வாகச் செயல் முறைகளை நெறிமுறைப் படுத்தவும், வளர்ந்து வரும் மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஒருங்கிணைக்கவும் முயல்கிறது.
- அனைத்துக் கடலோர மீன்வளர்ப்பு நடவடிக்கைகளையும் இந்தச் சட்டத்தினுடைய ஒரு வரம்பின் கீழ் கொண்டு வருவதை இந்தத் திருத்தங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இது கடலோர மீன் வளர்ப்பு முறையின் பல்வேறு அம்சங்களுக்கு இடையே உள்ள ஒரு தெளிவின்மையை நீக்குகிறது.
- இறால் வளர்ப்பிற்கு அப்பாற்பட்ட, மேலும் பல சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான மீன்வளர்ப்பு நடைமுறைகளின் பரிணாம வளர்ச்சியை இது அங்கீகரிக்கிறது.
- இது ஆணையத்தினால் மதிப்பிடப்படும் சுற்றுச்சூழல் தொடர்பான சேதம் அல்லது வீழ்ச்சிகளுக்கு ஆகும் பல்வேறு செலவினங்களை இந்த மீன்வளர்ப்பு நிறுவனங்களின் உரிமையாளர்கள் ஏற்க வேண்டும் என்ற 'மாசுபடுத்தும் நிறுவனங்களுக்கான கட்டணக் கொள்கையை' வலியுறுத்துகிறது.
- மீன்குஞ்சுப் பொரிப்பகங்கள், இனப்பெருக்க விலங்கினப் பெருக்கல் மையங்கள் (BMC), மற்றும் உட்கரு இனப்பெருக்க மையங்கள் (NBC) போன்ற நிறுவனங்கள் தற்போது கடல் அலையேற்றக் கோட்டுப் பகுதியிலிருந்து (HTL) 200 மீட்டர் தொலைவிற்குள் செயல்பட அனுமதிக்கப் பட்டுள்ளன.




## தேசியப் பல் மருத்துவ ஆணைய மசோதா – 2023

- இது 1948 ஆம் ஆண்டு பல் மருத்துவர்கள் சட்டத்தினைத் திருத்தியமைக்க உள்ளது.
- சர்வதேச அளவுருக்களுக்கு இணையாக பல்மருத்துவக் கல்வி மற்றும் தொழில்முறை கட்டமைப்பினை மாற்றுவதற்காக அவற்றை முழுமையாக மறுசீரமைப்பதற்கு இந்த மசோதா திட்டமிடுகிறது.
- இந்த மசோதாவின் முக்கிய அம்சங்கள்
  - தேசியப் பல் மருத்துவ ஆணையம் மற்றும் மாநில பல் மருத்துவச் சபைகளை அமைத்தல்,
  - இளங்கலை மற்றும் முதுகலைப் படிப்புகளுக்கு மூன்று தன்னாட்சி வாரியங்கள்,
  - நெறிமுறைகள் மற்றும் பல் மருத்துவப் பதிவு வாரியம் (EDRB),
  - நிலையான பதவிக் காலம் மற்றும் தொழில்முறை மேம்பாடு,
  - தொழில்துறை ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்பப் புத்தாக்கம்,
  - தேசிய இயங்கலைப் பதிவு மற்றும்
  - பல் மருத்துவ ஆலோசனைக் குழு
- தனியார் துறை பல் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களில் உள்ள 50% இடங்களுக்கான கட்டண நிர்ணயத்திற்கான பல்வேறு வழி காட்டுதல்களை உருவாக்கச் செய்வதற்கான ஒரு அதிகாரத்தினை இந்த மசோதா இந்த ஆணையத்திற்கு வழங்குகிறது.

- அனைத்து மாநில அரசுகளும் பல் மருத்துவச் சபைகள் அல்லது கூட்டு பல் மருத்துவச் சபைகளை நிறுவுவதற்கு அறிவுறுத்தப் படும்.




## தேசிய செவிலியர் மற்றும் பேறுகால மருத்துவப் பணியியல் ஆணையம் (NNMC) மசோதா, 2023




- இது 1947 ஆம் ஆண்டு இந்திய செவிலியர் சபை சட்டத்தினை ரத்து செய்கிறது.
- செவிலியர் மற்றும் பேறுகால மருத்துவப் பணியியல் அல்லது மருத்துவத் தாதி நிபுணர்களுக்கான கல்வி மற்றும் சேவைகளின் தரங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேலாண்மைக்காக இந்த மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.

- இது தேசிய செவிலியர் மற்றும் பேறுகால மருத்துவப் பணியியல் ஆணையத்தினை நிறுவுவதற்கான விதிமுறைகளை வழங்குகிறது.
- தேசிய ஆணையத்தின் மேற்பார்வையின் கீழ் மூன்று தன்னாட்சி வாரியங்களை அமைக்கவும் இந்த மசோதா வழிவகை செய்கிறது.
- ஒவ்வொரு மாநிலச் சட்டத்தின் கீழ் இந்த வகையிலான ஆணையங்கள் நிறுவப்படாத மாநிலங்களில், அந்தந்த மாநில அரசாங்கங்கள் ஒரு மாநில தேசிய செவிலியர் மற்றும் பேறுகால மருத்துவப் பணியியல் ஆணையத்தை அமைக்க வேண்டும்.
- நெறிமுறைகள் மற்றும் பதிவு வாரியமானது இயங்கலை வழியிலான இந்திய செவிலியர்கள் மற்றும் பேறுகால மருத்துவப் பணியியல் பதிவேட்டினை நிர்வகிக்கும்.
- இதன் கீழ், மத்திய அரசு ஆனது செவிலியர் மற்றும் பேறுகால மருத்துவப் பணியியல் ஆலோசனைக் குழுவையும் அமைக்க உள்ளது.

## வேதிப் பொருட்கள் மற்றும் உரங்கள் மீதான நிலைக்குழு

- மூத்த காங்கிரஸ் தலைவர் சசி தரூர் தலைமையில் வேதிப் பொருட்கள் மற்றும் உரங்கள் மீதான நாடாளுமன்ற நிலைக்குழு அமைக்கப் பட்டுள்ளது.
- யூரியா, டை அம்மோனியம் பாஸ்பேட் (DAP), முரியேட் பொட்டாசியம் குளோரைடு (MOP), நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் (NPK) போன்ற உரங்களுக்காக என்று இறக்குமதியைச் சார்ந்திருப்பதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அந்தக் குழுவின் அறிக்கைகள் பரிந்துரைத்துள்ளன.
- இந்த உரங்களின் உற்பத்தியானது 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை 281.83 லட்சம் மெட்ரிக் டன்கள் ஆக இருந்த நிலையில், அவற்றின் நுகர்வு வெறும் 401.46 லட்சம் மெட்ரிக் டன்கள் ஆக இருந்தது.
- உரங்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரியானது 5% ஆகவும், கந்தக அமிலம் மற்றும் அம்மோனியா போன்ற மூலப் பொருட்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரியானது 18% ஆகவும் உள்ளது என்று அக்குழு குறிப்பிட்டுள்ளது.
- P&K உரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய ஊட்டமளிப்பு அடிப்படையிலான உர மானியத்தை (NBS) மறு ஆய்வு செய்ய இக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.


## நேரடி ஊக்கத் தொகை வழங்கீட்டுத் திட்டம்

- தபால் ஆயுள் காப்பீட்டுக் கழகமானது, டெல்லி மற்றும் உத்தரகாண்ட் வட்டாரங்களில் பணி புரியும் அதன் விற்பனைப் பணியாளர்களுக்காக வேண்டி 'நேரடி ஊக்கத் தொகை வழங்கீட்டுத் திட்டத்தினை' தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது தபால் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் முகவர்களுக்கான பரிசு மற்றும் இழப்பீடு வழங்கும் முறைமையில் மாற்றத்தினை ஏற்படுத்தச் செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தபால் ஆயுள் காப்பீட்டுக் கழகமானது இந்த இலக்குகளை அடையச் செய்வதில் அதன் விற்பனைப் பணியாளர்களின் சாயல் சார்ந்தப் பங்கினைத் தபால் ஆயுள் காப்பீட்டுக் கழகம் அங்கீகரிக்கும் விதமாக இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## பன்னாட்டுக் காவல்துறையின் உலகப் பயிற்சிக் கழக வலையமைப்பு

- மத்தியப் புலனாய்வுப் பிரிவின் பயிற்சிக் கழகமானது, பன்னாட்டுக் காவல்துறையின் உலகப் பயிற்சிக் கழக வலையமைப்பின் ஒரு காணொளி வாயிலான நிகழ்ச்சியில் பங்கேற்றது.
- உலகெங்கிலும் உள்ள சட்ட அமலாக்கப் பயிற்சி நிறுவனங்களுக்கிடையேயான கல்வி சார் ஒத்துழைப்பை இந்த வலையமைப்பு ஆதரிக்கிறது.
- இந்நிகழ்ச்சியைப் பன்னாட்டுக் காவல்துறையின் உலகப் பயிற்சிக் கழக வலை அமைப்பு மற்றும் சிங்கப்பூர் நாட்டினைச் சேர்ந்தப் பன்னாட்டுக் காவல்துறையின் உலகப் புத்தாக்க வளாகம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்தன.

## சட்டத்திலுள்ள பாலினம் சார்ந்தப் பழமையான கருத்துக்களை நீக்குதல்



**Combating stereotypes**

| Gender-unjust terms | What should be used instead... |
| --- | --- |
| Affair | Relationship outside of marriage |
| Career woman | Woman |
| Eve teasing | Street sexual harassment |
| Fallen woman | Woman |
| Housewife | Homemaker |
| Ladylike | Use a gender neutral description of behaviour or characteristics (eg: amusing or assertive) |
| Marriageable age | A woman who has attained the legal age required to marry |
| Mistress | Woman with whom a man has had romantic or sexual relations outside of marriage |
| Prostitute | Sex worker |
| Provider/Breadwinner | Employed or earning |
| Provocative clothing /dress | Clothing/dress |
| Sex change | Sex reassignment or gender transition |
| Spinster | Unmarried woman |
| Transsexual | Transgender |
| Unwed mother | Mother |

| Stereotype | Why the handbook says they should be avoided |
| --- | --- |
| Women are physically weaker than men. | While men and women are physiologically different, it is not true that women are physically weaker. A person's strength does not depend solely on gender but also on factors like genetics, nutrition |
| Women who work outside of the home do not care about their children. | It has no corelation with a woman's love or concern for her children. Parents of all genders may work outside while also caring for their children. |
| Men who sexually assault or rape are typically strangers and not known to the woman. | Very often men sexually assault or rape a woman known to them... The woman may be a colleague, employer, neighbour, or family member, etc |
| Rape is a crime which taints the honour of the survivor/victim. If the rapist marries her, her honour is restored. | Rape does not taint the honour of the survivor/victim or her family. The marriage of the rapist to the survivor/victim does not restore honour. It intensifies the trauma. Rape is a criminal offence, which cannot be undone by marriage. |
| Transgender individuals cannot be raped. | Transgender individuals can be raped. In fact, transgender individuals are one of the groups which are most vulnerable to sexual violence because they are stigmatised and face structural discrimination. |

- உச்ச நீதிமன்றம் வெளியிட்ட ஒரு புதிய கையேட்டில் பெண், பெண்கள், மனைவி, சாலைகளில் நடைபெறும் பாலியல் சீண்டல்கள், ஊடு பாலினம் போன்ற பல்வேறு சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட வேண்டிய சில சரியான சொற்கூறுகள் வழங்கப் பட்டுள்ளது.

- பாலினம் சார்ந்த மிகவும் பழமையான கருத்துக்களை எதிர்கொள்தல் தொடர்பான 30 பக்கங்களைக் கொண்ட இந்த கையேடானது, நீதித்துறை மற்றும் சட்டத்துறையினர்கள் ஆகியோர் தீர்ப்புகள், உத்தரவுகள் மற்றும் நீதிமன்ற விசாரணைகளில் பாலினம் சார்ந்தப் பழமையான கருத்துக்கள் நேரடியாகப் பயன்படுத்தப்படுவதை தவிர்க்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சட்டத் திருத்தத்தின் ஒரு நோக்கமானது, சட்டப் பூர்வமானதல்ல என்றாலும் அது முன்னதாக 'இரவலர்கள்' என்று குறிப்பிடப்பட்ட மக்களின் மனித நேயத்திற்கான ஒரு அங்கீகாரமாகும்.


## விஸ்வகர்மா யோஜனா




- பாரம்பரியம் சார்ந்த திறன்களைக் கொண்ட மக்களுக்கு உதவுவதற்கான பிரதான் மந்திரி விஸ்வகர்மா திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டமானது, குரு - சீடர் பரம்பரையை (குரு - சிஷ்யா பரம்பரை) அல்லது கை வினைஞர்களால் குடும்பம் வழியாக பின்பற்றப் பட்டு வந்த பாரம்பரியத் திறன்களை வலுப்படுத்தி, மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விஸ்வகர்மா திட்டத்தின் மூலம் 30 லட்சம் கைவினைக் கலைஞர்களின் குடும்பங்கள் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- மேலும், திறன் மேம்பாடு, கருவித் தொகுப்பிற்கான ஊக்கத் தொகை, எண்ணிமப் பரிவர்த்தனை மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான ஆதரவு ஆகியவற்றையும் இத்திட்டம் மூலம் வழங்கப்பட உள்ளது.
- முந்தையத் தலைமுறையிலிருந்து வழி வழியாகப் பின்பற்றப்பட்டு வந்த மட்பாண்டத் தொழில், கொல்லர் தொழில், கட்டுமானம், தையல், படகுக் கட்டுமானம் போன்றப் பாரம்பரியத் திறன்களை இத்திட்டத்தின் மூலம் அரசு ஊக்குவிக்க உள்ளது.

## SAMUDRA கைபேசிச் செயலி

- இந்தியத் தேசிய கடல்சார் தகவல் சேவைகள் மையம் (INCOIS) ஆனது "SAMUDRA" என்ற புதிய கைபேசிச் செயலியை அறிமுகம் செய்துள்ளது.
- SAMUDRA (சமுத்ரா) என்பது கடல்சார் பயனர்கள் கடல்சார் தரவு வளங்கள் மற்றும் ஆலோசனைகளைத் திறன்மிகு வகையில் அணுகல் என்பதை குறிக்கிறது.
- இந்தச் செயலியானது, மாலுமிகள் மற்றும் மீன்பிடிச் சமூகத்தினருக்குப் பயனுள்ளதாக விளங்கும் அனைத்து கடல் சார் சேவைகளையும், தகவல்களையும் வழங்கும்.




## பிரதான் மாதிரி மின்சாரப் பேருந்துச் சேவை



- 169 நகரங்களில் மின்சாரப் பேருந்துச் சேவையின் பயன்பாட்டினை அதிகரிக்கும் ஒரு நோக்கிலான 57,613 கோடி ரூபாய் மதிப்பிலான பிரதான் மாதிரி மின்சாரப் பேருந்துச் சேவை திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் 10,000 புதிய மின்சாரப் பேருந்துகளை வாங்குவதற்காக 57,613 கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் நகரப் பேருந்து இயக்கத்திற்கும், குறிப்பாக முறையான பேருந்து சேவை இல்லாத நகரங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.
- 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 3,00,000 மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- பொது-தனியார் துறைப் பங்கேற்பு முறையின் மூலம் (PPP) 10 ஆண்டுகளுக்கு மின்சாரப் பேருந்துச் சேவைகள் வழங்கப்படும்.

## தரங் சக்தி

- தரங் சக்தி எனப்படும் இந்திய விமானப்படையின் பன்னாட்டுப் பயிற்சியானது அடுத்த ஆண்டிற்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.
- இந்தப் பயிற்சியின் தேதியானது, இதில் பங்கேற்கும் நட்பு நாடுகளின் நேர ஒதுக்கீடுகளுடன் ஒன்றியமையும் வகையிலும், அதிக எண்ணிக்கையிலான நாடுகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்பதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு இந்த தேதி ஒத்தி வைப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தப் பயிற்சியில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் பல்வேறு குறிப்பிட்ட விமானப் படைகளையும் இணைப்பதற்கு இது உதவும்.

## ஐஎன்எஸ் விந்திய கிரி



- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், ஐஎன்எஸ் விந்திய கிரி என அழைக்கப்படும் ரேடார் கருவிகளுக்குப் புலப்படாதத் தொழில்நுட்பம் கொண்ட நவீனப் போர்க் கப்பலை அறிமுகப் படுத்தினார்.
- திட்டம் 17 ஆல்ஃபா என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக கடற்படைக்காக கட்டமைக்கப் படும் ஏழு கப்பல்களில் இது ஆறாவது கப்பலாகும்.

- இந்தப் போர்க் கப்பலானது இந்தியக் கடற்படையின் மூன்றாவதும் கடைசியுமான, ரேடார் கருவிகளுக்குப் புலப்படாத தொழில்நுட்பம் கொண்ட ஒரு போர்க் கப்பல் ஆகும்.
- திட்டம் 17A கப்பல்கள் ஆனது நாட்டின் போர்க்கப்பல் வடிவமைப்பு வாரியத்தின் உள் நிறுவன வடிவமைப்புகளின் மதிப்பினைக் கொண்டுள்ளது.

## UDGAM இணையதளம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது, UDGAM (உரிமை கோரப்படாத வைப்புத் தொகை – தகவல் அணுகலுக்கான முகப்பு) எனும் மையப்படுத்தப்பட்ட இணையத் தளத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது பல்வேறு வங்கிகளில் உள்ள தங்களது உரிமைக் கோரப்படாத வைப்புத் தொகைகளைத் தேடிக் கண்டறிய வழி வகை செய்கிறது.
- உரிமை கோரப்படாத வைப்புத் தொகைகள் என்பது "கடந்த 10 ஆண்டுகளாக எந்த ஒரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதச் சேமிப்பு / நடப்புக் கணக்குகளில் உள்ள வைப்புத் தொகைகள் அல்லது முதிர்வுத் தேதியிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் உரிமைக் கோரப் படாத நிலையான வைப்புத் தொகைகள்" ஆகும்.


## முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்ப முறையில் கட்டமைக்கப்பட்ட தபால் அலுவலகம்



- முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்ப முறையில் கட்டமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் தபால் அலுவலகம் ஆனது கிழக்கு பெங்களூரில் திறக்கப்பட்டுள்ளது.
- இது முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்திக் கட்டமைக்கப்பட்ட முதல் வணிகக் கட்டிடம் ஆகும்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT) ஆனது கட்டமைப்பு வடிவமைப்பினை வழங்கி இதன் கட்டுமானக் குழுவிற்கு உதவியது.
- வழக்கமான கட்டுமான முறைகளுடன் ஒப்பிடும் போது இது 30-40% செலவினை மிச்சப் படுத்துகிறது.

## வெள்ளக் கண்காணிப்புச் செயலி

- ❖ மத்திய நீர்வள ஆணையமானது 'வெள்ளக் கண்காணிப்பு' என்ற செயலியை அறிமுகப் படுத்தியது.
- ❖ இதன் மூலம் வெள்ளம் வருவதற்கான வாய்ப்புகளை ஒரு நாள் முன்னதாகவே கணிக்க முடியும்.
- ❖ இந்தியாவிலுள்ள பல்வேறு நிலையங்களில், வெள்ளம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறித்த ஏழு நாள் ஆலோசனையையும் இது வழங்குகிறது.
- ❖ ஒரு 'பச்சை' வட்டம் 'இயல்பானச் சூழல்'; மஞ்சள், இயல்பிற்கு அப்பாற்பட்டச் சூழல்; ஆரஞ்சு, 'தீவிரமானச் சூழல்' மற்றும் சிவப்பு, 'அதி தீவிரச் சூழல்' என்பதைக் குறிக்கிறது.




## 'லக்பதி திதி' திட்டம்

- ❖ மத்திய அரசானது, 'லக்பதி திதி' திட்டத்தின் கீழ் இரண்டு கோடி பெண்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளது.
- ❖ குறுந் தொழில்துறைகளைத் தொடங்குவதற்கு என்று அவர்களை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.
- ❖ இதில் சுய உதவிக் குழுக்கள் (SHGs) மூலம் பெண்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப் படுகிறது.
- ❖ அவர்கள் ஆண்டிற்குக் குறைந்தது 1 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்ட இது உதவும்.




## 19வது கடல்சார் மாநில மேம்பாட்டுச் சபை

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறைகள் அமைச்சகம் ஆனது கடல்சார் மாநில மேம்பாட்டு சபையின் (MSDC) 19வது சந்திப்பினை ஏற்பாடு செய்தது.
- இந்தியாவின் கடல்சார் துறையில் உள்ள பல்வேறு வாய்ப்புகள் குறித்து ஆராயச் செய்வதற்கும், அதிலுள்ள சவால்களைப் புரிந்து கொள்வதற்கும் அதில் முதலீடுகளை அதிகரிப்பதற்கும் அந்தத் தொழில் துறையைச் சேர்ந்த பல்வேறு முக்கிய நபர்களை ஒன்றிணைப்பதை இந்த நிகழ்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- MSDC என்பது முக்கியமான மற்றும் முக்கியத்துவம் சாராத துறைமுகங்களின் ஒரு ஒருங்கிணைந்த மேம்பாட்டினை நன்கு உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ள, கடல்சார் துறையின் நல்ல மேம்பாட்டிற்கான ஒரு உயர்மட்ட ஆலோசனை வழங்கீட்டு அமைப்பாகும்.

## பாரத் புதிய மகிழுந்து மதிப்பீட்டுத் திட்டம்

- இந்தியாவில் 3.5 டன் எடை வரையிலான மோட்டார் வாகனங்களின் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துவதன் மூலம் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சந்தையில் விற்கப்படும் மோட்டார் வாகனங்களின் விபத்து பாதுகாப்பின் ஒப்பீட்டு மதிப்பீட்டைச் செய்வதற்கான ஒரு செயற்கருவியை இந்த மகிழுந்து வாடிக்கையாளர் நபகளுக்கு வழங்குகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ், மகிழுந்து உற்பத்தியாளர்கள் தானாக முன்வந்து 197வது வாகன உற்பத்தித் தொழில்துறைத் தரநிலையின் (AIS) கீழ் சோதனை செய்யலாம்.
- இந்தச் சோதனைகளில் ஒரு மகிழுந்தின் செயல்திறனின் அடிப்படையில், வயது வந்த பயணியர் (AOP) மற்றும் குழந்தைப் பயணியர் (COP) ஆகியவற்றிற்கான நட்சத்திர மதிப்பீடுகள் வழங்கப்படும்.

## ஜன்தன் வங்கி கணக்குகள்

- இந்தியாவில் தொடங்கப் பட்டு வரும் மொத்த ஜன்தன் கணக்குகளின் எண்ணிக்கை 50 கோடியைத் தாண்டியுள்ளது.
- இவற்றுள் 56 சதவீதக் கணக்குகளைப் பெண்கள் தொடங்கியுள்ளனர்.

- இவற்றில் 67 சதவீதக் கணக்குகள் கிராமப்புறம் மற்றும் பகுதியளவு நகர்ப்புறப் பகுதிகளில் தொடங்கப் பட்டுள்ளன.
- 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் தேதியன்று தேசிய நிதி உள்ளடக்கத் திட்டம் (PMJDY) தொடங்கப் பட்டது.

## எண்ணிம சுகாதாரச் சேவைக்கான உலகளாவிய முன்னெடுப்பு

- மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா 'எண்ணிம சுகாதாரச் சேவைக்கான உலகளாவிய முன்னெடுப்பினை' தொடங்கி வைத்துள்ளார்.
- GIDH என்பது G-20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழான முக்கிய உறுதியளிப்புகளில் ஒன்றாகும்.
- இது ஆதாரங்களை ஒருங்கிணைத்து "உலகளாவிய எண்ணிம சுகாதாரச் சேவைகளில் கிடைக்கப் பெற்ற சமீபத்திய மற்றும் கடந்த கால ஆதாயங்களைப் பெருக்கும்".
- GIDH ஆனது சவால்களை எதிர்கொள்வதன் மூலம் எண்ணிம சுகாதாரச் சேவைக்கான ஒரு சமமான அணுகலை ஊக்குவிக்கும் வகையிலான, உலக சுகாதார அமைப்பினால் மேலாண்மை செய்யும் வலையமைப்பாக இருக்கும்.
- இது 2020–2025 ஆம் ஆண்டு எண்ணிம சுகாதாரச் சேவைக்கான உலகளாவிய உத்தியை செயல்படுத்துவதற்கான ஆதரவினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பலின் நீண்டதூரப் பயணம்




- ஐஎன்எஸ் வகிர் எனப்படும் இந்தியாவின் ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பல் ஆனது, கிட்டத்தட்ட 7,000 கி.மீ. அல்லது 4,000 கடல் மைல்களைக் கடந்து ஆஸ்திரேலியாவை நோக்கிப் பயணித்தது.
- இந்தியாவின் ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பலின் முதன்முறையான மற்றும் மிக நீண்ட தூரப் பயணம் இதுவாகும்.
- இந்தப் பயணமானது ஆஸ்திரேலிய நாட்டுக் கடற்படையுடனான கடலுக்கடியில் மேற் கொள்ளப் படும் பயிற்சிகளில் பங்கேற்பதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்டது.
- ஐஎன்எஸ் வகிர் கப்பலானது ஐந்தாவது ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பல் ஆகும்.

## 9வது காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கம்

- 9வது காமன்வெல்த் நாடாளுமன்றச் சங்கத்தின் இந்தியப் பிராந்திய மாநாடு ஆனது ராஜஸ்தானின் உதய்பூர் நகரில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டில் 23 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேச அரசுகளின் தலைமை அதிகாரிகள் பங்கேற்றனர்.
- காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கம் (CPA) ஆனது காமன்வெல்த் நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சேவையினை வழங்குகிறது.
- இது காமன்வெல்த் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே வழக்கமான ஆலோசனை மற்றும் கருத்துகள் மற்றும் தகவல் பரிமாற்றத்தினை மேற்கொள்வதை எளிதாக்கம் செய்கிறது.


## புதிய நுண் இயந்திரச் சோதனை தொழில்நுட்பம்




- நுண் இயந்திரச் சோதனை தொழில்நுட்பமானது நுண் இயந்திரப் பொருட்களின் சோதனைத் தொழில்நுட்பத்தின் ஒரு துல்லியத் தன்மையையும், நுணுக் கதையும் மேம்படுத்துவதற்கான புதிய முறையினை இந்திய அறிவியலாளர்கள் உருவாக்கி உள்ளனர்.
- இந்தப் புதிய முறையானது மருத்துவத்துறை முதல் விண்வெளித்துறை வரையிலான பல்வேறு துறைகளில் உள்ள மிகச் சிறிய அளவிலான பொருட்களின் ஒரு எந்திரவியல் வலிமையை விரைவாக சோதிக்க உதவுகிறது.
- இந்த நுட்பமானது குறைக்கடத்திச் சாதனங்கள் மற்றும் மின்னணுச் சாதனங்களின் வழியாக நமது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் பரவலாக ஊடுருவி உள்ள கட்டமைப்புப் பொருட்கள் ஆகியவற்றின் வலிமையை மதிப்பிட பயன்படுத்தப் படுகின்றன.

## ‘சிவசக்தி’ மற்றும் ‘திரங்கா’ பகுதி

- சந்திரயான் 3 விண்கலம் நிலவினைத் தொட்ட பகுதி ‘சிவசக்தி’ என்று அழைக்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.
- சந்திரயான் 2 விண்கலம் தடம் பதித்த இடமானது ‘திரங்கா’ என்று அழைக்கப்படும்.
- சந்திரயான்-3 விண்கலத்தின் தரையிறங்கு கலம் சந்திரனின் மேற்பரப்பைத் தொட்ட ஆகஸ்ட் 23 ஆம் தேதியானது, "தேசிய விண்வெளி தினமாக" கொண்டாடப்படும் என்றும் அவர் அறிவித்தார்.





## DRDO மறுசீரமைப்புக் குழு

- இந்தியாவின் மிகவும் முதன்மையான பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனமான பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினை (DRDO) மறுசீரமைப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- இதற்காக ஒன்பது பேர் கொண்ட ஒரு குழுவை அமைச்சகம் அமைத்துள்ளது.
- அரசின் முன்னாள் தலைமை அறிவியல் ஆலோசகர் K. விஜய் ராகவன் இதற்கு தலைமை தாங்க உள்ளார்.
- இது மூன்று அரசுப் பணிகள், தொழில்துறை மற்றும் அமைச்சகத்தின் தொடர்புடைய உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் பங்கை மறுசீரமைத்தல் மற்றும் மறுவரையறை செய்வதற்கானப் பரிந்துரைகளை வழங்கச் செய்வதே இந்தக் குழுவின் முதன்மைப் பணியாகும்.

## இந்தியாவில் பறவைகளின் நிலை குறித்த அறிக்கை

- இந்தியாவில் 1,350க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் உள்ளன.
- கடந்த 30 ஆண்டுகளில் பறவை இனங்களில் எண்ணிக்கையில் ஏற்பட்ட மாற்றங்களை கண்டறிவதற்காக இந்தியாவில் உள்ள 338 பறவை இனங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின் படி அவற்றுள் 60 சதவீத இனங்களின் மீதான எண்ணிக்கையில் ஒரு சரிவு பதிவாகி உள்ளது.
- ஆய்வு செய்யப்பட்ட 942 பறவை இனங்களில், 204 இனங்கள், அதாவது கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்கு இனங்களின் எண்ணிக்கையில் கடந்த 30 ஆண்டுகளில் சரிவு பதிவாகியுள்ளது.

- மேலும், கடந்த ஏழு ஆண்டுகளில் ஆய்வு செய்யப்பட்ட 359 இனங்களில் 40 சதவீத (142) இனங்களின் எண்ணிக்கையில் சரிவு பதிவாகியுள்ளது.




## மது பான விதிமுறைகள்


- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) ஆனது, 2023 ஆம் ஆண்டு 'உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (மதுபானங்கள்) முதல் திருத்த விதிமுறைகளை' வெளியிட்டுள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது.
- இதன்படி, மதுபானத்தில் கிலோ கலோரி அலகில் உள்ள ஆற்றல் உள்ளடக்கத்தைத் தவிர விவரச் சீட்டில் ஊட்டச்சத்து குறித்த எந்தத் தகவல்களும் இருக்கக் கூடாது.
- ஆற்றல் உள்ளடக்கம் தொடர்பான அத்தகைய அறிவிப்பும் தன்னார்வ அடிப்படையில் குறிக்கப் படலாம்.
- 2018 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (மதுபானங்கள்) விதிமுறைகளில், மதுபானப் புட்டிகளின் மீதான விவரச் சீட்டானது ஊட்டச்சத்து குறித்த எந்தத் தகவல்களையும் கொண்டிருக்கக் கூடாது என்று கூறப்பட்டது.



## மின் ஆளுகைக்கான தேசிய விருது 2023

- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் SVAMITVA என்ற திட்டத்திற்கு, 2023 ஆம் ஆண்டு மின் ஆளுகைக்கான (தங்கம்) மதிப்பு மிக்க தேசிய விருது வழங்கப் பட்டுள்ளது.
- இது 26வது தேசிய மின் ஆளுகை மாநாட்டில் (NCeG) குடிமக்களை மையமாகக் கொண்ட சேவைகளை வழங்குவதற்கான வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் ஒரு பயன்பாடு என்பதன் கீழ் வழங்கப் படுகிறது.
- SVAMITVA என்பது 'ஒரு மேம்படுத்தப்பட்டத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி மேற் கொள்ளப் படும் கிராமங்கள் குறித்த கணக்கெடுப்பு மற்றும் கிராமப் பகுதிகளின் மீது வரைபடமாக்கல்' என்பதன் சுருக்கமாகும்.
- மின் ஆளுகைக்கான தேசிய மாநாடு (NCeG) என்பது, 'விக்சித் பாரத், குடிமக்களுக்கு அதிகாரமளித்தல்' என்ற கருத்துருவில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- தேசிய மின் ஆளுகை விருதுகள் பின்வரும் 5 பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டன
  - எண்ணிம மாற்றத்திற்கான அரசாங்கச் செயல்முறையின் மறுசீரமைப்பு,
  - குடிமக்களை மையமாகக் கொண்டு வழங்கப்படும் சேவைகளில் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு,
  - மின்-ஆளுகைக்கான மாவட்ட அளவிலான முன்னெடுப்பு,
  - குடிமக்களை மையமாகக் கொண்டு வழங்கப்படும் சேவைகள் குறித்து கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும்
  - மின் ஆளுகையில் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் புத்தொழில் நிறுவனங்கள்.


## சிறு நீர்ப் பாசனத் திட்டம் குறித்த 6வது கணக்கெடுப்பு



- ஜல் சக்தித் துறை அமைச்சகம் ஆனது, சிறு நீர்ப்பாசன (MI) திட்டங்கள் குறித்த 6வது கணக்கெடுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 23.14 மில்லியன் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களில், 21.93 மில்லியன் (94.8%) நிலத்தடி நீர் மற்றும் 1.21 மில்லியன் (5.2%) மேற்பரப்பு நீர் சார்ந்த பாசனத் திட்டங்களாகும்.
- உத்தரப் பிரதேச மாநிலமானது அதிக எண்ணிக்கையிலான சிறு நீர்ப்பாசனத் திட்டங்களைக் கொண்டுள்ள நிலையில், அதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- இந்தக் கணக்கெடுப்பானது மத்திய அரசினால் நிதி அளிக்கப்படும் திட்டத்தின் கீழான "நீர்ப்பாசன கணக்கெடுப்புத் திட்டத்தின்" கீழ் நடத்தப் பட்டது.

## அதிக வெப்பநிலை மற்றும் டெங்கு வைரஸ்


- ராஜீவ் காந்தி உயிரித் தொழில்நுட்ப மையத்தின் (RGCB) ஒரு ஆராய்ச்சியாளர்கள் குழு என்பது, டெங்கு வைரஸ் அதிக வெப்பநிலையில் அதிக வீரியம் மிக்கதாக மாறும் என்று கண்டறிந்துள்ளது.
- அதிக வெப்பநிலைக்கு வெளிப்படும் கொசுக்களில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளில் வளர்க்கப் படும் டெங்கு வைரஸ் என்பது விலங்கு மாதிரிகளில் மிகவும் கடுமையான ஒரு தாக்கத்தினைக் கொண்டதாகிறது.
- குறிப்பாகப் புவி வெப்பமடைதல் பாதிப்பு மற்றும் தொற்று நோய்ப் பாதிப்புகளில் அதன் மீதான சாத்தியமான தாக்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், டெங்கு தொற்றுகளின் தீவிரத் தன்மையினைக் கணிக்கவும் குறைக்கவும் இந்த ஆய்வு உதவும்.




## இந்தியாவில் காணப்படும் காரீய நஞ்சேற்றம்

- 2021 ஆம் ஆண்டு ஆய்வின் படி, இந்தியாவில் உள்ள குழந்தைகளில் பாதிக்கும் மேற் நபர்களின் (கிட்டத்தட்ட 20 கோடி பேர்) இரத்தத்தில் காரீயத்தின் அளவு ஒரு டெசி லிட்டருக்கு 5 மைக்ரோ கிராமிற்கும் (µg/dL) அதிகமாக இருப்பதாக மதிப்பிடப் பட்டு உள்ளது.

- உலக சுகாதார அமைப்பின் (WHO) கூற்றுப் படி, 5 μg/dL என்ற அளவிற்கு மேற்பட்ட எந்த ஒரு நிலையிலும் ஒரு நபர் உள்ளார் என்பது "ஒரு நபர் இந்தக் காரீயத்தின் தாக்கத்திற்கு உள்ளாகும் வழிகள் குறித்து முழுமையாக ஒரு மறுபரிசீலனை செய்வதற்கும், இந்த வெளிப்பாட்டைக் குறைக்க அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஒரு நடவடிக்கை மேற்கொள்வதற்குமான ஒரு தூண்டுதலாகும்".
- குழந்தைகள் இதனால் மிகவும் பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ளனர்.
- பணக்கார மற்றும் ஏழை நாடுகளுக்கு இடையே உள்ள கற்றல் இடைவெளியில் ஐந்தில் ஒரு பங்கு காரீய நஞ்சேற்றம் கொண்டுள்ளது.
- காரீய நஞ்சேற்றத்தின் விளைவுகள் ஆனது நரம்பியல் குறைபாடுகள் மற்றும் கற்றல் குறைபாடுகள் முதல் குன்றிய வளர்ச்சி மற்றும் உடல் உறுப்பு சேதம் போன்றவையாக இருக்கும்.
- இது உலகளவில் கருத்தில் கொள்ளப் பட்ட ஒன்றாக இருந்தாலும், இந்தியாவில் காரீய நஞ்சேற்றம் குறித்து எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தம்

- இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தத்தினை அமுல்படுத்தச் செய்வதையும், இலங்கை நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு “மரியாதை மிக்க மற்றும் கண்ணியமிக்க வாழ்க்கை முறையை” உறுதிப்படுத்துவதையும் இந்தியா வலியுறுத்தி வருகிறது.
- 13வது திருத்தம் என்பது 30 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட இலங்கைச் சட்டம் ஆகும்.
- இது 1987 ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டு வரப் பட்டதோடு, இது மாகாண சபைத் தேர்தல்களை மேற்கொள்வதுடன் தொடர்பு உடையது.
- ஒன்பது மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வினை உறுதியளிக்கிற இது இன்னும் நிறைவேற்றப் படவில்லை.

**FLASHBACK: 13TH AMENDMENT**


- Jan. 27, 2023: The President Ranil Wickremesinghe said the 13th Amendment to the Constitution is being implemented accordingly or the Parliament should abolish the 13th amendment.
- Jan 16: President said that the Social Justice Commission would be established in order to build a country where everyone can live in harmony, by solving the problems of the people belonging to all sections of the population and that the government expects to fully implement the 13th Amendment to the Constitution.
- February 2016: The Chief Minister of Northern Province, C.V. Wigneswaran sought India's direct intervention in the complete implementation of the amendment
- July 29, 1987: Indo-Sri Lanka Accord was signed between Indian Prime Minister Rajiv Gandhi and Sri Lankan President J.R. Jayewardene which stated the devolution of powers to the provinces.
- Hence on 14th November 1987 the Sri Lankan Parliament passed the 13th Amendment to the 1978 Constitution of Sri Lanka and the Provincial Councils Act No 42 of 1987 to establish provincial councils



## கொழும்புப் பாதுகாப்பு மாநாட்டு (CSC) கட்டமைப்பு

- இந்தியா, வங்காளதேசம் மற்றும் மொரீஷியஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கடல்சார் அறிவியலாளர்களின் கூட்டு ஆய்வுப் பயணம் வெற்றிகரமாக நிறைவடைந்தது.
- இது கொழும்புப் பாதுகாப்பு மாநாட்டின் (CSC) பிராந்தியக் கட்டமைப்பின் கீழ் இந்தியத் தேசியக் கடல்சார் தகவல் சேவைகள் மையத்தினால் (INCOIS) ஏற்பாடு செய்யப் பட்டது.
- இந்தியப் பெருங்கடலின் பிராந்தியச் சூழலில் ஏற்படும் மாற்றங்களைக் கணித்து அவற்றைக் கையாளச் செய்வதற்கான கடல்சார் தரவுச் சேகரிப்புடன், கடல்சார் பகுதி கண்காணிப்பு மற்றும் சேவைகள் ஆகியவற்றில் திறன் மேம்பாட்டினை கட்டமைக்கச் செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கொழும்புப் பாதுகாப்பு மாநாட்டு (CSC) கட்டமைப்பின் கீழ் முதல் முறையாக மேற் கொள்ளப் பட்ட ஆய்வுப் பயணம் என்பதால், ORV சாகர் நிதி கப்பலில் மேற்கொள்ளப் பட்ட இந்தப் பயணமானது தனித் தன்மை வாய்ந்ததாகும்.

## அராஷ்-டோரா எரிவாயு தளம் மீதான சர்ச்சை




- ❖ வளைகுடாக் கடற்பகுதியில் உள்ள டோரா என்ற கடல் பகுதியில் உள்ள எரிவாயு தளம் மீது உரிமை கோரி இரு நாடுகளுக்கு இடையே நீண்ட காலமாக சர்ச்சையாக இருந்து வருகிறது.
- ❖ இது குவைத்தின் கிழக்கு கடல்சார் எல்லையில் அமைந்துள்ளது.
- ❖ இந்த டோரா வாயு தளம் 1967 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது.
- ❖ ஈரான் அரசினால் அராஷ் என்று அழைக்கப்படும் இந்த தளமானது, தனது கடல் எல்லை வரம்பு வரை நீண்டுள்ளது என்று உரிமை கோருகிறது.
- ❖ குவைத் மற்றும் சவூதி நாட்டு அதிகாரிகள், அந்தப் பகுதியில் உள்ள வளங்களைத் தோண்டி எடுப்பதற்கு அவர்களுக்கு மட்டுமே முழு இறையாண்மை அதிகாரம் உள்ளது என்று அறிவித்துள்ளனர்.

## G-20 அமைப்பின் பேச்சுவார்த்தை நாடுகள் - பருவநிலை மாற்றம் குறித்த தடை

- ❖ ஜூலை மாதத்தில் நடைபெற்ற எரிசக்தித் துறை மாற்றங்கள், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை குறித்த G-20 அமைப்பு நாடுகளின் இரண்டு அமைச்சர்கள் கூட்டங்களுக்குப் பிறகு இது குறித்த கவலைகள் அதிகரித்துள்ளன.
- ❖ உமிழ்வு இலக்குகள், புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டினைக் குறைத்தல் மற்றும் பருவநிலை நிதி உள்ளிட்ட பல முக்கியப் பிரச்சினைகளுக்கான கூட்டு உறுதியேற்பு எதுவும் இல்லாமல் இக்கூட்டம் நிறைவுற்றது.
- ❖ "ஆரம்ப கட்ட வரைவு" அல்லது தலைவர்களின் பிரகடனத்தின் முதல் வரைவு மீதான காணொளி வாயிலான பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தைகளில் பல்வேறு கருத்தியல் வேறுபாடுகள் ஏற்பட்டன.
- ❖ முதல் கூட்டம் ஆனது கோவாவில் நடைபெற்ற G-20 அமைப்பு நாடுகளின் ஆற்றல் மாற்றச் செயற்குழு குழுவின் சந்திப்பு (ETWG) ஆகும்.
- ❖ அதைத் தொடர்ந்து G-20 அமைப்பின் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை நிலைத் தன்மை செயற்குழு கூட்டம் ஆனது (ECSWG) சென்னையில் நடைபெற்றது.

- இந்தியாவின் கூற்றுப்படி, 2025 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட வேண்டிய உலகளாவிய உமிழ்வு இலக்குகள் மற்றும் 2035 ஆம் ஆண்டில் (2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது) நிறைவு செய்யப்பட வேண்டிய 60% உமிழ்வு குறைப்பு ஆகியவை மீது உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.
- இந்தியா உள்ளிட்ட வளர்ந்து வரும் நாடுகள் 2035 ஆம் ஆண்டில் உமிழ்வினைக் குறைப்பதற்கான உறுதிப்பாட்டினை ஏற்கவில்லை.

## உலக அரிசி விலைக் குறியீடு

- உணவு மற்றும் வேளாண் அமைப்பின் அனைத்து அரிசி விலைக் குறியீடானது, இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் சராசரியாக 129.7 புள்ளிகளை எட்டியது.
- இது 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இன்று வரை பதிவான மிக அதிகபட்ச அளவாக உள்ளது.
- அதிகளவிலான அரிசித் தேவையானது, அரிசியின் விலை உயர்வுகளுக்கான முக்கிய காரணிகளாக உள்ளது.
- அரிசி ஏற்றுமதிகளில் இந்திய அரசினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் என்பது இதற்கான கூடுதல் காரணியாகும்.
- இந்தியா, தாய்லாந்து, வியட்நாம், கம்போடியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் அரிசி ஏற்றுமதி மேற்கொள்ளும் முக்கிய நாடுகளாகும்.
- சீனா, பிலிப்பைன்ஸ், பெனின், செனகல், நைஜீரியா மற்றும் மலேசியா ஆகியவை அரிசி இறக்குமதியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- அமெரிக்கா, தாய்லாந்து, இத்தாலி, ஸ்பெயின் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இந்தியாவின் பாஸ்மதி வகை சாராத பச்சரிசி ஏற்றுமதிக்கான சில முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகும்.

## எதிர்கால நகரங்களுக்கு நிதியளிப்பதற்கான G20 அமைப்பின் கோட்பாடுகள்

- G20 அமைப்பின் உள்கட்டமைப்புப் பணிக் குழுவின் மூன்றாவது கூட்டத்தில், 2023 ஆம் ஆண்டு உள்கட்டமைப்புச் செயல்பாட்டு நிரல்களுக்கானப் பணி நெறிமுறைகளை நோக்கியச் செயல்பாடுகளில் உள்ள கணிசமான முன்னேற்றம் குறித்து விவாதிக்கப் பட்டது.
- இந்தக் கூட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டு முதன்மையாக விவாதிக்கப்பட்ட ஒரு கருத்து, 'எதிர்கால நகரங்களுக்கான நிதியுதவி: உள்ளார்ந்த, நெகிழ்திறன் மிக்க மற்றும் நிலையான நகரங்கள்' என்பதாகும்.
- G20 அமைப்பு நாடுகளின் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் (FMCBGs) மூன்றாவது கூட்டம் ஆனது காந்தி நகரில் நிறைவடைந்தது.
- G20 அமைப்பிற்கான இந்தியத் தலைமைத்துவத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற முதல் கூட்டத்தின் போது அமைக்கப்பட்டச் செயல்பாட்டு நிரலின் அடிப்படையில், பல்வேறு முக்கிய உலகளாவிய நிதி சார் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் இந்தச் சந்திப்பு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்தது.

- பன்னாட்டு மேம்பாட்டு வங்கிகளிடம் (MDBs), நிதி வழங்கீடு மற்றும் கடன் வாங்கும் நாடுகள் அவற்றின் கடன் வழங்கும் நடவடிக்கைகளை நன்கு விரிவுபடுத்துவதற்கான கோரிக்கைகளை அதிகளவில் முன்வைத்து வருகின்றன.

## G20 அமைப்பின் EMPOWER தொழில்நுட்பச் சமவாய்ப்பு - எண்ணிம உள்ளடக்கத்திற்கான இணைய தளம்

- இந்திய நாட்டு அரசானது தொழில்நுட்பச் சமவாய்ப்பு - எண்ணிம உள்ளடக்கத்திற்கான இணைய தளத்தைத் தொடங்க உள்ளது.
- G20 EMPOWER உச்சி மாநாடானது பாலின அடிப்படையில் நிலவும் எண்ணிம இடைவெளியினை நிரப்பும் நோக்கில் காந்தி நகரில் நடைபெற்றது.
- இந்த தளமானது 120க்கும் மேற்பட்ட மொழிகளில் கிடைக்கப் பெறுவதோடு, மேலும், G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளில் வாழும் பெண்களுக்கு எண்ணிமத் திறன் சார்ந்த கல்விப் படிப்புகளையும் வழங்குகிறது.
- அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இந்தத் தளத்திற்கு இந்தியா அரசினால் நிதியளிக்கப்பட உள்ளது.
- இது இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பினால் நன்கு நிர்வகிக்கப் பட உள்ளது.
- இந்த உச்சி மாநாடானது, 'பெண்கள் தலைமையிலான மேம்பாடு: நிலையான, மிகவும் உள்ளார்ந்த மற்றும் சமமான உலகப் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்தல்' என்ற கருத்துருவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- EMPOWER என்பது 2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட G20 அமைப்பின் பெண்களின் பொருளாதாரப் பிரதிநிதித்துவத்திற்கான அதிகாரமளித்தல் மற்றும் முன்னேற்றத்தின் மீதான ஒரு கூட்டணியாகும்.

## பெலம் பிரகடனம்

- அமேசான் ஒத்துழைப்பு ஒப்பந்த அமைப்பின் உச்சி மாநாட்டின் (ACTO) போது அமேசான் மழைக் காடுகளின் வளங்காப்பிற்கு முன்னுரிமை அளிப்பதற்கான முயற்சியில் தென் அமெரிக்கத் தேசியத் தலைவர்களின் சந்திப்பு நடைபெற்றது.
- இது கடந்த 14 ஆண்டுகளில் இந்த 45 ஆண்டுகால அமைப்பின் (1978) முதல் கூட்டத்தைக் குறிக்கிறது.
- இது பிரேசிலின் பெலம் நகரில் நடைபெற்றது.
- இது பிரேசில் அதிபர் முன்வைத்த, அமேசானின் வளங்காப்பிற்கான உலக நாடுகளின் அக்கறையைப் பயன்படுத்துவதற்கான ஒரு உத்தியை வலுப்படுத்துகிறது.
- ACTO ஆனது அமேசான் நதிப்படுகையில் ஒரு நிலையான மற்றும் நீடித்த வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு உலகளாவிய நிறுவனமாகச் செயல் படுகிறது.
- பொலிவியா, பிரேசில், கொலம்பியா, ஈக்வெடார், கயானா, பெரு, சுரினாம் மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகள் இந்த அமைப்பில் இடம் பெற்றுள்ளன.
- அமேசான் நதியானது இந்தியாவை விட இரண்டு மடங்கு பெரிய பரப்பளவில் நீண்டு பாய்கிறது.

- அதில் மூன்றில் இரண்டு பங்கு பிரேசில் நாட்டிலும், மேலும் மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு இதர ஏழு நாடுகள் மற்றும் ஒரு பிரதேசத்திலும் பாய்கிறது.
- அதன் மாபெரும் பரப்பளவு, இதுவரையில் பூமியின் பல்லுயிர்ப் பெருக்கத்தில் சுமார் 10 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

## ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று சுதந்திர தினம் கொண்டாடும் இதர நாடுகள்

- இந்தியா உட்பட மேலும் ஐந்து நாடுகள் இந்த நாளைத் தேசிய சுதந்திர தினமாகக் கொண்டாடுகின்றன.
- 1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று ஐக்கியப் பேரரசிடம் இருந்து பஹ்ரைன் சுதந்திரம் பெற்றது.
- 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று கொரியத் தீபகற்ப நாடானது ஜப்பானிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது.
- தென் கொரியா மற்றும் வட கொரியா ஆகிய இரண்டு நாடுகளும் இந்த நாளை தங்களது தேசிய விடுதலை தினமாகக் கொண்டாடுகின்றன.
- 1960 ஆம் ஆண்டு காங்கோ ஜனநாயகக் குடியரசு ஆனது பிரான்சிடம் இருந்து முழு சுதந்திரம் பெற்றது.
- உலகின் மிகச் சிறிய நாடுகளில் ஒன்றான லிச்சென்ஸ்டைன் நாடானது 1866 ஆம் ஆண்டில் இதே நாளில் தான் ஜெர்மன் நாட்டின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது.





## மலபார் பயிற்சி 2023

- ஐஎன்எஸ் சஹ்யாத்ரி மற்றும் ஐஎன்எஸ் கொல்கத்தா ஆகிய கப்பல்கள் ஆஸ்திரேலியா நாட்டின் சிட்னியில் நடைபெறுகின்ற மலபார் 2023 பயிற்சியில் பங்கேற்கின்றன.
- இந்தியக் கடற்படை, அமெரிக்கக் கடற்படை (USN), ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படை (JMSDF) மற்றும் ஆஸ்திரேலியக் கடற்படை (RAN) ஆகியவை இந்த போர்ப் பயிற்சியில் பங்கேற்கின்றன.
- இந்த மலபார் தொடர் கடல் பயிற்சியானது, இந்தியக் கடற்படைக்கும் அமெரிக்கக் கடற் படைக்கும் இடையிலான ஒரு இரு தரப்புப் பயிற்சியாக 1992 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

- 2020 ஆம் ஆண்டு பயிற்சியில் ஆஸ்திரேலியக் கடற்படையானது (RAN) முதல்முறையாக பங்கேற்றது.
- இந்த ஆண்டின் பயிற்சியானது, 27வது மலபார் கடற் பயிற்சியினைக் குறிப்பதோடு இது ஆஸ்திரேலியக் கடற்படையினால் (RAN) நடத்தப் படுகிறது.




## ஹவாயின் மௌய் தீவில் காட்டுத்தீ





- ஹவாயின் மௌய் தீவில் ஏற்பட்ட காட்டுத் தீயானது அப்பகுதியில் பெரும் சேதத்தினை ஏற்படுத்தியுள்ளது.
- வறண்ட நிலப்பரப்புகள் மற்றும் கரைக் கடக்கும் சூறாவளியினால் ஏற்பட்ட பலத்தக் காற்று ஆகியவற்றால் இந்தக் காட்டுத் தீ மேலும் வலுப்பெற்றது.
- 2018 ஆம் ஆண்டில் கலிபோர்னியாவில் ஏற்பட்ட கேம்ப் என்ற காட்டுத் தீக்குப் பிறகு அமெரிக்காவில் ஏற்பட்ட மிக மோசமான காட்டுத் தீ இதுவாகும்.

## இந்தியப் பௌத்தக் கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய மையம்



- இந்தியப் பௌத்தக் கலாச்சார மற்றும் பாரம்பரிய மையத்தின் கட்டுமானப் பணிகள் நேபாளத்திலுள்ள லும்பினி நகரில் தொடங்கப் பட்டுள்ளன.
- தாமரை வடிவில் அமைக்கப்படும் இந்தப் பாரம்பரிய மையம் ஆனது, நிகரச் சுழியப் பசுமை இல்ல வாயு உமிழ்வு தொழில்நுட்பத்தின் மூலம் கட்டமைக்கப்படும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.
- இது ஆன்மீக மற்றும் சமய ரீதியான சுற்றுலாவினை ஊக்குவிக்கும்.

## நெதர்லாந்து நாட்டின் பொருளாதாரத் தேக்கநிலை





- டச்சு (நெதர்லாந்து) பொருளாதாரம் ஆனது பெருந்தொற்று காலத்திற்குப் பிறகு அதன் முதல் பொருளியல் தேக்க நிலையை அடைந்துள்ளது.
- நெதர்லாந்தின் பொருளாதார வளர்ச்சியானது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஆண்டிற்கு கிட்டத்தட்ட 5% ஆக இருந்தது.
- நுகர்வோர் செலவினம் ஆனது 1.6% ஆக சரிந்ததோடு, அந்நாட்டின் ஏற்றுமதிகள் ஆனது ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் இருந்ததை விட 0.7% குறைவாக உள்ளன.
- கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 14.5% என்ற உச்சத்தை அந்த நாடு எட்டியதோடு, நெதர்லாந்தில் நிலவிய பணவீக்கம் குறைந்துள்ளது.

- ஆனால் 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இது ஒப்பீட்டளவில் 6% என்ற அளவில் அதிகமாக இருந்தது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையிலான முந்தைய மூன்று மாதங்களில் 0.3 சதவீதம் குறைந்துள்ளது.
- இந்த விளைவு ஆனது முதல் காலாண்டில் 0.4 சதவீத சரிவைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலையில் இது 0.2 சதவீத வளர்ச்சிக்கும் குறைவாக உள்ளது.

## 9வது சர்வதேச இராணுவ-தொழில்நுட்ப மன்றம்

- 'இராணுவம் 2023' எனப்படும் 9வது சர்வதேச இராணுவ-தொழில்நுட்ப மன்றத்தினை ரஷ்யா ஏற்பாடு செய்துள்ளது.
- இந்த நிகழ்ச்சியில் இந்தியா, சீனா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் தனது காட்சி அரங்குகளை அமைத்துள்ளன.
- இந்தியாவின் காட்சி அரங்கில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் மூன்று பொதுத் துறை நிறுவனங்கள் தங்கள் அரங்குகளை அமைத்துள்ளன.
- சர்வதேசப் பாதுகாப்பு குறித்த 11வது மாஸ்கோ மாநாடானது இந்நிகழ்ச்சியினை ஒட்டி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

## ஆசியான்-இந்தியா இடையேயான சரக்கு வர்த்தக ஒப்பந்தம்





- இந்தியா மற்றும் ஆசியான் நாடுகள் தங்களுடையச் சரக்குப் பொருட்களுக்கான ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தினை மறுபரிசீலனை செய்வதற்கான ஒரு உடன்பாட்டை எட்டியுள்ளன.
- ஆசியான்-இந்தியா இடையேயான சரக்கு வர்த்தக ஒப்பந்தமானது (AITIGA) 2009 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டது.
- AITIGA ஒப்பந்தத்தின் மறுபரிசீலனை செய்வது இந்திய வணிகத் துறையின் நீண்டகால கோரிக்கையாகும் என்பதோடு இந்த மறுபரிசீலனையை முன்கூட்டியே தொடங்குவது வர்த்தகத்தை எளிதாக்குவதற்கும் பரஸ்பர ரீதியிலானப் பயனளிப்பதற்கும் உதவும்.

- AITGA ஒப்பந்தத்தின் மறுபரிசீலனையானது இருதரப்பு வர்த்தகத்தில் தற்போதுள்ள சமச்சீரற்றத் தன்மையை நிவர்த்தி செய்வதோடு வர்த்தகத்தை மேம்படுத்தவும் பன்முகப் படுத்தவும் உதவும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## புயல் மற்றும் நிலநடுக்கம்

- ஒரு மாபெரும் வெப்பமண்டலப் புயலான ஹிலாரி, தெற்கு கலிபோர்னியா பகுதியை தாக்கியது.
- மேலும், அதே நேரத்தில் அதே பகுதியில் 5.1 ரிக்டர் என்ற அளவிலான ஒரு நிலநடுக்கமும் ஏற்பட்டது.
- நிலநடுக்கத்தின் மையப் பகுதியானது சாண்டா பார்பராவிற்கும் வென்ச்சுராவிற்கும் இடைப்பட்ட ஓஜாய் எனுமிடத்தில் மையம் கொண்டிருந்தது.
- இந்த நிலநடுக்கம் சிஸார் நிலப்பிளவுப் பள்ளத்தில் ஏற்பட்டது.
- இந்த அரிய ஒரு நிகழ்வின் காரணமாக "ஹரிகுவாக்" என்ற சொல் சமூக ஊடகங்களில் பிரபலம் ஆனது.




## ஆப்பிரிக்க ஒன்றியத்திலிருந்து நைஜர் நீக்கம்

- ஆப்பிரிக்க ஒன்றியமானது நைஜர் நாட்டினை அதன் அனைத்து நிறுவனங்கள் மற்றும் செயல்பாடுகளில் இருந்து நீக்கியுள்ளது.
- அந்நாட்டு இராணுவ வீரர்கள் சுமார் நான்கு வாரங்களுக்கு முன்பு, ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட நைஜர் நாட்டின் அதிபரைப் பதவியில் இருந்து நீக்கி, அந்நாட்டின் அரசு அதிகாரத்தினைக் கைப்பற்றினர்.
- அதிபர் முகமது பாஸூம், அவரது மனைவி மற்றும் மகன் ஆகியோர் நைஜர் நாட்டின் தலைநகர் நியாமியில் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

## RSV தடுப்பு மருந்து

- புதிதாகப் பிறந்த பச்சிளம் குழந்தைகளை RSV எனப்படும் சுவாச நுண்குழல் அழற்சி வைரஸ் பாதிப்பிலிருந்துப் பாதுகாக்கும் வகையிலான முதல் தடுப்பு மருந்திற்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்தத் தடுப்பு மருந்தினை ஃபைசர் நிறுவனம் தயாரித்துள்ளது.
- இந்தத் தடுப்பு மருந்தானது, கர்ப்பக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் தாய்மார்களுக்கு வழங்கப் பட்டு, குழந்தைகளின் முதல் ஆறு மாதங்கள் வரை பாதுகாப்பை வழங்கும் வகையில் தயாரிக்கப் பட்டுள்ளது.
- RSV என்பது குழந்தைகள் மற்றும் முதியோர்கள் அதிகளவில் நோய் வாய்ப்படுவதற்கு முக்கியக் காரணமாக அமையும் ஒரு பொதுவான தொற்றாகும்.

## பிரிக்ஸ் உச்சி மாநாடு 2023

- 15வது பிரிக்ஸ் உச்சி மாநாடானது ஜோகன்னஸ்பர்க் நகரில் தென்னாப்பிரிக்க நாட்டின் அரசினால் நடத்தப்பட்டது.
- இந்த உச்சி மாநாட்டின் கருத்துரு, "பிரிக்ஸ் நாடுகள் மற்றும் ஆப்பிரிக்கா: பரஸ்பர துரித மேம்பாடு, நிலையான மேம்பாடு மற்றும் உள்ளார்ந்த பலதரப்புத் தன்மைக்கான கூட்டுறவு" என்பதாகும்.
- இந்த உச்சிமாநாட்டில், ஐந்தாக இருந்த பிரிக்ஸ் அமைப்பிற்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை 11 நாடுகளாக விரிவுபடுத்தப் பட்டது.
- இந்த மாநாட்டின் போது எகிப்து, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், எத்தியோப்பியா மற்றும் அர்ஜென்டினா ஆகிய சில நாடுகள் பிரிக்ஸ் அமைப்பில் உறுப்பினர்களாக இணைந்தன.
- பிரிக்ஸ் அமைப்பில் இணைந்த இந்த நாடுகளின் முழு நேர உறுப்பினர் நிலை 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும்.

## இந்தியப் பிரதமரின் கிரீஸ் பயணம்




- இந்தியப் பிரதமர் அவர்கள் அலுவல் ரீதியான பயணமாக கிரீஸ் நாட்டிற்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.
- 40 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் ஒருவர் கிரீஸ் நாட்டிற்குப் பயணம் மேற் கொள்வது இதுவே முதல் முறையாகும்.
- கிரீஸ் நாட்டின் அதிபர், பிரதமர் அவர்களுக்கு அந்நாட்டின் மிக மதிப்புமிக்க கிராண்ட் கிராஸ் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் ஹானர் என்ற விருதினை வழங்கி கௌரவித்தார்.
- முன்னதாக கிரீஸ் நாட்டிற்கு ஓர் உயர்நிலை அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு கடைசிப் பயணம் 1983 ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதத்தில் அப்போதையப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அந்நாட்டிற்கு மேற்கொண்டப் பயணமாகும்.

## உலகப் பல்லுயிர்க் கட்டமைப்பு நிதியம் (GBFF)




- கனடாவின் வான்கூவர் நகரில் உள்ள உலகளாவிய சுற்றுச்சூழல் மையத்தின் (GEF) 7வது கூட்டத்தின் போது உலகப் பல்லுயிர்க் கட்டமைப்பு நிதியத்திற்கு (GBFF) அங்கீகாரம் வழங்கப் பட்டு தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்தக் கட்டமைப்பானது 2030 ஆம் ஆண்டிற்குள் பல்லுயிர்ப் பெருக்க இழப்பைத் தடுத்து நிறுத்துவதற்கும், இயற்கையை அதன் மீள்வுப் பாதையில் நிலை நிறுத்துவதற்கும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள், உயிரியல் பன்முகத் தன்மைக்கான உடன்படிக்கை (CBD) மூலம் நிறுவப்பட்ட குன்மிங்-மாண்ட்ரீயல் உலகப் பல்லுயிர்க் கட்டமைப்பின் இலக்குகளை அடைவதற்குத் தேவையான நிதி ஆதாரங்களை இந்த நிதியம் வழங்குகிறது.

## ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல்




- ❖ ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல் (ASF) என்பது பரவும் தன்மையுடைய வைரஸ் பன்றிக் காய்ச்சலாகும்.
- ❖ இது 49 நாடுகளில் பரவியுள்ளது மற்றும் 2021 ஆம் ஆண்டு முதல் சுமார் 1.5 மில்லியன் விலங்குகளின் உயிரிழப்பிற்குக் காரணமாகியுள்ளது.
- ❖ இந்த 49 நாடுகள் ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஓசியானியா ஆகிய ஐந்து வெவ்வேறு உலகப் பிராந்தியங்களில் அமைந்துள்ளன.
- ❖ கால்நடைகளைப் பாதிக்கும் இந்த நோய்ப் பாதிப்பு ஆனது முதன்முதலில் கென்யாவில் 1921 ஆம் ஆண்டில் பதிவானது.
- ❖ இந்த நோயானது 2023 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் மேகாலயா மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் சமீபத்தில் நோய்ப் பாதிப்பு பதிவானதைத் தொடர்ந்து இந்தியாவில் இன்னும் இந்நோய் பரவி வருகிறது.
- ❖ இந்த நோய்க்கு இதுவரையில் எந்தச் சிகிச்சையும் இல்லை என்பதால் இதில் சில வகை பாதிப்புகள் ஒரு சில சூழ்நிலைகளில் 100% இறப்பு விகிதத்தைக் கொண்டிருக்கக் கூடும்.
- ❖ இது பன்றிக் காய்ச்சல் போன்றது அல்ல.
- ❖ இது பாதிக்கப்பட்ட விலங்குகளுடன் நேரடியாக தொடர்பு கொள்வதன் மூலம் பரவச் செய்கிறது.
- ❖ இது உண்ணி போன்ற பூச்சிகள் மூலமாகவும் பரவும்.
- ❖ மேலும் இந்த வைரசானது பதப்படுத்தப்பட்ட இறைச்சியில் பல மாதங்களும், உறைந்த நிலையில் வைக்கப் பட்ட இறந்த விலங்குகளில் பல ஆண்டுகளும் உயிர் வாழும்.

## பிரைட் ஸ்டார்-23 பயிற்சி

- ❖ முதன்முறையாக, இந்திய விமானப் படை (IAF) குழுவானது பிரைட் ஸ்டார்-23 என்றப் பயிற்சியில் பங்கேற்கிறது.

- இது எகிப்தின் கெய்ரோ (மேற்கு) விமானப்படை தளத்தில் நடத்தப் படுவதற்கு என்று திட்டமிடப்பட்ட, இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பலதரப்பு முப்படைப் பயிற்சியாகும்.
- இப்பயிற்சியில் அமெரிக்கா, சவுதி அரேபியா, கிரீஸ் மற்றும் கத்தார் ஆகிய நாடுகளின் படைகள் பங்கேற்றன.



## அமேசான் பகுதியில் எண்ணெய்க் கிணறுகள்




- ஈக்வடார் நாட்டின் மக்கள் யாசுனி தேசியப் பூங்காவிற்குள் அமைந்துள்ள பாதுகாக்கப் பட்ட பகுதியில் எண்ணெய்க் கிணறுகள் அமைப்பதற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.
- இது உலகில் மிக அதிக அளவில் பல்லுயிர்ப் பெருக்கம் கொண்ட பகுதிகளில் ஒன்று ஆகும்.
- இந்தப் பகுதியில் இதுவரையில் மனிதத் தொடர்பு மேற்கொள்ளப்படாத தகேரி மற்றும் தாரோமெனானி எனப்படும் இரண்டு பழங்குடியினர் குழுக்கள் வசிக்கின்றனர்-
- 1989 ஆம் ஆண்டில், யுனெஸ்கோ அமைப்பானது யாசுனி பகுதியினை உலக உயிர்க் கோளக் காப்பகமாக நியமித்தது.
- அதன் வருவாய் நாட்டின் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமானது என்று வலியுறுத்தி, எண்ணெய்க் கிணறுகள் அமைப்பதற்கு ஆதரவளிக்கும் தற்போதைய அரசாங்கத்திற்கு இந்த முடிவு எதிர்மறையாக அமைந்துள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## நட்சத்திரக் குறியீடு இடப்பட்ட ரூபாய் தாள்கள்

- நட்சத்திர (*) சின்னத்துடன் கூடிய 500 ரூபாய் தாள்கள் என்பது மற்ற சட்டப்பூர்வ ரூபாய் தாள்களைப் போன்றது மற்றும் அசல் தன்மை கொண்டது என்பதை இந்திய ரிசர்வ் வங்கி உறுதிப் படுத்தியுள்ளது.
- 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் புதிய 500 ரூபாய் தாள்களில் நட்சத்திரக் குறியீடு (*) அறிமுகப்படுத்தப் பட்டது.
- நட்சத்திரக் குறியீடு என்பது மாற்றப்பட்ட/மறு அச்சிடப்பட்ட ரூபாய் தாள் என்பதை அடையாளங் காட்டும் குறியீடாகும்.
- இது 2016 ஆம் ஆண்டிற்கு முன்பே 10, 20, 50 மற்றும் 100 ரூபாய் தாள்களில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- இந்த ரூபாய் தாள்கள், அச்சிடல் செயல்பாட்டின் போது பழுதுபடும் ரூபாய் தாள்களை மாற்றுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.



## மத்திய அரசின் கடன்


i) Year-wise details of the Central Government debt/total liabilities outstanding from FY 2013-14 to FY 2022-23 are given in the following table:

| FY | Central Government's debt/total liabilities* | |
|---|---|---|
| | Amount (₹ lakh crore) | % of GDP |
| 2013-14 | 58.6 | 52.2% |
| 2014-15 | 64.1 | 51.4% |
| 2015-16 | 71.0 | 51.5% |
| 2016-17 | 75.0 | 48.7% |
| 2017-18 | 82.9 | 48.5% |
| 2018-19 | 92.5 | 49.0% |
| 2019-20 | 105.2 | 52.4% |
| 2020-21 | 122.1 | 61.6% |
| 2021-22 | 138.9 | 58.7% |
| 2022-23 (RE) | 155.8 | 57.3% |

*Includes External Debt valued at current exchange rates as on 31st March of the respective financial year.
RE: Revised Estimates

- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் மத்திய அரசின் கடன் ஆனது, 155.6 லட்சம் கோடி ரூபாய் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 57.1 சதவீதமாக இருந்தது.
- 2022-23 ஆம் ஆண்டின் இறுதியில் மாநில அரசுகளின் கடன் ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 28 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.15 சதவீதமாக இருந்த மத்திய அரசின் மூலதனச் செலவினமானது 2022-23 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.

## வருமான வரி கணக்குத் தாக்கலில் புதிய சாதனை




- 2023-24 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதி வரையில் 6.77 கோடிக்கு மேலாக வருமான வரிக் கணக்கு (ITR) தாக்கல் செய்யப்பட்டதுடன் புதிய சாதனை அளவாகப் பதிவாகி உள்ளது.
- காலக்கெடுவிற்கு முன் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரிக் கணக்குத் தாக்கலானது 2022-23 ஆம் ஆண்டில் பதிவான மொத்த வருமான வரிக் கணக்கு (ITR) தாக்கலை விட 16.1 சதவீதம் அதிகமாகும்.
- 64.33 லட்சத்துக்கும் அதிகமான வருமான வரிக் கணக்குத் தாக்கல்களுடன் கடைசி நாளில் (ஜூலை 31) அதன் அளவு உச்சத்தை எட்டியது.
- வருமான வரித் துறை முதல் முறையாக வரித் தாக்கல் செய்தவர்களிடமிருந்தும் 53.67 லட்சம் வருமான வரிக் கணக்குத் தாக்கலைப் பெற்றுள்ளது.
- மாலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை, ஒரு மணி நேரத்திற்கு அதிகபட்ச வீதமாக 4,96,559 வருமான வரிக் கணக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
- 16:35:06 மணிக்கு, ஒரு வினாடிக்கு அதிகபட்ச வீதமாக 486 வருமான வரிக் கணக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
- ஜூலை 31 ஆம் தேதியன்று 17:54 மணிக்கு ஒரு நிமிடத்திற்கு அதிகபட்ச வீதமாக 8,622 வருமான வரிக் கணக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

## ஆயில் இந்தியா நிறுவனம் - மகாரத்னா நிறுவன அந்தஸ்து




- நிதித் துறை அமைச்சகமானது ஆயில் இந்தியா மற்றும் ONGC விதேஷ் ஆகிய இரண்டு எண்ணெய் உற்பத்தித் துறை நிறுவனங்களை முறையே மத்தியப் பொதுத் துறை நிறுவனங்களின் (CPSEs) மகாரத்னா மற்றும் நவரத்னா வகை நிறுவனங்களாக தரம் உயர்த்தியுள்ளது.
- இந்திய நாட்டிற்குள்ளும், வெளிநாட்டிலும் பெரிய அளவிலான முதலீடுகள் மேற் கொள்ளப் படுவது குறித்து அந்த நிறுவனங்கள் தன்னிச்சையாக முடிவுகளை மேற் கொள்வதற்கு இந்தப் புதிய அந்தஸ்து உதவும்.
- ஆயில் இந்தியா நிறுவனமானது முன்னதாக நவரத்னா நிறுவனமாகவும் ONGC விதேஷ் நிறுவனமானது மினிரத்னா நிறுவனமாகவும் இருந்தன.
- மத்தியப் பொதுத் துறை நிறுவனங்களில் ஆயில் இந்தியா நிறுவனம் ஆனது 13வது மகாரத்னா நிறுவனமாக இருக்கும்.
- இந்தியாவில் எண்ணெய் கண்டுபிடிக்கப் பட்ட ஒரு ஆண்டான 1889 ஆம் ஆண்டில் இது நிறுவப் பட்டது.
- இந்திய அரசுக்குச் சொந்தமான இந்த நிறுவனமானது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.
- ஆயில் இந்தியா நிறுவனமானது இந்தியாவில் உள்ள இரண்டாவது பெரிய தேசிய எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி நிறுவனமாகும்.
- மஹாரத்னா அந்தஸ்து வழங்கீட்டு திட்டமானது மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் தமது செயல்பாடுகளை விரிவுபடுத்தச் செய்வதற்கும் அவற்றினை ஓர் உலகளவிலான மாபெரும் நிறுவனங்களாக மேம்படுத்தச் செய்வதற்கும் என்று அவற்றிற்கு அதிகாரம் அளிப்பதற்காக 2010 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- நவரத்னா அந்தஸ்தினை கொண்டுள்ள பொது நிறுவனங்கள்; இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் விதிமுறைகளின் கீழ் குறைந்த பட்ச அளவில் என்று பரிந்துரைக்கப் பட்ட பொதுப் பங்குகளுடன் இந்தியப் பங்குச் சந்தையில் பட்டியலிடப் பட்டுள்ள நிறுவனங்கள் போன்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் மஹாரத்னா அந்தஸ்திற்குப் பரிசீலிக்கப்படும்.
- கடந்த மூன்று ஆண்டுகளில் 2,500 கோடி ரூபாய்க்கும் மேலான சராசரி வருடாந்திர நிகர லாபம் கொண்ட மற்றும் உலகளவில் குறிப்பிடத்தக்க அளவிலான செயல்பாடுகளைக் கொண்ட அல்லது சர்வதேச அளவில் பல செயல்பாடுகளைக் கொண்ட நிறுவனங்கள் ஆகியனவும் பரிசீலிக்கப் படும் .

- மத்தியப் பொதுத் துறை நிறுவனங்களில் ONGC விதேஷ் நிறுவனமானது 14வது நவரத்னா நிறுவனமாக இருக்கும்.
- நவரத்னா அந்தஸ்து பெற்ற ஒரு மத்தியப் பொதுத்துறை நிறுவனமானது, புதியப் பொருட்களை வாங்குவதற்கும் அல்லது மாற்றுவதற்கும் எந்த வித நிதி உச்ச வரம்பும் இல்லாமல் தனது மூலதனச் செலவை மேற்கொள்ள இயலும்.
- இது தொழில்நுட்ப துணிகரக் கூட்டு முதலீடுகள் அல்லது உத்திசார் கூட்டணிகளை மேற்கொள்ள இயலும் என்பதோடு, இது கொள்முதல் அல்லது பிற ஏற்பாடுகளைப் பெறவும் தொழில்நுட்பம் மற்றும் தகவல் பகிர்வினைப் பெறவும் இயலும்.
- இது இந்திய ரிசர்வ் வங்கி/பொருளாதார விவகாரங்கள் துறையின் ஒப்புதலுக்கு உட்பட்டு, உள்நாட்டு மூலதனச் சந்தைகள் மற்றும் சர்வதேசச் சந்தைகளில் இருந்து கடன் பெற முடியும்.
- இதன் மூலம் அவை இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ 1,000 கோடி ரூபாய் என்ற முதலீட்டு உச்ச வரம்பிற்குள், நிதிசார் கூட்டுத் துணிகர முதலீட்டு நிறுவனங்கள் மற்றும் முழு உரிமம் கொண்ட துணை நிறுவனங்களை நிறுவ முடியும்.

## ஒளியிழை கம்பிவட இறக்குமதிகள் மீதான இறக்குமதி குவிப்பு தடுப்பு வரி




- நிதி அமைச்சகமானது சீனா, தென் கொரியா மற்றும் இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில குறிப்பிட்ட ஒளியிழைக் கம்பிவடங்கள் மீது இறக்குமதி குவிப்பு தடுப்பு வரிகளை விதித்துள்ளது.
- இது இவற்றின் இறக்குமதிகளால் உள்நாட்டுத் தொழில்துறையில் ஏற்படும் பல்வேறு பாதகமிக்க விளைவுகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது வர்த்தகத் தீர்வுகளுக்கான தலைமை இயக்குநரகத்தின் (DGTR) பரிந்துரைகளின் அடிப்படையில் விதிக்கப் பட்டுள்ளது.
- சமச்சீரான வர்த்தக நடைமுறைகளைச் செயலாக்குவதற்காக இறக்குமதி குவிப்பு எதிர்ப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப் படுகின்றன.
- மேலும் இது உள்நாட்டுத் தொழில்துறைகளுக்கான ஒரு சமநிலையானப் போட்டிச் சூழலை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த வரிகள் விதிக்கப்படுவதன் நோக்கம் இறக்குமதியைத் தடுப்பதோ அல்லது நியாயமற்ற முறையில் உற்பத்திப் பொருட்களின் விலையை உயர்த்துவதோ அல்ல.
- உலக வர்த்தக அமைப்பு (WTO) அமைத்த உலகளாவியக் கட்டமைப்பின்படி அரசுகள் வரிகளை விதிக்கின்றன.

## பார்ச்சூன் இதழின் உலகின் 500 முன்னணி நிறுவனங்கள் பட்டியல் 2023




- பார்ச்சூன் இதழானது உலகின் 500 முன்னணி நிறுவனங்களின் பட்டியலை வெளியிட்டு உள்ளது.
- இது 2023 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னதாக முடிவடைந்த அந்தந்த நிறுவனங்களின் நிதியாண்டுகளுக்கான மொத்த வருவாயின் அடிப்படையில் நிறுவனங்களை வரிசைப்படுத்துகிறது.
- 2010 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா இந்தப் பட்டியலில் இடம் பெற்ற அதிகபட்ச நிறுவன எண்ணிக்கையினைக் கொண்டுள்ளதோடு, 2023 ஆம் ஆண்டில் ஒரு முன்னணி நாடாகத் திகழ்கிறது.
- வால்மார்ட் நிறுவனம் தொடர்ந்து 11வது ஆண்டாக வருவாய் மதிப்பில் மிகப்பெரிய நிறுவனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.
- சவுதியின் அராம்கோ நிறுவனம் 2வது இடத்திலும், ஸ்டேட் கிரிட் நிறுவனம் (சீனா) 3வது இடத்திலும் உள்ளது.
- எட்டு இந்திய நிறுவனங்கள் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- 2022 ஆம் ஆண்டு தரவரிசையில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் 104வது இடத்தில் இருந்தது.
- மேலும் 2023 ஆம் ஆண்டு தரவரிசையில் இது 88வது இடத்தினைப் பெற்றது.
- இதில் அரசுக்குச் சொந்தமான இந்தியன் எண்ணெய் உற்பத்திக் கழகம் 48 இடங்கள் முன்னேறி 94வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இதற்கிடையில், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஒன்பது இடங்கள் சரிந்து 107வது இடத்தைப் பிடித்துள்ளது.

## ஜன்தன் திட்டத்தின் பயனாளிகள்

| State | Beneficiary Rank | Beneficiary Count | Fiscal Year | Scheme Impact |
|---|---|---|---|---|
| Bihar | 1st | 84,89,231 individuals | 2022-23 | Exemplary success, underscores scheme triumph, inclusive growth |
| Uttar Pradesh | 2nd | 68,08,721 individuals | 2022-23 | Penetration in populous regions, financial stability, self-sufficiency |
| Tamil Nadu | 3rd | 64,06,513 individuals | 2022-23 | Impact in developed economic landscape, widespread scheme reach |

- 2022-23 ஆம் நிதியாண்டில், பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா திட்டத்தின் கீழான அதிகப் பயனாளிகளின் எண்ணிக்கையுடன் பீகார், உத்தரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்கள் முன்னணியில் உள்ளன.
- பிரதான் மந்திரி ஜன்-தன் யோஜனா (PMJDY) திட்டத்தின் முக்கிய நோக்கம் நிதிச் சேவைகளை அனைவரும் சமமான முறையில் அணுகுவதை உறுதி செய்வதாகும்.
- அடிப்படை சேமிப்புக் கணக்குகள் கிடைக்கப் பெறுதல், தனிப் பயனாக்கப்பட்ட கடன் அணுகல், தடையற்ற ரீதியில் பணம் அனுப்பும் திறன்கள், காப்பீட்டுத் தொகை மற்றும் குறிப்பாக நலிவடைந்தப் பிரிவினர் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குழுக்கள் உள்ளிட்ட பின்தங்கியப் பிரிவினருக்கான ஓய்வூதியப் பலன்கள் ஆகியவை இதில் அடங்கும்.

## இந்திய ரிசர்வ் வங்கியின் கொள்கை வகுப்புக் கூட்டத்தின் சிறப்பம்சங்கள் - ஆகஸ்ட் 2023

**Meeting Schedule of the Monetary Policy Committee for 2023-2024**


As per Section 45ZI of Reserve Bank of India Act, 1934, it has been decided that Monetary Policy Committee will meet during 2023-24 on the dates indicated below:

| Dates of meetings of Monetary Policy Committee for 2023-24 |
|---|
| April 3, 5 and 6, 2023 |
| June 6-8, 2023 |
| August 8-10, 2023 |
| October 4-6, 2023 |
| December 6-8, 2023 |
| February 6-8, 2024 |

- ரெப்போ விகிதத்தில் தற்போதைய நிலையை அப்படியே நீட்டிக்க நிதியியல் கொள்கை குழு முடிவெடுத்துள்ள மூன்றாவது கூட்டம் இதுவாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியியல் கொள்கைக் குழு முக்கிய கொள்கை சார் ரெப்போ விகிதத்தை 6.5% ஆக மாற்றாமல் வைத்துள்ளது.

- நிதியியல் கொள்கைக் குழுவானது கடந்த பிப்ரவரி மாதம் நடந்த கூட்டத்தில் இந்த விகிதத்தை 6.25 சதவீதத்தில் இருந்து 6.50 சதவீதமாக உயர்த்தியது.
- இது பணக் கையிருப்பு விகிதம் (CRR) மாற்றப் படாமல் 4.5 சதவீதமாக இருக்கும் என்று அறிவித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டுக் கொடுப்பனவுகளில் செயற்கை நுண்ணறிவை (AI) அறிமுகப் படுத்தத் திட்டமிட்டுள்ளது.
- நேரடிக் கட்டண வழங்கீட்டில், குறுகியத் தொலைவு வரம்பிலான கம்பி வடச் சேவைகள் (NFC) தொழில்நுட்பம் ஆனது UPI-Lite மூலம் பயன்படுத்தப்படும்.
- மத்திய வங்கியானது UPI-Lite மூலமான பண வழங்கீட்டிற்கு 200 ரூபாய் ஆக இருந்த வரம்பினை 500 ரூபாயாக உயர்த்தியது.

## உள்நாட்டுப் பணமதிப்பு பயன்பாட்டு (LCS) அமைப்பு




- அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனம் (ADNOC) மற்றும் இந்தியன் எண்ணெய் உற்பத்திக் கழகம் (IOCL) ஆகியவை புதிதாகச் செயல்படுத்தப்பட்ட உள்நாட்டு பணமதிப்புப் பயன்பாட்டு (LCS) அமைப்பின் கீழ் முதல் கச்சா எண்ணெய் கொள்முதல் பரிவர்த்தனையை நிறைவு செய்துள்ளன.
- இது பரிவர்த்தனைக்கானச் செலவினங்கள் மற்றும் நேரத்தைக் கணிசமான அளவில் குறைக்கும் அதே நேரத்தில் நாடுகளுக்கிடையேயான பரிவர்த்தனைகளுக்கு அந்தந்த தேசங்களின் பண மதிப்பினைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும்.
- LCS நெறிமுறையானது, பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணம் வழங்கீட்டிற்கான பண மதிப்பினைத் தேர்ந்தெடுப்பதற்கான நெகிழ்திறனை வர்த்தகர்களுக்கு வழங்கச் செய்கிறது.

## இந்தியாவின் முதல் சுற்றுச்சூழலுக்கு உகந்தப் பற்று அட்டைகள்

- சுற்றுச்சூழலுக்கு உகந்தப் பற்று அட்டைகளை அறிமுகப்படுத்திய முதல் இந்திய வங்கியாக ஏர்டெல் பண வழங்கீட்டு வங்கி மாறியுள்ளது.

- இந்தப் பற்று அட்டைகளானது சான்றளிக்கப்பட்டச் சுற்றுச்சூழலுக்கு உகந்த மூலப் பொருளான r-PVC எனும் பொருளைக் கொண்டு தயாரிக்கப்பட உள்ளது.
- உற்பத்தி செய்யப்பட உள்ள 50,000 அட்டைகள் அடங்கிய ஒவ்வொரு உற்பத்தி தொகுதியும், சந்தையில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வழக்கமான PVC அட்டைகளின் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 350 கிலோகிராம் கார்பன் வெளியேற்றத்தினைக் கணிசமான அளவில் குறைக்கும்.
- மேலும், r-PVC அட்டைகளின் உற்பத்தியினால் ஹைட்ரோகார்பன் உபயோகமானது 43% குறையும்.
- இது இந்த மாதிரியான அட்டைகளின் மீதான உற்பத்தியின் போது மேற்கொள்ளப்படும் பெட்ரோலியப் பயன்பாட்டினைத் திறமிக்க வகையில் குறைக்கிறது.

## கச்சா எண்ணெய் மீதான திடீர் இலாப வரி

- இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் கச்சா எண்ணெய் மற்றும் டீசல் ஆகியவற்றின் மீதான திடீர் இலாப வரி விதிப்பினை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.
- ஒரு டன்னிற்கு 4,250 ரூபாயாக இருந்த, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கச்சா எண்ணெயின் மீதான சிறப்புக் கூடுதல் கலால் வரியானது 7,100 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது.
- இந்தியா முதன்முதலில் கடந்த ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று முதலாவது திடீர் இலாப வரிகளை விதித்தது.
- திடீர் இலாப வரி என்பது சாதகமானச் சந்தைச் சூழ்நிலைகள் அல்லது அசாதாரணச் சூழ்நிலைகள் காரணமாக வழக்கத்திற்கு மாறாக அதிக இலாபத்தை ஈட்டும் பல்வேறு நிறுவனங்களின் மீது அரசினால் விதிக்கப்படும் ஒரு சிறப்பு வரியாகும்.

## கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கான அபராதக் கட்டணங்களுக்கான வழி காட்டுதல்கள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது, 'நியாயமான கடன் வழங்கீட்டு நடைமுறை - கடன் நிலுவைகள் மீதான அபராதக் கட்டணங்கள்' என்ற தலைப்பிலான ஒரு அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.
- இது வணிக மற்றும் பிற வங்கிகள், வங்கி சாராத நிதி நிறுவனங்கள் (NBFCs) மற்றும் பிற கடன் வழங்கீட்டு நிறுவனங்களுக்குப் பொருந்தும்.
- அபராத வட்டி குறித்தத் தகவல்களை வெளிப்படுத்துவதில் நியாயத் தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒரு வாடிக்கையாளர் கடனைத் திரும்பச் செலுத்த தவறினால் அல்லது கடன் வாங்கும் விதிமுறைகளுக்கு இணங்க முடியாத போது, கடன் வழங்கீட்டு நிறுவனங்கள் அபராதம் விதிக்கலாம்.
- ஆனால் இவை 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து அத்தகைய அபராதத்திற்கு வட்டி வசூலிக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

### மர்மன்ஸ்க் துறைமுகம் - இந்தியாவின் ஏற்றுமதி





- இந்த ஆண்டு மர்மான்ஸ்க் துறைமுகத்தில் கையாளப்பட்ட சரக்குகளில் இந்தியா அதிக பட்சப் பங்கினைக் கொண்டுள்ளது.
- இந்த துறைமுகமானது மாஸ்கோவிற்கு வடமேற்கே சுமார் 2,000 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.
- மர்மன்ஸ்க் துறைமுகமானது ரஷ்யாவின் வடக்குப் பிராந்தியத்தின் பிரதான நுழைவாயில் மற்றும் பன்னாட்டுக் கப்பல் போக்குவரத்து மையமாகும்.
- இங்கு எட்டு மில்லியன் டன் சரக்குப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைபெற்றுள்ளது.
- இதில் 35% சரக்குப் பொருட்கள் இந்தியாவின் ஏற்றுமதி பங்காகும்.
- துருக்கி (34%) மற்றும் சீனா (13%) ஆகியவை மர்மன்ஸ்க் துறைமுகத்தின் சேவையினைப் பெறும் மற்ற நாடுகளாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


### மார்க்கரியன் 421

- மார்க்கரியன் 421 எனப் பெயரிடப்பட்ட ஒரு மிகப்பெரியக் கருந்துளையானது, அதன் உயர் ஆற்றல் கொண்ட துகள்களின் சுழல்களைப் பூமியை நோக்கி வெளியிடுகிறது.
- இந்த விண்வெளி சார்ந்த ஒரு காட்சியானது சுமார் 400 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளதால் புவி பாதுகாப்பானதாக உள்ளது.
- இந்த உமிழ்வானது, உர்சா மேஜர் விண்மீன் தொகுப்பில் நடைபெறுகிறது.
- மார்காரியன் 421 கருந்துளையில் இருந்து வெளி வரும் துகள்களின் சுழல்கள் மில்லியன் கணக்கான ஒளியாண்டுகள் நீளம் வரை நீளக் கூடியது.
- துகள்கள் ஒளியின் வேகத்தினை எட்டுவதால் அவை பிரகாசமானவையாக காணப் படுகின்றன.
- அவை அபரிமிதமான ஒரு ஆற்றலை வெளியிடுவதோடு, ஐன்ஸ்டீன் கணித்தவாறான வித்தியாசமான வழிகளில் செயல்படுகின்றன.



## நிலவின் சுற்று வட்டப் பாதையில் உள்நுழைவு


- சந்திரயான்-3 விண்கலமானது புவியின் இயக்கத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப் பட்டச் சுற்றுப்பாதையை வெற்றிகரமாக நிறைவு செய்ததை அடுத்து அந்த சுற்றுப் பாதையில் இருந்து விலகி நிலவின் சுற்றுப் பாதையில் நுழைக்கப் பட்டுள்ளது.
- இது நிலவின் அருகாமைக்குக் கொண்டு செல்லும் சுற்றுப் பாதையைப் பின்பற்றும்.
- சந்திரயான்-3 விண்கலமானது தற்போது நிலவின் சுற்று வட்டப் பாதையில் உள்ளது.
- அது நிலவில் இருந்து சுமார் 40,000 கி.மீ. தொலைவினை அடையும் போது நிலவின் ஈர்ப்பு விசையின் தாக்கத்தினை எட்டத் தொடங்கும்.
- அங்கிருந்து, நிலவின் ஒவ்வோர் சுற்று வட்டப் பாதை உந்துதலும் நிலவின் மையப் பகுதியில் இருந்து விண்கலம் உள்ள தொலைவினை 4,000 கி.மீ. முதல் 5,000 கி.மீ. வரை நெருங்கச் செய்யும்.
- விண்கலம் 100 கி.மீ. நீள சுற்று வட்டப்பாதையில் நுழைவதற்கு முன்பு அதனை 1,000 கி.மீ. தொலைவினை நெருங்கச் செய்யும்.





## யூரைலைட் விண்கல்

- இந்தியாவில் உள்ள தாலா என்ற பள்ளமானது சுமார் 2500 முதல் 1700 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, புவியில் மோதிய ஓர் அரிய யூரிலைட் விண்கல்லினால் உருவானது என்று அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- இது மோதலால் உண்டான உலகின் ஏழாவது பழமையான பள்ளமாக உள்ளது.
- சுமார் 11 கி.மீ. விட்டம் கொண்ட தாலா பள்ளமானது மத்திய தரைக்கடல் மற்றும் தென் கிழக்கு ஆசியாவிற்கு இடையே காணப்படுகின்ற, இதுவரையில் பதிவாகிய ஒரு மிகப் பெரிய உறுதிப் படுத்தப் பட்ட ஒரு மோதல் கட்டமைப்பாகும்.
- யூரைலைட்டுகள் என்பது பூமியில் இன்று வரையில் அறியப்பட்ட அனைத்து விண் கற்களிலும் ஒரு சிறியப் பகுதியை மட்டுமே உள்ளடக்கிய பழமையான பரற்குறு அற்ற விண்கல்லின் ஒரு தனித்துவமான வகையாகும்.




## வோஸ்டாக் ஆய்வு மையத்தில் தர்பூசணிகள் பயிரிடல்




- அண்டார்டிகாவில் தர்பூசணிகளைப் பயிரிடுவதில் அறிவியலாளர்கள் ஒரு குறிப்பிடத் தக்கச் சாதனையினை எட்டியுள்ளனர்.
- இது துருவப் பகுதியில் அமைந்துள்ள வோஸ்டாக் ஆய்வு மையம் எனப்படும் ரஷ்ய ஆராய்ச்சி நிலையத்தில் பயிரிடப்பட்டுள்ளது.
- இந்த இடமானது பூமியில் உள்ள மிகவும் குளிரான இடமாக வகைப்படுத்தப் பட்டு உள்ளது.
- இங்கு வெப்பநிலையானது – 128.6 டிகிரி பாரன்ஹீட் (- 89.2 டிகிரி செல்சியஸ்) ஆக உள்ளது.
- தர்பூசணிகள் 4,300 ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய சூடான் நாட்டில் தோன்றின.

- கொரிய அறிவியலாளர்கள் 2021 ஆம் ஆண்டில் மேற்கு அண்டார்டிகாவில் உள்ள கிங் செஜோங் நிலையத்தில் தர்பூசணி பயிரிட்டு சாதனை படைத்தனர்.
- அந்தத் தளத்தில் – 78.1 டிகிரி பாரன்ஹீட் (-25.6 டிகிரி செல்சியஸ்) என்ற வெப்பநிலை பதிவாகியது.

## அறை வெப்பநிலையில் இயங்கும் மீக்கடத்தி

- தென் கொரிய ஆராய்ச்சியாளர்கள் ஒரு நடைமுறைக்கு உட்படுத்தக் கூடிய வகையிலான மீக்கடத்தியைக் கண்டுபிடித்துள்ளதாக கூறியுள்ளனர்.
- LK-99 எனப் பெயரிடப்பட்ட இந்த மீக்கடத்தி, லெட் அபாடைட் எனப்படும் ஒப்பீட்டளவில் பொதுவான கனிமத்தில் குறைந்த எண்ணிக்கையிலான சில செப்பு மூலக்கூறுகளை உள்ளிடுவதன் மூலம் தயாரிக்கப்படுகிறது.
- மீக்கடத்திகள் எந்தவொருத் தடையுமின்றி மின்னோட்டத்தைப் பாய்வதற்கு வழிவகை செய்யும் பொருட்கள் ஆகும்.
- தற்போதுள்ள மீக்கடத்திச் சாதனங்கள், மிகக் குறைந்த வெப்பநிலையில் மட்டுமே அவற்றின் மீக்கடத்திப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன.
- இது பெரும்பாலான இடங்களில் அவற்றைப் பயன்படுத்துவதை சாத்தியமற்றதாக ஆக்குகிறது.


## புதிய இரத்தப் பரிசோதனைத் தொழில்நுட்பம்




- ஆராய்ச்சியாளர்கள் GEMINI என்ற புதிய இரத்தப் பரிசோதனைத் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.
- GEMINI என்பது ஊடுருவல் சாராத புற்றுநோய் கண்டறிதலுக்கான மரபணு அளவிலான பிறழ்வுக் கண்டறிதல் என்பதைக் குறிக்கிறது.
- இது டிஎன்ஏவின் ஒற்றை மூலக்கூறுகளின் மரபணு அளவிலான படியெடுத்தலை இயந்திரக் கற்றலுடன் இணைக்கிறது.
- இந்த தொழில்நுட்பம் ஆனது நுரையீரல் மற்றும் பிற புற்றுநோய்களை முன்கூட்டியே கண்டறிய உதவும் திறன் கொண்டது.
- நிலை I மற்றும் II நோய்கள் உட்பட 90% க்கும் அதிகமான நுரையீரல் புற்றுநோய்களை GEMINI நுட்பத்தின் மேம்பட்ட அளவிலான தொழில்நுட்பம் கண்டறிந்துள்ளது.

## ஒற்றை மாத்திரை உத்தி

- உலக சுகாதார அமைப்பானது அதன் திருத்தியமைக்கப்பட்ட அத்தியாவசிய மருந்துகளின் (EML) 2023 மாதிரிப் பட்டியல்களில், இருதய நோய் மருந்துகள் அல்லது பல்வேறு மருந்து கலப்புகளின் மூன்று நிலையான தவணைக் கலப்புகளைச் சேர்த்து உள்ளது.
- இது பெருந்தமனி தடிப்பு என்ற இதய நோய்களின் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தடுப்புக்குப் பயன்படுத்தப்படும்.
- பல்வேறு மருந்து கலப்புகள் ஒரு முக்கியமான குறைந்த விலையிலான பொது சுகாதார நடவடிக்கை ஆகும்.
- இது ஒவ்வோர் ஆண்டும் மில்லியன் கணக்கான இருதய நோய்கள் மற்றும் இறப்புகளைத் தடுக்கும்.





## ஹீலியோலின்க்3D

- பூமிக்கு அருகாமையில் உள்ள குறுங்கோள்களைக் கண்டுபிடிப்பதற்காக புதிதாக வடிவமைக்கப் பட்ட பல்வேறு செயல்பாட்டு நிரல்களானது, அதன் முதல் செயல்பாட்டில் அபாயத்தினை ஏற்படுத்தக் கூடிய குறுங்கோளை அடையாளம் கண்டுள்ளது.
- ஹீலியோலின்க்3D என்ற செயல்பாட்டு நிரல்களானது இன்னும் சோதனைக் கட்டத்தில் தான் உள்ளது.
- இந்த அபாயத்தினை ஏற்படுத்தக் கூடிய ஒரு குறுங்கோளுக்கு 2022 SF289 என பெயரிடப் பட்டுள்ளது.
- இது 600 அடி நீளமான இந்த குறுங்கோள் ஆனது, செயல்பாட்டு நிரல் ஆனது ஹவாயில் சோதனை செய்யப்பட்ட போது கண்டுபிடிக்கப்பட்டது.



## சூரிய வெப்ப உமிழ்வு (CME)

- சமீபத்தில் சூரியனில் இருந்து சூரிய வெப்பப் பகுதியிலிருந்து (CME) சூரிய வெடிப்பு ஏற்பட்டது.
- இம்முறை அது செவ்வாய்க் கோள் மற்றும் பூமி ஆகிய இரண்டு கோள்களின் மீதும் ஒரு பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தும் அளவுக்குப் பரவியது.
- பூமியிலும், சந்திரனிலும், செவ்வாய்க் கிரகத்திலும் ஒரே நேரத்தில் ஒரு சூரியன் சார்ந்த நிகழ்வின் தாக்கம் பதிவு செய்யப் பட்டது இதுவே முதல் முறையாகும்.
- இரண்டு கோள்களும் சுமார் 250 மில்லியன் கிலோமீட்டர் இடைவெளியில் சூரியனுக்கு எதிரெதிர் பக்கத்தில் உள்ளன.
- இருப்பினும் அவை ஆற்றல் பெற்றத் துகள்களின் வெடிப்பின் தாக்கத்தினைப் பெற்றன.
- நிலவு மற்றும் செவ்வாய்க் கிரகம் ஆகிய இரண்டுமே தத்தமது காந்தப் புலங்களை உருவாக்குவதில்லை.
- எனவே, சூரியத் துகள்கள் இவற்றின் மேற்பரப்புகளை எளிதில் அடையக் கூடியது.
- இருப்பினும், செவ்வாய்க் கோளானது ஒரு மெல்லிய வளிமண்டலத்தைக் கொண்டு உள்ளது.
- இது குறைந்த ஆற்றல் கொண்ட பெரும்பாலான சூரியத் துகள்களைப் பலமாக தடுத்து நிறுத்துவதோடு அதிக ஆற்றல் கொண்ட துகள்களின் வேகத்தினை மெதுவாக்குகிறது.
- சூரிய வெப்ப உமிழ்வு ஆனது சூரியனின் கரோனா அடுக்கிலிருந்துப் பிளாஸ்மா மற்றும் காந்தப் புலத்தின் மாபெரும் உமிழ்வு ஆகும்.
- அவை பில்லியன் டன் கணக்கிலான கரோனா துகள்களை வெளியேற்றக் கூடும் என்ற நிலையில் அவை அதனுள் காந்தப் புலத்தை (உமிழ்வுக் கற்றைகளில் உள்ளடக்கியுள்ள) சுமந்து செல்லக் கூடியவை ஆகும்.
- இது சூரியக் காற்றின் கிரகங்களுக்கு இடையேயான காந்தப்புலத்தின் (IMF) ஒரு பெரும் வலிமையை விட அதிக வலிமையானதாகும்.
- சூரிய வெப்ப உமிழ்வு ஆனது சூரியனிலிருந்து வெளி நோக்கி 250 கிமீ/வி முதல் 3000 கிமீ/வி வரையிலான வேகத்தில் பயணிக்கின்றன.
- புவியின் ஈர்ப்பினால் ஈர்க்கப் படும் அதிவேக சூரிய வெப்ப உமிழ்வு ஆனது 15-18 மணி நேரத்தில் நமது கிரகத்தை அடைய முடியும்.





## பு-விஷன் (கிரிஷி-RASTAA)

- இது ஒரு இணைய உலகம் அடிப்படையிலான தானியங்கு மண் பரிசோதனை மற்றும் ஆலோசனைத் தளமாகும்.
- இது நாட்டின் மண் ஆரோக்கியம் குறித்த ஒரு வரைபடத்தினை நிறைவு செய்வதில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கும்.
- இது ஹைதராபாத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையின் இந்திய அரிசி ஆராய்ச்சி நிறுவனம் (ICAR-IIRR) மற்றும் கிரிஷி தந்திரா ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப் பட்டுள்ளது.

## செயற்கை நுண்ணறிவின் உதவியுடனான மார்பக ஊடுகதிர் ஆய்வு (MASAI) சோதனை

- செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்தி முன்னதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் ஆனது, மார்பக ஊடுகதிர் (மேமோகிராஃபி) சோதனையின் துல்லியத் தன்மையினை மேம்படுத்தும், ஆய்வுக் கண்டறிதலில் உள்ள ஒரு முக்கியப் பணிச் சுமையை நன்கு குறைக்கும் வகையிலான நம்பகமான முடிவுகளை வழங்குகின்றன.
- இருப்பினும், கட்டுப்படுத்தப்பட்ட வெவ்வேறு பிரிவுகளுக்கான சம வாய்ப்பு சோதனை இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.
- முதலாவது கட்டுப்படுத்தப்பட்ட வெவ்வேறு பிரிவுகளுக்கான சம வாய்ப்புச் சோதனையின் திட்டமிடப்பட்ட இடைக்காலப் பாதுகாப்புப் பகுப்பாய்வு ஆனது தேசிய மார்பகப் புற்றுநோய் பரிசோதனை முறையில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு குறித்து ஆய்வு செய்கிறது.
- மார்பக ஊடுகதிர் ஆய்வு சோதனையை மிகவும் துல்லியமாகவும் திறன் மிக்கதாகவும் மாற்றுவதற்கான செயற்கை நுண்ணறிவின் திறனை இது குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- ஸ்வீடனில் 80,000க்கும் மேற்பட்டப் பெண்களில் மேற்கொள்ளப்பட்ட இடைக்கால கண்டுபிடிப்புகள் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் 20 சதவீதத்திற்கும் அதிகமான புற்றுநோய்ப் பாதிப்புகளைக் கண்டறிந்து உள்ளன.

- செயற்கை நுண்ணறிவின் பயன்பாடானது, தவறான நோய்ப் பாதிப்புக் கண்டறிதல் வாய்ப்புகள் அதிகரிக்க வில்லை (மார்பக ஊடுகதிர் ஆய்வு சோதனையானது நோய் பாதிப்பு உள்ளது என தவறான நோய் கண்டறிதல் அறிக்கையினை வழங்கியுள்ளது) என்பதோடு மார்பக ஊடுகதிர் ஆய்வு கண்டறிதலில் உள்ள பணிச் சுமையை 44% என்ற அளவிற்கும் குறைக்கிறது.
- செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தி (AI) மேற்கொள்ளப்படும் மார்பக ஊடுகதிர் ஆய்வு ஆனது, வழக்கமான ஆய்வுகளுடன் ஒப்பிடும்போது ஐந்தில் ஒரு பங்கு மார்பகப் புற்றுநோய்களைக் கண்டறிந்தது.




**LK-99**





- தென் கொரியாவைச் சேர்ந்த அறிவியலாளர்கள் குழுவானது, அறை வெப்பநிலையில் மீமின்கடத்தியாக செயல்படக் கூடிய ஒரு சாதனத்தை (LK-99) உருவாக்கியுள்ளதாகக் கூறியுள்ளது.
- ஒரு மீக்கடத்தி என்பது மின்தடை இல்லாத ஒரு நிலையான மீக்கடத்தி நிலையை அடையும் ஒரு சாதனம் ஆகும்.
- ஒரு மீமின்கடத்தியில், மின்னோட்டம் ஆனது காலவரையின்றி நீடிக்கும்.
- வழக்கமான கடத்திகளில், மின்தடையானது படிப்படியாக குறைகிறது.
- ஆனால் மீமின்கடத்திகளின் மின்தடையானது, மாறுநிலை வெப்பநிலையான ஒரு நிலையான வெப்பநிலைக்கு கீழே சுழிய நிலைக்கும் கீழே குறைகிறது.
- இந்த வெப்பநிலையில், ஒரு மீமின்கடத்தியானது எந்தவித மின்தடையும் இல்லாமல் மின்சாரத்தைக் கடத்த முடியும்.
- எந்தவித மின்தடையுமில்லாத நிலையில், ஒரு பொருள் மாறுநிலை வெப்பநிலையை (Tc) அடையும் போது வெப்பம், ஒலி அல்லது பிற ஆற்றல் வடிவங்கள் போன்ற எதையும் வெளியேற்றாது.

## நீரக்ஷி

- இது நீருக்கடியில் உள்ள கண்ணி வெடிகளைக் கண்டறிவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தானியங்கு கடலடி வாகனம் (AUV) ஆகும்.
- இது இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த வகையிலான முதல் ரக வாகனமாகும்.
- இது கொல்கத்தாவில் அமைந்துள்ள போர்க் கப்பல் தயாரிப்பு நிறுவனமான கார்டன் ரீச் கப்பல் கட்டமைப்பு மற்றும் பொறியியல் நிறுவனம் மற்றும் AEPL எனப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்பின் மூலம் உருவாக்கப் பட்டுள்ளது.
- வணிக ரீதியானப் பயன்பாட்டிற்கு முன்பு இது இந்தியக் கடற்படை, கடலோரக் காவல் படை மற்றும் இராணுவம் ஆகியவற்றினால் பயனர் சோதனைக்கு உட்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## கருவிழித் தொற்றுப் பாதிப்பினை ஒழித்தல்




- உலக சுகாதார அமைப்பானது (WHO), ஒரு பொது சுகாதாரப் பாதிப்பாக நிலவிய கருவிழித் தொற்றுப் பாதிப்பினை வெற்றிகரமாக அகற்றிய 18வது நாடாக ஈராக் நாட்டினை அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்துள்ளது.
- இந்தச் சாதனையானது, உலக சுகாதார அமைப்பின் கிழக்கு மத்தியத் தரைக் கடல் பகுதியில் இந்த மைல்கல்லை எட்டிய ஐந்தாவது நாடாக ஈராக் நாட்டினை இடம் பெறச் செய்துள்ளது.
- கூடுதலாக, ஈராக் நாட்டினை உலக அளவில் குறைந்தபட்சம் ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயை (NTD) அகற்றிய 50வது நாடாகவும் உலக சுகாதார அமைப்பு அங்கீகரித்துள்ளது.

- 2021-2030 ஆம் ஆண்டு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்கானச் செயல் திட்டத்தில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, 2030 ஆம் ஆண்டிற்குள் உலகின் 100 நாடுகள் இதே போன்ற மைல்கற்களை அடைய வேண்டும் என்ற இலக்கை நோக்கிய குறிப்பிடத் தக்கப் படிநிலையை இந்தச் சாதனை குறிக்கிறது.
- கருவிழித் தொற்றுப் பாதிப்பு (ட்ரக்கோமா) என்பது க்ளமிடியா டிராக்கோமாடிஸ் என்ற பாக்டீரியாவால் ஏற்படும் ஒரு பாக்டீரிய கண் தொற்று ஆகும்.
- இது முதன்மையாக கண்ணின் மேற்பரப்பையும் கண்ணிமையின் உட்புறத்தையும் பாதிக்கிறது.
- இது பாதிக்கப்பட்ட நபர்களின் கண் அல்லது மூக்கில் சுரக்கும் நீர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்வதன் மூலமாகவோ அல்லது நோய் பரப்பிகள் மற்றும் ஈக்கள் அல்லது குளியல் துண்டுகள் அல்லது துணிகள் போன்ற அசுத்தமானப் பொருட்களின் மூலம் மறைமுகமாகவோ பரவுகிறது.


## சந்திரயான் 3 – நிலவின் சுற்றுவட்டப் பாதை




- சந்திரயான்-3 விண்கலமானது சுமார் இருபத்தி மூன்று நாட்கள் பயணத்திற்குப் பிறகு நிலவின் சுற்று வட்டப் பாதையில் வெற்றிகரமாக உட்செலுத்தப்பட்டது.
- நிலவின் மேற்பரப்பில் மிதமான வேகத்தில் விண்கலத்தினைத் தரையிறக்கிய முதல் தேசம் என்ற ஒரு அந்தஸ்தைப் பெறுவதற்கான இந்தியாவின் முயற்சியில் இது ஒரு மிக முக்கியத்துவம் வாய்ந்தப் படிநிலையைக் குறிக்கிறது.
- இந்த விண்கலமானது நிலவைச் சுற்றி வரத் தொடங்கியதும், அது இஸ்ரோ தொலைவு அளவி, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு வலையமைப்பில் (ISTRAC) உள்ள விண்கல இயக்க வளாகத்திற்கு (MOX) சமிக்ஞைகளை அனுப்பத் தொடங்கியது.
- தற்போதைய நிலவரப்படி, சந்திரயான்-3 விண்கலமானது நிலவினைச் சுற்றி ஒரு நீள் வட்டச் சுற்றுப்பாதையில் உள்ளது.
- இது சந்திர மேற்பரப்பில் இருந்து அதன் சேய்மைப் புள்ளியில் தோராயமாக 18,074 கி.மீ. தொலைவிலும், அதன் அண்மைப் புள்ளியில் 164 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.
- எனினும், இந்த நீள்வட்டச் சுற்றுப்பாதையானது இந்த விண்கலத்திற்கான ஒரு இறுதிக் கட்டமைப்பு அல்ல.

- நிலவின் மேற்பரப்பிலிருந்து 100 கி.மீ. x 100 கி.மீ. உயரத்தில் அமைந்த ஒரு வட்ட வடிவச் சுற்றுப்பாதையை அடைவதை இது இலக்காகக் கொண்டுள்ளது.
- இந்த விண்கலத்தினை அதன் இறுதி கட்டச் சுற்றுப்பாதையில் துல்லியமாக நுழையச் செய்வதற்காக இஸ்ரோ நிறுவனம் நான்கு சுற்றுப்பாதை உந்துதல் முயற்சிகளை மேற் கொள்ளும்.
- சந்திரயான்-3 விண்கலமானது, ஒரு தரையிறங்குக் கலம் (LM), ஒரு உந்துவிசை விண்கலம் (PM) மற்றும் ஓர் உலாவி விண்கலம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- சந்திரயான்-3 விண்கலத்தின் தரையிறங்குக் கலமானது ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று நிலவின் மேற்பரப்பை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணைகள்




- இந்தியாவின் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நாக் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணை (ATGM) மற்றும் ஹெலினா (ஹெலிகாப்டரில் இருந்தபடி ஏவக் கூடிய NAG) ஆயுத அமைப்பின் ஒரு மாறுபட்ட வடிவமான 'துருவஸ்த்ரா' ஆகிய ஆயுதங்கள் இந்திய ஆயுதப் படையில் சேர்க்கப்பட உள்ளன.
- நாக் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணை மற்றும் ஹெலினா (துருவஸ்த்ரா) ஆகிய இரண்டு ஏவுகணைகளையும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கியுள்ளன.
- மேலும் அவை பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் (BDL) நிறுவனத்தினால் தயாரிக்கப் படுகின்றன.
- நாக் என்பது நிலத்தில் இருந்து வானில் பாயும் ஏவுகணையாகும்.
- துருவஸ்த்ரா என்பது வானில் இருந்து நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கும் ஏவுகணை ஆகும்.

## நாக் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணை





- ப்ரோஸ்பினா என்றும் அழைக்கப்படும் நாக், ஒருமுறை சுடப்பட்டு அதன் பிறகு எந்த ஒரு தொழில்நுட்ப உதவியும் தேவைப்படாத வகையிலான தாக்குதல் திறன் கொண்ட மூன்றாம் தலைமுறை தொழில்நுட்பத்திலான ஒரு பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணை ஆகும்.
- நாக் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணையானது, ஒருங்கிணைந்த வழிகாட்டுதல் ஏவுகணை உருவாக்கத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- ஒருங்கிணைந்த வழிகாட்டுதல் ஏவுகணை உருவாக்கத் திட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்ட மேலும் நான்கு ஏவுகணைகள் அக்னி, ஆகாஷ், திரிசூல் மற்றும் பிருத்வி ஆகியன ஆகும்.
- நாக் ஏவுகணை 4 கி.மீ. வரை உள்ள இலக்கைத் தாக்கும் திறனைக் கொண்டுள்ளது.
- இது மிக அதிக வெடிப்புத் திறன் கொண்ட பீரங்கி எதிர்ப்பு (HEAT) ஆயுதத்தினைக் கொண்டுள்ளது.

## ஹெலினா (துருவஸ்திரம்)

- ஹெலினா என்பது மேம்படுத்தப் பட்ட இலகுரக ஹெலிகாப்டரிலிருந்து (ALH) ஏவப்பட்ட வானிலிருந்து நிலத்தில் உள்ள ஒரு இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட ஒரு ஏவுகணை அமைப்பு ஆகும்.
- மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர் என்பது இரண்டு இரட்டை ஏவுகருவிகள் பொருத்தப் பட்டுள்ள நிலையில் அவற்றுள் ஒவ்வொன்றிலும் எட்டு ஏவுகணைகள் உள்ளன.
- இது 7 கி.மீ. வரையிலான இலக்கினைத் தாக்கும் திறன் கொண்டது மற்றும் 1.946 மீ நீளம் மற்றும் 0.150 மீ விட்டம் கொண்டது.
- இது ஏவுவதற்கு முன்னதாக இலக்கினைத் துல்லியமாக நிர்ணயித்து ஏவக் கூடிய (LOBL) செயல்முறையில் இயங்கக் கூடிய உயர் தெளிவுத் திறன் கொண்ட வரைபடமாக்க அகச் சிவப்பு ஆய்வுக் கருவியைக் (IIR) கொண்டுள்ளது.
- இது மிகவும் மோசமான வானிலை சூழ்நிலைகளிலும் தன்னிச்சையாக இலக்கினை நன்கு கண்டறிந்து, கண்காணிக்கும் திறன் கொண்டது.
- 2022 ஆம் ஆண்டில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது பயனர் சரிபார்ப்புச் சோதனைகளின் ஒரு பகுதியாக அதி-உயரப் பகுதிகளில் இந்த ஆயுத அமைப்பினை வெற்றிகரமாகச் சோதனை செய்தது.




## ஐன்ஸ்டீன் குறுக்கு வெட்டுக்கள்




- இந்த நிகழ்வானது 1915 ஆம் ஆண்டில் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அவர்களால் அவரது பொதுச் சார்பியல் கோட்பாட்டின் விளைவாக முதலில் கணிக்கப் பட்டது.
- ஐன்ஸ்டீன் குறுக்கு வெட்டுக்கள் ஒரு கண்கவர் வானியல் நிகழ்வாகும்.
- இது டென்னிஸ் வால்ஷ் தலைமையிலான ஒரு வானியலாளர்கள் குழுவால் 1985 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.
- பெகாசஸ் விண்மீன் திரளில் அமைந்துள்ள இது Q2237+0305 என்றும் அழைக்கப் படுகிறது.
- இது அலைநீளத்தில் z= 1.7 என்ற சிவப்பு நிறப் பெயர்ச்சியினைக் கொண்டிருந்தது.
- இது அதிகத் தொலைவில் அமைந்த, இதுவரையில் அறியப்பட்ட துடிப் பண்டங்களில் (குவாசர்) ஒன்றாக இதனைச் சேர்க்கிறது.
- குறுக்கு வெட்டுத் தோற்றம் போன்ற ஒரு வடிவத்தினைக் கொண்டுள்ளதன் காரணமாக இந்த நிகழ்விற்கு "ஐன்ஸ்டீன் குறுக்கு வெட்டுகள்" என்று பெயரிடப் பட்டது.
- ஈர்ப்புப் புல ஒளி விலகல் அமைப்பைச் சுற்றி துடிப்பண்டத்தின் நான்கு பிரகாசமான உருவங்கள் உருவானதன் மூலமாக இந்த வடிவமானது உருவாக்கப் பட்டது.
- இந்த நிகழ்வில், முன்புறத்தில் அமைந்த நீள்வட்ட அண்டமானது, சுமார் 11 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள பின்புற அண்டத்திலிருந்து வரும் ஒரு ஒளிக் கற்றையைச் சிதைத்துப் பிளவுபடுத்தியுள்ளது.

- அந்த நீள்வட்ட அண்டமானது பூமியிலிருந்து 6 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- ஐன்ஸ்டீன் குறுக்கு வெட்டுத் தோற்றத்தின் பிரமிக்க வைக்கும் காட்சிப் படுத்தலுக்குக் காரணமான ஒளிவில்லை (ஈர்ப்புப் புல ஒளிவிலகல் அமைப்பு) ஆனது, சமீபத்தில் 2021 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் அரிசோனாவில் உள்ள கிட் பீக் தேசிய ஆய்வகத்தில் உள்ள கருப்பு ஆற்றல் நிறமாலை கருவியால் உருவாக்கப் பட்டது.

## மாயா இயங்குதளம்




- பாதுகாப்பு அமைச்சகம் ஆனது மாயா OS எனப்படும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இயங்குதளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது இணையவெளித் தாக்குதல்களிலிருந்து தனது கணினி அமைப்புகளின் பாதுகாப்பு திறனை நன்கு வலுப்படுத்தச் செய்வதற்காக வேண்டி மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தினால் உருவாக்கப் பட்ட ஒரு புதுமையான இயங்கு தளமாகும்.
- இது இலவசமாகக் கிடைக்கப் பெறச் செய்கின்ற மென்பொருளைப் பயன்படுத்துகின்ற, திறந்தவெளி இயங்குதள மூலமான உபுண்டு இயங்குதளத்தினைச் சார்ந்துள்ளது.
- மிகவும் குறிப்பிடத் தக்க வகையில், Windows OS இயங்கு தளத்தின் இடைமுகம் மற்றும் செயல்பாடுகளைப் போன்று செயல்படுவதை ஒரு நோக்கமாகக் கொண்டு மாயா OS உருவாக்கப்பட்டுள்ளது.
- மாயா OS ஆனது சக்ரவியூகம் என்ற கடைநிலை தீநிரல் எதிர்ப்பு மற்றும் வைரஸ் தடுப்பு மென்பொருளைக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்து அமைச்சகக் கணினிகளிலும் மாயா OS செயல் படுத்தப் படும்.
- உபுண்டு இயங்கு தளமானது உலகில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் லினக்ஸ் இயங்கு தளங்களில் ஒன்றாகும்.
- மேலும் இது அதன் அதிக அளவிலானப் பாதுகாப்பு அம்சத்திற்காக பிரபலமாக அறியப் படுகிறது.
- Windows இயங்கு தளமானது அதிகமானச் சேவைகளை வழங்கச் செய்வதாலும் அதன் பின்னோக்கிய இணக்கத் தன்மையாலும் அதிக எண்ணிக்கையிலான தீநிரல் மற்றும் பாதிப்புகளைக் கொண்டுள்ளது.
- ஆனால் உபுண்டு இயங்கு தளத்தில் தீநிரல்களும் பாதிப்புகளும் மிகக் குறைவு ஆகும்.

## ஹியூக்ஸ் ஜூபிடர் 3 ஆய்வுத் திட்டம்

- ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் ஆனது ஜூபிடர் 3 என்ற உலகின் மிகப்பெரிய வணிகத் தகவல் தொடர்பு செயற்கைக் கோளினை விண்ணில் செலுத்தியது.
- ஜூபிடர் 3 செயற்கைக் கோளானது, ஏற்கனவே சுற்றுப்பாதையில் உள்ள ஹியூக்ஸ் ஜூபிடர் செயற்கைக் கோள் குழுவின் மற்ற செயற்கைக் கோள்களுடன் இணைந்தது.
- இது அமெரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் உள்ள ஹியூக்ஸ்நெட் சேவையின் வாடிக்கையாளர்களுக்கு 100 Mbps வேகத்தில் செயற்கைக்கோள் வழியிலான அகலப் பட்டை வரிசை இணையச் சேவையினை அணுக உதவும்.





## நீண்டதூரம் சுடும் வகையிலான சுழல் துப்பாக்கி "பிரபல்"

- 'பிரபல்' எனப்படுகின்ற நீண்ட தூரம் சுடும் வகையிலான இந்தியாவின் முதல் சுழல் துப்பாக்கியினை AWEIL என்ற நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- பிரபல் சுழல் துப்பாக்கியானது 50 மீட்டர் வரையிலான இலக்கைச் சுடும் திறனை உடையது.
- இது மற்ற சுழல் துப்பாக்கிகளின் தொலைவு வரம்பினை விட இரண்டு மடங்கு அதிகம் ஆகும்.
- இந்திய மேம்பட்ட ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் தயாரிப்பு நிறுவனம் (AWEIL) என்பது கான்பூரிலுள்ள ஆர்மபூர் என்ற இடத்தில் இயங்கி வரும் ஒரு அரசு நிறுவனம் ஆகும்.



## கண்கவர் நெபுலா வளையம்

- ஒரு நட்சத்திரத்தின் இறுதி நிலைகளின் காட்டும் கண்கவர் புகைப்படங்களை ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி எடுத்துள்ளது.
- இந்த படங்கள் ஆனது இனிப்பு மாவுப் பண்டம் வடிவில் தோன்றும் வளைய வடிவ நெபுலா பற்றிய கூடுதல் விவரங்களை வழங்குகின்றன.
- செயலிழந்து வரும் நட்சத்திரங்கள் அதன் வெளிப்புற அடுக்குகளை விண்வெளியில் வெளியேற்றிய பிறகே இவை தோன்றும்.
- மெஸ்ஸியர் 57 (M57) எனப்படும் இந்த நெபுலா என்பது பூமியிலிருந்து சுமார் 2,600 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.




## லூனா-25 விண்கலம்

- ரஷ்யாவின் லூனா-25 விண்கலமானது கட்டுப்பாடற்ற சுற்றுப் பாதையில் சிக்கி சுழன்று நிலவின் மீது விழுந்தது.
- 1976 ஆம் ஆண்டிற்குப் பிறகு ரஷ்யா அனுப்பிய முதல் நிலவு ஆய்வு விண்கலம் இது ஆகும்.
- விண்கல இயக்குனர் இல்லாத இந்த விண்கலம் ஆனது நிலவின் தென் துருவத்தில் தரையிறங்குவதை இலக்காகக் கொண்டிருந்தது.
- 2019 ஆம் ஆண்டில் தென் துருவத்தில் தரையிறங்குவதற்கான இந்திய விண்கலத்தின் முந்தைய முயற்சியானது, அந்த விண்கலம் சந்திரனின் நிலவின் மேற்பரப்பில் மோதியதால் தோல்வியடைந்தது.
- லூனா 25 உடன், ஜூலை 14 ஆம் தேதியன்று விண்ணில் ஏவப்பட்ட இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலம், நிலவின் தென் துருவப் பகுதியில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

- இதுவரையில், சோவியத் ஒன்றியம், அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே வெற்றிகரமாக நிலவில் தரையிறங்குவதைச் சாதித்துள்ளன.



## சந்திரயான் 3 விண்கலம்




- சந்திரயான் 3 விண்கலமானது, ஜூலை 14 ஆம் தேதியன்று மார்க் III ஏவுகலத்தின் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.

- ❖ இது நிலவின் மேற்பரப்பினை எட்டுவதற்கு 41 நாட்கள் ஆனது.
- ❖ இந்த வெற்றிகரமான நிலவு ஆய்வுத் திட்டத்தின் மூலம், அமெரிக்கா, சீனா மற்றும் முந்தைய சோவியத் ஒன்றியம் ஆகிய நாடுகளுக்குப் பிறகு நிலவின் மேற்பரப்பில் ஒரு மிதமான வேகத்தில் விண்கலத்தினை தரையிறங்கச் செய்த ஒரு நான்காவது நாடாக இந்தியா மாறியுள்ளது.
- ❖ மேலும் நிலவின் தென் துருவத்தில் விண்கலத்தினைத் தரையிறக்கிய முதல் நாடு என்ற பெருமையையும் இந்தியா பெற்றுள்ளது.
- ❖ 'பிரக்யான்' எனப்படும் உலாவி விண்கலமானது தென் துருவத்தில் நிலை நிறுத்தப் பட்டு உள்ளது.
- ❖ இந்த விண்கலத்தினை நிலவின் மண் கட்டமைப்பு மற்றும் அதன் பாறைக் கட்டமைப்பு ஆகியவை குறித்து ஆய்வு செய்வதற்காக அடுத்த 14 நாட்களுக்கு இஸ்ரோ பயன்படுத்த உள்ளது.
- ❖ தென் துருவத்தில் பனிப் படிவுகள் மற்றும் கனிமங்கள் காணப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

### *முக்கியத்துவம் வாய்ந்த கடைசி 15 நிமிடச் செயல்பாடு*

- ❖ தோராயமாக மாலை 5:45 மணிக்குத் தொடங்கி 15 நிமிடங்கள் வரை நீடித்த சந்திரயான் - 3 விண்கலத்திற்கான முக்கியத்துவம் வாய்ந்த தரையிறங்கும் செயல்பாடான இது "முக்கியத்துவம் வாய்ந்த கடைசி 15 நிமிடச் செயல்பாடு" என்று அழைக்கப் படுகிறது.
- ❖ இந்தக் காலக் கட்டம் முழுவதும், அந்த விண்கலமானது சுயமாக இயங்கியதால், அதன் கட்டமைப்பு பொறியாளர்களையும் விஞ்ஞானிகளையும் வெறும் பார்வையாளர்களாக மாற்றியது.
- ❖ அதன் செயல்பாடுகள் குறித்த பல்வேறு அனைத்து விவரங்களும் விக்ரம் தரையிறங்கு விண்கலத்தின் உள்ளிணைக்கப்பட்ட கணினிகளில் பதிவாக்கப் பட்டிருந்தது.
- ❖ இந்த ஒரு முயற்சியானது, அதிவேக இயக்கம் கொண்ட ஒரு கிடைமட்ட நிலையிலிருந்து படிப்படியாக, நிலவின் மேற்பரப்பில் மிதமான முறையில் தரையிறங்கச் செய்வதை எளிதாக்க உதவும் ஒரு செங்குத்து இறங்குப் பாதையில் விண்கலத்தினை நுழையச் செய்யும் செயல்முறையை உள்ளடக்கியது.

## சுர்ச்சுவே மருந்திற்கு உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு ஒப்புதல்




- ❖ அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு ஆனது (FDA) வயது வந்தவர்களில் நிலவும் மகப்பேற்றுக்குப் பிறகான மனச்சோர்வு (PPD) சிகிச்சைக்காக சுர்ச்சுவே (சுரானோலென்) மருந்தினைப் பயன்படுத்துவதற்கு அங்கீகரித்துள்ளது.

- PPD என்ற ஒரு நிலையானது அதனை எதிர்கொள்ளும் பெண்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்துகிறது.
- கர்ப்ப காலத்திற்குப் பிறகு ஒரு இயல்பான வாழ்வியல் நடவடிக்கைகளுக்குத் திரும்பச் செய்வதற்கான அவர்களின் திறனை இந்த நிலை மோசமாக தடுக்கிறது.

## வேலா விண்மீன் திரள்



- ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியானது, தீவிரமான முறையில் உருவாகி வரும் ஒரு ஜோடி நட்சத்திரங்களைப் பற்றிய தனித்துவமானத் தகவல்களை வழங்கி உள்ளது.
- இந்த இளம் இணை நட்சத்திரங்களுக்கு ஹெர்பிக்-ஹாரோ 46/47 என்று பெயரிடப் பட்டு உள்ளது.
- இது பூமியிலிருந்து 1,470 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்த வேலா என்ற விண்மீன் திரளில் அமைந்துள்ளது.
- காலப்போக்கில் ஒரு நட்சத்திரம் எவ்வளவு நிறையினைப் பெறுகின்றன என்பதைப் பற்றியத் தகவலை இது வழங்கும்.
- இது சூரியனின் மாதிரியை உருவாக்கச் செய்வதற்கும், ஒப்பீட்டளவில் குறைந்த நிறை கொண்ட நட்சத்திரம் மற்றும் சூரியக் குடும்பம் எவ்வாறு உருவானது என்பதை ஆராயச் செய்வதற்கும் உதவும்.

## மைசீஸ் அண்டம்

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியானது, கடந்த கோடைக் காலத்ததின் போது கண்டறியப் பட்ட அண்டமானது இதுவரையில் கண்டறியப்பட்ட அண்டங்களில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது என்பதை வானியலாளர்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளது.
- மைசீஸ் அண்டத்தினைக் கண்டறியப்பட்ட ஒரு நிகழ்வானது, பெருவெடிப்பிற்குப் பிறகு 390 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு காலத்தினைச் சேர்ந்தது என்பதை எடுத்து உரைக்கிறது.
- பேரண்டம் முழுவதும் சுமார் 13.77 பில்லியன் ஆண்டுகள் பழமையானது.
- ஆராய்ச்சியாளர்கள் குழுவானது, தற்போது மைசீஸ் அண்டத்தின் காலத்தை விட அதன் முந்தையக் காலத்தினைச் சேர்ந்ததாக கருதப்படும் இதர 10 பிற அண்டங்களை ஆய்வு செய்து வருகிறது.




## உலகின் முதல் மனித உருவ எந்திர விமானி


- தென் கொரிய அறிவியலாளர்கள் விமானத்தை இயக்கும் திறன் கொண்ட மனித உருவ எந்திரத்தினை அறிமுகப் படுத்தியுள்ளனர்.
- PIBOT எனப்படும் இந்த எந்திரம், விமான நேர அட்டவணைகள் மற்றும் அவசரகால நெறி முறைகளை மனப்பாடம் செய்வதற்கு செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- இதில் ஒரு விமானத்தின் அமைப்புகள் மற்றும் பல்வேறு செயல்பாட்டுச் சூழ்நிலைகளை கண்காணிக்கும் திறன் கொண்ட பல ஒளிப்படக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது.
- PIBOT என்ற எந்திரமானது விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடு (ATC) மற்றும் விமான கட்டுப்பாட்டு மையத்தில் உள்ள பிற மனிதர்களுடனும் தொடர்பு கொள்ள முடியும், அதாவது அது ஒரு தலைமை விமானி அல்லது தலைமை அதிகாரியின் வழிகாட்டுதல் மூலம் செயல்பட முடியும்.




## மனித தோல் செல்களை மாற்றும் முறை


- மனித தோல் செல்களைப் பல் செல்லாக்க குருத்தணுவாக (ப்ளூரிபோடென்ட் ஸ்டெம் செல்களாக) மாற்றச் செய்வதற்கான தொழில்நுட்பத்தை இந்திய ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.

- இது தூண்டப்பட்ட பல் செல்லாக்க குருத்தணு (iPSCs) என்று அறியப் படுகிறது.
- பல்வேறு நோய்களுக்கான சிகிச்சையில் தனிப் பயனாக்கப்பட்ட பல்வேறு குருத்தணுச் சிகிச்சைகளை வழங்க இந்த ஆராய்ச்சி வழி வகுக்கிறது.
- இந்த iPSC செல்கள் குறிப்பிட்ட நோயாளிகளுக்காக பயன்படுத்தக் கூடியது என்பதோடு இது உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் போது நோயெதிர்ப்பு நிராகரிப்பு அபாயத்தைக் குறைக்கிறது.





## HD 45166

- பேரண்டத்தின் மிக வலிமையான காந்த ஈர்ப்புப் புலமாக மாறக் கூடிய நட்சத்திரம் ஒன்று வானியலாளர்களால் கண்டறியப் பட்டுள்ளது.
- HD 45166 என்று பெயரிடப்பட்ட இந்த நட்சத்திரமானது, சூரியனை விட பல மடங்கு பெரிய அளவிலான, ஹீலியம் வாயு நிறைந்த ஒரு மாபெரும் நட்சத்திரமாகும்.
- இது பூமியிலிருந்து 3,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இது இதுவரையில் கண்டறியப்பட்ட ஆற்றல் வாய்ந்த நட்சத்திரத்திரங்களை விட மிக சக்தி வாய்ந்தக் காந்தப் புலத்தை (அதன் ஆற்றலின் அலகு - 43,000 காஸ்) கொண்டு உள்ளது.




## வேறுபட்ட எலக்ட்ரான் இயக்கம் கொண்ட துகள்கள்



- "பேய் துகள்" எனப்படும் வேறுபட்ட எலக்ட்ரான் இயக்கம் கொண்ட துகள்கள் ஆனது சில அமெரிக்க ஆராய்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு பரிசோதனையில் கண்டறியப் பட்டது.
- இது புரோட்டான் அல்லது எலக்ட்ரான் போன்ற வழக்கமான துகள் அல்ல.
- மாறாக இது திண்மத்தில் உள்ள எலக்ட்ரான்களின் கலவையால் உருவாக்கப்பட்ட ஒரு கலப்புத் துகளாகும்.
- இது மீக்கடத்திகள் தொழில்நுட்பத்தில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கும் திறனை கொண்டுள்ளது.
- தற்போது உள்ள மீக்கடத்திகளின் பண்புகளை நிலைநிறுத்தச் செய்வதற்கு வேண்டி அவற்றின் வெப்ப நிலையானது 100 டிகிரி பாரன்ஹீட் என்ற அளவிற்குக் குறைவாகப் பராமரிக்க வேண்டியுள்ளது.

## HE 1005-1439





- பெங்களூருவில் உள்ள இந்திய வானியற்பியல் நிறுவனத்தின் அறிவியலாளர்கள் HE 1005-1439 என்று பெயரிடப்பட்டத் தனித்தன்மை வாய்ந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டு அறிந்துள்ளனர்.

- இது கார்பன் செறிந்த மற்றும் குறைந்த உலோக மூலக்கூறுகள் கொண்ட (CEMP) ஒரு நட்சத்திரமாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- இது நட்சத்திர உருவாக்கச் செயல்முறைகள் குறித்தப் புரிதலின் மூலம் வழங்கப்பட்ட முந்தைய வகைப்பாடுகளையும் சவால்களையும் நிவர்த்தி செய்யும்.
- இது மேலும் மெதுவான (S-) மற்றும் இடைநிலை (I-) ஆகிய இரண்டு வெவ்வேறு நியூட்ரான்-பிணைப்பு செயல்பாடுகளின் மூலம் உருவாக்கப்பட்டதற்கான பல்வேறு அறிகுறிகளையும் காட்டுகிறது.

## விசைப் பலகை அழுத்தங்களின் ஒலிசார் அலைவரிசை அடிப்படையிலான தாக்குதல்


- சமீபத்திய அறிக்கையானது, விசைப்பலகையின் பல அழுத்தங்களால் உருவாகும் ஒரு ஒலியைப் பகுப்பாய்வு செய்து கடவுச் சொற்களைக் கண்டறிவதற்குச் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்த முடியும் என்று வெளிக் கொணர்ந்துள்ளது.
- இந்த நுட்பமானது, எந்த எழுத்துக்கள் அழுத்தப்படுகின்றன என்பதை அறிவதற்காக விசைப் பலகையில் தட்டச்சு செய்வதால் உருவாகும் ஒலிகளைப் பயன்படுத்துகிறது.
- இந்த தனித்துவமான ஒலிகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், கணினி நிரல்களில் ஊடுறுவோர் சரியான கருவிகளைக் கொண்டு, மக்கள் தட்டச்சு செய்யும் சில துல்லியமான எழுத்துக்கள் மற்றும் எண்களைக் கண்டறிய முடியும்.
- முக்கியச் செயல்முறையின் பக்க விளைவுத் தாக்குதல்கள் (Side Channel attacks) என்பது குறியாக்க முறையில் பயன்படுத்தப்படும் துணை அமைப்புகளின் பகுப்பாய்வின் அடிப்படையில் குறியாக்கவியல் வழிமுறையை ஊடுருவச் செய்யும் முறையாகும்.




## மனித உடலில் பன்றியின் சிறுநீரகம்

- நியூயார்க் நகரத்தைச் சேர்ந்த மருத்துவர்கள், மூளைச் சாவு அடைந்த ஒரு மனிதரின் உடலில் மரபணு மாற்றப்பட்ட ஒரு பன்றியின் சிறுநீரகத்தைப் பொருத்தி வெற்றி கண்டுள்ளனர்.

- ❖ விலங்குகளின் உறுப்புகளை மனிதர்களின் உடலில் பொருத்தும் சிகிச்சை செனோடிரான்ஸ்பிளான்டேஷன் (Xenotransplantation) எனப்படுகிறது.
- ❖ இதுவரையில், மனித நோயெதிர்ப்பு அமைப்பானது பல நோயெதிர்ப்புத் தடுப்பு மருந்துகள் செலுத்தப் பட்ட போதிலும் பல்வேறு அந்நியத் திசுக்களைத் தாக்குவதால் இவ்வகையில் மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சைகள் பெரும்பாலும் தோல்வி அடைந்துள்ளன.




## ESO 300-16




- ❖ ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியானது ESO 300-16 எனப்படுகின்ற ஓர் ஒழுங்கற்ற அண்டத்தினைப் படம் பிடித்துள்ளது.
- ❖ இது சுமார் 28.7 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் எரிடானஸ் விண்மீன் திரளில் அமைந்துள்ளது.
- ❖ ஒழுங்கற்ற அண்டங்களானது, தெளிவாக வரையறுக்கப்பட்ட வடிவத்தினைக் கொண்டு இருக்காமல், ஆங்காங்கு காணப்படும் மேகத் திரள்களைப் போலத் தோன்றும்.
- ❖ ESO 300-16 என்பது தொலைதூரத்தில் அமைந்த ஒரு சிறிய அண்டம் ஆகும்.

## நிலவின் மேற்பரப்பில் காணப்படும் மண்



- சந்திரயான்-3 விண்கலமானது நிலவில் இதுவரை ஆராயப்படாத தென் துருவத்தில் விண்கலத்தை மிதமான வேகத்தில் தரையிறக்குவதை நோக்கமாகக் கொண்டு ஏவப் பட்டது.
- நாமக்கல் மாவட்டத்தில் உள்ள சித்தம்பூண்டி என்ற கிராமத்தில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகள் நிலவின் மேற்பரப்பில் குறிப்பாக தென் துருவத்தில் உள்ள மண்ணுடன் மிகவும் ஒத்துள்ளதாகக் கூறப்படுகிறது.
- சந்திரயான்-2 மற்றும் சந்திரயான்-3 ஆகிய இரண்டு திட்டங்களின் மூலம் சேகரிக்கப் பட்ட மண்ணுடன் ஒப்பிட்டுச் சோதனைகளை மேற்கொள்வதற்காக நாமக்கல் மாவட்ட நிர்வாகம் இஸ்ரோவுக்கு அதன் மண் மாதிரிகளை அனுப்பியது.

## LUPEX ஆய்வுத் திட்டம்




- நிலவின் துருவ ஆய்வுத் திட்டத்தினை மேற்கொள்வதற்காக (LUPEX) இஸ்ரோ மற்றும் ஜப்பானின் விண்வெளி ஆய்வு நிறுவனம் ஆகியவை கைகோர்த்துள்ளன.
- இது நிலவின் துருவப் பகுதிகளில் வாழ்வியலுக்கு சாத்தியமான செயல்பாடுகள் மற்றும் நீர்-பனி சார் வளங்கள் உள்ளனவா என்பது குறித்து ஆராய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த ஆய்வுத் திட்டத்தில் ஜப்பானின் விண்வெளி ஆய்வு நிறுவனம் உருவாக்கிய உலாவிக் கலம் மற்றும் இஸ்ரோவால் உருவாக்கப்பட்ட தரையிறங்கு கலம், நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் கருவிகள் அடங்கும்.

## முப்பரிமாண கண் ஊடறிதல் சோதனை மற்றும் பார்கின்சன்

- முப்பரிமாண கண் ஊடறிதல் சோதனையானது, பார்கின்சன் நோயினால் பாதிக்கப் படுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளவர்களை, அந்த அறிகுறிகள் ஏற்படுவதற்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பே அடையாளம் காண உதவுகிறது.
- வளர்ந்து வரும் 'ஒக்குலோமிக்ஸ்' என்ற துறையில், விழித்திரையின் படங்களைப் பயன்படுத்திப் பல்வேறு நரம்பியல் கோளாறுகளின் அறிகுறிகளை அடையாளம் காண்பதற்கு இந்த ஆராய்ச்சி உதவுகிறது.
- கண்ணில் ஏற்படும் மாற்றங்கள் இந்த நோயின் ஆரம்பகட்டக் குறிகாட்டியாக இருக்கலாம் என்பதால் இதன் மூலம் ஆரம்ப காலத்தில் நோயறிவதற்கும், ஆரம்பக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உதவும்.





## SeamlessM4T

- மெட்டா நிறுவனம் தனது SeamlessM4T எனப் படுகின்ற புதிய செயற்கை நுண்ணறிவுக் கருவியை அறிமுகம் செய்துள்ளது.
- இது கிட்டத்தட்ட 100 வெவ்வேறு மொழிகளின் வாய்மொழி உரைகளை அடையாளம் காணுதல் மற்றும் வாய்மொழியிலிருந்து உரை மொழிபெயர்ப்பு ஆகிய திறன் கொண்ட பல்மாதிரி செயற்கை நுண்ணறிவு மாதிரியாகும்.
- SeamlessM4T என்பது முதல் வகையான அனைத்து அம்சங்கள் அடங்கிய பன்மொழி பல்மாதிரி செயற்கை நுண்ணறிவு மொழிபெயர்ப்பு மற்றும் ஒலிபெயர்ப்பு மாதிரி ஆகும்.
- இந்த ஒற்றை மாதிரியானது, வழங்கப்பட்டப் பணியைப் பொருத்து 100 மொழிகள் வரை வாய்மொழியிலிருந்து உரை மொழிபெயர்ப்பு, வாய்மொழியிலிருந்து வாய்மொழி மொழி பெயர்ப்பு, உரையிலிருந்து வாய்மொழியாக மொழிபெயர்ப்பு மற்றும் உரையிலிருந்து உரையாக மொழிபெயர்ப்பு ஆகியவற்றினை மேற்கொள்ளும் திறன் கொண்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சர்வதேசப் பெரும்பூனை இனங்கள் கூட்டணி


- புவியில் உள்ள ஏழு பெரும்பூனை இனங்களைப் பாதுகாப்பதற்காக இந்தியா சமீபத்தில் சர்வதேசப் பெரும்பூனை இனங்கள் கூட்டணியைத் தொடங்கியது.
- புலி, சிங்கம், சிறுத்தை, பனிச் சிறுத்தை, சிவிங்கிப் புலி, ஜாகுவார் மற்றும் பூமா ஆகிய ஏழு பெரும்பூனை இனங்களைப் பாதுகாப்பதில் இந்தத் திட்டம் பெரும் கவனம் செலுத்துகிறது.
- ஏழு பெரும்பூனை இனங்களின் இயற்கையான வாழ்விடங்களைக் கொண்டுள்ள 97 நாடுகளைச் சென்றடைவதை இந்தக் கூட்டணி நோக்கமாகக் கொண்டுள்ளது.




## அண்டார்டிகாவின் கடல் பனிக்கட்டி பரவல்

- அண்டார்டிகாவின் கடல் பனிக்கட்டி ஆனது, 1991-2020 ஆம் ஆண்டில் இருந்த சராசரி அளவிலிருந்து ஆறுக்கும் மேற்பட்ட புள்ளிகள் வரை (SD) விலகியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் தேதியன்றைய நிலவரப்படி, கடல் பனியின் பரப்பளவு சுமார் 14.2 மில்லியன் சதுர கிலோமீட்டராக இருந்தது.
- ஆண்டின் இந்தக் காலத்தில் கடல் பனிப்பரவலின் அளவு ஆனது சுமார் 16.7 மில்லியன் சதுர கிலோ மீட்டராக இருக்க வேண்டும்.
- 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், கடல் பனியின் பரப்பளவு 11.02 மில்லியன் சதுர கிலோ மீட்டராக இருந்த நிலையில், இது 1991-2020 ஆகிய காலக் கட்டத்தில் இருந்த சராசரி அளவிலிருந்து 18.13 சதவீதம் குறைந்துள்ளது .

- இந்த மதிப்பானது கடந்த 45 ஆண்டுகளில் பதிவான மிகக் குறைவான ஒரு அளவாக தர வரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- அண்டார்டிகா பகுதியானது, செயற்கைக் கோள் செயல்பாட்டுச் சகாப்தத்தின் ஒட்டு மொத்த நீண்ட காலச் சராசரியுடன் ஒப்பிடும் போது சுமார் 2.6 மில்லியன் சதுர கிலோ மீட்டர் கடல் பனிப் பரவலை இழந்துள்ளது.




## பார்காச்சிக் பனிப்பாறை - லடாக்

- லடாக்கில் உள்ள இமயமலைப் பார்காச்சிக் பனிப்பாறை வேகமாக உருகுவதால் மூன்று பனிப்பாறை ஏரிகள் உருவாகலாம் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- அவை சராசரியாக 34 முதல் 84 மீட்டர் வரையிலான ஆழம் கொண்டதாக இருக்கலாம்.
- இந்த ஏரிகள் இமயமலையில் பனிப்பாறை ஏரி உடைப்பினால் ஏற்படும் ஒரு பெரு வெள்ளத்திற்கான சாத்தியமான மூல ஆதாரமாக இருக்கக் கூடும்.
- இந்த ஒவ்வொரு ஏரியின் பரப்பளவு 43 முதல் 270 ஹெக்டேர் வரை இருக்கக் கூடும்.
- பனிப்பாறையின் வருடாந்திர உருகும் விகிதம் ஆனது 1971 முதல் 1999 வரையில் (28 ஆண்டுகள்) கணக்கிடப் பட்டதை விட, 1999 மற்றும் 2021 (22 ஆண்டுகள்) ஆகிய ஆண்டுகளுக்கு இடையே 6 மடங்கு வேகமாக இருந்தது.
- பனிக்கட்டி உருகுவதன் அளவானது சராசரியாக ஆண்டிற்கு சுமார் 12 மீட்டர் என்ற விகிதத்தில் இருந்தது.
- பார்காச்சிக் பனிப்பாறையானது, சுரு நதி பள்ளத்தாக்கில் உள்ள மிகப் பெரியப் பனிப் பாறைகளில் ஒன்றாகும்.
- இது மேற்கு இமயமலையின் தெற்கு சான்ஸ்கர் மலைத் தொடரின் ஒரு பகுதியாகும்.
- இமயமலையின் ஒரு பகுதியான சான்ஸ்கர் மலைத் தொடர் ஆனது லடாக் ஒன்றியப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.




## மேற்கத்திய ட்ராகோபன்




- ❖ இமாச்சலப் பிரதேசத்தின் மாநிலப் பறவையான மேற்கத்திய ட்ராகோபன் (ட்ராகோபன்-மெலானோசெபாலஸ்) இந்தியாவின் சில பகுதிகளில் அதன் வாழ்விட இழப்பை எதிர்கொண்டு வருகின்றன.

- ஆனால் அதிகாரிகளின் முயற்சியால், மாநிலத்தின் சரஹான் ஃபெசன்ட்ரி எனப்படும் வளங்காப்பு இனப்பெருக்க மையத்தில் இந்த இனத்தின் எண்ணிக்கையில் படிப் படியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- கடந்த இருபது ஆண்டுகளில் அதன் எண்ணிக்கையில் சீரான வகையில் உயர்வு ஏற்பட்டுள்ளது.
- இந்தப் பறவை வடமேற்கு இமயமலையில், வடக்குப் பாகிஸ்தானிலிருந்து (சிந்து-கோஹிஸ்தான் மாவட்டம்) காஷ்மீர் மற்றும் இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்டின் மேற்குப் பகுதிகள் ஆகியவற்றினை உள்ளடக்கிய இந்தியப் பகுதிகள் வரை பரவிக் காணப் படுகின்றன.

## பூடானில் உள்ள புலிகள் எண்ணிக்கை

- இந்தியா மற்றும் பூடான் ஆகிய நாடுகளின் வனங்களில் உள்ள புலிகளின் எண்ணிக்கை குறிப்பிடத் தக்க அளவில் உயர்ந்துள்ளன.
- பூடானின் காடுகளில் உள்ள புலிகளின் மொத்த எண்ணிக்கை 131 ஆக அதிகரித்துள்ள நிலையில், இது 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது முறைசார் கணக்கெடுப்பில் பதிவான எண்ணிக்கையை விட 27% அதிகமாகும்.
- இந்தியாவில் உள்ள புலிகளின் மொத்த எண்ணிக்கையானது 3,682 ஆக பதிவாகி உள்ளதையடுத்து, உலகிலுள்ள 75% புலிகளின் வாழ்விடமாக இந்தியா உள்ளது.
- நேபாளத்தில் உள்ள புலிகளின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டு முதல் கிட்டத்தட்ட மூன்று மடங்காக அதிகரித்து 355 ஆக உள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முந்தையக் கணக்கெடுப்பின் படி, வங்காளதேசத்தில் குறிப்பாக சுந்தரவனக் காடுகளில் சுமார் 114 புலிகள் உள்ளன.
- இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 40,000 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை என்பது, 1972 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முதல் அனைத்திந்தியப் புலிகள் கணக்கெடுப்பில் வெறும் 1,827 புலிகள் மட்டுமே இருப்பதாகக் கண்டறியப் பட்டன.



## நெகிழிக் கழிவு உற்பத்தியானது உலகக் கழிவு மேலாண்மைத் திறனை விஞ்சும் தினம் - 2023 அறிக்கை




- இந்த ஆண்டில் கிட்டத்தட்ட 68,642,999 டன் நெகிழிக் கழிவுகள் இயற்கை வாழிடங்களில் வீசப் படும் என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- உலகிலுள்ள முறையாக கையாளப்படாத 52 சதவீதக் கழிவுகளுக்குக் காரணமான 12 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- ஒரு நபருக்கான வருடாந்திர நுகர்வு 128.9 கிலோ என்ற அளவுடன் உலகிலேயே அதிக அளவில் நெகிழிக் கழிவுகளை உண்டாக்கும் நாடாக ஐஸ்லாந்து உள்ளது.
- இது இந்தியாவில் பதிவாகியுள்ள ஒரு நபருக்கான வருடாந்திர நுகர்வான 5.3 கிலோ என்ற அளவை விட 24.3 மடங்கு அதிகம் ஆகும்.
- உலகளவில் ஓர் ஆண்டில் ஒரு நபரின் சராசரி நெகிழி நுகர்வு 20.9 கிலோ ஆகும்.
- 2023 ஆம் ஆண்டில் உலகளவில் 159 மில்லியன் டன் நெகிழிகள் (குறுகியக் காலத்திற்கு மட்டுமே பயன்படுத்தக் கூடியவை) உற்பத்தி செய்யப்படும்.
- இவற்றில் 43 சதவீதமானது (68.5 மில்லியன் டன்கள்) மாசினை ஏற்படுத்தச் செய்வதாக அமையும்.
- ஆண்டுதோறும் வணிகப் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் மொத்த நெகிழிப் பொருட்களில் சுமார் 37 சதவிகிதம் குறுகிய காலம் மட்டுமே பயன்படுத்தக் கூடிய நெகிழிகள் ஆகும்.
- முறையாகக் கையாளப்படாத நெகிழிக் கழிவுகளை அதிகளவில் கொண்ட மூன்று நாடுகள் மொசாம்பிக் (99.8 சதவீதம்), நைஜீரியா (99.44 சதவீதம்) மற்றும் கென்யா (98.9 சதவீதம்) ஆகியனவாகும்.

- இந்தியாவில் 98.55 சதவீதக் கழிவுகள் முறையாகக் கையாளப்படாத நிலையில் இந்தக் குறியீட்டில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- இந்தியா ஆண்டுதோறும் சுமார் 14.2 மில்லியன் டன் நெகிழிக் கழிவுகளைச் செயல் முறையாக்கும் திறனைக் கொண்டுள்ளது.

## அருகி வரும் இமயமலைக் கழுகு

- இமாலயக் கழுகுகளின் காப்பு இனப் பெருக்கம் ஆனது இந்தியாவில் முதன்முதலில் கௌஹாத்தியில் உள்ள அசாம் மாநில உயிரியல் பூங்காவில் பதிவு செய்ய ப்பட்டது.
- 66,000 எண்ணிக்கையாக உள்ள இந்த இனங்கள் ஆனது 'அச்சுறுத்தலுக்கு அருகில் உள்ள இனங்கள்' என வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இந்த கழுகுகள் இமயமலையின் உயரமானப் பகுதிகளைத் தாயகமாகக் கொண்டவை.
- பிரான்சு நாட்டிற்குப் பிறகு உலகில் இத்தகைய நிகழ்வு இரண்டாவதாக இந்தியாவில் பதிவாகியுள்ளது.
- சமீப ஆண்டுகளில் கழுகுகளின் எண்ணிக்கையானது மோசமான அளவில் குறைந்து உள்ளது.
- இது மூன்று உள்நாட்டு ஜிப்ஸ் கழுகு இனங்களை 'மிக அருகி வரும் இனங்கள்' என்பதாக அறிவிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.

**BIRD'S EYE VIEW**

**9 RECORDED SPECIES:** Oriental white-backed, long-billed, slender-billed, Himalayan, red-headed, Egyptian, bearded, cinereous and the Eurasian Griffon.

(4 CRITICALLY ENDANGERED, 1 ENDANGERED, 3 NEAR THREATENED)

**THE CRISIS:** A massive dip in vulture populations came into limelight in the mid-90s, and in 2004 the cause of the crash was established as diclofenac, a veterinary nonsteroidal anti-inflammatory drug.



**WHAT NEXT AFTER 2006 PROJECT:**


- Testing of nonsteroidal anti-inflammatory drugs on vultures, development of new NSAIDs
- Covering two more species in the breeding programme that earlier focussed on 3 critically endangered species
- Additional conservation breeding centres and four rescue centres planned across India
- Nationwide vulture survey once in four years

## கெட்டோப்ரோஃபென் மற்றும் அசெக்ளோஃபெனாக்

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் நாட்டில் கழுகுகளைப் பாதுகாப்பதற்காக கீட்டோபுரோஃபென் மற்றும் அசெக்ளோஃபெனாக் ஆகியவற்றின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகத்திற்குத் தடை விதித்துள்ளது.

- ❖ இது 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டத்தின் கீழ் தடை செய்யப் பட்டுள்ளது.
- ❖ இவை ஊக்கிகள் அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகள் (NSAID) ஆகும்.
- ❖ மனிதர்கள் மற்றும் விலங்குகளில் வலி மற்றும் வீக்கத்தைப் போக்கும் மருந்தாக அவை அடிக்கடி பயன்படுத்தப் படுகின்றன.
- ❖ இந்த மருந்தினைத் தடை செய்வதற்கான ஒரு பரிந்துரையை மருந்துத் தொழில்நுட்ப ஆலோசனை வாரியம் வழங்கியுள்ளது.
- ❖ மருந்துத் தொழில்நுட்ப ஆலோசனை வாரியம் என்பது இந்தியாவில் தொழில்நுட்ப மருந்து தொடர்பான விவகாரங்களில் சட்ட ரீதியான முடிவுகளை எடுப்பதற்கான உச்ச நிலை வாரியமாகும்.
- ❖ இது 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டத்தின் கீழ் நிறுவப் பட்டது.
- ❖ இந்த வாரியமானது மத்திய மருந்துத் தரக் கட்டுப்பாட்டு அமைப்பின் (CDSCO) ஒரு பகுதியாகச் செயல்படுகிறது.
- ❖ இது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## உட்குழு இனப்பெருக்கம் - தீங்கு விளைவிக்கும் மரபணு மாறுபாடுகள்





- ❖ தெற்காசிய இனங்களில் காணப்படும் அதிகப்படியான ஓரினச் சேர்க்கை மரபணு வகைகளானது பெரும்பாலும் சாதி, உட்குழு இனப்பெருக்கம் மற்றும் இரத்தத் தொடர்பு உடைய உறவுகளுடனான உடலுறவுகளின் விளைவாக இருக்கலாம் என்று ஒரு புதிய ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.
- ❖ இத்தகைய ஒரு நிகழ்வானது மரபணுக் கோளாறுகள் அதிகளவில் ஏற்படுவதற்கு வழி வகுக்கும்.
- ❖ தென்னிந்திய மற்றும் பாகிஸ்தானிய உட்குழுக்கள் அதிக அளவில் மிகுந்த உள் இனக் கலப்பினைக் கொண்டிருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- ❖ இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறுப் பகுதிகளைச் சேர்ந்த மக்களிடையே அதிக அளவிலான மரபணு வேறுபாடுகள் இருப்பதை இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

- ❖ மனிதர்களின் உடலில் பொதுவாக ஒவ்வொரு மரபணுவின் இரண்டு பிரதிகள் காணப் படும்.
- ❖ ஒரு மனிதரின் உடலில் ஒரே மரபணுவின் இரண்டு பிரதிகள் இருந்தால், அது ஒரினச் சேர்க்கை மரபணு வகை எனப்படும்.

## இந்தியாவில் உள்ள 5 சதவீதப் பறவைகள் - வட்டார இனங்கள்

- ❖ இந்தியாவின் 75 வட்டாரப் பறவைகள் என்ற ஒரு சமீபத்திய அறிக்கையானது இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பின் 108வது நிறுவன தினத்தின் போது அந்த அமைப்பால் வெளியிடப் பட்டது.
- ❖ அது இந்தியாவில் காணப் படும் சுமார் 5% பறவைகள் உள்நாட்டு (வட்டார) இனத்தைச் சேர்ந்தவை என்று கூறுகிறது.
- ❖ எனினும் உலகின் பிற பகுதிகளில் அவை இருப்பதாகப் பதிவாகவில்லை.
- ❖ 75 இந்தியாவின் பறவை இனங்கள் எனப்படும் இந்த அறிக்கையானது சமீபத்தில் இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பின் 108வது ஸ்தாபன நாளில் வெளியிடப் பட்டது.
- ❖ இந்தியாவில் 1,353 பறவை இனங்கள் உள்ளன.
- ❖ இது உலகிலுள்ள பறவை இனங்களில் தோராயமாக 12.4% ஆகும்.
- ❖ இவற்றில் 78 (5%) இனங்கள் இந்தியாவில் மட்டுமே (வட்டார இனங்கள்) காணப் படுபவை ஆகும்.




## மத்தியப் பிரதேச அரசின் புலிகள் வளங்காப்பிற்கான உத்தி

- ❖ வேட்டையாடும் விலங்கினங்கள் மற்றும் அதன் இரைகளின் எண்ணிக்கையை நன்கு சமநிலைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கையானது, மத்தியப் பிரதேசத்திலுள்ள புலிகளின் எண்ணிக்கையில் பதிவான 50% அதிகரிப்புக்கு முக்கிய காரணியாக இருந்தது.
- ❖ இது 2022 ஆம் ஆண்டு பெரும்பூனை இனங்களின் கணக்கெடுப்பில் இந்த மாநிலம் முதலிடத்தைப் பிடிக்க உதவியுள்ளது.
- ❖ மத்தியப் பிரதேச மாநிலத்திலுள்ள குனோ தேசியப் பூங்காவிற்கு ஆப்பிரிக்கச் சிறுத்தைகளை இடமாற்றம் செய்யும் திட்டத்தின் மூலம் இடமாற்றம் செய்யப்பட்ட விலங்குகளில் ஆறு விலங்குகள் இறந்து விட்டதையடுத்து இத்திட்டம் பின்னடைவைக் கண்டுள்ளது.

- கடந்த வாரம் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டு புலிகள் கணக்கெடுப்பின் மீதான புதுப்பிக்கப் பட்ட தகவல் அறிக்கையில் தேசிய அளவில் 3,682 புலிகள் இருப்பதாகப் பதிவு செய்துள்ளது.
- கடந்த மூன்று புலிகள் கணக்கெடுப்புகளில், இரண்டாவது முறையாக மத்தியப் பிரதேச மாநிலத்தில் அதிகபட்சமாக 785 புலிகள் பதிவாகியுள்ளது.
- முந்தையப் புலிகள் கணக்கெடுப்பில் இருந்து, இந்த மாநிலத்தில் உள்ள புலிகளின் எண்ணிக்கை 50% அதிகரித்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- மிகக் குறைவாக 54 புலிகளைக் கொண்ட பீகார் மாநிலத்தில் மட்டுமே அதனை விட ஒரு எண்ணிக்கை அதிக உயர்வு என்பது பதிவாகியுள்ளது.





## இந்தியாவின் 75 வட்டாரப் பறவை இனங்கள்

- பறவை இனங்கள் காணப்படும் உயிரி சார்-புவியியல் பகுதிகள், அவற்றின் வளங் காப்பு நிலை, வரலாற்றுத் தொடர்பு, கிளையினங்களில் உள்ள வேறுபாடுகள், தனித் தன்மைகள் மற்றும் பறவைகளின் விருப்பமிகு வாழ்விடங்கள் பற்றிய விவரங்களை இது வழங்குகிறது.
- 78 இனங்களில் மூன்று இனங்கள் கடந்த சில தசாப்தங்களாகப் பதிவு செய்யப் பட வில்லை.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) அருகும் நிலையில் உள்ள உயிரினங்களின் செந்நிறப் பட்டியலில் அவை குறிப்பிடப்பட்டுள்ளன.
- அவையாவன;
- மணிப்பூர் புதர் காடை, 1907 ஆம் ஆண்டில் இது கடைசியாக தென்பட்டதையடுத்து 'அருகிய நிலையில் உள்ள இனமாக' பட்டியலிடப்பட்டது;
- இமாலயக் காடை, 1876 ஆம் ஆண்டில் கடைசியாக தென்பட்டதையடுத்து 'மிக அருகிய நிலையில் உள்ள இனமாக' இது பட்டியலிடப் பட்டது;
- ஜெர்டனின் கல்குருவி, 2009 ஆம் ஆண்டில் கடைசியாக தென்பட்டதையடுத்து 'மிக அருகிய நிலையில் உள்ள இனமாக' இது பட்டியலிடப்பட்டது.

- 28 பறவை இனங்களுடன், மேற்குத் தொடர்ச்சி மலையில் அதிக எண்ணிக்கையிலான வட்டாரப் பறவை இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- மலபார் சாம்பல் நிற இருவாட்சி, மலபார் நீலப் பைங்கிளி, அஷாம்பு சிரிப்பான் மற்றும் வெள்ளை-வயிறு கொண்ட சோலக்கிளி ஆகியவை நாட்டின் உயிரி-புவியியல் சார்ந்த ஒரு முக்கியப் பகுதியான மேற்கு தொடர்ச்சி மலைகளில் பதிவு செய்யப் பட்டு உள்ளன.
- 25 பறவை இனங்கள் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் மட்டுமே காணப் படுகின்றன.
- நிக்கோபார் மெகாபோட், கொண்டை பாம்புண்ணிக் கழுகு, அந்தமான் கிரேக் மற்றும் அந்தமான் பார்ன் ஆந்தை ஆகியவை அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் மட்டுமே காணப்படுகின்றன.
- நான்கு வகையான பறவை இனங்கள் கிழக்கு இமயமலையிலும், தெற்கு தக்காணப் பீடபூமிப் பகுதியிலும் மற்றும் மத்திய இந்தியக் காடுகளிலும் தலா ஒரு இனங்கள் காணப் படுகின்றன.
- 78 உள்ளூர்(வட்டார) இனங்களில், 25 சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தினால் 'அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களாக' வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- மூன்று இனங்கள் (பூகுன் பாடும் பறவை; இமாலயக் காடை; ஜெர்டன் கல்குருவி) 'மிக அருகிய நிலையில் உள்ள இனங்களாக' பட்டியலிடப்பட்டுள்ளன.
- இந்தியாவில் உள்ள வட்டாரப் பறவை இனங்களில் ஐந்து இனங்கள் 'அருகி வரும்' இனங்கள் ஆகவும், 17 'எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனங்களாவும்', 11 இனங்கள் 'அச்சுறுத்தல் நிலையை அன்மித்த இனங்களாகவும்' சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் செந்நிறப் பட்டியலில் வகைப்படுத்தப் பட்டுள்ளன.

Threat Status of the Western Ghats Endemic Birds



## தெற்காசியாவில் உயிரினங்களின் ஏற்பமைவிற்கான முதல் மையம்

- IUCN அமைப்பின் உயிரினங்களின் ஏற்பமைவிற்கான ஆணையமானது தெற்கு ஆசியாவில் உயிரினங்களின் ஏற்பமைவிற்கான முதல் மையத்தை அமைப்பதற்காக இந்திய வனவிலங்கு அறக்கட்டளையுடன் (WTI) கை கோர்த்துள்ளது.
- இது உலகில் உயிரினங்களின் ஏற்பமைவிற்கான 10வது மையமாகவும், தெற்கு ஆசியாவில் இவ்வகையிலான முதல் மையமாகவும் இருக்கும்.
- இந்தியாவில் 92,037 வகையான விலங்கினங்கள் உள்ள நிலையில் அவற்றில் பூச்சி இனங்கள் மட்டும் 61,375 இனங்கள் ஆகும்.
- இந்தியாவில் மட்டும், அந்த எண்ணிக்கையின் இரண்டு மடங்கிலான உயிரினங்கள் இன்னும் கண்டுபிடிக்கப் படாமல் உள்ளன.
- இது இயற்கைக்கான மதிப்பினை வழங்கும் மற்றும் அதனை நன்குப் பாதுகாக்கும் வகையிலான ஒரு உலகத்தை உருவாக்குவதற்கான ஒரு குறிக்கோளுடன் உருவாக்கப் படுகிறது.
- இந்த கூட்டு முன்னெடுப்பானது, வனவிலங்கு வல்லுநர்கள் மற்றும் சிறப்பு வல்லுநர் குழுக்களின் வளங்காப்பு முயற்சிகளை மேம்படுத்துவதையும், இந்தியாவின் வளமான பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் கரிம உமிழ்வுக் குறைப்பு

- கடந்த 14 ஆண்டுகளில், இந்திய நாட்டின் அரசானது தனது கார்பன் உமிழ்வு தடத்தைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.
- 2005 முதல் 2019 ஆம் ஆண்டு வரை, பசுமை இல்ல வாயு உமிழ்வு விகிதம் குறிப்பிடத்தக்க வகையில் 33% குறைந்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள், இந்தியாவில் 2005 ஆம் ஆண்டில் பதிவான உமிழ்வு அளவுகளில் இருந்து அதன் உமிழ்வுச் செறிவினை 45% குறைக்க உள்ளதாக இந்தியா உறுதியளித்து உள்ளது.
- இது இந்தியாவின் மொத்த மின்னாற்றல் உற்பத்தியில் 25.3% பங்களிப்பை வழங்கும் நீர் மின்னாற்றல், அணுசக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை உள்ளடக்கியது.
- இருப்பினும், நாட்டில் பயன்படுத்தப்படும் மொத்த மின்சாரத்தில் 73% மின்னாற்றலை வழங்குவதோடு, அனல் மின் நிலையங்கள் முன்னணி வளங்களாக உள்ள நிலையில், இதன் பங்களிப்பானது 2019 ஆம் ஆண்டில் 75% ஆக இருந்தது.
- மொத்த நிறுவப்பட்ட மின்னாற்றல் வளங்களில் 42.3 சதவீதம் ஆனது புதைபடிவ சார்ந்த ஆற்றல் வளங்களைச் சார்ந்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியாவில் 24.56% அல்லது 80.73 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் காடுகள் மற்றும் மரங்கள் இருந்தன.
- G20 அமைப்பானது, புதைபடிவ எரிபொருட்களைப் படிப்படியாக அகற்றுவதில் ஒருமித்த கருத்தை எட்டுவதற்காகச் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சியில் இரண்டு முறை தோல்வியடைந்தது.
- உமிழ்வுச் செறிவு என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) பதிவாகும் ஒவ்வொரு அலகு அதிகரிப்பிற்குச் சமமானப் பசுமை இல்ல வாயு உமிழ்வின் மொத்த அளவு ஆகும்.





## கார்பன்லைட் மெட்ரோ இரயில் பயணம்

- டெல்லி மெட்ரோ இரயில் கழகமானது, கார்பன்லைட் மெட்ரோ இரயில் பயணம் என்ற முதன்மையான முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- மெட்ரோ இரயில்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் கார்பன் உமிழ்வைக் குறைப்பதில் பயணிகளின் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பைப் பற்றி அவர்கள் அறியச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- டெல்லி மெட்ரோ இரயிலில் தினசரிப் பயணம் மேற்கொள்ளும் பயணிகள், தங்களின் மெட்ரோ பயணத்தின் மூலம் சராசரி கார்பன் டை ஆக்சைடு உமிழ்வுக் குறைப்பில் அவர்களின் பங்கு பற்றி இந்தப் பயணத்தின் போது அவர்கள் தெரிந்து கொள்ள முடியும்.



## எரிமலை வெடிப்பிற்குக் காரணமாகும் கார்பன் டை ஆக்சைடு

- ஒரு புதிய ஆய்வானது, எரிமலைகள் வெடிப்பதற்குப் பின்னணியில் உள்ள காரணங்கள் பற்றிய புரிதலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.
- பாறைக் குழம்பு (பாசால்டிக்) எரிமலைகள் வெடிப்பதைத் தூண்டும் காரணிகள் நீராவி அல்ல, அது கார்பன் டை ஆக்சைடு (CO2) வாயுதான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறி உள்ளனர்.
- உலகிலேயே அதிகளவுச் செயலில் உள்ள கடல்தீவு எரிமலைகளில் ஒன்றான பிகோ டோ ஃபோகோ எரிமலையின் எரிமலைக் குழம்பினை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தனர்.
- கண்ட மேலோட்டிற்குக் கீழே 12 முதல் 19 மைல் ஆழத்தில் உருவாகும் அதிகபட்ச அளவிலான கார்பன் டை ஆக்சைடு வாயு இருப்பினை அவர்கள் கண்டறிந்தனர்.
- மூடகத்தில் இரும்பு மற்றும் இரும்பு ஆக்சைடுகள் அதிக அளவில் இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.
- இந்தப் பகுதியானது புவிக்கு கீழே மற்றும் மூடகத்தில் உள்ளது.




## இந்தியக் கொம்பன் ஆந்தை

- இந்தியக் கொம்பன் ஆந்தையானது சமீப ஆண்டுகளில் மட்டுமே தனி ஒரு இனமாக வகைப் படுத்தப்பட்டது.
- இந்த ஒரு வகைப்பாடானது இதனை ஐரோப்பிய ஆசியக் கொம்பன் ஆந்தை இனத்தில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.
- இது பாறைக் கொம்பன் ஆந்தை அல்லது வங்காளக் கொம்பன் ஆந்தை என்றும் அழைக்கப் படுகிறது.
- அளவில் சற்று பெரிய ஒரு பெண் ஆந்தையானது ஆறு அடியிலான இறக்கைகளுடன் மொத்தமாக இரண்டரை அடி வரை உயரம் இருக்கும்.

- இரவு நேரங்களில் வாழும் பழக்கம் உடையதால் இந்தப் பறவையைப் பற்றி மிகவும் குறைவான தகவலே அறியப் படுகிறது.




## சாளக் கிராமம் மீது பருவநிலை மாற்றத்தின் தாக்கம்

- 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக, இந்து மதம், பௌத்தம் மற்றும் ஷாமானிய இமாலய மதமான பான் பௌத்தம் ஆகியவை சாளக் கிராமம் என்ற கல்லினை வணங்குகின்றன.
- இது நவீன கால கணவாய் மீன்களுடன் தொடர்புடைய அழிந்து போன சில கடல் வாழ் உயிரினங்களின் வகுப்பான அம்மோனைட்டுகளின் பழங்காலப் புதைபடிவமாகும்.
- சாளக்கிராம கற்கள் என்பவை முதன்மையாக ஒரு இந்துக் கடவுளான விஷ்ணுவின் வெளிப் பாடுகளாகக் கருதப்படுகின்றன.
- இது வடக்கு நேபாளத்தில் உள்ள ஒரு தொலைதூரப் பகுதியில் - முஸ்டாங்க் பகுதியின் காளி கண்டகி நதிப் பள்ளத்தாக்குப் பகுதியில் தோன்றியது.
- பருவநிலை மாற்றம், பனிக்கட்டி விரைவாக உருகுதல் மற்றும் காளி கண்டகி பகுதியில் மேற்கொள்ளப்படும் சரளைக்கல் சுரங்கப் பணி ஆகியவை இந்த ஆற்றின் போக்கை மாற்றுகின்றன.
- இந்தத் தாக்கங்கள் காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் குறைவான அளவிலான சாளக் கிராமக் கற்கள் மட்டுமே வெளித் தோன்றுகின்றன.



## மூன்றாவது நீண்டப் பருவமழை இடைவேளை




- ❖ 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று தொடங்கிய தற்போதையப் பருவமழை இடைவேளையானது இறுதியாக ஆகஸ்ட் 18 ஆம் தேதியன்று முடிவடைந்தது.
- ❖ தற்போதையப் பருவமழை இடைவேளையானது 2002 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்ட இந்த நூற்றாண்டின் மூன்றாவது நீண்டப் பருவமழை இடைவேளையாக கருதப் படுகிறது.
- ❖ பருவமழை இடைவேளை என்பது பருவமழைக் காற்று மண்டலம் வடக்கு நோக்கி நகரும் போது ஏற்படும்.
- ❖ இது இமயமலை அடிவாரங்கள் மற்றும் கிழக்கு இந்தியாவின் சில பகுதிகளில் மழைப் பொழிவை அதிகரிக்கிற அதே நேரத்தில் இது நாட்டின் மற்ற பகுதிகளில் மழைப் பொழிவினை மட்டுப்படுத்துகிறது.
- ❖ இது குறிப்பாக மையப் பருவமழை மண்டலப் பகுதி அல்லது மேற்கில் குஜராத்தில் இருந்து கிழக்கில் மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா வரை நீண்டு காணப்படும் பகுதியில் நிகழ்கிறது.
- ❖ கடந்த 73 ஆண்டுகளில், 10 நாட்களுக்கு மேல் இந்த இடைவேளை நீட்டிக்கப் பட்டதாக 10 நிகழ்வுகள் பதிவாகியுள்ளன.
- ❖ 1972 ஆம் ஆண்டில் (17 நாட்கள்) மிக நீண்டத் தொடர்ச்சியான ஒரு இடைவேளையானது பதிவானது.

## புதிய சாலமண்டர் இனங்கள்

- ❖ மணிப்பூரின் மலை ஏரிகளில் சாலமண்டரின் புதிய ‘ஒத்த’ இனத்தினை இந்திய அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ❖ இந்தப் புதிய இனங்கள் டைலோடோட்ரிடான் சைமெங் எனப்படுகின்றன.
- ❖ இந்த இனமானது இதுவரை அதனுடன் தொடர்புடைய மற்ற இனங்களான டைலோடோட்ரிடான் ஹிமாலயனஸ் மற்றும் டைலோடோட்ரிடான் வெருகோசஸ் என்று தவறாகக் கருதப் பட்டது.

- மணிப்பூரில் உள்ள கோங்தெங் மலைத்தொடரின் மேலே, கடல் மட்டத்திலிருந்து 2,215 மீ உயரத்தில் அமைந்துள்ள சைமெங் என்ற மலை ஏரியின் பெயரில் இந்தப் புதிய இனத்திற்குப் பெயரிடப்பட்டுள்ளது.
- சைமெங் என்பது "புதிர்மிக்க ஏரி" அல்லது "மர்ம ஏரி" என்று பொருள்படும் லியாங்மெய் வட்டாரச் சொல்லாகும் .



## சர்வதேசத் திமிங்கல ஆணையத்தின் முதல் இன அழிவு எச்சரிக்கை




- சர்வதேசத் திமிங்கல ஆணையம் (IWC) ஆனது அருகி வரும் வாக்கிடா போர்போயிஸ் இனத்திற்கான முதல் 'இன அழிவு எச்சரிக்கையை' வெளியிட்டுள்ளது.
- மெக்சிகோவின் கலிபோர்னியா வளைகுடாவில் வெறும் 10 இனங்களே காணப்படச் செய்வதுடன் இந்த இனம் அழிவின் விளிம்பில் தத்தளிக்கிறது.
- இந்த எச்சரிக்கையானது வரவிருக்கும் அழிவுகள் குறித்த எச்சரிக்கை அறிகுறிகளைப் பரந்த அளவில் அங்கீகரிப்பதனை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, இது வாக்கிடா இனத்தினைப் பாதுகாப்பதற்காக வேண்டி தற்போது தேவைப்படும் நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு நிலையிலும் ஆதரவு மற்றும் ஊக்கத்தினையும் உருவாக்குகிறது.

## பசுமை ஹைட்ரஜன் தரநிலைகள்

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சகமானது இந்திய நாட்டிற்கான பசுமை ஹைட்ரஜன் தரநிலைகளை அறிவித்துள்ளது.
- இது 'பசுமை' என வகைப்படுத்தக் கூடிய ஹைட்ரஜன் உற்பத்திக்கான சில உமிழ்வு வரம்புகளை வரையறுத்துக் கூறுகிறது.

- இதன் மூலம் பசுமை ஹைட்ரஜனுக்கான வரையறையைக் கொண்ட சில நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக மாறியுள்ளது.
- பசுமை ஹைட்ரஜனின் அளவீடு, அதன் அறிக்கையிடல், அதன் கண்காணிப்பு, உற்பத்தி இடத்திலேயான சரிபார்ப்பு மற்றும் சான்றளிப்பு ஆகியவற்றிற்கான ஒரு விரிவான வழி முறையை இந்த அறிவிப்பு குறிப்பிடுகிறது.
- அரசாங்கமானது, ஆண்டிற்கு 5 மில்லியன் மெட்ரிக் டன் (MMT) பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் இந்த ஆண்டின் தொடக்கத்தில் தேசியப் பசுமை ஹைட்ரஜன் திட்டத்தினைத் தொடங்கியது.




## அண்டார்டிக் ஸ்ட்ராபெரி ஃபெதர் ஸ்டார் என்ற உயிரினம்

- அண்டார்டிக் பெருங்கடலில் சுமார் 20 கால்கள் கொண்ட ஒரு வகையான உயிரினத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இப்பெருங்கடலின் அடிப்பகுதியில் அறிவியலாளர்கள் கண்டறிந்த நான்கு புதிய வகை கிரினாய்டுகளில் இதுவும் ஒன்றாகும்.



- அதன் உடலில் உள்ள ஸ்ட்ராபெரி போன்ற ஒரு நுனியமைப்பினால் இது இப்பெயரைப் பெற்றது.
- இது போன்ற கிரினாய்டுகள் நமது புவியின் ஆரம்பகாலக் கடல் பகுதிகளில் அதிகம் காணப் பட்டன.

- ஆனால், தோராயமாக 251 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பெர்மியன் என்ற பேரழிவின் போது புவியில் அழிந்து போன 95% உயிரனங்களுடன் சேர்த்து அவை பெருமளவில் அழிந்து போயின.

## தேசிய கார்பன் பதிவகம்




- ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பானது, கார்பன் வரவுகளை வர்த்தகம் செய்வதற்கான தேசியத் தரவுகள் மற்றும் செயல்முறைகளைத் திறம்பட மேலாண்மை செய்வதற்கு உலக நாடுகளுக்கு உதவும் வகையிலான ஒரு தடையற்ற வகையில் கிடைக்கப் பெறும் மூல மென்பொருளை உருவாக்கியுள்ளது.
- தேசியக் கார்பன் பதிவேடு என்று அழைக்கப்படும் இந்த மென்பொருள், சமீபத்தில் ஒரு எண்ணிமப் பொதுப் பயன்பாட்டுப் பொருளாக அங்கீகாரம் பெற்றது.
- ஒரு DPG ஆக இயங்கும் இந்தப் பதிவகம் தடையற்ற வகையில் கிடைக்கப் பெறும் மூலக் குறியீட்டைப் பயன்படுத்துவதோடு இது உலக நாடுகள் தங்கள் சொந்தத் தேவைகள் மற்றும் சூழல்களுக்கு ஏற்றவாறு தகவல்களைப் பிரதிபலிக்கவும் மாற்றியமைக்கவும் வழி வகுக்கிறது.
- இந்தப் பதிவகத்தின் தொகுதிகளானது, மென்பொருள் மற்றும் பல்வேறு தொழில்நுட்ப ஆவணங்கள் உலக நாடுகளால் மீண்டும் பயன்படுத்தப்படலாம் மற்றும் வடிவமைக்கப் படலாம்.
- இது உற்பத்திச் செலவினங்கள் மற்றும் அமலாக்க காலக்கெடுவைக் குறைக்கும்.


## பருவநிலை மீறல் மீதான அரசின் பொறுப்பு

- அமெரிக்காவின் மொன்டானாவின் மிசோலா எனுமிடத்தில் வசிக்கும் ஒரு குழுவினர், தூய்மையான மற்றும் ஆரோக்கியமான சூழலுக்கான அரசியலமைப்பு உரிமையை மீறியதற்காக தங்கள் சொந்த மாகாண அரசின் மீது வெற்றிகரமாக வழக்கு ஒன்றைத் தொடர்ந்தனர்.

- ❖ புதைபடிவ எரிபொருள் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் போது, அதனால் ஏற்படும் பருவநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதில் அரசு காட்டும் அலட்சியம் அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்று மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- ❖ ஓர் அமெரிக்க நீதிமன்றமானது, பருவநிலை மாற்றத்தின் அடிப்படையில் அரசியல் அமைப்பை மீறியதற்காக ஒரு அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தியது இதுவே முதல் முறையாகும்.
- ❖ இந்தத் தீர்ப்பு சுற்றுச்சூழல் இயக்கத்தை மேலும் ஊக்குவிக்கும் என்பதோடு நாட்டில் நிலுவையில் உள்ள ஆயிரக்கணக்கான காலநிலை மாற்ற வழக்குகளில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.




## இயற்கை வளங்காப்பிற்கான கடன் பரிமாற்ற ஒப்பந்தம்




- ❖ காபோனிய நாட்டின் குடியரசு ஆனது, 500 மில்லியன் டாலர் மதிப்பிலான இயற்கை வளங்காப்பிற்கான கடன் பரிமாற்றத்தை அறிவித்துள்ளது.
- ❖ இது நீல (கடல்சார்) பத்திரத்தின் கீழ் மறுநிதியளிப்பதற்காக கையெழுத்திடப்பட்ட உலகின் இரண்டாவது மிகப் பெரிய ஒப்பந்தம் ஆகும்.
- ❖ ஆப்பிரிக்காவில், எந்தவொரு நாடும் தனது கடனுக்கு மறுநிதியுதவி அளிப்பதற்கும், கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கும் கையெழுத்தான இத்தகைய மிகப்பெரிய ஒரு ஒப்பந்தம் இதுவாகும்.

- இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கான செலவினங்களை மேற் கொள்வதற்கு வேண்டி அதிகக் கடனில் மூழ்கியுள்ள வளர்ந்து வரும் நாடுகள் ஒப்புக் கொண்டால், வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள நிதி நிறுவனங்களின் உதவியைப் பெற்று, தங்கள் கடனைத் திரும்பச் செலுத்துவதற்கு இயற்கை வளங்காப்பிற்கான கடன் பரிமாற்றங்கள் வழி வகுக்கின்றன.
- பொதுவாக வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள வங்கிகள் இத்தகைய நாடுகளின் கடன்களை வாங்கி, தாமதமாக செலுத்தும் வகையிலான பல்வேறு புதிய கடன்களை வழங்குகின்றன.
- இந்தக் கடன்கள் குறைந்த வட்டி விகிதங்களில் வழங்கப் படுகின்றன.
- உலகின் இரண்டாவது மிகப் பெரிய இயற்கை வளங்காப்பிற்கான கடன் பரிமாற்ற ஒப்பந்தத்தில், நீலக் கடன் பத்திரத்தின் கீழ் காபோன் நாட்டின் கடன் அமைப்பானது மறுசீரமைக்கப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில், பெருங்கடல்களைப் பாதுகாப்பதற்கான உலகின் முதல் மற்றும் மிகப்பெரியக் கடன் பரிமாற்ற ஒப்பந்தத்தில் ஈக்வடார் கையெழுத்து இட்டுள்ளது.

## வெண்மார்பு கடற்கழுகுகள்

- இந்தியாவில் உள்ள வெண்மார்பு கடற்கழுகுகள் ஆஸ்திரேலியா மற்றும் தாய்லாந்தில் உள்ள தங்கள் சக இனங்களைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன.
- அவை தற்போது உயர் அழுத்தக் கம்பிகளைக் கொண்ட மின் கோபுரங்களில் தங்கள் கூடுகளைக் கட்டத் தொடங்கியுள்ளன.
- இது இந்தியாவின் மும்பைப் பகுதி கடற்கரையிலிருந்து வங்காளதேசத்தின் கிழக்குக் கடற்கரை வரையிலும், தெற்காசியாவில் இலங்கை நாட்டுக் கடற்கரை வரையிலும், தென்கிழக்கு ஆசியாவின் அனைத்துக் கடலோரப் பகுதிகளிலும், தெற்கு சீனா முதல் ஆஸ்திரேலியா நாட்டின் கடற்கரை வரையிலும் காணப்படுகின்றன.
- இது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் செந்நிறப் பட்டியலில் குறைந்த அளவு கவனம் தேவைப்படும் இனமாக வகைப் படுத்தப்பட்டுள்ளது.
- இது பல வருடங்களாக ஒரே பகுதிகளில் வாழ்ந்து, கடலோரம், கடறகழிகள் மற்றும் கடற்கரையின் முகத்துவாரங்களுக்கு அருகிலுள்ள உயரமான மரங்களில் கூடுகளை கட்டுகின்றன.




## இந்தியாவின் 54வது புலிகள் வளங்காப்பகம்




- இந்தியாவின் 54வது புலிகள் வளங்காப்பகம் ஆனது ராஜஸ்தானின் கரௌலி மற்றும் தோல்பூர் மாவட்டங்களில் அமைக்கப் பட்டுள்ளது.
- இந்த வளங்காப்பகம் ஆனது ராஜஸ்தானின் ஐந்தாவது புலிகள் வளங்காப்பகமாகும்.
- ரந்தம்போர், சரிஸ்கா, முகுந்த்ரா மலைகள் மற்றும் ராம்கர் விஷ்தாரி ஆகியவை அங்கு தற்போதுள்ள புலிகள் காப்பிடமாகும்.

## இருதுருவ இந்தியப் பெருங்கடல் அமைப்பு நேர்மறையாக மாற்றம்




- இருதுருவ இந்தியப் பெருங்கடல் (IOD) அமைப்பு குறியீடு ஆனது நேர்மறை வரம்பை தாண்டியுள்ளது என்பதை ஆஸ்திரேலிய நாட்டு வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கை எடுத்துரைக்கிறது.

- இந்தியப் பெருங்கடல் படுகையில் இலங்கையின் தெற்கேக் கடலின் மேற்பரப்பு வெப்ப நிலையானது வெப்பமான நிலையிலிருந்து குளிர்ச்சியான நிலைக்கு மாறுவதை இந்தக் குறியீடு குறிக்கிறது.
- இந்தப் படுகையின் மேற்குப் பகுதியில் உள்ள வெப்பமானது நேர்மறை இருதுருவ இந்தியப் பெருங்கடல் நிகழ்வாகக் குறிப்பிடப் படுகின்ற நிலையில், அதே சமயம் கிழக்குப் பகுதியில் உள்ள வெப்பமானது எதிர்மறை இருதுருவ இந்தியப் பெருங்கடல் நிகழ்வைக் குறிக்கிறது.
- ஒரு நேர்மறையான IOD நிகழ்வானது இந்தியாவின் தென்மேற்குப் பருவமழையின் செயல் திறனை உயர்த்தியுள்ளது.
- ஒரு நேர்மறையான IOD நிகழ்வாக அறிவிக்கப் படுவதற்கு முன் IOD குறியீடு ஒரு குறிப்பிட்டக் காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட வரம்பிற்கு அதிகமாக இருக்க வேண்டும்.

## அதிகளவிலான இலைகளின் அழிவு

- நேச்சர் இதழில் வெளியிடப்பட்ட இந்தச் சமீபத்திய ஆய்வறிக்கையானது, பருவநிலை மாற்றத்தினால் வெப்பமண்டலக் காடுகளுக்கு ஏற்படும் புதிய ஆபத்துகளை எடுத்து உரைக்கிறது.
- இந்த உயரும் வெப்பநிலையானது "அதிகளவிலான இலைகளின் அழிவு" எனப்படும் ஒரு நிகழ்வுக்கு வழி வகுக்கும் என்று இந்த ஆய்வு தெரிவிக்கிறது.
- இந்த அறிக்கையானது, வெப்பமண்டல மரங்களின் இலைகள் மிக அதீத வெப்பத்தால் மடியும் அல்லது ஒளிச்சேர்க்கையை நிறுத்தும் என கூறுகிறது.
- பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் சிறிய வெப்பநிலை மாற்றங்கள் கூட தாவர இனங்களைக் கணிசமான அளவில் பாதிக்கக் கூடும்.
- சில வெப்பமண்டலப் பகுதிகள் ஒரு தசாப்தத்திற்கு சராசரியாக 0.5 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை அதிகரிப்பை எதிர்கொண்டதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
- ஒரு இலையின் வெப்பநிலை ஒரு மாறுநிலை வரம்பை (சுமார் 46.7 டிகிரி செல்சியஸ்) தாண்டினால், ஒளிச் சேர்க்கை நின்று விடும் என்பதோடு, மேலும் அத்தகைய வெப்ப நிலையில் இலைகளின் வெளிப்பாடு நீடித்தால் இலைகள் மடியக் கூடும்.
- நீண்ட காலமாக அதிக வெப்பநிலையிலான வெளிப்பாடு வெப்ப மண்டலக் காடுகளின் அழிவிற்கு வழி வகுக்கும் என்று இந்த ஆய்வு எச்சரிக்கிறது.

## எம்பெரர் பெங்குவின்


- பிரித்தானிய அண்டார்டிக் ஆய்வு அமைப்பின் ஆராய்ச்சியாளர்களால் நடத்தப்பட்ட சமீபத்திய ஆய்வில், கடல் பனி விரைவாக குறைவதனால் எம்பெரர் பெங்குவின் "பாதி அழிந்து விடும்" நிலை என்ற பெரும் ஒரு அச்சுறுத்தலை எதிர் கொள்வதாக தெரிவிக்கப் பட்டது.
- அவை அண்டார்டிகா சுற்றுச்சூழல் அமைப்பின் உயிரியல் அடையாளச் சின்னமாகும்.
- எம்பெரர் பென்குவின்களின் வாழ்விடங்களில் முன்னெப்போதும் இல்லாத ஒரு அளவில் இனப்பெருக்கம் நடைபெறவில்லை என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
- தற்போதைய புவி வெப்பமடைதல் போக்குகள் மேலும் தொடர்ந்தால், 90% எம்பெரர் பென்குவின்கள் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் "பாதி அழிந்து விடும் ஒரு நிலையை" எட்டும் என்று இந்த ஆய்வு கணித்துள்ளது.

- எம்பெரர் பென்குவின்கள் தங்கள் குட்டிகளை ஈனுவதற்கும், வளர்ப்பதற்கும் நீண்டகால நிலையான கடல் பனிப் பாறையை ("நிலத்துடன் வலுவாக இணைக்கப்பட்ட ஒரு பனிப் பாறை") முழுமையாக சார்ந்துள்ளன.
- குறைந்து வரும் கடல் பனியானது, குட்டிகள் இனப்பெருக்கப் பகுதிகளை விட்டு முன் கூட்டியே விலகுவதற்குக் காரணமாக அமைந்துள்ளதால், அதன் குட்டிகளில் நீர்ப்புகா இறகுகள் உருவாகாமல் போகிறது.


# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக வானிலை அமைப்பின் ஆசிய நாடுகளில் பருவ கால நிலை 2022 அறிக்கை

- ஆசியக் கண்டமானது உலகிலேயே அதிகளவில் பேரழிவுப் பாதிப்புக்குள்ளாகும் பகுதியாக உள்ளதோடு, 2022 ஆம் ஆண்டில் ஆசியாவில் 81 வானிலை, பருவநிலை மற்றும் நீர் தொடர்பான பேரழிவுகள் காரணமாக 50 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.
- 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இப்பகுதியில் நிகழ்ந்தப் பேரிடர் நிகழ்வுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் இயற்கைப் பேரழிவுகளால் சுமார் 5,879 ஆசிய நாட்டவர்கள் இறந்து உள்ளனர்.
- இது இந்தப் பிராந்தியம் முழுவதும் 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மனித இறப்புகளை விட சுமார் 55 சதவீதம் அதிகமாகும்.
- 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்டப் பேரழிவுகளால் இந்தக் கண்டத்தில் வாழும் மக்களில் 52 மில்லியன் மக்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- இது 2021 ஆம் ஆண்டில் சுமார் 48.3 மில்லியனாகப் பதிவானப் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும்.
- இந்த நிகழ்வுகளால் ஏற்பட்ட சேதத்தின் பொருளாதாரச் செலவு சுமார் 36 பில்லியன் டாலருக்கும் அதிகமாகும்.
- இதில் குறைந்தபட்சம் 15 பில்லியன் டாலர் பொருளாதார இழப்புகளுடன் பாகிஸ்தான் 42 சதவிகிதம் பங்கினைக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் வறட்சியினால் ஏற்பட்ட பொருளாதார இழப்புகள் (7.6 பில்லியன் டாலர்கள்) ஆகும்.
- இத்தகையப் பொருளாதார இழப்பானது சீனாவில் பெருமளவில் பதிவாகியுள்ளது.
- சீனாவின் பொருளாதார இழப்பானது 2002 முதல் 2021 வரையிலான 20 ஆண்டு காலச் சராசரியை விட (2.6 பில்லியன் டாலர்) சுமார் 200 சதவிகிதம் தாண்டியது.




## உலகப் புகையிலைப் பெருந்தொற்று 2023





- உலக சுகாதார அமைப்பானது, உலகப் புகையிலைப் பெருந்தொற்று, 2023: புகையிலைப் புகையிலிருந்து மக்களை நன்குப் பாதுகாத்தல் என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டு ள்ளது.
- 2007 ஆம் ஆண்டில் 22.8 சதவீதமாக இருந்த புகை பிடிப்பவர்களின் உலகளாவிய விகிதம் 2021 ஆம் ஆண்டில் 17 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- நெதர்லாந்து, மொரிஷியஸ், பிரேசில் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் மட்டுமே உலகளவில் புகையிலைப் புகைப்பதைக் குறைப்பதற்காக என்று பரிந்துரைக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் செயல்படுத்துகின்றன.
- புவியில் உள்ள 10 பேரில் ஏழுக்கும் அதிகமானோர் (5.6 பில்லியன்) தற்போது புகையிலைப் புகையினால் ஏற்படும் ஆபத்துகளைத் தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளால் பாதுகாக்கப்படுகிறார்கள்.

- ஒவ்வோர் ஆண்டும் 8.7 மில்லியன் மக்கள் புகையிலை தொடர்பான நோய்களால் இறக்கின்றனர்.
- 44 நாடுகளில் உள்ள 2.3 பில்லியன் மக்கள் உலக சுகாதார அமைப்பின் புகையிலை எதிர்ப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப் படாமல் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர்.
- 74 நாடுகளில் அத்தகைய தயாரிப்புகளின் பயன்பாட்டினைத் தடுப்பதற்கான விதி முறைகள் அதாவது பொது இடங்களில் புகையிலையினைப் பயன்படுத்தத் தடை, அறிவிப்புப் பலகைகள் வைத்தல் மற்றும் விளம்பரங்கள் மீதான தடை போன்ற நடவடிக்கைகள் எதுவும் இல்லை.

## இணைய நெகிழ்திறன் குறியீடு

- இந்திய நாடானது, இணைய நெகிழ்திறன் குறியீட்டில், ஒட்டு மொத்தமாக 43 சதவீத மதிப்பெண்ணைப் பெற்று தெற்காசியப் பிராந்தியத்தில் ஆறாவது இடத்தில் உள்ளது.
- பூடான் (58 சதவீதம்), வங்காளதேசம் (51 சதவீதம்), மாலத்தீவுகள் (50 சதவீதம்), இலங்கை (47 சதவீதம்), நேபாளம் (43 சதவீதம்) போன்ற நாடுகள் இந்தத் தரவரிசையில் இந்தியாவை விட முன்னணியில் உள்ளன.
- சந்தைத் தயார்நிலையைப் பொறுத்தவரை, இந்தியாவின் இணையச் சந்தையின் சுயக் கட்டுப்பாடு மற்றும் மலிவு விலைச் சேவை ஆகியவற்றினை வழங்கும் திறன் என்பது ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது.
- மேலும், இந்தியாவில் கைபேசிச் சேவைகளின் செயல்திறன் (29 சதவீதம்) ஆனது நிலையான வலையமைப்புச் செயல்திறனில் (55 சதவீதம்) கிட்டத்தட்ட பாதியளவாகவே உள்ளது.





## "Still Unprepared" அறிக்கை

- "Still Unprepared" என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது, 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.
- பருவநிலை மாற்றத்தின் தாக்கங்கள் அதிகரித்துள்ள போதிலும், பருவநிலை இடர்களை மதிப்பிடுதல், மேலாண்மை செய்தல் மற்றும் தணிப்பு ஆகிய நடவடிக்கைகளில் இந்திய வங்கித் துறையின் தயார் நிலையில் சில குறிப்பிடத்தக்க இடைவெளிகள் இருப்பதை இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.

- இந்தியாவின் 34 பெரிய வங்கிகளில் பருவநிலை மாற்றம் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளுக்கான தயார் நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 2022 ஆம் ஆண்டில் மட்டும், மொத்தமுள்ள 365 நாட்களில் 314 நாட்கள் தீவிரமான வானிலை சார்ந்த இடர்கள் ஏற்பட்டுள்ளன.
- பருவநிலை மாற்றம் தொடர்பான சில நடவடிக்கைகளுக்கான தயார்நிலையில், யெஸ் வங்கி, HDFC வங்கி, ஆக்ஸிஸ் வங்கி ஆகியவை முதல் மூன்று இடங்களில் உள்ளன.
- 10 வங்கிகள் மட்டுமே தங்களது பசுமை நிதிசார் நடவடிக்கைகள் குறித்து அறிக்கைகள் அளித்துள்ளன.




## உலக வர்த்தகச் சேவை மறுமதிப்பாய்வு 2023




- உலக வர்த்தக அமைப்பு (WTO) ஆனது, 2023 ஆம் ஆண்டிற்கான உலக வர்த்தகப் புள்ளியியல் ஆய்வறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய வணிகச் சரக்குப் பொருட்களின் வர்த்தக அளவு 4.7% உயர்வைக் கண்டுள்ளது.
- வளர்ச்சியடைந்த நாடுகளில் இது 4.2 சதவீதமாக உயர்ந்துள்ளது.

- வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் குறைவான வளர்ச்சியடைந்த நாடுகள் முறையே 5.3% மற்றும் 5.8% உயர்வைக் கண்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் அதிக அளவிலான வணிகச் சரக்குப் பொருட்களின் ஏற்றுமதி பதிவு ஆனதுடன் சீனா முதலிடத்தில் உள்ளது.
- அமெரிக்கா மற்றும் ஜெர்மனி ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளன.
- இந்தியா சரக்குப் பொருட்கள் ஏற்றுமதியில் 18வது இடத்திலும், சேவைகள் சார்ந்த ஏற்றுமதியில் 7வது இடத்திலும் உள்ளன.
- இந்தியா சரக்குகள் இறக்குமதியில் 9வது இடத்திலும், சேவைகள் சார்ந்த இறக்குமதியில் 9வது இடத்திலும் உள்ளது.


## உலக செல்வ வள அறிக்கை 2023

| Region | Median/mean wealth per adult (%) 2000 | 2022 | Average annual growth rate (%) 2000–22 GNI per adult | Median wealth per adult | Wealth | Gini | Share top 1% |
|---|---|---|---|---|---|---|---|
| Africa | 8.6 | 14.9 | 3.50 | 9.70 | 6.97 | –0.08 | –0.30 |
| Asia-Pacific | 3.2 | 8.5 | 2.97 | 8.76 | 4.06 | –0.13 | –0.26 |
| China | 46.7 | 36.0 | 9.90 | 10.90 | 12.21 | 0.80 | 1.92 |
| Europe | 10.5 | 16.1 | 3.56 | 6.80 | 4.71 | –0.15 | –0.27 |
| India | 31.3 | 22.8 | 5.92 | 5.94 | 7.49 | 0.46 | 0.89 |
| Latin America | 16.3 | 19.4 | 3.05 | 7.15 | 6.32 | 0.04 | –0.73 |
| North America | 22.4 | 20.5 | 3.13 | 4.01 | 4.43 | 0.10 | 0.12 |
| **World** | **5.0** | **10.2** | **3.53** | **8.29** | **4.86** | **–0.18** | **–0.36** |

- 14வது உலக செல்வ வள அறிக்கையானது கிரெடிட் சூயஸ் மற்றும் UBS ஆகியவற்றினால் இணைந்து வெளியிடப்பட்டது.
- 200 நாடுகளில் உள்ள 5.4 பில்லியன் வயது வந்தோரின் செல்வ வளமானது, அடுத்த ஐந்து ஆண்டுகளில் உலகளாவியச் செல்வ வளம் 629 டிரில்லியன் டாலர்களை எட்டும் என்று கூறுகிறது.
- தற்போதைய அமெரிக்க டாலர் மதிப்பிலான பெயரளவிலான மதிப்பீட்டில், மொத்த நிகர தனியார் செல்வ வளமானது 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 11.3 டிரில்லியன் டாலர்கள் (–2.4%) குறைந்து 454.4 டிரில்லியன் டாலர்களாக உள்ளது.
- ஒரு வயது வந்த நபரின் செல்வ வளமானது 3,198 (–3.6%) டாலர்கள் குறைந்து 84,718 அமெரிக்க டாலர்களை எட்டியது.
- ஒரு வயது வந்த நபரின் செல்வ வள மதிப்பின் அடிப்படையில், சுவிட்சர்லாந்து முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து அமெரிக்கா, ஹாங்காங் தன்னாட்சிப் பிராந்தியம், ஆஸ்திரேலியா மற்றும் டென்மார்க் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.
- ஆசியப் பசிபிக் பிராந்தியத்தில் 2.1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இழப்புப் பதிவாகி உள்ளது.

- இலத்தீன் அமெரிக்கா 2.4 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான மொத்தச் செல்வ வள உயர்வுடன் தனித்துவ நிலையில் உள்ளது.
- ரஷ்யா, மெக்சிகோ, இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் மிகப்பெரியச் செல்வ வள உயர்வு பதிவாகியுள்ளது.
- உலக நாடுகளின் செல்வ வளமானது அடுத்த ஐந்து ஆண்டுகளில் 38% அதிகரித்து, 2027 ஆம் ஆண்டில் 629 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- BRICS அமைப்பின் உறுப்பினர் நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் செல்வ வளமானது 2027 ஆம் ஆண்டிற்குள் 30% உயரும்.


## நீர்வள இடர் விளக்கப் படம்




- உலக வள நிறுவனம் (WRI) ஆனது நீர்வள இடர் விளக்கப்படம் என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ஆண்டுதோறும், 25 நாடுகள் அல்லது உலக மக்கள்தொகையில் கால் பங்கு மக்கள் தொகையினர் தற்போது மிக மோசமான நீர்வளம் சார்ந்த ஒரு நெருக்கடி நிலைக்கு ஆளாகின்றனர்.
- அதாவது இவர்கள், 80 சதவீதத்திற்கும் அதிகமான புதுப்பிக்கத்தக்க நீர் வளத்தினைப் பாசனம், கால்நடைகள், தொழில்துறை மற்றும் வீட்டுத் தேவைகள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்துகின்றனர்.
- உலகளவில், உலக மக்கள் தொகையில் குறைந்தது 50 சதவீதம் பேர் ஓராண்டில் குறைந்தது ஒரு மாதமாவது மிக மோசமான அளவிலான நீர்வளப் பற்றாக்குறை சூழ்நிலையில் வாழ்கின்றனர்.
- 2050 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கையானது 60 சதவீதத்தினை நெருங்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.
- ‘தண்ணீர்ப் பற்றாக்குறை நிலை’ என்பது தண்ணீருக்கான தேவையானது, தண்ணீர் கிடைக்கப் பெறும் அளவை விட அதிகமாகும் நிலை அல்லது தரம் குறைந்த தண்ணீரானது நீரின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் போக்கு என்று வரையறுக்கப் படுகிறது.
- 25 மிக மோசமான தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

- மிக மோசமான தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள நாடுகள் மேற்கு ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்கா ஆகியனவாக உள்ள நிலையில், இங்கு 83 சதவீத மக்கள் மிக மோசமான தண்ணீர்ப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- தெற்காசியாவின் 74 சதவீத மக்கள் மிக மோசமான தண்ணீர்ப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- 2050 ஆம் ஆண்டில் இதில் பாதிக்கும் அதிகமானப் பாதிப்பினை இந்தியா, மெக்சிகோ, எகிப்து மற்றும் துருக்கி ஆகிய நான்கு நாடுகள் கொண்டிருக்கும்.
- 2050 ஆம் ஆண்டிற்குள் உலக நாடுகளின் நீர் தேவையானது 20-25 சதவீதம் அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## புதைபடிவ எரிபொருள் சார்ந்த கடன் தொடர்பான அறிக்கை




- புதைபடிவ எரிபொருள் சார்ந்த கடன் தொடர்பான அறிக்கையானது, கடன் எதிர்ப்புப் பிரச்சார நிறுவனமான டெப்ட் ஜஸ்டீஸ் மற்றும் பாதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள சில பங்குதார நிறுவனங்களால் வெளியிடப்பட்டுள்ளது.
- அதிகக் கடன்களைக் கொண்ட ஏழை நாடுகளானது, பணக்கார நாடுகளிடமும், தனியார் கடன் வழங்குநர்களிடமிருந்தும் பெற்றக் கடன்களைத் திருப்பி செலுத்திடச் செய்வதற்காக, வருவாய் ஈட்டுவதற்கு புதைபடிவ எரிபொருட்களைத் தொடர்ந்துச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.
- 2011 மற்றும் 2023 ஆகியவற்றிற்கு இடைப்பட்ட கால இடைவெளியில் அந்நாடுகளின் "வெளிநாட்டுக் கடன் செலுத்துதல் தொகையானது 150% ஆக அதிகரித்துள்ளது.
- இது கடந்த 25 ஆண்டுகளில் மிக அதிகபட்ச நிலையை எட்டியுள்ளது.
- மேலும், 54 நாடுகள் இவ்வகையான கடன் நெருக்கடியில் உள்ளன.
- பெருந்தொற்றின் போது இத்தகையப் பல கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக மக்களுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் குறைக்க வேண்டிய நிலைக்கு அந்த நாடுகள் தள்ளப்பட்டன.


# மாநிலச் செய்திகள்

## முதலாவது மிதவை வகை கடை

- அமேசான் இந்தியா நிறுவனமானது தனது முதல் மிதவை வகை கடையை காஷ்மீரின் ஸ்ரீநகரில் உள்ள தால் ஏரியில் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்த முன்னெடுப்பானது "I Have Space" எனப்படும் அதன் கடைநிலைச் சேவை வழங்கீட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக அறிமுகம் செய்யப்பட உள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த திட்டமானது நாடு முழுவதும் சுமார் 420 பெரு நகரங்கள் மற்றும் நகரங்களில் 28,000 சுற்றுப்புறம் மற்றும் சில்லறை விற்பனை (கிரானா) பங்குதாரர்களை உள்ளடக்கியுள்ளது.



## தடையற்ற நடமாட்டத்திற்கானப் பகுதி




- குகி-சின் பழங்குடியின மக்கள் மியான்மரில் இருந்து இந்திய நாட்டிற்குள் சட்ட விரோதமாக குடியேறுவது என்பது மணிப்பூரில் மெய்திஸ் மற்றும் குகிஸ் இடையே நடந்து வரும் இன மோதலுக்கு காரணமான முக்கியப் பிரச்சினைகளில் ஒன்றாகும்.
- மணிப்பூரில் உள்ள தடையற்ற நடமாட்டத்திற்கானப் பகுதியானது இருநாடுகளின் எல்லைகளில் வசிக்கும் பழங்குடியினர் நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் இரு நாடுகளிலும் 16 கி.மீ. தொலைவு வரை பயணிக்க அனுமதிக்கிறது.

- இந்தியா மற்றும் மியான்மர் இடையேயான எல்லையானது மிசோரம், மணிப்பூர், நாகாலாந்து, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களின் எல்லைகளில் 1,643 கி.மீ. தொலைவு வரை நீண்டுள்ளது.
- இந்திய அரசானது 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், தடையற்ற நடமாட்டத்திற்கான பகுதியின் செயல்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தியது.

## பத்தாரி பழங்குடியினர்

- ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள "பதாரி பழங்குடி", "கத்தா பிராமணர்", "கோலி" மற்றும் "பஹாரி இனக்குழு" ஆகிய நான்கு சமூகத்தினரைப் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்காக மத்திய அரசு ஒரு மசோதாவை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஜம்மு மற்றும் காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தின் மலைப்பாங்கான தொலைதூரப் பகுதியில் பத்தாரிகள் வாழ்கின்றனர்.
- இந்த ஒன்றியப் பிரதேசத்தில் உள்ள மற்ற முக்கியப் பட்டியலிடப்பட்டப் பழங்குடியின சமூகங்கள் பூஞ்ச், ரஜோரி, ரியாசி, குப்வாரா, கந்தர்பால், அனந்த்நாக், கிஷ்த்வார் மற்றும் பந்திபோரா மாவட்டங்களில் அதிகம் காணப்படும் பேகர்வால்கள் மற்றும் குஜ்ஜார்களாகும்.
- இவர்களில் பேகர்வால் இனத்தவர்கள் என்போர் பெரும்பாலும் நாடோடி வாழ்விகளாக உள்ளனர்.
- டோக்ராஸ் மற்றும் காஷ்மீரி இனத்தவர்களையடுத்து குஜ்ஜார்-பேகர்வால் இனத்தவர் ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள மூன்றாவது பெரிய இனக்குழுவினராவர்.
- இந்த இனத்தவர்க்கு 1991 ஆம் ஆண்டில் சிப்பிஸ் மற்றும் காடிஸ் ஆகிய இரண்டு சிறுபான்மைக் குழுக்களுடன் சேர்த்துப் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் அந்தஸ்து வழங்கப் பட்டது.
- இது இந்தச் சமூகங்களுக்கு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு வேலைகளில் 10 சதவீத இட ஒதுக்கீடு பெறுவதற்கு வழி வகை செய்தது.

## ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேச மாநிலத் தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு




- ராஜஸ்தான் மாநிலத்தின் நான்குத் தயாரிப்புகள் உட்பட இந்தியா முழுவதிலும் ஏழு தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

- அவையாவன;
  - ஜலேசர் தாது ஷில்ப் கைவினைப் பொருள் – உத்தரப் பிரதேசம்
  - கோவா மாங்குராட் மாம்பழம் – கோவா
  - கோவான் பெப்நிகா இனிப்பு வகை - கோவா
  - உதய்ப்பூர் கோஃப்ட்காரி வேலைப்பாடுகள் கொண்ட இரும்பு ஆயுதங்கள் - ராஜஸ்தான்
  - பிகானேர் காஷிடகாரி கண்ணாடி பதிக்கப்பட்ட கைவினைப் பொருட்கள் - ராஜஸ்தான்
  - ஜோத்பூர் பந்தேஜ் தனித்துவ வடிவங்கள் கொண்ட துணி வேலைப்பாடுகள் - ராஜஸ்தான்
  - பிகானேர் உஸ்தா கலா கைவினைப் பொருட்கள் - ராஜஸ்தான்

## சடல உறுப்புத் தானம்

- தெலுங்கானா மாநிலத்தில் நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான சடல உறுப்புத் தானம் பதிவாகியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 194 பேர் உறுப்பு தானம் செய்துள்ளனர்.
- அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (156), கர்நாடகா (151), குஜராத் (148) ஆகியவை உள்ளன.




## குட்டிக்கானம் அரண்மனை

- குட்டிக்கானம் என்பது கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள வாகமனுக்கும் தேக்கடிக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு அழகிய மலைவாசஸ்தலம் ஆகும்.
- இது கேரள மாநிலத் தொல்லியல் துறையின் ஒரு முயற்சியால் விரைவில் வரலாற்று நினைவுச் சின்னம் என்ற அந்தஸ்தினைப் பெறவுள்ளது.
- இது அம்மாச்சி கொட்டாரம் என்றும் அழைக்கப் படுகிறது.

- இந்த அரண்மனையானது 1890 ஆம் ஆண்டில் கட்டமைக்கப்பட்டது.
- 130 ஆண்டுகள் பழமையான இந்த அரண்மனையானது ஒரு காலத்தில் திருவிதாங்கூர் மன்னர்களின் கோடைகால வாசஸ்தலமாகத் திகழ்ந்தது.
- இந்த அரண்மனையானது, 1885 ஆம் ஆண்டு முதல் 1924 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தை ஆட்சி செய்த மூலம் திருநாள் ராம வர்மாவின் ஆட்சியின் போது கட்டமைக்கப் பட்டது.

## கேரளம் பெயர் மாற்றம் மீதான மாநில சட்டசபையின் தீர்மானம்

- கேரள மாநிலத்தின் பெயரை 'கேரளா' என்பதில் இருந்து 'கேரளம்' என மாற்றுவதற்காக மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்கும் வகையில் கேரளச் சட்டப் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.
- மலையாள மொழியில், இந்த மாநிலம் 'கேரளம்' என்று குறிக்கப்படுகிறது, ஆனால் மற்ற மொழிகளில், இது 'கேரளா' என்று அழைக்கப் படுகிறது.
- 'கேரளம்' என்றச் சொல்லானது தென்னையைக் குறிக்கும் "கேரா," மற்றும் நிலத்தைக் குறிக்கின்ற "ஆலம்" ஆகிய இரண்டு மலையாளச் சொற்களின் மீதான இணைப்பினைக் குறிக்கிறது.
- இவ்வாறு, 'கேரளம்' என்ற சொல் "தென்னை மர தேசம்" என்பதன் சாராம்சத்தை நுணுக்கமாக உள்ளடக்கியுள்ளது.
- இது இந்தியாவின் ஒட்டு மொத்தத் தேங்காய் சாகுபடியில் சுமார் 45% பங்களிப்பினைக் கொண்டுள்ளது.
- முதல் அட்டவணையில் அதன் பெயரை மாற்றுவதற்கு அரசியலமைப்பின் 3வது சட்டப் பிரிவின் விதிகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- இந்தப் பெயர் மாற்றத்தின் மூலம், அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் பட்டியலிடப் பட்டுள்ள அனைத்து மொழிகளிலும் 'கேரளம்' என்ற சொல்லானது அந்த மாநிலத்தின் அதிகாரப் பூர்வப் பெயராக ஏற்றுக் கொள்ளப் படும்.




## நிதியியல் நலன் குறித்த அறிக்கை

- டியூட்சே பாங்க் இந்தியா வங்கியின் தலைமைப் பொருளாதார நிபுணர் கௌசிக் தாஸ் 17 முக்கிய மாநிலங்களின் நிதி நலன் பற்றிய அறிக்கையினைத் தயாரித்துள்ளார்.

- 2024 ஆம் நிதியாண்டின் முதல் நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளின் அடிப்படையில், முன்னணியில் உள்ள முதல் மூன்று மாநிலங்கள் மகாராஷ்டிரா, சத்தீஸ்கர் மற்றும் தெலுங்கானா ஆகியன ஆகும்.
- கடைநிலையில் உள்ள மூன்று மாநிலங்கள் மேற்கு வங்காளம், பஞ்சாப் மற்றும் கேரளா ஆகியனவாகும்.
- மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் சத்தீஸ்கர் ஆகியவை 2004 முதல் 2016 வரையிலான நிதியாண்டுகளின் முன்னணியில் இருந்தன.
- 2004-2016 ஆகிய காலகட்டத்தில், மேற்கு வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் கடைநிலையில் மீண்டும் மீண்டும் இடம் பெற்றுள்ளன.

## போதைப் பொருள் பறிமுதல் பட்டியலில் உள்ள முன்னணியில் உள்ள மாநிலங்கள்

- பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருந்து அதிக அளவிலான ஹெராயின் போதைப் பொருளை எல்லைப் பாதுகாப்புப் படை கைப்பற்றியுள்ளது.
- திரிபுரா மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களில் இருந்து அதிகபட்ச அளவிலான 'கஞ்சா' பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.
- 1985 ஆம் ஆண்டு போதைப் பொருள் மருந்துகள் மற்றும் மனப் பிறழ்வை ஏற்படுத்தும் பொருள்கள் (NDPS) சட்டமானது எல்லைப் பாதுகாப்புப் படைக்கு (BSF) இந்த முக்கிய அதிகாரத்தினை அளிக்கிறது.



How India is caught between the "Death Crescent" and the "Death Triangle";

## புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகள்

- ஜம்மு காஷ்மீரில் உள்ள ரஜோரி மாவட்டத்தைச் சேர்ந்த சிக்ரி மரக் கைவினைப் பொருட்கள் மற்றும் அனந்த்நாக் மாவட்டத்தைச் சேர்ந்த முஷ்க்புட்ஜி அரிசி ஆகியவை தற்போது புவிசார் குறியீடு பெற்றுள்ளன.
- சிக்ரி என்பது ஜம்மு மாகாணத்தின் ரஜோரி மாவட்டத்தில் உள்ள மலைத் தொடர்களில் காணப்படும் வெளிறிய, தேன் நிறமுள்ள, மெல்லிய வரியமைப்புகள் கொண்ட ஒரு மென்மை ரக மரமாகும்.


- முஷ்க்புட்ஜி அரிசி என்பது காஷ்மீர் பள்ளத்தாக்கின் உயரமான பகுதிகளில் குறிப்பாக அனந்த்நாக் மாவட்டத்தில் வளர்க்கப்படும் குட்டையான, தடிமனான, நறுமணம் மிக்க ஒரு தரமான அரிசி வகையாகும்.





## அதிக எண்ணிக்கையிலான புற்றுநோய்ப் பாதிப்புகள்

- இந்தியா முழுவதும் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் தொடர்ந்து அதிகரித்து வரும் போக்கு ஆனது 2022 ஆம் ஆண்டிலும் நீடித்தது.
- 2.10 லட்சம் புதியப் பாதிப்புகளுடன் உத்தரப் பிரதேசம் முதலிடத்தில் உள்ள நிலையில், 2020 ஆம் ஆண்டில் இந்த மாநிலத்தில் பதிவான பாதிப்பு எண்ணிக்கை 2.01 லட்சமாகும்.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் பதிவான மொத்தப் பாதிப்புகளில் 8,08,558 பேர் உயிரிழந்துள்ளனர்.
- இறப்பு விகிதம் ஆனது 55 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.
- இதில் 1,16,818 உயிரிழப்புகளுடன் உத்தரப் பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- உத்தரப் பிரதேச மாநிலத்தின் இறப்பு விகிதம் தேசியச் சராசரி இறப்பு விகிதத்திற்குச் சமமாக உள்ளது.
- இறப்பு எண்ணிக்கையில் மகாராஷ்டிரா மாநிலம் இரண்டாவது இடத்தில் உள்ளது.




## 'கோசினா மனே' குழந்தைகள் காப்பகம்

- 4,000க்கும் மேற்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் பணிக்குச் செல்லும் தாய்மார்களின் குழந்தைகளுக்காக "கோசினா மனே" என்றத் திட்டத்தினைக் கர்நாடக அரசு அறிவித்து உள்ளது.

- "கோசினா மனே" என்பது தமிழில் குழந்தைகள் நல இல்லங்கள் அல்லது குழந்தைகள் காப்பகம் என்று அழைக்கப் படுகின்றன.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் பணி புரியும் தாய்மார்களின் குழந்தைகளுக்குச் சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் அதன் மீது பாதுகாப்பை வழங்குவதே இதன் நோக்கமாகும்.
- இது இந்த மையங்களின் அருகில் வசிக்கும் மற்ற தாய்மார்களுக்கும் அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவுகிறது.

## கல்கா-சிம்லா பாரம்பரிய இரயில் பாதை

- இமாச்சலப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் வரலாற்றுச் சிறப்புமிக்க 94 கி.மீ. நீள கல்கா-சிம்லா இரயில் பாதை சிதிலமடைந்தது.
- கல்கா-சிம்லா இரயில் பாதையானது 1903 ஆம் ஆண்டில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறக்கப் பட்டது.
- தற்போது, இந்த வழித்தடத்தில் அமைந்த 20 இரயில் நிலையங்களுக்கு இடையே 102 சுரங்கங்களும் 919 வளைவுகளும் உள்ளன.
- இந்த இரயில் பாதை யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளத்தின் கீழ் இந்தியாவின் மலை இரயில் தடம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது டார்ஜிலிங் இமாலய இரயில் தடம் மற்றும் நீலகிரி மலை இரயில் தடம் ஆகிய இரண்டு நிலையங்களுடன் இந்த பெருமையினைப் பகிர்ந்து கொள்கிறது.



## தனியார் துறை பெருநிறுவன முதலீடு

- வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து முதலீட்டு நிதியை ஈர்த்த மாநிலங்களின் பட்டியலில் உத்தரப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
- வங்கிகள் / நிதி நிறுவனங்களால் அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் மொத்தச் செலவினங்களில் இம்மாநிலம் அதிகப் பங்கை (16.2 சதவீதம்) கொண்டுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டு பட்டியலில் அதைத் தொடர்ந்து குஜராத், ஒடிசா, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.




## இந்தியாவின் முதல் கிராம விளக்க வரைபடம்




- கோவா முதல்வர் வடக்கு கோவாவில் உள்ள மேயம் கிராமத்தின் பல்லுயிர்ப் பெருக்க விளக்க வரைப்படத்தினை வெளியிட்டார்.
- இது "இந்தியாவின் முதல் கிராம விளக்க வரைபடம்" என்று அழைக்கப் படுகிறது.
- இந்த விளக்க வரைபடம் ஆனது, 12 ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய மேயம் கிராமத்தின் சமூக-கலாச்சார வரலாறு குறித்தத் தகவல்களை வழங்குகிறது.

## உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்த மோட்டார் வாகனச் சாலை

- லடாக்கில் ‘லிகாரு-மிக் லா-ஃபுக்சே’ சாலையை அமைப்பதில் எல்லைச் சாலைகள் அமைப்பு பணியாற்றி வருகிறது.
- இது உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்த மோட்டார் வாகனச் சாலையாக இருக்கும்.
- உத்தி சார்ந்த முக்கியத்துவம் கொண்ட சாலையாக, சுமார் 19,400 அடி உயரத்தில் அமைக்கப் பட்டு வருகிற 'லிகாரு-மிக் லா-ஃபுக்சே' சாலை உலகிலேயே மிக உயரமான இடத்தில் அமைந்த மோட்டார் வாகனச் சாலையாகும்.
- தற்போது, லடாக்கில் 19,024 அடி உயரத்தில் உம்லிங் லா என்னுமிடத்தில் உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்த மோட்டார் சாலை அமைந்துள்ளது.




## நெகிழிப் பயன்பாடு இல்லாத மைசூர் அரண்மனை



- வரலாற்றுச் சின்னமான மைசூரு அரண்மனை விரைவில் நெகிழிப் பயன்பாடு இல்லாத அரண்மனையாக மாற உள்ளது.
- மைசூரு உயிரியல் பூங்காவிற்கு அடுத்தப் படியாக நெகிழி இல்லாத இரண்டாவது சுற்றுலாத் தலமாக இது அமைய உள்ளது.
- இந்த கருத்தாக்கமானது மைசூர் உயிரியல் பூங்காவில் சிறந்த முறையில் செயலாக்கப் பட்டது.
- பார்வையாளர்கள் இந்த உயிரியல் பூங்காவிற்குள் நெகிழிக் குடுவைகளை எடுத்துச் செல்வதற்கு ஒரு குடுவைக்கு 20 ரூபாய் வைப்பு வைத்து உள் நுழைய வேண்டும்.
- அதைச் சுற்றிப் பார்த்து திரும்பும் போது, அவர்கள் குடுவையைத் திருப்பி தந்து தங்கள் பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.


## மகாராஷ்டிராவின் முதல் யானைகள் வளங்காப்பகம்

- மஹாராஷ்டிரா அரசானது தில்லாரி வனப்பகுதியின் சுமார் 3,000 ஹெக்டேர் பரப்பினை யானைகள் வளங்காப்பகமாக அறிவித்துள்ளது.

- தில்லாரி என்பது கொங்கன்-மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர்களில் அமைந்துள்ள ஒரு வனப்பகுதியாகும்.
- மகாராஷ்டிராவில் 62 வளங்காப்பகங்கள் உள்ள நிலையில் அவற்றில் 13 காப்பகங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளன.




## கிராஃபீன்-அரோரா திட்டம்



- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஆனது, கொச்சியில் உள்ள மேக்கர் கிராமத்தில் நடைபெற்ற விழாவில் 'கிராஃபீன்-அரோரா திட்டத்தை' அறிமுகப் படுத்தியது.
- இந்தத் திட்டமானது கேரளாவின் எண்ணிமப் பல்கலைக்கழகத்தால் செயல்படுத்தப்பட உள்ளது.
- இது ஆராய்ச்சிக்கும் வணிகமயமாக்கலுக்கும் இடையே ஒரு இணைப்புப் பாலமாகச் செயல்படும்.
- இது பல்வேறு புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்துறைகள் கிராஃபீன் தொழில் நுட்பங்களை உருவாக்கி மேம்படுத்துவதற்கான ஒரு விரிவான வசதியை வழங்குகிறது.
- கிராஃபீன் என்பது கிராஃபைட்டிலிருந்துப் பிரித்தெடுக்கப்படுகின்ற, தூய கார்பனால் ஆன கனிமமாகும்.
- பென்சிலின் உள்ளக எழுதுகோல் போன்ற பல்வேறு அன்றாடப் பொருட்களில் நாம் பயன்படுத்தும் இயற்கையின் மிக முக்கியமான கூறுகளில் இதுவும் ஒன்றாகும்.
- இது உலகின் மிக மெல்லிய, வலிமையான மற்றும் மின்சாரம் மற்றும் வெப்பம் ஆகிய இரண்டையும் கடத்தும் வகையிலான பொருளாகும்.
- இது தாமிரத்தை விட அதிகளவில் மின்சாரத்தைக் கடத்துகிறது.
- இது எஃகினை விட 200 மடங்கு வலிமையானது ஆனால் ஆறு மடங்கு இலகுவானது.

## ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் பேருந்து

- தேசிய அனல் மின் கழகமானது லே நகரில் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் பேருந்தின் சோதனை ஓட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- தேசிய அனல் மின் கழக நிறுவனமானது இந்தியாவின் மிகப்பெரிய மின் உற்பத்தியாளர் மற்றும் மின் அமைச்சகத்தின் கீழ் ஒரு மத்திய பொதுத்துறை நிறுவனம் ஆகும்.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## முதலாவது 'உத்யோக் ரத்னா' விருது

- இந்த ஆண்டு முதல் புகழ்பெற்ற உத்யோக் ரத்னா விருதை அறிமுகப்படுத்துவதற்கு மகாராஷ்டிர அரசு முடிவு செய்தது.
- அம்மாநில அரசானது, டாடா குழுமத்தின் தலைவரான ரத்தன் டாடாவுக்கு, மதிப்பிற்கு உரிய முதலாவது மகாராஷ்டிரா உத்யோக் ரத்னா விருதை வழங்கி கௌரவித்தது.
- இது மதிப்புமிக்க நபர்களுக்கு அரசினால் வழங்கப்படும் மிக உயரிய அரச மரியாதை ஆகும்.
- மகாராஷ்டிரா பூஷன் விருதைப் போலவே, இந்த விருதும் பெரு மகத்தான நபர்களுக்கு வழங்கப் படுகிறது.
- 2008 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் மற்றும் 2000 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் போன்ற இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க குடிமை விருதுகளையும் ரத்தன் டாடா அவர்கள் பெற்றுள்ளார்.

## லோகமான்ய திலகர் தேசிய விருது 2023

- இந்தியப் பிரதமர் அவர்களுக்கு லோகமான்ய திலகர் தேசிய விருது வழங்கப் பட்டு உள்ளது.
- இந்த விருதினைப் பெறும் 41வது நபர் இவர் ஆவார்.
- இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர் பாலகங்காதர திலகரின் வாழ்வியல் மரபினைப் போற்றும் வகையில் இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இந்த விருதானது திலக் ஸ்மாரக் மந்திர் அறக்கட்டளையால் 1983 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது.
- இது தேசத்தின் முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டிற்காக நன்கு உழைத்தவர்களுக்கும், குறிப்பிடத் தக்க மற்றும் மகத்தானப் பங்களிப்பினை ஆற்றிய நபர்களுக்கும் வழங்கப் படுகிறது.
- இந்த விருதானது ஒவ்வோர் ஆண்டும் பாலகங்காதர திலகர் அவர்களின் நினைவு நாளான ஆகஸ்ட் 01 ஆம் தேதியன்று வழங்கப் படுகிறது.
- கடந்த ஆண்டில், இந்தியாவின் "ஏவுகணைப் பெண்" என்று அழைக்கப்படும் மூத்த அறிவியலாளர் டெஸ்ஸி தாமஸுக்கு லோகமான்ய திலக் தேசிய விருது வழங்கப் பட்டது.

## தெலுங்கானாவின் பல்லடீர் கத்தார் (74)

- சமீபத்தில் அவர் தனது புரட்சிகர மரபினைப் புவியிலேயே விட்டு விட்டு மறைந்தார்.
- இவர் 1980 ஆம் ஆண்டுகளில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) அல்லது CPI-ML (மக்கள் போராட்டக் குழு – PWG) கட்சி உறுப்பினரானார்.
- 2004 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள காங்கிரஸ் மாநில அரசுக்கும் PWG குழுவிற்கும் இடையே நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

- ❖ கத்தார், புரட்சிகர எழுத்தாளர்கள் வரவர ராவ் மற்றும் கல்யாண் ராவ் ஆகியோருடன் இணைந்து நக்சலைட்டுகளின் தூதுவர்களாகச் செயல்பட்டனர்.
- ❖ இருப்பினும், 2017 ஆம் ஆண்டில், கத்தார் மாவோயிஸ்டுகளுடனான தனது அனைத்து உறவுகளையும் முற்றிலுமாகத் துண்டித்துக் கொண்டு தன்னை ஒரு 'அம்பேத்கரைட்' என்று அறிவித்தார்.
- ❖ மேலும் 2018 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், அவர் தனது வாழ்நாளில் முதல் முறையாக வாக்களித்தார்.
- ❖ கதர், தனது ஆரம்பக் கட்ட வாழ்நாளின் போது தெலுங்கானா போராட்டத்தினை ஆதரித்தார்.

## ஸ்வீடிஷ் உரிமை பரிசு

- ❖ நாடு கடத்தப்பட்ட பெலாரஸ் நாட்டின் அரசியல் எதிர்க் கட்சித் தலைவர் ஸ்வெட்லானா டிகானோவ்ஸ்கயா உரிமைப் பரிசினை வென்றுள்ளார்.
- ❖ ஜனநாயகத்திற்காக வேண்டி "அயராது" உழைத்த, படுகொலை செய்யப்பட்ட, ஸ்வீடன் நாட்டினைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர் அன்னா லிண்ட் அவர்களின் நினைவாக இந்த பரிசு வழங்கப்படுகிறது.
- ❖ புறக்கணிப்பு, பாகுபாடு, அடக்குமுறை மற்றும் அநீதி ஆகியவற்றிற்கு எதிரான செயல் பாடுகளில் துணிவுடன் செயல்படும் முன்னணிப் பெண்கள் மற்றும் இளையோர்களை ஊக்குவிப்பதற்காக இந்தப் பரிசானது வழங்கப்படுகிறது.

## 76 வீரதீர விருதுகள்




- ❖ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் ஆயுதப்படைகள் மற்றும் மத்திய ஆயுதக் காவல் படை வீரர்களுக்கு 76 வீர தீர விருதுகளை வழங்க ஒப்புதல் அளித்து உள்ளார்.
- ❖ இதில்,
  - 4 கீர்த்தி சக்ரா (மறைவிற்குப் பின்),
  - 11 சௌர்ய சக்ரா(இதில் ஐந்து விருதுகள் மறைவிற்குப் பின்),

  - 2 சேனா பதக்கங்களுக்கு இணையான விருதுகள்,
  - 52 சேனா பதக்கங்கள் (வீரதீரச் செயல்),
  - 3 நாவோ சேனா பதக்கம் (வீரதீரச் செயல்) மற்றும்
  - 4 வாயு சேனா பதக்கங்கள் (வீரதீரச் செயல்).
- இராணுவத்திற்கான விருதிற்குப் பரிந்துரைக்கப்படும் 30 வீரர்களின் பட்டியலுக்கும் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.
- பல்வேறு இராணுவ நடவடிக்கைகளில் மிகவும் ஒரு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பினை ஆற்றியதற்காக இராணுவச் சேவையில் ஈடுபட்ட மது என்ற நாய் (மறைவிற்குப் பின்), மற்றும் விமானப்படை வீரர்களில் ஒருவர் உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட உள்ளன.

## 2023 ஆம் ஆண்டு சர்வதேச இளம் சுற்றுச்சூழல் நாயகர் விருது



- உலகம் முழுவதிலுமிருந்து 17 பதின்ம வயது சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் 2023 ஆம் ஆண்டு சர்வதேச இளம் சுற்றுச்சூழல் நாயகர் விருதைப் பெற உள்ளனர்.
- இந்த விருதினைப் பெற உள்ள 17 பேரில் இந்தியாவைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- அமெரிக்காவில் அமைந்துள்ள "Action For Nature" என்ற இலாப நோக்கற்ற அமைப்பானது அவர்களின் முயற்சிகளுக்காக இந்த அங்கீகாரத்தினை வழங்குகிறது.
- இந்த விருது பெற்ற இந்திய நபர்கள்
  - மீரட் நகரைச் சேர்ந்த ஈஹா தீட்சித்,
  - பெங்களூரைச் சேர்ந்த மான்ய ஹர்ஷா,
  - புது டெல்லியைச் சேர்ந்த நிர்வான் சோமனி மற்றும் மன்னத் கவுர் மற்றும்
  - மும்பையைச் சேர்ந்த கர்னவ் ரஸ்தோகி.

## புள்ளியியல் அறிவியலாளர்கள் C.R.ராவ்

- உலகின் தலைசிறந்தப் புள்ளியியல் நிபுணர் கலியம்புடி ராதாகிருஷ்ணன் ராவ் (102) காலமானார்.
- கொல்கத்தாவில் உள்ள இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தில் (ISI) ஆசிரியராகப் பணி புரிந்த அவர் ஆராய்ச்சி பணியிலும் ஈடுபட்டிருந்தார்.

- இந்தியாவில் தேசியப் புள்ளியியல் அமைப்புகள், புள்ளியியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக இந்திய அரசினால் அமைக்கப்பட்ட குழுக்களில் ஒரு உறுப்பினராகவும் அவர் பணியாற்றினார்.
- மேலும் அவர்,
  - புள்ளியியல் குழுவின் தலைவராகவும் (1962-69),
  - மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுக்கான மக்கள்தொகை மற்றும் தகவல் தொடர்பு தொடர்புத் தலைவராகவும் (1968-69),
  - கணிதம் மற்றும் அணுசக்தி ஆணையம் (AEC) ஆகியவற்றிற்கான குழுக்களின் தலைவராகவும் (1969-78),
  - அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் குழுவின் (COST) ஒரு உறுப்பினராகவும் (1969-71) பணியாற்றியுள்ளார்.
- 1969 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் முறையே அவருக்கு இந்தியாவின் மிக உயரிய விருதுகளான பத்ம பூஷன் மற்றும் பத்ம விபூஷன் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.

## 69வது தேசியத் திரைப்பட விருதுகள் 2023

| விருதின் பிரிவுகள் | விருது பெற்றவர்கள் |
|---|---|
| **சிறந்த திரைப்படம்** | ராக்கெட்ரி |
| **சிறந்த நடிகர்** | புஷ்பா |
| **சிறந்த இயக்குனர்** | நிகில் மகாஜன் (கோதாவரி) |
| **சிறந்த நடிகை** | ஆலியா பட் (கங்குபாய் கதியவாடி) |
| **தேசிய ஒருமைப்பாட்டிற்கான சிறந்த திரைப்படத்திற்கான நர்கிஸ் தத் விருது** | காஷ்மீர் பைல்ஸ் |
| **சிறந்த துணை நடிகர்** | பங்கஜ் திரிபாதி (மிமி) |
| **சிறந்த பொழுதுபோக்கினை வழங்கும் சிறந்த பிரபலமான திரைப்படம்** | RRR |
| **சிறந்த பெண் பின்னணி பாடகி** | ஸ்ரேயா கோஷல் (இரவின் நிழல்) |
| **சிறந்த தமிழ் திரைப்படம்** | கடைசி விவசாயி |
| **சிறப்பு குறிப்பிடல் விருது** | மறைந்த ஸ்ரீ நல்லாண்டி (கடைசி விவசாயி) |
| **சிறந்த கல்வி சார் திரைப்படம்** | சிற்பிகளின் சிற்பங்கள் |

- 69வது தேசியத் திரைப்பட விருதுகள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டன.
- இந்திய சினிமாவின் உயிரோட்டத்தினைக் கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் தேசியத் திரைப்பட விருதுகள் வழங்கப்படுகின்றன.
- தேசியத் திரைப்பட விருது வழங்கும் விழாவானது, மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் திரைப்பட விருது வழங்கல் இயக்குநரகத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.
- தேசியத் திரைப்பட விருதுகள் 1954 ஆம் ஆண்டில் "அரசு விருதுகள்" என்ற பெயரில் வழங்கத் தொடங்கப்பட்டது.

## ஸ்வச் வாயு சர்வேக்சன் - 2023

| Rank | Population Category | City |
|---|---|---|
| 1st | > 10 lakhs | Indore |
| 2nd | > 10 lakhs | Agra |
| 3rd | > 10 lakhs | Thane |
| 4th | > 10 lakhs | Srinagar |
| 5th | > 10 lakhs | Bhopal |

- மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்ட 2023 ஆம் ஆண்டு ஸ்வச் வாயு சர்வேக்சன் மதிப்பீட்டில் இந்தூர் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து ஆக்ரா, தானே, ஸ்ரீநகர் மற்றும் போபால் ஆகியவை இடம் பெற்று உள்ளன.

## இந்தியப் பொலிவுறு நகரங்கள் விருது போட்டி – 2022



- பொலிவுரு நகரங்கள் திட்டத்தில் இந்தூர் சிறந்த பொலிவுரு நகரமாகவும், மத்தியப் பிரதேச மாநிலனது சிறப்பான செயல்திறன் கொண்டச் சிறந்த மாநிலமாகவும் தேர்வு செய்யப் பட்டுள்ளன.
- இந்திய நகரங்களில் சூரத் மற்றும் ஆக்ரா ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை பெற்றுள்ளன.
- 2022 ஆம் ஆண்டு இந்தியப் பொலிவுரு நகரங்கள் விருது பட்டியலில் (ISAC) மாநிலங்கள் பிரிவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும், அதனைத் தொடர்ந்து ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களும் இடம் பெற்றுள்ளன.
- சிறந்த ஒன்றியப் பிரதேசத்திற்கான விருது சண்டிகருக்கு வழங்கப் பட்டுள்ளது.

## சந்திரயான்-3 திட்ட இயக்குனர்



- P. வீரமுத்துவேல் அவர்கள் சந்திரயான்-3 ஆய்வுத் திட்டத்தின் திட்ட இயக்குநராக பணியாற்றினார்.
- இவர் தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார்.
- திருச்சியில் உள்ள முந்தைய பிராந்தியப் பொறியியல் கல்லூரியில் (தற்போது தேசியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்) இயற்பியல் பொறியியலில் முதுகலைக் கல்வியை நிறைவு செய்தார்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.
- அவருக்கு 2003 ஆம் ஆண்டில் HAL நிறுவனத்தில் வேலை வாய்ப்பு வழங்கப் பட்டது, ஆனால் அவர் அந்த வாய்ப்பை நிராகரித்தார்.
- 2014 ஆம் ஆண்டில் இஸ்ரோவில் இணைந்தார்.
- புகழ்மிக்க சந்திரயான்-2 ஆய்வுத் திட்டத்திற்கான இணைத் திட்ட இயக்குநராக அவர் அறிவிக்கப்பட்டார்.
- சந்திரயான்-3 ஆய்வுத் திட்டத்திற்கான ஒரு திட்ட இயக்குநராக நியமிக்கப் படுவதற்கு முன்பு, வீரமுத்துவேல் இஸ்ரோவின் துணை இயக்குநராகப் பணிபுரிந்தார்.

# விளையாட்டுச் செய்திகள்

## ISSF ஜூனியர் உலக சாம்பியன்ஷிப் போட்டி 2023

- ❖ 2023 ஆம் ஆண்டு ISSF ஜூனியர் உலக சாம்பியன்ஷிப் போட்டியானது கொரியக் குடியரசில் நடைபெற்றது.
- ❖ 2023 ஆம் ஆண்டு ஜூனியர் உலகச் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க சென்ற 90 துப்பாக்கி சுடும் வீரர்களைக் கொண்ட இந்திய வீரர்கள் குழுவானது மிகப்பெரியதாக உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து இந்தப் போட்டியில் பங்கு பெற்ற மிகப்பெரிய குழு 66 பேர் கொண்ட கொரிய அணியாகும்.
- ❖ இந்தப் போட்டியில் இந்திய அணியானது ஆறு தங்கம், ஆறு வெள்ளி மற்றும் ஐந்து வெண்கலம் என 17 பதக்கங்களை வென்றது.
- ❖ இதில் ஏழு இந்தியர்கள் ஒன்றுக்கு மேற்பட்டப் பதக்கங்களை வென்றனர்.
- ❖ இதில் சயின்யம் மூன்று பதக்கங்கள் வென்றார்.
- ❖ இதில் அபினவ் ஷா மற்றும் கமல்ஜீத் ஆகியோர் தலா இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றனர்.
- ❖ இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பெருவின் லிமா நகரில் நடைபெற்ற உலக ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் 17 தங்கம் உட்பட 43 பதக்கங்களுடன் இந்திய அணி பதக்கப் பட்டியலில் முதலிடம் பெற்றது.

ISSF Junior World Championships 2023 medals tally

| Rank | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | China | 12 | 9 | 7 | 28 |
| 2 | India | 6 | 6 | 5 | 17 |
| 3 | Ukraine | 5 | 3 | 2 | 10 |
| 4 | Kazakhstan | 4 | 4 | 2 | 10 |
| 5 | Italy | 4 | 3 | 4 | 11 |
| 6 | USA | 4 | 1 | 8 | 13 |
| 7 | Korea | 3 | 6 | 8 | 17 |
| 8 | France | 2 | 2 | 1 | 5 |
| 8 | Switzerland | 2 | 2 | 1 | 5 |
| 10 | Norway | 2 | 1 | 3 | 6 |

## ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டி 2023

- ❖ சர்வதேச ஹாக்கிக் கூட்டமைப்பானது, தமிழக முதல்வரிடம் பாஸ் தி பால் டிராபியை வழங்கியது.
- ❖ 7வது ஆடவர் ஆசிய சாம்பியன்ஸ் டிராபி ஹாக்கிப் போட்டியானது சென்னையில் ஆகஸ்ட் 03 ஆம் தேதியன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.
- ❖ இந்த வகை சாம்பியன்ஸ் கோப்பைப் போட்டியானது 2011 ஆம் ஆண்டில் நடைபெறத் தொடங்கியது.

❖ சென்னை நகரமானது, 15 வருட இடைவெளிக்குப் பிறகு இப்போட்டியை நடத்துகிறது.

❖ இந்தியா, தென் கொரியா, மலேசியா, ஜப்பான், பாகிஸ்தான் மற்றும் சீன அணிகள் இந்தப் போட்டியில் பங்கேற்கின்றன.

❖ இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தலா மூன்று முறை இக்கோப்பையை வென்றுள்ளன.

❖ இந்தியா 2011 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளிலும், பாகிஸ்தான் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டிலும் சாம்பியன் பட்டம் வென்றன.

## கிராண்ட்மாஸ்டர் குகேஷ் சாதனை

### Following in the footsteps of Anand

The tables and graphs are based on data collated from olimpbase.org, 2700chess.com, fide.org. The ratings and rankings are after D. Gukesh's win against SL Narayanan on Sunday




Table 1 | The table shows the top five players from India at various points of time

| No. | Player | Rating | Ranking | Age |
|---|---|---|---|---|
| **INDIA TOP 5, JANUARY 1986** | | | | |
| 1 | Praveen Thipsay | 2485 | 148 | 27 |
| 2 | V. Anand | 2405 | 560 | 17 |
| 3 | Dibyendu Barua | 2395 | 641 | 20 |
| 4 | Raja Ravisekhar | 2390 | 706 | 32 |
| 5 | N Sudhakar Babu | 2380 | 810 | 21 |
| **INDIA TOP 5, JULY 1986** | | | | |
| 1 | V. Anand | 2420 | 438 | 17 |
| 2 | V. Devaki Prasad | 2410 | 523 | 32 |
| 3 | Dibyendu Barua | 2400 | 621 | 20 |
| 4 | Raja Ravisekhar | 2395 | 658 | 32 |
| 5 | Pravin Thipsay | 2375 | 835 | 27 |
| **INDIA TOP 5 AS ON MARCH 15, 2016 (LIVE RATINGS)** | | | | |
| 1 | P. Harikrishna | 2763.3 | 13 | 29 |
| 2 | V. Anand | 2763 | 14 | 46 |
| 3 | B. Adhiban | 2663 | 83 | 23 |
| 4 | S.P. Sethuraman | 2658 | 92 | 23 |
| 5 | Abhijeet Gupta | 2654 | 98 | 27 |
| **INDIA TOP 5 AS ON AUGUST 6, 2023 (LIVE RATINGS)** | | | | |
| 1 | D. Gukesh | 2758.6 | 9 | 17 |
| 2 | V. Anand | 2754 | 10 | 53 |
| 3 | Vidit Gujrathi | 2718.0 | 25 | 28 |
| 4 | R. Pragnanandhaa | 2714.6 | 27 | 17 |
| 5 | P. Harikrishna | 2711 | 30 | 37 |

Chart 2 | The chart shows Viswanathan Anand's world rankings over time. He has remained within the top 17 players in the world from January 1991 till now





Chart 3 | The chart plots Gukesh and Anand's FIDE ratings against their age in months. Anand began his chess journey in a different era when there were fewer Super GMs





Table 4 | Oldest players in top 100 and their ranking

55 years Boris Gelfand (84th)
54 years Vasyl Ivanchuk (67th)
53 years V Anand (10th)
51 years Alexei Shirov (61st)
51 years Michael Adams (75th)
48 years Veselin Topalov (21st)
47 years Peter Svidler (41st)
46 years Evgeniy Najer (96th)
43 years Kasimdzhanov (98th)
43 years Peter Leko (70th)
42 years Malakhov (90th)

❖ சதுரங்க கிராண்ட்மாஸ்டர் தொம்மராஜு குகேஷ் தற்போது இந்தியாவின் முன்னணிச் சதுரங்க வீரராக மாறியுள்ளார்.

❖ தினசரி மதிப்பீடுகளில் இந்தியாவின் முதல் கிராண்ட்மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்தை அவர் முந்தியுள்ளார்.

- சென்னையைச் சேர்ந்த 17 வயதான குகேஷ், அஜர்பைஜானின் பாகு நகரில் நடைபெற்ற ஒரு பெரிய ஒற்றை ஆட்ட நீக்கப் போட்டியான FIDE சதுரங்க உலகக் கோப்பைப் போட்டியின் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றதையடுத்து இவர் இந்த முக்கியப் பெருமையினை அடைந்துள்ளார்.
- ஆனந்த், கடந்த 36 ஆண்டுகளாக இந்தியாவின் தலைசிறந்த சதுரங்க வீரராகத் திகழ்ந்து வருகிறார்.

## உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி 2023

- இந்திய மகளிர் கலப்பு அணியானது மெக்சிகோ நாட்டின் அணியை வீழ்த்தி தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளது.
- ஜெர்மனியின் பெர்லின் நகரில் இப்போட்டி நடைபெற்றது.
- 1981 ஆம் ஆண்டு உலக வில்வித்தைச் சாம்பியன்ஷிப் போட்டியில் முதன்முறையாக இந்திய அணி பங்கேற்றது முதல், முதன் முறையாக இந்திய வில்வித்தை அணியானது தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

## ஆசிய சாம்பியன்ஸ் ஹாக்கி கோப்பை 2023

- இந்திய ஹாக்கி அணியானது, மலேசியாவின் அணியை வீழ்த்தி ஆசிய சாம்பியன்ஸ் கோப்பைப் போட்டியில் (2023) நான்காவது முறையாக வெற்றி பெற்றது.
- நான்கு ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டிகளில் வெற்றி பெற்றதன் மூலம், இந்தப் போட்டியின் வரலாற்றில் அதிக வெற்றிகளை குவித்த அணியாக இந்தியா திகழ்கிறது.
- இந்தப் போட்டியில் மூன்று முறை வெற்றி பெற்றதன் மூலம் பாகிஸ்தான் இப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

## உலகப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்

- இந்திய அணியானது சீனாவில் நடைபெற்ற உலகப் பல்கலைக்கழக விளையாட்டு (WUG) போட்டிகளில் 11 தங்கம் உட்பட 26 பதக்கங்களுடன் தனது பங்கேற்பினை நிறைவு செய்தது.
- இந்திய அணியானது 11 தங்கம், 5 வெள்ளி மற்றும் 10 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் ஏழாவது இடத்தைப் பிடித்து, முன்னணியில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு உலகப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னதாக இந்தியா 21 பதக்கங்களை (6 தங்கம், 6 வெள்ளி மற்றும் 9 வெண்கலம்) வென்றிருந்தது.
- 21 பேர் கொண்ட துப்பாக்கிச் சுடுதல் வீரர்கள் குழுவானது 8 தங்கம், 4 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களுடன் முன்னணியில் உள்ளது. வில்வித்தை வீரர்கள் 3 தங்கம், 1 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.
- ஜூடோ போட்டியில் ஒரு வெண்கலப் பதக்கத்தினையும் வென்றது.
- இந்தப் போட்டியை நடத்தும் சீன நாட்டின் அணியானது 178 பதக்கங்களுடன் முதல் இடத்திலும், ஜப்பான் (79) மற்றும் கொரியா (58) அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

| Rank | Country/Region | ↑ | | | ↑ |
|---|---|---|---|---|---|
| 1 | China | 103 | 40 | 35 | 178 |
| 2 | Japan | 21 | 29 | 43 | 93 |
| 3 | Rep. Korea | 17 | 18 | 23 | 58 |
| 4 | Italy | 17 | 18 | 21 | 56 |
| 5 | Poland | 15 | 16 | 12 | 43 |
| 6 | Türkiye | 11 | 12 | 12 | 35 |
| 7 | India | 11 | 5 | 10 | 26 |
| 8 | Chinese Taipei | 10 | 17 | 19 | 46 |
| 9 | Lithuania | 6 | 4 | 2 | 12 |
| 10 | France | 5 | 8 | 10 | 23 |

## FIFA மகளிர் உலகக் கோப்பைப் போட்டி 2023

- ❖ ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற FIFA மகளிர் உலகக் கோப்பைப் போட்டியின் இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணி இங்கிலாந்து அணியினை வீழ்த்தியது.
- ❖ இந்த வெற்றியின் மூலம், ஜெர்மனியை அடுத்து ஆடவர் மற்றும் மகளிர் உலகக் கோப்பை ஆகிய இரண்டு பிரிவுகளிலும் கோப்பை வென்ற இரண்டாவது நாடு என்ற பெருமையினை ஸ்பெயின் பெற்றது.

## உலகக் கோப்பை சதுரங்க இறுதிப் போட்டி

- ❖ இந்தியாவின் ரமேஷ்பாபு பிரக்ஞானந்தாவை வீழ்த்தி நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன் சதுரங்க உலகக் கோப்பையினை வென்றுள்ளார்.
- ❖ பிரக்ஞானந்தா கஜகஸ்தானில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு FIDE உலகக் கோப்பைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.
- ❖ ஐந்து முறை உலக சாம்பியன்ஷிப் கோப்பையினை வென்ற கார்ல்சன் வென்ற முதல் உலகக் கோப்பை இதுவாகும்.
- ❖ பிரக்ஞானந்தா, தற்போது பாபி பிஷ்ஷர் மற்றும் கார்ல்ன் ஆகியோருக்குப் பிறகு கேண்டிடேட்ஸ் போட்டிக்குத் தகுதி பெற்ற மூன்றாவது இளம் வீரர் என்ற ஒரு பெருமையினைப் பெற்றுள்ளார்.




- ❖ பிரக்ஞானந்தா 2016 ஆம் ஆண்டில் தனது 10 வயதில் சதுரங்கப் போட்டியின் வரலாற்றில் இளம் சர்வதேச மாஸ்டர் ஆனார்.

- இவர் தனது ஏழு வயதிலேயே சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் மாஸ்டர் என்ற ஒரு பட்டத்தைப் பெற்றார்.

## உலக குத்துச்சண்டை அமைப்பில் இணையும் புதிய உறுப்பினர்கள்

- உலக குத்துச்சண்டை என்பது குத்துச் சண்டை விளையாட்டை நடத்தச் செய்வதற்காக சர்வதேச ஒலிம்பிக் குழுவின் (IOC) அங்கீகாரத்தை கோரும் ஒரு புதிய அமைப்பாகும்.
- கனடா, பிரேசில், அர்ஜென்டினா, ஜெர்மனி, ஹோண்டுராஸ் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் தேசியக் கூட்டமைப்புகள் இந்த அமைப்பில் புதிதாக இணைந்துள்ளன.
- இது மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 12 ஆக உயர்த்தியது.
- நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பிரிட்டன், நெதர்லாந்து மற்றும் அமெரிக்கா ஆகியவை ஏற்கனவே இந்த அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன.
- முன்னதாக நிர்வாகம், நிதி மற்றும் விளையாட்டுச் சீர்திருத்தங்கள் சார்ந்த பல்வேறு விதிமுறைகளை நிறைவேற்றத் தவறியதற்காக ரஷ்யா தலைமையிலான சர்வதேசக் குத்துச் சண்டை சங்கத்தின் அங்கீகாரத்தினை சர்வதேச ஒலிம்பிக் குழு ரத்து செய்தது.

# முக்கிய தினங்கள்

## உலகளாவிய வலைதள தினம் – ஆகஸ்ட் 01


- உலகளாவிய வலை தளம் (www) உருவாக்கப்பட்டதை நினைவு கூறுவதற்காகவும், உலகில் அதன் தாக்கத்தை அங்கீகரிப்பதற்காகவும் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- 1991 ஆம் ஆண்டு இந்த நாளில், டிம் பெர்னர்ஸ்-லீ உலகளாவிய வலை தளத்தினை அறிமுகம் செய்யும் ஒரு திட்டத்தை ஆல்ட். ஹைபர்டெக்ஸ்ட் (தகவல் இணைப்பு உள்ளீடுகளைக் கொண்ட) செய்திக் குழுவில் வெளியிட்டார்.



- 1989 ஆம் ஆண்டு சர் டிம் பெர்னர்ஸ்-லீ என்பவரால் இந்தத் தளம் உருவாக்கப் பட்டது.
- CERN அமைப்பில் உள்ள ஆராய்ச்சியாளர்களிடையேத் தகவல்களைப் பகிர்வதற்கும் தகவல் மேம்பாட்டினை மேற்கொள்வதற்கு ஏதுவாகவும் அமைந்த "பரவலாக்கப்பட்ட தகவல் அமைப்பிற்கான" முன்மொழிதலை அவர் சமர்ப்பித்தார்.
- முதல் இணையச் சேவையகம், "http," மற்றும் முதல் இணைய உலாவி, "WorldWideWeb" (பின்னர் Nexus என மறுபெயரிடப் பட்டது) ஆகியவை 1990 ஆம் ஆண்டில் பெர்னர்ஸ்-லீ மற்றும் அவரது சகாவான ராபர்ட் கைலியாவ் ஆகியோரால் உருவாக்கப் பட்டது.

## முஸ்லிம் பெண்கள் உரிமை தினம் – ஆகஸ்ட் 01

- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்த முத்தலாக் முறைக்கு எதிராக சட்டம் இயற்றப்பட்டத் தினத்தினைக் குறிக்கிறது.
- 2021 ஆம் ஆண்டில் முதன்முறையாக முஸ்லீம் பெண்கள் உரிமைகள் தினம் என்பது கொண்டாடப் பட்டது.
- முத்தலாக் முறைக்கு எதிரான இந்தச் சட்டமானது, விவாகரத்து விதிமுறைகளில் அவர்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளில் இருந்து அவர்களை விடுவித்தது.
- முத்தலாக் என்பது தலாக்-இ-பித்தத் என்றும் அழைக்கப் படுகிறது.
- இஸ்லாமிய சமயத்தில் நடைமுறையில் உள்ள ஒரு விவாகரத்து முறையான இதில் ஒரு ஆண் மூன்று முறை தலாக் என்று உச்சரித்து தனது மனைவியை அவர் விவாகரத்து செய்யலாம்.
- மேலும், தலாக் உச்சரிக்கும் நேரத்தில் விவாகரத்திற்கான எந்த ஒரு காரணத்தையும் ஒருவர் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.
- தலாக் உச்சரிக்கப்படும் இடத்தில் மனைவி இருக்க வேண்டிய அவசியமுமில்லை.



## உலக தாய்ப்பால் வாரம் – ஆகஸ்ட் 01 முதல் 07 வரை





- இந்த வாரமானது, தாய்ப்பால் கொடுப்பதால், குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் இருவரின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வில் விளையும் நன்மைகள் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்தவும் அதனை ஊக்குவிப்பதற்காகவும் உலகளவில் கொண்டாடப் படுகிறது.
- 1991 ஆம் ஆண்டில், தாய்ப்பால் கொடுப்பதன் நன்மைகளை மக்களுக்கு தெரிவிக்கச் செய்வதற்காக உலகத் தாய்ப்பாலூட்டல் நடவடிக்கை (WABA) என்ற அமைப்பானது உருவாக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "தாய்ப் பால் ஊட்டலை நடைமுறையாக்கல்: பணிபுரியும் பெற்றோருக்காக ஒரு மாற்றத்தை ஏற்படுத்துதல்" என்பதாகும்.
- தாய்ப் பாலூட்டலானது, ஆண்டுதோறும் ஐந்து வயதுக்குட்பட்ட 8,20,000 குழந்தைகளின் உயிரைக் காக்கும் என்று உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.

## புவியின் இயற்கை வளங்கள் அனைத்தும் தீரும் நாள் 2023 - ஆகஸ்ட் 02

- ஆகஸ்ட் 02 ஆம் தேதியானது 2023 ஆம் ஆண்டிற்கான புவியின் இயற்கை வளங்கள் அனைத்தும் தீரும் நாளினைக் குறிக்கிறது.
- இது ஒவ்வோர் ஆண்டும், புவியானது ஓர் ஆண்டில் இயற்கையாகவே மீளுருவாக்கும் வளங்களை விட அதிகமான இயற்கை வளங்களை மனிதர்கள் பயன்படுத்தும் தேதி ஆகும்.

- ஒவ்வோர் ஆண்டும், இலாப நோக்கற்ற உலக கரிமத் தாக்க வலையமைப்பு ஆனது சுற்றுச்சூழல் வளங்களுக்கான வழங்கல் மற்றும் தேவையைக் கணக்கிடுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் தரவைப் பயன்படுத்துகிறது.
- புவியின் இயற்கை வளங்கள் அனைத்தும் தீரும் நாள் ஆனது 1971 ஆம் ஆண்டில் முதல் முறையாக கணக்கிடப்ப ட்டது.
- அப்போது அத்தினம் அந்த ஆண்டின் டிசம்பர் 25 ஆம் தேதியாக மதிப்பிடப்பட்டது.




## இந்திய உறுப்பு தான தினம் - ஆகஸ்ட் 03

- இந்த நாள் ஆனது 1994 ஆம் ஆண்டில் இந்தியாவில் இறந்த ஒருவரின் இதய மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டதை நினைவு கூருகிறது.
- மனித உறுப்புகள் மற்றும் திசுக்களின் மாற்றுச் சட்டமானது 1994 ஆம் ஆண்டில் இயற்றப் பட்டது.
- தேசிய உறுப்பு தினமானது 2022 ஆம் ஆண்டு வரையில் நவம்பர் 27 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.
- பத்து லட்சம் பேருக்கு 0.05 ஆக இருந்த இந்தியாவின் உறுப்பு தானம் விகிதம் ஆனது சில ஆண்டுகளில் பத்து லட்சம் பேருக்கு 0.8 ஆக அதிகரித்துள்ளது.



## ஹிரோஷிமா தினம் 2023 - ஆகஸ்ட் 06

- இரண்டாம் உலகப் போரின் போது 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 ஆம் தேதியன்று, எனோலா கே என்ற ஒரு அமெரிக்க விமானம் ஜப்பானின் ஹிரோஷிமா நகரின் மீது "லிட்டில் பாய்" என்ற அணுகுண்டை வீசியது.
- அன்றிலிருந்து இன்று வரை எழுபத்தேழு ஆண்டுகள் கடந்து விட்டன.
- மேலும் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 06 ஆம் தேதியை உலக நாடுகள் புனித நினைவு நாள் மற்றும் கவன ஈர்ப்பு நாளாக அனுசரித்து வருகிறது.
- இந்த நாளானது அணு ஆயுதப் போரின் பேரழிவு மிக்கப் பெரும் தாக்கத்தினை நினைவு கூருகிறது.
- அமைதி மற்றும் ஆயுதக் குறைப்பு ஆகிய நிலையை அடைவதில் உலக நாடுகளின் ஒற்றுமைக்கான அவசர அழைப்பினை இது விடுக்கிறது.

## நண்பர்கள் தினம் 2023 - ஆகஸ்ட் 06

- தேசிய நண்பர்கள் தினமானது, ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று கொண்டாடப் படுகிறது.
- ஹால்மார்க் கார்டு நிறுவனத்தின் உரிமையாளரான ஜோஸ் ஹால், பராகுவேயில் நண்பர்கள் தினத்தைக் கொண்டாடுவதற்கான கருத்தாக்கத்தினை 1958 ஆம் ஆண்டில் முன் வைத்தார்.
- இருப்பினும், ஐக்கிய நாடுகள் சபையானது 2011 ஆம் ஆண்டில் இந்தத் தினத்தினைக் குறிப்பதற்கான அதிகாரப் பூர்வத் தேதியை அறிவித்தது.
- இச்சபையானது ஜூலை 30 ஆம் தேதியை சர்வதேச நண்பர்கள் தினமாக அறிவித்தது.
- 2023 ஆம் ஆண்டிற்கான நண்பர்கள் தினத்திற்கான கருத்துரு, "நட்பின் மூலம் மனித மதிப்புகளைப் பகிர்தல்" என்பதாகும்.
- அதன் பிறகு அமெரிக்காவில் ஏற்பட்ட ஒரு ஒத்திசைவு நீக்கம் காரணமாக இந்தத் தேதியானது ஆகஸ்ட் 07 ஆம் தேதிக்கு மாற்றப்பட்டது.

## சர்வதேச மன்னிப்புத் தினம் 2023 - ஆகஸ்ட் 06

- இது ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- “பலவீனமானவர்களால் மன்னிப்பு என்பது வழங்க இயலாது, மன்னிப்பதே மனவலிமை மிக்கவர்களின் பண்பு” என்பது மகாத்மா காந்தி அவர்களின் கூற்றாகும்.
- இது 1994 ஆம் ஆண்டு கிறிஸ்துவத் தூதர்களின் கிறிஸ்தவத் தூதரகம் என்ற அமைப்பினால் (CECA) தொடங்கப் பட்டது.

## தேசியக் கைத்தறித் தினம் 2023 - ஆகஸ்ட் 07

- இந்தத் தினமானது நாடு முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்களைக் கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.

- இது ஜவுளித் துறை அமைச்சகத்தின் ஒருங்கிணைப்புடன் அனுசரிக்கப் படுகிறது.
- மத்திய அரசு ஆனது 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்நாளை அறிவித்தது.
- சுதேசி இயக்கத்தை நினைவு கூரும் வகையில் ஆகஸ்ட் 07ஆம் தேதியானது தேசியக் கைத்தறி தினமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.
- 1905 ஆம் ஆண்டு இந்நாளில் ஆங்கிலேய அரசினால் மேற்கொள்ளப்பட்ட வங்காளப் பிரிவினையை எதிர்த்து கல்கத்தா நகர் மன்றத்தில் இந்த இயக்கம் தொடங்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துருவானது, "ஒரு நிலையான உடை நாகரீகத்திற்கான கைத்தறி" என்பதாகும்.
- கைத்தறி நெசவாளர்கள் மற்றும் அதைச் சார்ந்த தொழிலாளர்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமானோர் பெண்கள் என்பதால் கைத்தறித் துறை பெண்கள் அதிகாரமளிப்பிற்கு என்று ஒரு முக்கியமான துறையாக உள்ளது.

## தேசிய எலும்பு மற்றும் மூட்டு தினம் 2023 – ஆகஸ்ட் 04

- 2012 ஆம் ஆண்டு முதல் ஆகஸ்ட் முதல் வாரமானது தேசிய எலும்பு மற்றும் மூட்டு வாரமாக அனுசரிக்கப் படுகிறது.
- ஆனால், நாடு முழுவதும் வருடாந்திர அடிப்படையில் அனுசரிக்கப்படும் இந்த சுகாதாரப் பிரச்சாரம் ஆனது இந்திய எலும்பியல் சங்கத்தினால் (IOA) 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துருவானது, 'ஒவ்வொரு நபரும் ஒருவரைக் காப்பதற்காகப் பயிற்சி பெறுதல்' என்பதாகும்.
- எலும்பு மற்றும் மூட்டு ஆரோக்கியம் மோசமடைவதற்கான முக்கியக் காரணங்கள், அத்தியாவசிய உடல் செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை, வைட்டமின் D நிறைந்த சரியான ஊட்டச்சத்து இல்லாமை, மது அருந்துதல், புகையிலை மெல்லுதல் மற்றும் புகைபிடித்தல் போன்ற பழக்கங்கள் மற்றும் இளம் மற்றும் மாதவிடாய் நின்ற பெண்கள் கால்சியம் உட்கொள்ளாமை ஆகியவையாகும்.
- கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் மெக்னீசியம் போன்ற எலும்புகளுக்கு நன்மை பயக்கும் ஊட்டச் சத்துக்களை வழங்கும் முக்கிய உணவு மூலங்கள் பால் பொருட்கள் ஆகும்.
- தயிர் அல்லது மென்மையான பாலாடைக்கட்டி போன்ற புளித்தப் பால் பொருட்கள், கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் புரதம் ஆகியவற்றிற்கான முக்கிய உணவு மூலங்கள் ஆகும்.

## 3வது 'ஈட்டி எறிதல் தினம்' – ஆகஸ்ட் 07

- இந்தியாவில் தடகளப் போட்டிகளுக்கான ஒரு உச்ச நிலை நிர்வாகக் குழுவான இந்திய தடகளக் கூட்டமைப்பானது, இந்த நாளைத் தேசிய ஈட்டி எறிதல் தினமாகக் கொண்டாட முடிவு செய்தது.
- 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று நீரஜ் சோப்ரா இந்தியத் தடகள வரலாற்றில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சாதனையினைப் படைத்தார்.
- நீரஜ் சோப்ரா, 2021 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின் போது இந்தச் சாதனையைப் படைத்தார்.




## உலகப் பூனை தினம் 2023 – ஆகஸ்ட் 08

- இது 2002 ஆம் ஆண்டு சர்வதேச விலங்கு நல நிதியத்தினால் உருவாக்கப்பட்டது.
- சர்வதேசப் பூனை நல அமைப்பானது 2020 ஆம் ஆண்டு முதல் சர்வதேசப் பூனை தினத்தினை அனுசரித்து வருகிறது.
- இது 1958 ஆம் ஆண்டு முதல் பூனைகளின் நலன்களுக்காகச் செயல்பட்டு வரும் பிரித்தானிய நாட்டில் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும்.

## நாகசாகி தினம் 2023 – ஆகஸ்ட் 09

- ஜப்பானில் நடந்த இரண்டாவது அணுகுண்டுத் தாக்குதலின் பயங்கர நிகழ்வினை இந்தத் தினம் குறிக்கிறது.
- 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று, ஜப்பானின் நாகசாகி என்ற பகுதியில் அமெரிக்கா 'ஃபேட் மேன்' எனப்படும் இரண்டாவது அணுகுண்டினை வீசியது.
- ஹிரோஷிமா குண்டுவெடிப்புக்கு மூன்று நாட்களுக்குப் பிறகு இந்த தாக்குதல் நடத்தப் பட்டது.
- நாகசாகி மீதான அணுகுண்டுத் தாக்குதலுக்கு புளூட்டோனியம் குண்டு என்பது பயன்படுத்தப் பட்டது.


## உலகப் பழங்குடி மக்களின் சர்வதேசத் தினம் அல்லது உலகப் பழங்குடியினர் தினம் 2023 – ஆகஸ்ட் 09

- இது உலகப் பழங்குடியினர் தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- 1982 ஆம் ஆண்டு ஜெனீவா நகரில் நடைபெற்ற மனித உரிமைகள் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழுவின் முதல் கூட்டத்தினை அங்கீகரிக்கும் விதமாக இந்தத் தேதியானது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது உலகப் பழங்குடியின மக்களின் சர்வதேசத் தினமானது ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தது.

- ஐக்கிய நாடுகள் சபையானது 2019 ஆம் ஆண்டினை பழங்குடியின மொழிகளின் சர்வதேச ஆண்டாக நியமித்தது.
- இந்த ஆண்டின் உலகப் பழங்குடியினர் தினத்திற்கான கருத்துரு "தற்சார்பு உரிமைக்கான மாற்றத்தின் முகவர்களாக விளங்கும் பழங்குடியின இளையோர்கள்" என்பதாகும்.
- பழங்குடியினர், உலக மக்கள்தொகையில் சுமார் 5% உள்ளனர், ஆனால் உலகில் ஏழ்மை நிலையில் உள்ள மக்களில் 15%க்கும் அதிகமானவர்கள் பழங்குடியினர் ஆவர்.

## உலக சிங்க தினம் 2023 - ஆகஸ்ட் 10

- இது முதன்முதலில் 2013 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பெரும் பூனை இனங்களின் மீட்பு அமைப்பினால் நிறுவப்பட்டது.
- இது சிங்கங்களைப் பாதுகாப்பதற்காக என்று அர்ப்பணிக்கப்பட்ட உலகின் ஒரு மிகப் பெரிய அங்கீகரிக்கப் பட்ட சரணாலயம் ஆகும்.
- டெரெக் மற்றும் பெவர்லி ஜோபர்ட் குழுவினர் இணை நிறுவனர்கள் இதன் ஆவர்.
- சிங்கங்கள் அறிவியல் ரீதியாக பேந்தேரா லியோ என்று அழைக்கப் படுகின்றன.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் படி, சிங்கங்கள் "எளிதில் பாதிக்கப்படக் கூடிய" இனமாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இது உலகின் இரண்டாவது பெரிய பெரும்பூனை இனமாக உள்ளது.
- ஆசியப் புலி இனங்கள் 300 முதல் 550 பவுண்டுகள் வரை எடை கொண்டுள்ளது.
- ஆப்பிரிக்கச் சிங்கங்கள் ஆனது அனைத்து பெரும்பூனை இனங்களிலும் மிகவும் சமூக இணக்கம் கொண்ட மற்றும் குழுக்களாக அல்லது "பெருமிதத்துடன்" ஒன்றாக வாழச் செய்கின்றன.
- கிர் வனப் பகுதியானது, ஆப்பிரிக்காவிற்கு அடுத்தபடியாக உள்ள சிங்கங்களின் இரண்டாவது பெரிய வாழ்விடமாகும்.



## உலக உயிரி எரிபொருள் தினம் 2023 - ஆகஸ்ட் 10

- ஜெர்மனியைச் சேர்ந்த சர் ருடால்ப் டீசலின் ஆய்வுப் பரிசோதனைகளை கௌரவிக்கும் விதமாக இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- 1892 ஆம் ஆண்டில் டீசல் எந்திரத்தின் உருவாக்கத்திற்கான காரணமாக இருந்தார்.
- 1893 ஆம் ஆண்டில் கடலை எண்ணெயைக் கொண்டு இவர் அந்த இயந்திரத்தை இயக்கினார்.
- அடுத்த நூற்றாண்டில் பல்வேறு இயந்திரங்களுக்கு எரிபொருளாக பயன்படுத்தப்படும் புதைபடிவ எரிபொருட்களுக்கு ஒரு மாற்றாகத் தாவர எண்ணெய் அமையப் போகிறது என்று அவரது ஆராய்ச்சி சோதனை கணித்துள்ளது.
- உலக உயிரி எரிபொருள் தினமானது பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சகத்தினால் 2015 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகிறது.
- உயிரி எரிபொருள்களின் தேசியக் கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட 2018 ஆம் ஆண்டு திருத்தங்களில், 2030 ஆம் ஆண்டிற்குள் 20% எத்தனால்-கலவை மற்றும் 5% உயிரி எரி பொருள் கலவையை அடையும் இலக்கானது எடுத்துரைக்கப் பட்டுள்ளது.
- உயிரி எரிபொருள்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த எரிபொருளாகும் என்ற நிலையில், அவற்றை வேளாண் கழிவுகள், மரங்கள், பயிர்கள் அல்லது புல் போன்ற உயிரியல் பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய இயலும்.
- உயிரி எரிபொருள்களை மிகக் குறுகிய காலத்தில் தயாரித்து, திரவ அல்லது வாயு வடிவில் சேமிக்க முடியும்.
- புதைபடிவ எரிபொருட்களுடன் ஒப்பிடுகையில், உயிரி எரிபொருள்கள் புதுப்பிக்கத் தக்கவை, நிலையானவை மற்றும் உயிரிச் சிதைவிற்கு உட்படக் கூடியவையாகும்.
- உயிரி எரிபொருள் என்ற திட்டமானது, இந்தியாவில் தயாரித்தல், ஸ்வச் பாரத் மற்றும் விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கான இந்திய அரசின் முன்னெடுப்புகளுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.
- உயிரி எத்தனால், உயிரிடீசல், மேம்பட்ட உயிரி எரிபொருள்கள், இரண்டாம் தலைமுறை தொழில் நுட்பத்திலான (2ஜி) எத்தனால், புதைபடிவ எரிபொருளுக்கான பரிமாற்ற எரி பொருள்கள், ஆல்காவிலிருந்து உருவாக்கப்பட்ட மூன்றாம் தலைமுறை தொழில் நுட்பத்திலான (3ஜி) உயிரி எரிபொருள்கள், புதைபடிவ எரிபொருளுக்கான பரிமாற்ற எரிபொருள்கள் மற்றும் உயிரி ஒன்றிணைவு சார்ந்த எரிபொருள் போன்றவை இந்தியாவில் உள்ள முக்கியமான உயிரி எரிபொருள் வகைகளாகும்.

## உலக எஃகு பறை தினம் 2023 - ஆகஸ்ட் 11

- ஐக்கிய நாடுகள் சபையானது ஜூலை 24 ஆம் தேதியன்று இது தொடர்பான வரைவுத் தீர்மானத்தை ஏற்கத் தயாரானது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் முதல் எஃகு பறை தினமாகும்.
- இது எஃகு பறை அல்லது "பறை " என்றும், எஃகு பறை அல்லது எஃகு சார்ந்த இசைக் கருவிகளைப் பயன்படுத்தும் இசைக்குழுவின் ஒரு பகுதி என்றும் அழைக்கப் படுகிறது.
- எஃகு பறை என்பது டிரினிடாட் மற்றும் டொபாகோ நாட்டினைச் சேர்ந்த ஒரு இசைத் துறை அதிசயம் ஆகும்.


- 1700 ஆம் ஆண்டுகளில் பிரெஞ்சு நாட்டின் பண்ணை வணிகர்கள் இங்கு வந்த போது, அவர்கள் இந்தப் பாரம்பரியத்தைத் தங்களோடு கொண்டு வந்து இந்த நாட்டில் அதனை அறிமுகம் செய்தனர்.
- இது கார் பாகங்கள், எண்ணெய் உருளைகள் மற்றும் மாவுப் பண்ட குவளைகள் போன்ற அன்றாட உலோகப் பயன்பாட்டுப் பொருட்களிலிருந்து வடிவமைக்கப்பட்டது.
- 2030 ஆம் ஆண்டிற்கானச் செயல்பாட்டு நிரலின் நிலையான மேம்பாட்டு இலக்குகளை நோக்கிய முயற்சியில், இந்த எஃகு பறை என்பது கலாச்சாரப் பன்முகத் தன்மை மற்றும் செழுமையாக்கலின் கலங்கரை விளக்கமாகச் செயல்படுகிறது.

## சர்வதேச இளையோர் தினம் 2023 - ஆகஸ்ட் 12

- சர்வதேச இளையோர் தினமானது 1965 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டதாக அறியப் படுகிறது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது உலகளாவிய இளையோர் சமூகத்தைத் தரம் உயர்த்துவதற்கான ஒரு ஒருங்கிணைந்த முயற்சியை முன்னெடுத்தது.
- அமைதி, பரஸ்பர மரியாதை மற்றும் மக்களிடையேயான புரிந்துணர்வு போன்ற பல கொள்கைகளை இளையோர்களிடையே ஊக்குவிப்பதற்கான பிரகடனத்திற்கு ஒப்புதல் வழங்கப் பட்டதையடுத்து இது உச்சம் பெற்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'இளையோருக்கானப் பசுமைத் திறன்கள்: நிலையான உலகை நோக்கி' என்பதாகும்.

## உலக யானைகள் தினம் 2023 - ஆகஸ்ட் 12

- வாழிடங்களின் இழப்பு, தந்தங்களை வேட்டையாடுதல், மனித-யானை மோதல்கள் மற்றும் சிறந்தப் பாதுகாப்பு முயற்சிகளுக்கான தேவை உள்ளிட்ட யானைகள் வளங் காப்பில் எதிர்கொண்டு வரும் சவால்களை முன்னிலைப்படுத்த இந்த நாள் ஒரு தளமாக செயல்படுகிறது.
- 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதியன்று, கனடா நாட்டவரான பாட்ரிசியா சிம்ஸ் மற்றும் தாய்லாந்து நாட்டின் ராணி சிரிகிட்டின் ஒரு முன்னெடுப்பான தாய்லாந்தின் யானை மறு அறிமுக அறக்கட்டளை ஆகியோர் இணைந்து உலக யானை தினத்தை நிறுவினர்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "நிலையான எதிர்காலத்திற்காக யானைகளின் வாழ்விடங்களைப் பாதுகாத்தல்" என்பதாகும்.
- அனைத்து நிலவாழ்ப் பாலூட்டிகளிலும் யானைகள் மிகப்பெரிய மூளையைக் கொண்டு உள்ளன.
- ஆப்பிரிக்க யானைகள் "எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனங்கள்" என்பதாகவும், ஆசிய யானைகள் "அருகி வரும் இனங்கள்" என்பதாகவும் IUCN அமைப்பின் அழிந்து வரும் உயிரினங்களின் செந்நிறப் பட்டியலில் பட்டியலிடப் பட்டுள்ளன.




## உலக சமஸ்கிருத மொழி தினம் 2023 - ஆகஸ்ட் 12

- இது முதன்முதலில் இந்தியாவில் 1969 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- இந்தத் தினமானது புகழ்பெற்ற சமஸ்கிருத இலக்கணப் புலவர் மற்றும் அறிஞரான பாணினியின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- பாணினி என்ற மொழியியலாளர் அஷ்ட தியாயி என்ற, எட்டு அத்தியாயங்களைக் கொண்ட ஒரு இலக்கண வழிகாட்டி நூலினை எழுதியுள்ளார்.
- இந்தியாவின் பழமையான சமஸ்கிருதக் கல்லூரி, கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் போது 1791 ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரியான ஜோனாதன் டங்கன் என்பவரால் நிறுவப்பட்ட பெனாரஸ் சமஸ்கிருதக் கல்லூரி ஆகும்.
- இந்த முயற்சிக்குத் தலைமை ஆளுநர் கார்ன்வாலிஸ் பிரபு அனுமதி வழங்கினார்.
- 2004 ஆம் ஆண்டில் தமிழ் மொழிக்குச் செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்ட பிறகு 2005 ஆம் ஆண்டில் சமஸ்கிருதம் இந்தியாவின் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

## சர்வதேச இடது கை பழக்கமுடையோர் தினம் - ஆகஸ்ட் 13

- இந்த தினமானது இடது கை பழக்கம் உள்ளவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் சாதனைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது பெரும்பாலும் வலது கை பழக்கமுடையோர் பழக்கம் உள்ள நபர்கள் காணப்படும் உலகில் இடது கை பழக்கம் உள்ளவர்களின் உள்ளடக்கம் மற்றும் புரிதலை நன்கு ஊக்குவிக்கிறது.
- இடது கை பழக்கம் உள்ளவர்கள் குழுவின் நிறுவனர் டீன் R. கேம்ப்பெல் என்பவரால் தொடங்கப் பட்ட இந்தத் தினமானது முதன்முதலில் 1976 ஆம் ஆண்டில் கடைப்பிடிக்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "விளையாட்டுத் துறைகளில் இடது கை பழக்கம் உடையவர்கள்" என்பதாகும்.

## உலக உறுப்பு தான தினம் - ஆகஸ்ட் 13




- இத்தினமானது உறுப்பு தானம் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- இது உயிரைக் காப்பாற்றவும், அவசியம் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், இறந்த பிறகு தங்கள் உடல் உறுப்புகள் மற்றும் திசுக்களைத் தானம் செய்வதற்கு உறுதியளிக்கவும் வேண்டி மக்களை ஊக்குவிக்கிறது.
- இந்த நாள் 2005 ஆம் ஆண்டில் முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- 1954 ஆம் ஆண்டில் ரொனால்ட் லீ ஹெரிக் தனது சிறுநீரகத்தைத் தனது இரட்டையரான சகோதரருக்கு தானம் செய்த நிகழ்வு தான் முதல் உடல் உறுப்பு தானமாகும்.
- இந்தியாவில் முதல் முறையாக உடல் உறுப்பு தானம் செய்த நபர் லலிதா ரகுராம் என்பவர் ஆவர்.
- 1994 ஆம் ஆண்டில், அவர் தனது கணவருக்குச் சிறுநீரகத்தைத் தானம் செய்ததன் மூலம் நாட்டில் பதிவான, உயிருள்ள நபர் செய்த முதலாவது உறுப்பு தானம் இதுவாகும்.

- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தன்னார்வத் தானம் செய்ய முன் வாருங்கள்; குறைபாடுகளை நிரப்புவதற்கு அதிக எண்ணிக்கையிலான உறுப்பு தானம் செய்பவர்கள் தேவை" என்பதாகும்.

## இந்தியாவில் பிரிவினை சார்ந்த பயங்கரங்கள் நினைவு தினம் - ஆகஸ்ட் 14

- பிரிவினையால் நிகழ்ந்த தாக்குதல்களில் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் வகையில் ஆகஸ்ட் 14ஆம் தேதியன்று விபஜன் விபிஷிகா ஸ்மிருதி திவாஸ் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- மனித வரலாற்றில் மிகப்பெரிய சில புலம்பெயர்வுகளில் ஒன்றை ஏற்படுத்திய இந்தப் பிரிவினையானது, சுமார் 20 மில்லியன் மக்களைப் பாதிப்புள்ளாக்கியது.
- மில்லியன் கணக்கான குடும்பங்கள் தங்கள் மூதாதையர் கிராமங்கள் / நகரங்கள் / பெரு நகரங்களை விட்டுப் புதிதாக தங்களது வாழ்க்கையை அகதிகளாக தொடங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

## உலகப் புகைப்படத் தினம் - ஆகஸ்ட் 19

- உலகப் புகைப்படத் தினமானது 1839 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.
- முதல் புகைப்படம் ஆனது 1861 ஆம் ஆண்டில் எடுக்கப் பட்டது.
- எண்ணிமம் சார்ந்த புகைப்படம் பற்றிய கோட்பாடு ஆனது 1957 ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உருவத் தோற்றங்கள்" என்பதாகும்.


## உலக மனிதாபிமானத் தினம் - ஆகஸ்ட் 19

- 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்று பாக்தாத் குண்டுவெடிப்பில் மனிதநேயப் பணியாளர்கள் உட்பட இருவர் உயிரிழந்ததன் நினைவாக இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- 2023 ஆம் ஆண்டின் மத்தியில் உலகில் 362 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான சேவை தேவைப்படுகிறது.
- மேலும், 2022 ஆம் ஆண்டில் 444 மனிதாபிமான உதவிப் பணியாளர்கள் தாக்கப்பட்டனர், 116 பேர் கொல்லப்பட்டனர், 143 பேர் காயமடைந்தனர் மற்றும் 185 பேர் கடத்தப்பட்டனர்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'No matter what' என்பதாகும்.

## உலக கொசு தினம் - ஆகஸ்ட் 20

- இது பிரிட்டிஷ் மருத்துவர் சர் ரொனால்ட் ரோஸின் பங்களிப்பை நினைவு கூருகிறது.
- மலேரியா தொற்றிற்கும் பெண் அனோபிலின் கொசுக்களுக்கும் உள்ள தொடர்பைக் கண்டறிந்த முதல் நபர் இவரே ஆவார்.

- 1897 ஆம் ஆண்டில் சர் ரொனால்ட் ரோஸ் மலேரியாவைப் பரப்புவதற்குக் கொசுக்கள் காரணியாக உள்ளன என்று கண்டறிந்தார்.
- கொசுக்களால் பரவும் நோய்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.





## சத்பவ்னா திவாஸ் - ஆகஸ்ட் 20

- இராஜீவ் காந்தி அவர்களின் பெருமையினைப் போற்றும் வகையில் பல்வேறு சமூகத்தினரிடையே தேசிய ஒருமைப்பாடு மற்றும் அமைதியை மேம்படுத்துவதற்காக இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டானது முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களின் 79வது பிறந்த நாளினைக் குறிக்கிறது.
- இந்தியாவில் உயர்கல்வியை நவீனப்படுத்துவதற்காகவும் விரிவுபடுத்துவதற்காகவும் 1986 ஆம் ஆண்டில் தேசியக் கல்விக் கொள்கையை அவர் முன்மொழிந்தார்.
- அவர் இன்று வரையில் இந்தியாவின் இளம் பிரதமர் என்ற பெருமையினைக் கொண்டவராக போற்றப் படுகிறார்.
- இராஜீவ் காந்தி தேசிய சத்பவனா விருதானது சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தச் செய்வதற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களை அங்கீகரிக்கும் விதமாக வழங்கப் படுகிறது.

## இந்திய அக்சய் உர்ஜா தினம் - ஆகஸ்ட் 20


- இந்தத் தினமானது முன்னாள் பிரதமரான இராஜீவ் காந்தியின் பிறந்த நாளுடன் ஒன்றிணைந்து அனுசரிக்கப்படுகிறது.
- இயற்கை வளங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் பசுமை ஆற்றல் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தச் செய்வதே இந்த நாளைக் கொண்டாடுவதன் முக்கிய குறிக்கோள் ஆகும்.
- இத்தினமானது முதலில் 2004 ஆம் ஆண்டில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தினால் நிறுவப்பட்டது.




## சர்வதேச அடிமை வர்த்தக நினைவு மற்றும் ஒழிப்பு தினம் - ஆகஸ்ட் 20


- யுனெஸ்கோ அமைப்பினால் நிர்ணயிக்கப்பட்ட இந்தத் தினமானது, முதன்முதலில் 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.
- இது ஐரோப்பிய காலனித்துவப் பகுதிகளில் காணப்பட்ட அட்லாண்டிக் கடல் வழியான அடிமை வர்த்தகத்தினை ஒழிப்பதற்கு வழி வகுத்த, ஹைத்தி பகுதியில் நடைபெற்ற எழுச்சியின் தொடக்கத்தினைக் குறிக்கிறது.
- சர்வதேச அளவிலான அடிமை வர்த்தகமானது 1807 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி அன்று ஒழிக்கப்பட்டது.

## மதராஸ் தினம் - ஆகஸ்ட் 22



- தற்போது சென்னை என்று அழைக்கப்படும் மெட்ராஸ் (மதராஸ்) நகரத்தின் ஸ்தாபன நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 22 ஆம் தேதியன்று மெட்ராஸ் தினமாக அனுசரிக்கப் படுகிறது.
- மதராஸ் 1639 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இந்நாளில், சென்னப்பட்டினம் என்றழைக்கப்படும் இந்த நிலப்பகுதியானது, உள்நாட்டு நாயக்கர் ஆட்சியாளர்களிடமிருந்து பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியால் கையகப் படுத்தப் பட்டது.
- மெட்ராஸ் தினமானது முதல் முறையாக 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.

## உலக தண்ணீர் வாரம் 2023 - ஆகஸ்ட் 20 முதல் 24 வரை




- இது 1991 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஸ்டாக்ஹோம் சர்வதேச தண்ணீர் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- 1969 ஆம் ஆண்டில், இந்தியாவில் தேசியக் கிராமப்புறக் குடிநீர் வழங்கீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது.
- 1972-73 ஆம் ஆண்டில், இந்தியாவில் துரிதப் படுத்தப்பட்ட வகையிலான கிராமப்புறக் குடிநீர் வழங்கீட்டுத் திட்டம் (ARWS) தொடங்கப்பட்டது.
- 1991 ஆம் ஆண்டில் இது இராஜீவ் காந்தி தேசியக் குடிநீர் திட்டம் என பெயர் மாற்றம் செய்யப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்த வாரக் கொண்டாட்டத்தின் கருத்துரு, "மாற்றத்தின் விதைகள்: நீர் சார்ந்த உலகத்திற்கான புதுமையான தீர்வுகள்" என்பதாகும்.
- 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பாரத் நிர்மான் திட்டமானது கிராமப்புறக் குடிநீர் வழங்கீட்டுத் திட்ட அம்சங்களைக் கொண்டிருந்தது.
- மத்திய அரசானது 2017 ஆம் ஆண்டில், அனைத்து வீடுகளுக்கும் குழாய் மூலம் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதை உறுதி செய்யும் ஒரு நோக்கத்துடன் ஹர் கர் ஜல் திட்டத்தினைத் தொடங்கியது.

## ஸ்டாலினிசம் மற்றும் நாசிசத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஐரோப்பிய நினைவு தினம் - ஆகஸ்ட் 23

- ஐரோப்பாவில் அமைதி மற்றும் உறுதித் தன்மையை வலுப்படுத்துவதற்காக ஜனநாயக மதிப்புகளை மேம்படுத்தும் போது, மேற்கொள்ளப்பட்ட பெருமளவிலான நாடு கடத்தல் மற்றும் அழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவைப் போற்றுவதே இந்த நினைவு நாளின் நோக்கமாகும்.
- இந்த நாள் 2008 ஆம் ஆண்டில் ஐரோப்பியப் பாராளுமன்றத்தினால் உருவாக்கப்பட்டது.
- 1939 ஆம் ஆண்டில் இதே நாளில் தான் ரிப்பன்ட்ராப்-மொலோடோவ் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
- இந்த ஒப்பந்தமானது ஹிட்லரின் தலைமையின் கீழான ஜெர்மனியையும் ஸ்டாலினின் தலைமையின் கீழான சோவியத் ஒன்றியத்தினையும் ஐரோப்பாவின் பெரும்பகுதியை பிரித்து ஆள வழி வகுத்தது.

## அமெரிக்க மகளிர் சமத்துவ தினம் - ஆகஸ்ட் 26




- இந்த நாள் அமெரிக்க அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட பத்தொன்பதாவது திருத்தம் அங்கீகரிக்கப் பட்டதைக் குறிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது.
- இது 1920 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்ட திருத்தம் XIX என்றும் அறியப்படுகிறது.
- இந்தத் திருத்தமானது, மத்திய அரசாங்கமும், மாகாண அரசுகளும் அமெரிக்காவின் குடிமக்களுக்குப் பாலின அடிப்படையில் வாக்களிக்கும் உரிமையை மறுப்பதைத் தடை செய்கிறது.

## தேசிய விளையாட்டுத் தினம் - ஆகஸ்ட் 29

- இத்தினமானது புகழ்பெற்ற ஹாக்கி ஜாம்பவான் ஆன மேஜர் தியான் சந்த் அவர்களின் பிறந்த நாளை நினைவுகூரும் விதமாக அனுசரிக்கப் படுகிறது.
- 1926 முதல் 1948 ஆம் ஆண்டு வரையிலான அவரது பங்கேற்புக் காலத்தில், தியான் சந்த் அவர்கள் 185 போட்டிகளில் இந்திய அணி சார்பில் பங்கேற்று, 400க்கும் மேற்பட்ட கோல்களை அடித்துள்ளார்.
- இந்தியாவில் முதலாவது தேசிய விளையாட்டுத் தினமானது 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.

## தெலுங்கு மொழி தினம் - ஆகஸ்ட் 29




- இத்தினமானது தெலுங்கு மொழிக் கவிஞர், எழுத்தாளர் மற்றும் சமூக தொலைநோக்குச் சிந்தனையாளரான கிடுகு வெங்கட இராமமூர்த்தி அவர்களின் பிறந்த நாளுடன் ஒன்றிணைந்து வருகிறது.
- திராவிட மொழிக் குடும்பத்தில் தெலுங்கு மொழியே மிகப் பெரிய மொழியாக (அதிக அவில் பேசப்படும்) உள்ளது.
- 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 75 மில்லியனுக்கும் அதிகமானோர் தெலுங்கு மொழி பேசுபவர்களாக இருந்தனர்.
- இந்த மொழியானது, "கிழக்குத் தேசத்தின் இத்தாலிய மொழி" என்றும் அழைக்கப் படுகிறது.

## அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 29

- இத்தினமானது 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதியன்று செமிபாலடின்ஸ்க் அணுசக்திச் சோதனைத் தளம் மூடப்பட்டதை நினைவு கூரும் விதமாக அனுசரிக்கப் படுகிறது.
- இது 2010 ஆம் ஆண்டில் முதல் முறையாக அனுசரிக்கப்பட்டது.
- அதன் பின்னர் அணு ஆயுதச் சோதனைகளைத் தடை செய்ய வேண்டியதன் ஒரு அவசியத்தை அதிகரிப்பதற்காக ஆண்டுதோறும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- அணு ஆயுதச் சோதனை வெடிப்புகள் அல்லது வேறு பிற அணு வெடிப்புகளின் விளைவுகள் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 30

- இந்தத் தினமானது வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுதல் என்ற உலகளாவியக் குற்றத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகிறது.
- வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுதல் என்பது அரசின் அதிகாரிகளால் கைது செய்யப்படுதல், தடுப்பு காவலில் வைக்கப் படுதல், கடத்தல் அல்லது இதர பிற சுதந்திரத்தைப் பறித்தல் ஆகும்.

- வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுதல் என்பது கடுமையான ஒரு மனித உரிமை மீறலாகும்.
- பிலிப்பைன்ஸ் நாட்டின் மனித உரிமை ஆர்வலர் ஜோனாஸ் பர்கோஸ் வலுக் கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டதை நினைவு கூரும் வகையில் இந்தத் தேதியானது தேர்ந்தெடுக்கப்பட்டது.

## சர்வதேச திமிங்கல சுறா தினம் – ஆகஸ்ட் 30

- இந்தத் தினமானது, உலகின் மிகப்பெரிய மீனாக விளங்கும் திமிங்கலச் சுறாக்களின் அவல நிலை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- திமிங்கலச் சுறா (ரின்கொடன் டைபஸ்) பூமியில் உள்ள மிகப்பெரிய மீன் மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஒரு முக்கிய இனமாகும்.
- இது தோராயமாக 18 மீட்டர் நீளம் கொண்டதோடு, 21 டன் எடை வரை வளரக் கூடியது.
- அவை உடலுக்குள்ளே கரு முட்டைகள் உருவாகி குஞ்சு பொரிக்கும் வகை இனமாகும்.
- இது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் அருகி வரும் நிலையில் உள்ள உயிரினமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

## ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 31

- இந்த நாள் மனித முன்னெடுப்புகளில் ஆப்பிரிக்கப் புலம்பெயர்ந்தோரின் மகத்தானப் பங்களிப்பைக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2015-2024 என்ற காலக் கட்டமானது ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான ஒரு சர்வதேச தசாப்தமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் இனவெறி மற்றும் பாகுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்காக என்று ஐக்கிய நாடுகள் சபையின் உறுதிப்பாட்டின் மூலம் இந்த முன்னெடுப்பு மேற் கொள்ளப் பட்டது.


# இதரச் செய்திகள்

## யுனெஸ்கோவின் ஆபத்து நிலையில் உள்ள பாரம்பரியத் தளங்களின் பட்டியல்

- மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் அழகான இத்தாலிய நகரங்களில் ஒன்றான வெனிஸ் நகரம் விரைவில் யுனெஸ்கோ அமைப்பின் ஆபத்து நிலையில் உள்ள பாரம்பரியத் தளங்களின் பட்டியலில் சேர்க்கப்பட உள்ளது.
- யுனெஸ்கோவின் இந்தப் பரிந்துரையானது இத்தாலிய அரசாங்கத்தினை "அதற்கான அதிகளவிலான அர்ப்பணிப்பினை வழங்கச் செய்வதை உறுதி செய்யுமாறு" அழைப்பு விடுக்கிறது.
- 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், வெனிஸ் கடுமையான வெள்ளப் பாதிப்பினை எதிர் கொண்டது.

- 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், இந்த நகரம் ஒரு பெரிய வறட்சி நிலையை எதிர் கொண்டது.
- இதற்கிடையில், இந்த நகரமானது ஏற்கனவே சுற்றுலா தொடர்பான சிக்கல்களுடன் போராடி வருகிறது.

## 46,000 ஆண்டுகள் பழமையான புழுக்கள்




- ஐந்தாண்டுகளுக்கு முன்பு சைபீரியாவில் கண்டறியப்பட்ட இரண்டு வகையான உறைந்த நிலையிலான நுண்ணிய நூற்புழுக்கள் அல்லது உருளைப்புழுக்களை அறிவியலாளர்கள் மீண்டும் உயிர்ப்பித்துள்ளனர்.
- சைபீரிய நிலத்தடி உறைபனியில் இருந்து அவை மீண்டும் உயிர்ப்பிக்கப் பட்டுள்ளன.
- இந்தப் புழுக்கள் 45,839 மற்றும் 47,769 ஆண்டுகளுக்கு முன்பு ப்ளீஸ்டோசீன் சகாப்தத்தின் பிற்பகுதியில் இருந்து உறைந்து காணப் படுகின்றன.
- அவற்றில் ஒன்று இது வரை கண்டுபிடிக்கப்படாத முற்றிலும் புதிய இனமாகும்.
- நூற்புழுக்கள், மற்றும் மிகவும் பிரபலமான, டார்டிகிரேட்கள் (மெது நடையன்) போன்ற பல விலங்குகள், “கிரிப்டோபயோசிஸ்” (நீள் உறக்கம்) எனப்படுகின்ற செயலற்ற நிலையில் நுழைவதன் மூலம் மிகவும் கடுமையானச் சூழ்நிலைகளிலும் உயிர் வாழக் கூடியவை ஆகும்.

## இந்தியாவின் பணக்காரச் சட்டமன்ற உறுப்பினர்கள்

- பணக்காரச் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் கர்நாடகா முதலிடத்தில் உள்ளது.
- ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு (223 சட்டமன்ற உறுப்பினர்) அதிக சராசரி சொத்துக்களைக் கொண்ட மாநிலமாகவும் இது உருவாகியுள்ளது.
- அதைத் தொடர்ந்து அருணாச்சலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, இமாச்சலப் பிரதேசம், குஜராத் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை உள்ளன.

- கர்நாடக மாநிலத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் சராசரிச் சொத்து மதிப்பு 64.39 கோடி ரூபாயாகும்.
- இதைத் தொடர்ந்து 28.24 கோடி சராசரிச் சொத்து மதிப்புடன் ஆந்திரப் பிரதேசம் (174 சட்டமன்ற உறுப்பினர்கள்), 23.51 கோடி சராசரிச் சொத்து மதிப்புடன் மகாராஷ்டிரா (284 சட்டமன்ற உறுப்பினர்கள்) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- 59 சட்டமன்ற உறுப்பினர்கள் சராசரியாகக் கொண்டுள்ள 1.54 கோடி ரூபாய் சொத்து மதிப்புடன், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு மிகக் குறைந்தச் சராசரி சொத்துக்களைக் கொண்டுள்ள மாநிலமாக திரிபுரா திகழ்கிறது.
- 2023 ஆம் ஆண்டில், கர்நாடகாவின் கனகபுராவைச் சேர்ந்த D.K. சிவக்குமார் (INC) 1,413 கோடி ரூபாய் மதிப்பிலான மொத்தச் சொத்து மதிப்புடன் இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- மேற்கு வங்காளத்தின் சிந்து (SC) தொகுதியைச் சேர்ந்த நிர்மல் குமார் தாரா (BJP-2021) 1,700 ரூபாய் மதிப்புடன் மொத்தச் சொத்து மதிப்பு பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளார்.
- பணக்காரச் சட்டமன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியில் தான் அதிக எண்ணிக்கையில் உள்ளனர் (719 சட்டமன்ற உறுப்பினர்களில் 33 பேர், 5 சதவீதம்).
- BJP கட்சியானது அதற்கு அடுத்தபடியாக 1,356 சட்டமன்ற உறுப்பினர்களில் 24 பேர் (2 சதவீதம்), 100 கோடி ரூபாய்க்கு மேலானச் சொத்து மதிப்புகளைக் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்களுடன் இரண்டாம் இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் உள்ள மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களின் சராசரிச் சொத்து மதிப்பு 13.63 கோடி ரூபாயாகும்.
- பகுப்பாய்வு செய்யப்பட்ட 4,001 சட்டமன்ற உறுப்பினர்களில் 1,777 சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு குற்ற வழக்குகளில் குற்றம் சாட்டப் பட்டுள்ளனர்.
- டெல்லியில் மொத்தம் உள்ள 70 சட்டமன்ற உறுப்பினர்களில் (சுமார் 53%) 37 சட்டமன்ற உறுப்பினர்கள் மீது கடுமையான குற்ற வழக்குகள் பதிவாகியுள்ளன.





Figure: State Wise Percentage of Billionaire MLAs


## பெருசெட்டஸ் கொலோசஸ்




- பெருசெட்டஸ் கோலோசஸ் எனப்படும் திமிங்கலத்தின் பகுதியளவிலான எலும்புக் கூடு பெரு நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- சுமார் 40 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இந்த திமிங்கலம் ஆனது இதுவரை வாழ்ந்தவற்றிலேயே அதிக எடையுள்ள ஒரு விலங்காக இருக்கலாம் என்று கருதப் படுகிறது.
- இந்த விலங்கு ஆனது சுமார் 20 மீட்டர் (65 அடி) நீளமானது.
- நவீன கால நீலத் திமிங்கலம் ஆனது வெகு காலமாக மிகப்பெரிய மற்றும் அதிக எடை கொண்ட விலங்காக கருதப்படுகிறது.
- கின்னஸ் உலக சாதனைப் புத்தக பதிவின் படி, இதுவரை பதிவு செய்யப்பட்ட மிகப் பெரிய நீல திமிங்கலம் 190 டன் எடை கொண்டது.
- ஆனால் இந்த பண்டைய காலத் திமிங்கலத்தின் எடையானது 85 முதல் 340 டன்கள் வரை இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

## மனித இதயத்தில் நுண்நெகிழிப் பொருள்கள்

- சீனா முதன்முறையாக மனித இதயத்தில் பல்வேறு நுண்நெகிழிப் பொருள்கள் காணப் படுவதைக் கண்டறிந்துள்ளது.
- இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட 15 நோயாளிகளின் இதயத் திசுக்களை மருத்துவர்கள் ஆய்வு செய்தனர்.
- மேலும்,
    - ஆடை மற்றும் உணவுக் கொள்கலன்களில் பயன்படுத்தப்படுகின்ற பாலி எத்திலீன் டெரெப்தாலேட் மற்றும்
    - சாளரங்களின் சட்டங்கள், கழிவுநீர் குழாய்கள், வண்ணப்பூச்சுகள் மற்றும் பலவற்றில் பரவலாக பயன்படுத்தப் படுகின்ற பாலி வினைல் குளோரைடு (PVC) ஆகியவற்றினையும் அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சுமார் 5 மில்லிமீட்டர் அகலத்திற்குக் குறைவான நுண்நெகிழிப் பொருள்கள், வாய், மூக்கு மற்றும் பிற புழைகள் வழியாக மனித உடலில் நுழையக் கூடியவை ஆகும்.




## கோவிட் -19 வைரசின் ERIS மாற்றுரு





- EG.5 அல்லது ERIS எனப்படும் கோவிட் -19 வைரசின் புதிய திரிபின் பாதிப்பு குறித்து உலக சுகாதார நிறுவனம் கண்காணித்து வருகிறது.
- EG.5 அல்லது ERIS தொற்றின் அறிகுறிகள் ஆனது முந்தையத் திரிபுகளின் அறிகுறிகளை ஒத்துள்ள நிலையில், இவை குறைந்த அளவே தீவிரமானவை என்பதோடு, பாதிக்கப் பட்ட நபரை மிக மோசமான நிலைக்கு உள்ளாக்காது.
- இதன் அறிகுறிகள் முந்தையக் குறைந்த இனங்களை ஒத்திருக்கின்றன என்பதோடும் அவை குறைந்த அளவில் கடுமையானவை என்பதொடும் அவை தனிநபர்களை அதிக அளவில் பாதிக்காது.
- இது சீனா, அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா, கனடா மற்றும் ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், ஐக்கியப் பேரரசு, பிரான்சு, போர்ச்சுகல் மற்றும் ஸ்பெயின் போன்ற பல நாடுகளில் கண்டறியப் பட்டுள்ளது.


## HLD 6 புதைபடிவம்

- சர்வதேச அறிவியலாளர்கள் குழுவானது, சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பழங்கால மனிதப் புதைபடிவத்தை இதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட வேறு எந்தவொரு மனித இனத்தையும் ஒத்திருக்கவில்லை என்று விவரித்துள்ளது.

- இது நியாண்டர்தால்கள், டெனிசோவன்கள் என்பதாக பிரியும் மனித இனத்தினையும் அல்லது நவீன மனித இனத்தினையும் ஒத்திருக்கவில்லை.
- மனிதக் குடும்பத்தினைக் குறிக்கும் வலையமைப்பின் தற்போதைய வடிவில் மற்றொரு கிளையை உள்ளிட வேண்டும் என்று இது பரிந்துரைக்கிறது.
- HLD 6 எனப் பெயரிடப்பட்ட இந்த மனித இனத்தின் தாடை, மண்டை ஒடு மற்றும் கால் எலும்புகள் இன்னும் வகைப்படுத்தப்படாமல் உள்ளன.
- இந்த HLD 6 இனமானது, சுமார் 100,000 ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்தோனேசியாவில் வாழ்ந்த ஹோமோ எரெக்டஸ் இனத்தையும் ஒத்திருக்கவில்லை.




## பெருங்கற்கால தொப்பிக் கற்கள்



- கேரளாவில் குட்டிப்புரம் கிராமத்தில் உள்ள நாகபரம்பா என்னுமிடத்தில் சமீபத்தில் மேற் கொள்ளப் பட்ட தொல்லியல் மீள்வு அகழ்வாராய்ச்சியின் போது ஒரே இடத்தில் இருந்து ஏராளமான பெருங்கற்கால தொப்பிக் கற்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- தொப்பிக் கற்கள் என்பன மலையாளத்தில் தொப்பிக்கல்லு என்று வெகு பிரபலமாக அழைக்கப் படுகிறது.
- அவை பெருங்கற்காலத்தில் அடக்கம் செய்யப்பட்ட முதுமக்கள் தாழிகளுக்கான ஒரு மூடியாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு அரைக்கோள வடிவிலான செம்புரைக் (லேட்டரைட்) கற்கள் ஆகும்.

- இது 2,000 ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரம் குறித்தத் தகவல்களை வழங்கும்.

## பண்டைய கால மைலாரா வழிபாட்டு முறை





- கர்நாடகாவின் உடுப்பி மாவட்டத்தில் உள்ள குந்தாபுராவிற்கு அருகில் உள்ள பஸ்ரூர் எனுமிடத்தில் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு மற்றும் கி. பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தச் சிற்பங்களை ஒத்த இரண்டு சிற்பங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- தக்காணம் மற்றும் கடலோரக் கர்நாடகப் பகுதிகளில் ஒரு காலத்தில் செழித்தோங்கிய மைலரேஷ்வர் வழிபாட்டு முறையின் வரலாற்று முக்கியத்துவத்தை இந்த கண்டுபிடிப்பு வெளிக்கொணர்கிறது.
- சமீபத்தில், பஸ்ரூரில் உள்ள ஒரு கிணற்றில் சிதைந்த வகையிலான ஆனால் மிகவும் தனித்துவமான சிற்பம் ஒன்றும் கண்டறியப் பட்டது.
- மைலாரா என்ற நாட்டுப்புறத் தெய்வத்தை வழிபடுவதை மையமாகக் கொண்ட ஒரு சமயப் பாரம்பரியமாகும்.
- மைலாரா வழிபாட்டு முறை என்பது சிவபெருமானின் வெளிப்பாடாக நம்பப்படுகிறது
- இந்த வழிபாட்டு முறையானது தென்னிந்தியாவின் சில பகுதிகளில், மிகக் குறிப்பாக கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு உள்ளிட்ட தக்காணப் பகுதிகளில் பரவலாக உள்ளது.

## தாவரங்களை உண்ணும் டைனோசர் இனங்கள்

- ஜெய்சால்மரில், நீண்ட கழுத்து கொண்ட, தாவரங்களை உண்ணும் டிக்ரேயோசொரிட் டைனோசரின் மிகப் பழமையான புதைபடிவ எச்சங்களை அறிவியலாளர்கள் கண்டு அறிந்துள்ளனர்.
- டைனோசர் பரிணாம வளர்ச்சியின் ஒரு முக்கிய மையமாக இந்தியா இருந்ததாக இது தெரிவிக்கிறது.
- இந்தப் புதைபடிவ எச்சங்கள் 167 மில்லியன் ஆண்டுகள் பழமையானவை மற்றும் இது வரை அறிவியலாளர்களால் கண்டறியப் படாத புதிய இனத்தைச் சேர்ந்தவையாகும்.
- இதற்கு 'தாரோசரஸ் இண்டிகஸ்' என்று பெயரிடப் பட்டுள்ளது.

- இதிலுள்ள முதல் சொல்லானது இந்தப் புதைபடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்ட தார் பாலைவனத்தைக் குறிக்கிற நிலையில் இதன் இரண்டாவது சொல்லானது அதன் பிறப்பிடத்தினைக் குறிக்கிறது.
- இது வரையில் வெளிவந்தக் கோட்பாடுகள், மிகப் பழமையான டிக்ரேயோசௌரிட் படிவங்கள் சீனாவில் கண்டறியப் பட்டதாக (சுமார் 166-164 மில்லியன் ஆண்டுகள் பழமையானது) கூறுகின்றன.



## டுட்செடஸ் ராயனென்சிஸ்

- எகிப்தில் உள்ள புதைபடிம ஆராய்ச்சியாளர்கள் 41 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு சிறிய திமிங்கலத்தின் புதைபடிவ எச்சங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த அழிந்து போன பாசிலோசவுரிட்ஸ் இனக் குடும்பமானது, ஒரு முழு நீர்வாழ்வியாக இருந்த ஆரம்பக் கட்டத் திமிங்கல வகைகளில் ஒன்றாகும்.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்தத் திமிங்கல இனமானது 8.2 அடி நீளம் மட்டுமே இருந்த நிலையில் இது தற்காலத்து நீலத் திமிங்கலத்தை விட 12 மடங்கு சிறியதாகும்.



## பிரிப்குரா பழங்குடி

- தமண்டுவா மற்றும் பைடா ஆகியோர் வடமேற்குப் பிரேசிலில் உள்ள பிரிப்குரா பழங்குடியினரின் கடைசி மூன்று உறுப்பினர்களில் இரண்டு நபர்கள் ஆவர்.
- பிரிப்குரா பூர்வீகப் பிரதேசத்தின் பாதுகாக்கப்பட்ட நிலையானது அமேசான் காட்டில் 243,000 ஹெக்டேர் (600,000 ஏக்கர்) பரப்பளவிலான பாதுகாக்கப்பட்ட நிலப்பரப்பினைக் கொண்டதாகும்.

- ஃபுனாய் எனப்படும் பழங்குடி விவகாரங்களுக்கான கூட்டாட்சி நிறுவனம் வழங்கிய வருடாந்திரப் புதுப்பிக்கப்பட்ட பயன்பாட்டுக் கட்டுப்பாடு ஆணையின் மூலம் இது பராமரிக்கப்படுகிறது.
- இன்று 18 சதவீத அமேசான் பகுதியானது அழிந்து விட்டது.
- தொடர்பு கொள்ள இயலாத 39 பழங்குடியினர் குறித்தத் தடயங்கள் அல்லது தகவல்கள் உள்ளன.

## ஊட்ஷி என்ற பதப்படுத்தப்பட்ட உடலில் இருந்து பெறப்படும் புதிய மரபணு சார் தகவல்கள்

- 1991 ஆம் ஆண்டில், மலையேறும் வீரர்கள் ஆஸ்திரியாவின் எல்லைக்கு அருகிலுள்ள இத்தாலியப் பள்ளத்தாக்கில் உறைந்த சடலத்தின் கண்டு வியந்தனர்.
- அந்த உடல் கண்டுபிடிக்கப்பட்டப் பள்ளத்தாக்கின் பெயரால் இதற்கு ஊட்ஷி என்று பெயரிடப் பட்டது.
- இந்த உடலின் எச்சங்கள் சுமார் 5,300 ஆண்டுகளுக்கு முன்பு, அம்பு தாக்கி உயிரிழந்த ஒரு மனிதனுடையதாகும்.
- ஊட்ஷி, முந்தைய ஆய்வுகளில் கண்டறியப்பட்ட தகவல்களில் இருந்து வேறுபட்டவாறு கருமையான தோல், கருமையான கண்கள் மற்றும் உதிர்ந்த முடி வகிடுகள் ஆகியவற்றைக் கொண்டிருந்ததாக சமீபத்திய ஆராய்ச்சி வெளிப்படுத்தியது.
- அந்த நபர் மரபியல் ரீதியான வழுக்கை கொண்டவராக இருந்திருக்க வாய்ப்புள்ளது.
- முந்தைய ஆராய்ச்சியானது ஊட்ஷி மற்றும் நவீன கால சார்டினியன் இனத்தவர்களுக்கும் இடையே ஒரு மரபணு தொடர்பு இருப்பதை எடுத்துரைத்தது.
- இருப்பினும், புதிய ஆய்வானது இந்த உடலின் மரபணு அமைப்பின் பெரும்பகுதியானது ஆரம்பகால அனடோலியன் விவசாயக் குழுக்களின் அமைப்பினை ஒத்து உள்ளதாக கூறுகிறது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★